ஸ்ரீ :

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பூர்வாசார்யர்கள் அருளிச் செய்த

# ஸ்தோத்ரங்களுள் மிக முக்கியமான

**முகுந்தமாலை, ஸ்தோத்ரரத்நமென்கிற ஆளவந்தார் ஸ்தோத்ரம், சதுச்ச்லோகீ, ஸ்ரீஸ்தவம், தேவராஜாஷ்டகம், தேவராஜ மங்களம், யதிராஜவிம்சதி**

★

இவை

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்
இயற்றிய பதவுரை விசேஷவுரைகளுடன் கூடியவை.

சிங்கப்பெருமாள்கோயில்
''ஜகன்மோகினி'' அச்சுக்கூடத்தில்
அச்சிடுவிக்கப்பட்டன.

1947

**விலை ரூ. 2—10—0.**

CONNEMARA PUBLIC LIBRARY
7 MAR 1948
MADRAS



ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# முகுந்தமாலை

7 MAR ... MADRAS

## —உரையின் அவதாரிகை—

நித்திய விபூதியாகிய பரமபதத்தையும் லீலாவிபூதியாகிய இந்நிலவுலகத்தையும் அவரவர்கட்குக் கருமபலனைக அளிக்கின்ற எம்பெருமான் முகுந்தனெனப்படுவான். (மு—முக்தி, கு—பூமி, த:—இவற்றைக் கொடுப்பவன்.) அப்பெருமானுக்குப் பூமாலைபோல் பரமபோக்யமாக விளங்குகின்ற இத்தோத்திரம் முகுந்தமாலை எனத் திருநாமம் பெற்றது. முகுந்தன் என்பதற்கு முகுந்தனது திருநாமங்கள் என்பது பொருளாகி, பூமாலையில் பூக்களை அழகு பெறத் தொடுப்பதுபோல பகவந்நாமங்களை இத்தோத்திரத்தில் பெரும்பாலும் தொகுத்திருப்பதால் அதுபற்றி முகுந்தமாலை னெப் பெயர் பெற்றதென்பாருமுளர்.

தாபத்ரயத்தினுல் மிக்க வருத்தமுற்றவர்கட்கு இத்தோத்திரத்தின் அநுஸந்தானம் மிக்க இன்பமளிக்குமென்பது கற்றுணர்ந்த பெரியோர்களின் ஸித்தாந்தம். "துஞ்சும் போதழைமின் துயர்வரில் நினைமின் துயரிலீர் சொல்லினும் நன்றாம்" என்றது இத்தோத்திரத்திற்கும் நன்கு பொருந்தும்.

இத்தோத்திரமருளிச் செய்தவர் ஸ்ரீ குலசேகராழ்வார் என்பதில் பல பெரியோர்கட்கு விப்ரதிபத்தியுண்டு. இது ஆழ்வார் ஸ்ரீ ஸூக்தியாயிருந்ததாகில் நாலாயிர வ்யாக்யாநாதிகளில் ஸ்ரீ ஸ்தோத்ரரத்நம், பஞ்சஸ்தவம், ஸ்ரீரங்கராஜஸ்தவம் முதலிய பல ஸ்தோத்ரங்களுக்குப்போல் இதற்கும் பூருவர்களால வியாக்கியான மருளிச்செய்யப்பட்டிருக்குமென்றும், ஸந்நிதிகளில் பல ப்ரகரணங்களில் இத்தோத்திரம் அநுஸந்திக்கும்படி பெரியோர்களால் நியமிக்கப்பட்டிருக்குமென்றும, வேதாரம்பம் மந்த்ர புஷ்பார்ச்சநம் முதலிய ப்ரகரணங்களிலும் ஆத்யந்த ச்லோகாநுஸந்தானம் வழக்கத்தின்கீழ் வந்திருக்குமென்றும் இவைபோல்வன பல ஹேதுகளைக்கொண்டு இத்தோத்திரம குலசேகராழ்வார் அருளிச்செய்ததல்ல; குலசேகரன் என்கிற வேறொரு கேரள சக்கரவர்த்தியால் இயற்றப்பட்டது. அவ்வரசர் இன்னுஞ் சில நாடகாதிகளையும் இயற்றியுள்ளார், இத்தோத்திரத்தின் கடைசி ச்லோகமாகிய "யஸ்ய ப்ரியௌ ச்ருதிதரௌ கவிலோக வீரௌ மித்ரே த்விஜன்மவர பத்ம சராவபூதாம்" என்ற ச்லோகத்திற் கூறியபடி, 'த்விஜந்மவரர்' என்றும 'பத்மசரர்' என்றும் இரண்டு தோழர்கள் அவ்வரசர்க்கு இருந்ததாக அந்த நாடகாதிகளில் புலப்படுகின்றது. குலசேகராழ்வார்க்கு அவ்விரு தோழர்கள் இருந்ததாக வேறெவ்விடத்தும எழுதப்பட்டிருக்கவில்லை; உடையவர் காலத்திலே திருவவதரித்த திவ்யஸூரிசரித மென்னும் காவ்யத்தில் ஐந்தாவது ஸர்க்கத்தில் குலசேகராழ்வார் வைபவங்கூறி முடிக்குமிடத்து, "அபாஷத த்ராமிட பாஷயாஸௌ காதாசதேநாஸ்ய மஹா ப்ரபந்தம்" என்று பெருமாள்திருமொழி அருளிச்செய்யப்பட்டது மாத்திரம் கூறப்பட்டிருக்கின்றதே யன்றி முகுந்தமாலையுமருளிச் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படவில்லை என்றிங்ஙனே பல அம்சங்களையும் உபபாதிக்கின்றனர். அடியேனுடைய ஸித்தாந்தமும் இதுவேதான்.

அருளாளப் பெருமாளெம்பெருமானர் அருளிச்செய்த ஞானஸாரத்தில் இருபத்து மூன்றும் பாட்டினுரையில் "மாபீர் மந்த மநோ விசிந்த்ய பஹுதா" என்ற முகுந்தமாலே ச்லோ கத்தை உதாஹரித்தருளினர் மணவாளமாமுனிகள் என்றுர் ஒரு நண்பர். இதனல் மேற்குறித்த ச்லோகம் முகுந்தமாலேயிலுள்ளது என்பது மாத்திரம் நிச்சயிக்கப்படுமேயன்றி முகுந்தமாலே குலசேகராழ்வாரால் அருளிச்செய்யப்பட்டதென்பதும் அறுதியிட முடியாது.

ஆயினும், "குஷ்யதே யஸ்ய நகரே" என்ற தனியனுடன் சேர்த்துத் தொன்றுதொட்டு ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் குலசேகராழ்வாருடைய ஸ்ரீஸூக்தியாக ப்ரஸித்தமாய் அநுஸந்திக்கப்பட்டு வருவதால் அதனை மறுத்துக் கூறுதல் உசிதமன்றென்று அறுதியிட்டு ஸ்ரீ குலசேகராழ்வாருடைய ஸ்ரீ ஸூக்தியாகவே இத்தோத்திரத்தை ஆதரித்து இதற்கொரு சுருக்கமான உரை எழுதப்பட்டது. குற்றங்குறைகளைப் பெரியோர் பொறுத்தருள்வாராக.

ஆழ்வார் எம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

# முகுந்தமாலே.

(தனியன்.)

குஷ்யதே யஸ்ய நகரே ரங்கயாத்ரா திநேதிநே
தமஹம் சிரஸா வந்தே ராஜாநம் குலசேகரம்.

பதவுரை

| | | | |
|---|---|---|---|
| யஸ்ய | யாவரொரு குலசேகரப் பெருமாளுடைய | குஷ்யதே | (ஜநங்களால்) கோஷிக்கப் படுகின்றதோ |
| நகரே | கொல்லி யென்னும் நகரத்தில் | தம், ராஜாநம் | அந்த ராஜாவாகிய |
| | | குலசேகரம் | ஸ்ரீ குலசேகராழ்வாரை |
| திநே திநே | நாள்தோறும் | அஹம் | அடியேன் |
| ரங்க யாத்ரா | 'ஸ்ரீரங்க யாத்ரை' என்கிற சப்தமானது | சிரஸா வந்தே | தலையினல் வணங்குகின்றேன். |

* * *:—பெருமாள் திருமொழியிலே "இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கும் நெற்றி" என்று தொடங்கிப் பத்துப் பாட்டால் 'எனக்குத் திருவரங்கநாதனுடைய ஸர்வவித அனுபவங்களும் எப்போது வாய்க்குமோ?' என்று தாம் பிரார்த்தித்தபடியே தமது செங்கோன்மைக்கு சேஷப்பட்ட ஊர் நாடு உலகங்களேயும் தம்மைப்போலாக்கி அனைவரையும் "ஸ்ரீரங்க யாத்ரை, ஸ்ரீரங்கயாத்ரை" என்று வாய்வெருவும்படி செய்தருளிய ஸ்ரீவைஷ்ணவ சிகாமணியாகிய ஸ்ரீ குலசேகரப்பெருமாளே வணங்குகிறேனென்றவாறு.

"யத்ர நகரே" என்னும் பாடம் அசுத்தமென்றெழிக.

தனியன் உரை முற்றும்.

ஸ்ரீரஸ்து

ஆழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த

# முகுந்தமாலை

பெருமாள்கோயில் ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசார்யர் இயற்றிய
உரையுடன் கூடியது

7 MAR [illegible]
MADRAS

முதல் ச்லோகம்:—ஸ்ரீ குலசேகரர் எம்பெருமானை நோக்கி 'எப்போதும் நான் உனது திருநாமங்களையே வாய்வெருவும்படி அநுக்ரஹஞ் செய்தருளவேணும்' எனப் பிரார்த்திக்கின்றார்—

**ஸ்ரீவல்லபேதி வரதேதி தயாபரேதி பக்தப்ரியேதி பவலுண்டநகோவிதேதி,**
**நாதேதி நாகசயநேதி ஜகந்நிவாஸேதி ஆலாபிநம் ப்ரதிபதம் குரு மாம் முகுந்த. (க)**

பதவுரை

| | | | |
|---|---|---|---|
| ஹே முகுந்த! | உபய விபூதியை அளிக்க வல்ல எம்பெருமானே! | பவலுண்டந கோவித! இதி | ஸம்ஸாரத்தைத் தொலைக்க வல்லவனே! என்றும் |
| ஸ்ரீவல்லப! இதி | ச்ரிய:பதீ என்றும் | நாத! இதி | ஸர்வஸ்வாமிந்! என்றும் |
| வரத! இதி | (அடியார்க்கு) அபேக்ஷிதங்களை அளிப்பவனே! என்றும் | நாகசயந! இதி | அரவணைமேல் பள்ளி கொள்பவனே! என்றும் |
| தயாபர! இதி | அடியார் படும் துக்கங்களைப் பொறுக்கமாட்டாத ஸ்வபாவமுடையவனே! என்றும் | ஜகந்நிவாஸ! இதி | உலகங்கட்கெல்லாம் தன் திருவயிற்றை இருப்பிடமாக்கி அவற்றை நோக்குமவனே! என்றும் |
| | | ப்ரதிபதம் | அடிக்கடி |
| | | ஆலாபிநம் | சொல்லுமவனாக |
| பக்தப்ரிய! இதி | அடியார்கட்கு அன்பனே! என்றும் | மாம் | அடியேனை |
| | | குரு | செய்தருளாய். |

* * *:—ஒருவன் பகவந்நாமங்களை அநுஸந்தித்துப் பேறு பெற்றால் 'நான் திருநாம ஸங்கீர்த்தனமாகிற ஸாதனத்தை அநுஷ்டித்தேனே; ஆதலால் எனக்குப்பேறு கிடைத்தது' என்று மார்பு தட்டி அவ்வழியாலே ஸ்வப்ரவ்ருத்தியில் உபாயத்வ சங்கையாகிற பாதகம் மேலிட்டு ஸ்வரூப நாசத்தை அடையக்கூடுமென்று திருவுள்ளம்பற்றிய ஆழ்வார் அப்படி தப்பான சங்கை உண்டாகாமலிருத்தற்பொருட்டு, 'உனது திருநாமங்களை அடியேன் அநவரதம் அநுஸந்திக்குமாறு நீயே அருள்புரியவேணும்' என்று எம்பெருமானை நோக்கிப் பிரார்த்திக்கின்றார். எம்பெருமானுடைய க்ருபாமூலமாகப் பிறந்த திருநாமஸங்கீர்த்தநத்தில் ஸாதநத்வ புத்தி செய்தாலும் அது பகவத்க்ருபையையே ஸாதநமாக ப்ரதிபத்தி பண்ணியவாறுமாதலால் பாதகமொன்றுமில்லை யென்க.

பெரியபிராட்டியாருடைய ஸம்பந்தத்தைக்கொண்டு பரதத்வ நிர்ணயஞ் செய்யப்படுதலால் [ஸ்ரீவல்லப!] என்று முன்னர்க் கூறினர். பெரியபிராட்டியார் புருஷகாரஞ்செய்தருளி அடியார்க்கு வேண்டிய பொருள்களைத் தருவிப்பதால் [வரத!] என்றார்.

லுண்டநம்—களவாடுகை; அபஹரிக்கை. கோவித:—வல்லவன். "ஜகந்நிவாஸ" என்பதற்கு ஷஷ்டீதத்புருஷஸமாஸம் பண்ணினால் ப்ரளயகாலத்தில் உலகங்களைவயிற்றிலே வைத்து நோக்கியவன் என்ற கருத்துத் தோன்றும். அன்றி ஷஷ்டீபஹுவ்ரீஹி ஸமாஸம் பண்ணினால் ஸர்வலோகவ்யாபகனென்ற கருத்துத்தோன்றும், நாராயணநாமம் போலே. "ஆலாபநம் மே" என்று வழங்கும் பாடம் சுவையுடைத்தன்று. மாம் ஆலபிநம் குரு என்பதே சுவை. (க)

ஜயது ஜயது தேவோ தேவகீநந்தநோயம்
ஜயது ஜயது க்ருஷ்ணோ வ்ருஷ்ணிவம்சப்ரதீப :,
ஜயது ஜயது மேகச்யாமல : கோமலாங்க :
ஜயது ஜயது ப்ருத்வீபாரநாசோ முகுந்த :. (௨)

| | | | |
|---|---|---|---|
| அயம் | இந்த | மேகச்யாமல: | காளமேகம் போற் கரிய பிரானும் |
| தேவ: | தேவனை | | |
| தேவகீ நந்தந: | தேவகியின் மகனை கண்ண பிரான் | கோமள அங்க:- | அழகிய திருமேனியை யுடையனை கண்ண பிரான் |
| ஜயது ஜயது | வாழ்க! வாழ்க!! | | ஜயது ஜயது—; |
| வ்ருஷ்ணி வம்ச ப்ரதீப: | வ்ருஷ்ணி என்னும் அரசனுடைய குலத்துக்கு விளக்காய்த் தோன்றிய கண்ணன் | ப்ருத்வீபார நாச:- | பூமிக்குச் சுமையான துர்ஜநங்களை ஒழிக்குமவனை |
| | | முகுந்த: | கண்ணபிரான் |
| ஜயது ஜயது—; | | ஜயது ஜயது | வாழ்க! வாழ்க!! |

***:—தேவ:—லீலார்த்தமாக வந்து பிறந்தவனென்றபடி. கருமமடியாகவன்றிக்கே லீலார்த்தமாக ஸ்வேச்சையாலேபிறக்கும் பிறவியையன்றோ "அஜாயமானோ பஹுதா விஜாயதே" என்று சுருதியும் ஓதிற்று.

(வ்ருஷ்ணீத்யாதி) ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் நாலாவது அம்சத்தில் பதினோராவது அத்யாயத்தில் யதுவம்ச பரம்பரையைச் சொல்லத்தொடங்கி, கார்த்தவீர்யார்ஜுனனுக்கு அப்பால் அநேக பரம்பரைகளைச் சொல்லி......."தஸ்யாபி வ்ருஷ்ணி ப்ரமுகம் புத்ர சதமாஸீத்—யதோ வ்ருஷ்ணி ஸம்ஜ்ஞாமேதத் கோத்ரமவாப"என்று கூறப்பட்டிருப்பது இங்கு உணரத்தக்கது. (௨)

௩. [முகுந்த! இத்யாதி] கீழ் பல்லாண்டு பாடின ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! நீர் காப்பிடவேண்டும்படி நமக்கு ஒரு அபாயசங்கைக்கும் ப்ரஸக்தியில்லை; குறையற்றிரா நின்றோம். புக்திமுக்திகளில் உமக்கு வேண்டியதைக்கேளும்; தருகின்றோம்' என்ன 'எனக்கு ஒன்றிலும் வாஞ்சையில்லை; உனது திருவடிகளை அடியேன் எஞ்ஞான்றும் மறவாதிருக்கும் படியையே அருள்செய்யவேணும்' என்கிறார்.

முகுந்த ! மூர்த்நா ப்ரணிபத்ய யாசே பவந்த மேகாந்த மியந்த மர்த்தம்
அவிஸ்ம்ருதிஸ் த்வச்சரணாரவிந்தே பவேபவே மேஸ்து பவத்ப்ரஸாதாத். (௩)

| | | | |
|---|---|---|---|
| முகுந்த | புக்தி முக்திகளைத் தரவல்ல கண்ணபிரானே ! | மே | எனக்கு |
| | | பவே பவே | பிறவிதோறும் |
| பவந்தம் | தேவரீரை | பவத் ப்ரஸாதாத் | தேவரீருடைய அநுக்ரஹத்தினால் |
| மூர்த்நா | தலையாலே | | |
| ப்ரணிபத்ய | ஸேவித்து | | |
| இயந்தம் அர்த்தம் ஏகாந்தம் | இவ்வளவு பொருளை மாத்திரம் | த்வத் சரணாரவிந்தே | தேவரீருடைய திருவடித் தாமரை விஷயத்தில், |
| யாசே | யாசிக்கின்றேன் ! (அஃது என் ? எனில்,) | அவிஸ்ம்ருதி:- | மறப்பு இல்லாமை |
| | | அஸ்து | இருக்கவேணும். |

எம்பெருமானே! தேவரீரை அடியேன் அடிபணிந்து பிரார்த்திக்கும் பொருள் இவ்வளவே; அதாவது—என்னுடைய ஜன்மத்தைக்களைந்து மோக்ஷமருளவேணுமென்று நான் கேட்கவில்லை; இன்னும் எத்தனை யோநிகளிற் பிறவி நேரும்படி செய்தாலும் செய்திடுக; அதில் ஒரு நிர்ப்பந்தமில்லை; நேரும் பிறவிகளில் தேவரீருடைய திருவடித் தாமரைகளின் ஸ்மரணம் தப்பாமலிருக்கும்படி அருள் செய்யவேணுமென் றிவ்வளவே வேண்டுவதென்றபடி.

"பிறப்பின்மை பெற்று அடிகீழ்க்குற்றேவலன்று, மறப்பின்மை யான் வேண்டும்மாடு" என்ற பெரிய திருவந்தாதிப் பாசுரத்தை அடியொற்றியது இது. (௩)

௪. [நாஹம் வந்தே இத்யாதி] கீழ் ச்லோகத்திற் பண்ணின ப்ரார்த்தனையையே இதில் விவரிக்கிறார்—

நாஹம் வந்தே தவ சரணயோர் த்வந்த்வ மத்வந்த்வஹேதோ:
கும்பீபாகம் குருமபி ஹரே! நாரகம் நாபநேதும்,
ரம்யா ராமா ம்ருதுதநுலதா நந்தநே நாபி ரந்தும்
பாவேபாவே ஹ்ருதயபவநே பாவயேயம் பவந்தம். (ச)

| | |
|---|---|
| அஹம் | அடியேன் |
| தவ | தேவரீருடைய |
| சரணயோ: த்வந்த்வம் | திருவடியிணையை |
| அத்வந்த்வஹேதோ: | ஸுகதுக்க நிவ்ருத்தியின் பொருட்டு |
| வந்தே | ஸேவிக்கிறேனல்லேன்; |
| கும்பீபாகம் | கும்பீபாகமென்னும் பெயரையுடைய |
| குரும் | பெருத்த [கொடிதான] |
| நாரகம் | நரகத்தை |
| அபநேதும் அபி | போக்கடிப்பதற்காகவும் |
| ந வந்தே | ஸேவிக்கிறேனல்லேன்; |
| ரம்யா: | அழகாயும் |
| ம்ருது தநு லதா: | ஸுகுமாரமாய்க் கொடி போன்ற சரீரத்தையுடையவர்களுமான |
| ராமா: | பெண்களை [அப்ஸரஸ்ஸுக்களை] |
| நந்தநே | (இந்திரனது) நந்தநவநத்தில் |
| ரந்தும் அபி | அநுபவிப்பதற்காகவும் |
| ந வந்தே | ஸேவிக்கிறேனல்லேன்; |

(பின்னை எதுக்காக ஸேவிக்கிறீரென்றால்;)

| | |
|---|---|
| ஹே ஹரே! | அடியார்களின் துயரத்தைப் போக்குமவனே! |
| பாவே பாவே | பிறவிதோறும் |
| ஹ்ருதய பவநே | ஹ்ருதயமாகிற மாளிகையில் |
| பவந்தம் | தேவரீரை |
| பாவயேயம் | த்யாநம் பண்ணக்கடவேன் |

(இப்பேறு பெறுகைக்காகத்தான் ஸேவிக்கிறேனென்று சேஷபூரணம்.)

* * *:—"களிப்புங்கவர்வுமற்று" என்றபடி ஸ்வல்ப லாபத்தாலுண்டாகிற ஸுகமும் ஸ்வல்ப நஷ்டத்தாலுண்டாகிற துக்கமுமாகிற த்வந்த்வத்துக்கு அவ்வருகான பரமபதத்தைப் பெறவேணுமென்ற விருப்பத்தினாலாவது, மிகக்கொடிதான கும்பீபாகமென்னும் நரகத்திற்குப் போய் ஹிம்ஸைப் படாமலிருப்பதற்காகவாவது, இந்திரலோகத்துக்குப்போய் ரம்பை ஊர்வசி என்னும்படியான அப்ஸரஸ்ஸுக்களோடு உல்லாஸமாக ரமிக்கவேணுமென்ற ஆசையினாலாவது தேவரீரை நான் தொழுகிறேனல்லேன்; ஒவ்வொரு பிறவியிலும் தேவரீரையே சிந்திக்கும்படியான பாக்கியம் பெறுவதற்காகவே தேவரீரை ஸேவிக்கின்றேனென்கை.

[ராமா: ரந்தும்] "ரமுக்ரீடாயாம்" என்கிற தாது அகர்மகமாகையாலே, 'ராமா ரந்தும்' என்பது வ்யாகரணத்துக்குச் சேராதென்று சிலர் கந்தும் என்று திருத்தினார்கள்; பாடத்தை மாற்றுவது நியாயமன்றாகையால் ரந்தும் என்றே பாடங்கொள்ளவேணும்; வியாகரண விரோதமாயிற்றே யென்னில்; ப்ராப்ய என்றொரு அவ்யயம் அத்யாஹாரம் பண்ணிக்கொண்டு ராமா:ப்ராப்ய—ஸ்திரீகளை அடைந்து, ரந்தும்—ஸுகிப்பதற்கு என்றுரைத்துக்கொள்ளலாம். (ச)

---

ரு. [நாஸ்தா தர்மே இத்யாதி.] தேவரீர் திருவடிகளில் இப்போது எனக்குள்ள பக்தி எந்த ஜந்மத்திலும் அழியாமலிருக்கவேணுமென்கிறார்.—

நாஸ்தா தர்மே ந வஸுநிசயே நைவ காமோபபோகே
யத்யத்பவ்யம் பவது பகவந் பூர்வகர்மாநுரூபம்,
ஏதத் ப்ரார்த்யம் மம பஹுமதம் ஜந்மஜந்மாந்தரேபி
த்வத்பாதாம்போருஹயுககதா நிச்சலா பக்திரஸ்து. (ரு)

| | |
|---|---|
| ஹே பகவந் | ஷாட்குண்ய பூர்ணனை எம்பெருமானே! |
| மம | அடியேனுக்கு |
| தர்மே | (ஆமுஷ்மிக ஸாதனமான) தர்மத்தில் |
| ஆஸ்தா ந | ஆசையில்லை; |
| வஸுநிசயே | (ஐஹிகஸாதநமான) பணக்குவியலிலும் |
| ஆஸ்தா ந | ஆசையில்லை; |
| காம உபபோகே | விஷயபோகத்திலும் |
| ஆஸ்தா ந ஏவ | ஆசை இல்லவே யில்லை; |
| பூர்வகர்ம அநுரூபம் | ஊழ்வினைக்குத்தக்கபடி |
| யத் யத் பவ்யம் | எது எது உண்டாகக் கடவதோ (தத்— அது) |
| பவது | உண்டாகட்டும்; (ஆனால்) |

| | | | |
|---|---|---|---|
| த்வத் பாத அம்போருஹ யுக கதா | தேவரீருடைய திருவடித் தாமரையிணையிற் பதிந்திருக்கிற | அஸ்து | இருக்கவேண்டும்; (இதி யத்—என்பது யாதொன்று) |
| பக்தி: | பக்தியானது | ஏதத் | இதுவே |
| ஜந்ம ஜந்மாந்தரே அபி | ஜன்ம ஜந்மாந்தரங்களிலும் | மம பஹுமதம் | எனக்கு இஷ்டமாய் |
| நிச்சலா | அசையாமல் | ப்ரார்த்த்யம் | ப்ரார்த்திக்கத் தக்கதுமாயிருக்கிறது. |

* * *:—மேலுலகங்களில் ஸுகாநுபவத்திற்கு ஸாதநமாக இங்கு அநுஷ்டிக்கப்படும் இஷ்டாபூர்த்தம்[—யாகஞ் செய்தல் குளம் வெட்டுதல்]முதலிய தர்மத்திலாவது, அந்த தர்மாநுஷ்டாநத்திற்கு ஸாதநமாகிய த்ரவ்யத்திலாவது, மூன்றாவது புருஷார்த்தமான விஷயபோகத்திலாவது எனக்கு விருப்பமில்லை; முன் செய்த கருமங்களின் பலனாக ஸுகமோ துக்கமோ எது நேர்ந்தாலும நேரட்டும்; அதனால் ஹர்ஷசோகங்களொன்றுமில்லை. எந்த ஜன்மத்திலும் தேவரீருடைய திருவடிகளில் பக்தி அசையாமலிருக்கவேணு மென்பதே நான் விரும்புவதும் வேண்டுவதுமாம் என்கை.

"மம பக்தி: த்வத் பாதாம்போருஹ யுககதா ஸதீ நிச்சலா அஸ்து" என்று அந்வயிப்பதும் பொருந்தும். என்னுடைய ஆவல் உன் திருவடியிற் சேர்ந்ததாகி நிலைத்திருக்கவேணு மென்கை.

திவிவா புவிவா மமாஸ்து வாஸ: நரகேவா நரகாந்தக ! ப்ரகாமம்,
அவதீரித சாரதாரவிந்தௌ சரணௌ தே மரணேபி சிந்தயாமி. (௬)

| | | | |
|---|---|---|---|
| ஹே நரக அந்தக | வாராய் நரகநாசனே! | அவதீரித சாரத அரவிந்தௌ | திரஸ்கரிக்கப்பட்ட சரத்காலத் தாமரையையுடைய [—சரத்காலத்தாமரையிற் காட்டிலும் மேற்பட்ட] |
| மம | எனக்கு | | |
| திவி வா | ஸ்வர்க்கத்திலாவது | | |
| புவி வா | பூமியிலாவது | | |
| நரகே வா | நரகத்திலாவது | தே சரணௌ | தேவரீருடைய திருவடிகளை |
| ப்ரகாமம் | (உனது) இஷ்டப்படி | மரணே அபி | (ஸகலகரணங்களும் ஓய்ந்திருக்கும்படியான) மரணகாலத்திலும் |
| வாஸ: | வாஸமானது | | |
| அஸ்து | நேரட்டும்; | சிந்தயாமி | சிந்திக்கக்கடவேன். |

* * *:—புண்ய பலன்களை அநுபவிப்பதற்கென்றே ஏற்பட்ட ஸ்வர்க்கத்திலோ, பாப பலன்களை அநுபவிப்பதற்கு ஏற்பட்ட நரகத்திலோ, புண்ய பாபமிரண்டின் பலனையும் அநுபவிப்பதற்கு ஏற்ற பூமியிலோ எங்கேயாவது அடியேனுக்கு வாஸம் கிடைக்கட்டும்; அதில் ஒரு ஆநந்தமாவது துக்கமாவது இல்லை. சரத்காலத்தில் தன் நிலத்தில் அலர்ந்த தாமரை போன்ற தேவரீருடைய அழகிய திருவடிகளை * மடிவழிவந்து நீர்ப்புலன்சோர வாயிலட்டிய கஞ்சியும் மீண்டே, கடைவழிவாரக் கண்டமடைப்பக் கண்ணுறக்கமதாகுங் காலத்திலேயும் [—அதாவது, கபவாத பித்தாதிகளால் மிகவும் வருத்தப்படுகிற ஆஸந்ந தசையிலும்] அடியேன் சிந்திக்கவல்லேனும்படி அருள் புரியவேணு மென்கை.

"சிந்தயாமி" என்றும் பாடமுண்டு.

நரகாந்தக! என்பதற்கு, நரகம்போவதை ஒழிப்பவன் என்றும் நரகாஸுரனைக் கொன்றவன் என்றும் பொருளாம்.

நரகாஸுரனை ஒழித்த வரலாறு:—எம்பெருமான் வராஹாவதாரஞ் செய்து பூமியைக் கோட்டாற் குத்தி யெடுத்தபொழுது எம்பெருமானுடைய ஸ்பர்சத்தால் பூமிதேவிக்குக் குமாரனைப் பிறந்தவனும், அஸமயத்தில் சேர்ந்து பெறப்பட்டதனால் அஸுரத் தன்மை பூண்டவனுமான நரகனென்பவன் ப்ராக்ஜோதிஷ மென்னும் பட்டணத்தி லிருந்துகொண்டு, தேவ ஸித்த கந்தர்வாதிகளுடைய கன்னிகைகளையும் ராஜாக்களுடைய கன்னிகைகளையும் பற்பலரைப் பலாத்காரமாய் அபஹரித்துக் கொண்டுபோய்த் தான் மணம் புணர்வதாகக் கருதித் தன் மாளிகையிற் சிறைவைத்து வருணனது குடையையும் மந்தரகிரி சிகரமான ரத்நபர்வதத்தையும், தேவமாதாவான அதிதிதேவியின் குண்டலங்களையுங் கவர்ந்து போனதுமன்றி, இந்திரனுடைய ஐராவதயானையையும் அடித்துக்கொண்டு போகச் சமயம்பார்த்திருக்க, அஞ்சி வந்து பணிந்து முறையிட்ட இந்திரனது வேண்டுகோளால் கண்ணபிரான், கருடனை வரவழைத்து பூமிதேவியின் அம்சமான ஸத்யபாமையுடனே தான் கருடன் மேலேறி அந்நகரத்தையடைந்து

சக்ராயுதத்தைப் பிரயோகித்து அவன் மந்திரியான முரன் முதலிய பல அஸுரர்களையும் இறுதியில் அந்த நரகாஸுரனையும் அறுத்துத் தள்ளி அழித்து, அவன் பல திசைகளிலிருந்து கொண்டுவந்து சிறைப்படுத்தியிருந்த பதினாறாயிரத் தொருநூறு கன்னிகைகளையும் த்வாரகையிற்கொண்டு சேர்த்து மணஞ் செய்துகொண்டனன் என்பதாம். (௬)

எ. [க்ருஷ்ண! த்வதீய இத்யாதி] மரணகாலத்தில் கரணங்கள் வருந்தும்போது உன்னைச் சிந்திப்பது அரிதாதலால் ஸர்வ இந்திரியங்களும் ஸ்வாதீநமாயிருக்கப்பெற்ற இந்த க்ஷணத்திலேயே என் நெஞ்சை உன் திருவடிகளில் அர்ப்பணஞ் செய்துவிடுகிறேன் என்கிறார்—

க்ருஷ்ண! த்வதீய பதபங்கஜ பஞ்ஜராந்த:
அத்யைவ மே விசது மாநஸ ராஜஹம்ஸ:,
ப்ராண ப்ரயாண ஸமயே கபவாதபித்தை:
கண்டாவரோதநவிதௌ ஸ்மரணம் குதஸ்தே. (எ)

| | | | |
|---|---|---|---|
| க்ருஷ்ண! | கண்ணபிரானே! | | (உண்டாகமாட்டாதாகையால்) |
| ப்ராண ப்ரயாண ஸமயே | உயிர்போகும்போது | மே | என்னுடைய |
| கப வாத பித்தை: | கோழை, வாயு, பித்தம் இவற்றால் | மாநஸ ராஜ ஹம்ஸ: | மநஸ்ஸாகிற உயர்ந்த ஹம்ஸமானது |
| கண்டாவரோதந விதௌ | கண்டமானது அடைபட்ட வளவில் | த்வதீய பத பங்கஜ பஞ்ஜர அந்த: | தேவரீருடையதான திருவடித்தாமரைகளாகிற கூட்டினுள்ளே |
| தே | தேவரீருடைய | | |
| ஸ்மரணம் | நினைவானது | அத்ய ஏவ | இப்பொழுதே |
| குத: | எப்படி உண்டாகும்? | விசது | நுழையக்கடவது. |

* * *:—"வாயொருபக்கம் வாங்கிவலிப்ப வார்ந்த நீர்க் குழிக்கண்கள் மிழற்ற" என்னும்படி ஸகல இந்திரியங்களும் விகாரப்பட்டு வாய்திறந்து ஒருவார்த்தையுஞ் சொல்லமுடியாதபடி கோழைகட்டி, வாதமும் பித்தமும் மேலிட்டு வருத்தும் மரண காலத்திலே உன்னைப் பற்றிச் சிந்திக்க அவகாசம் அற்பமும் கிடைக்காதாகையால் "அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன்" என்கிற கட்டளையிலே என் மனத்தை இப்போதே உனது திருவடிகளில் ஸமர்ப்பித்துவிடக் கடவேனென்கை. "ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே சரீரேஸதி யோநர: தாது ஸாம்யே ஸதிதே ஸ்மர்த்தா விச்வரூபஞ்ச மாமஜம் ததஸ்தம் ம்ரியமாணந்து காஷ்ட பாஷாண ஸந்நிபம் அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாங்கதிம்" என்கிற பகவத் வாக்யத்தின் பொருள் இவ்விடத்து ஸ்மரிக்கத்தக்கது. அதாவது—அங்குமிங்கும் பரந்தோடுகிற மநஸ்ஸு ஒரு நிலையில் நின்று, உடலும் பிணிகளால் வருந்தாது செவ்வையாயிருந்து, நாடிகளும் நிலைகுலையாது நிற்கும் நற்காலத்தில் யாவனொருவன் என்னைச் சிந்திப்பானோ, அவன் அந்திமகாலத்தில் அசேதநப்ராயனாய் ஒன்றுக்கும் உதவாது நிற்கும்போது அவனைப்பற்றி நான் சிந்தைகொண்டு பரமபக்தனாகிய அவனை நற்கதி அடைவிக்கிறேன் என்பதாம்.

"பதபங்கஜ" இத்யாதி. பத—திருவடியாகிற, பங்கஜ பஞ்ஜராந்த:—தாமரைக் கூட்டினுள்ளே என்றும் பொருள்படும். "பஞ்ஜராந்தம்" என்னும் பாடம் சிறவாது. (எ)

சிந்தயாமி ஹரிமேவ ஸந்ததம் மந்தமந்தஹஸிதாநநாம்புஜம்,
நந்தகோப தநயம் பராத்பரம் நாரதாதி முநிப்ருந்த வந்திதம். (அ)

| | | | |
|---|---|---|---|
| மந்த மந்த ஹஸித ஆநந அம்புஜம் | புன்முறுவல் செய்கின்ற தாமரை மலர்போன்ற திருமுகத்தை யுடையனை | ஹரிம் | பாவங்களைப் போக்குமவனை |
| நாரத ஆதி முநிப்ருந்த வந்திதம் | நாரதர் முதலிய முனிவர் கணங்களால் தொழப்பட்டவனை | நந்தகோப தநயம் ஏவ | நந்தகோபன் குமாரனை கண்ணபிரானையே |
| பராத் பரம் | உயர்ந்தவர்களிற் காட்டிலும் மேலான உயர்ந்தவனை | ஸந்ததம் | எப்போதும் |
| | | சிந்தயாமி | சிந்திக்கின்றேன். |

* * *:—துக்கஸாகரத்திலே ஆழ்ந்தவர்களும் கண்டு களிப்புறும்படி புன்முறுவல் செய்யும் திருமுகமண்டலத்தை யுடையனாய், தனது ஸௌலப்யகுணம் நன்கு விளங்கும்படி நந்தகோபர்க்குப் பிள்ளையாக வந்து கட்டவும் அடிக்கவும் எளியனாம்படி நின்றவனாய், பரத்வத்தில் வந்தால் ஒத்தாரும் மிக்காருமின்றி ஸர்வோத்க்ருஷ்டனாய், முனிவர்கள் வணங்கும் பெருமானான பரம புருஷனையே எப்போதும் த்யானஞ் செய்யக்கடவேனென்கிறது.

**கரசரண ஸரோஜே காந்திமந் நேத்ரமீநே ச்ரமமுஷி புஜவீசிவ்யாகுலே ऽகாதமார்க்கே,**
**ஹரிஸரஸி விகாஹ்யாபீய தேஜோ ஜலௌகம் பவமரு பரிகிந்ந: கேதமத்ய த்யஜாமி.** (௯)

| | | | |
|---|---|---|---|
| கர சரண ஸரோஜே | திருக்கைகள் திருவடிகளாகிற தாமரைகளை யுடையதாய் | தேஜோ ஜல ஓகம் | (திருமேனியில் விளங்குகின்ற) தேஜஸ்ஸாகிற ஜல ஸமூஹத்தை |
| காந்திமந் நேத்ரமீநே | அழகிய திருக்கண்களாகிற கயல்களை யுடையதாய் | ஆபீய | பானம் பண்ணி |
| ச்ரமமுஷி | விடாயைத் தீர்க்குமதாய் | பவ மரு பரிகிந்ந: | ஸம்ஸாரமாகிற பாலைநிலத்திலே மிகவும் வருந்திக்கிடந்த அடியேன் |
| புஜவீசி வ்யாகுலே | திருத்தோள்களாகிற அலைகளால் நிறைந்ததாய் | | |
| அகாத மார்க்கே | மிகவும் ஆழமான | கேதம் | அந்த ஸாம்ஸாரிக துக்கத்தை |
| ஹரி ஸரஸி | எம்பெருமானாகிற தடாகத்தில் | அத்ய | இப்போது |
| விகாஹ்ய | குடைந்து நீராடி | த்யஜாமி | விடுகின்றேன். |

“ஏஷ ப்ரம்ஹ ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே சீதமிவஹ்ரதம்” என்றும், “தயரதன் பெற்ற மரதகமணித் தடம்” என்றும் எம்பெருமான் ஒரு குளிர்ந்த தடாகமாகக் கூறப்பட்டிருத்தலை அடியொற்றி இவ்வாழ்வாரும் அவனைத் தடாகமாக உருவகப்படுத்துகின்றார். குளமானது தாமரை சூழ்ந்தும் கயல்கள் பாய்ந்தும் அலைகள் வீசியும் நீர் நிரம்பியும் விடாய் தீர்க்கும் குணம் அமைந்தும் இருக்கும்; அவ்வாறே எம்பெருமானும் “கைவண்ணந்தாமரை ... அடியுமஃதே” என்றபடி திருக்கையுந் திருவடிகளுமாகிற தாமரைகளையுடையவன்; “மிதோ பத்தஸ்பர்த்தஸ்புரித சபரத்வந்த்வலலிதே..நயநாப்ஜே” [ஸ்ரீரங்கராஜஸ்தவம்] என்றபடி கண்களை மீன்களோடொக்க வர்ணிப்பது கவிமரபாதலால், திருக்கண்களாகிற கயல்களையுடையவன்; தோள்களாகிற அலைகளையுடையவன்; குளம் வெய்யிலினாலுண்டாகும் தாபத்தைப் போக்கும்; இவன் தாபத்ரயத்தைப் போக்குமவன். குளம் ஆழமான வழியை யுடைத்தாயிருக்கும்; கர்மஜ்ஞான பக்தி ப்ரபத்திகளாகிற கம்பீரமான வழிகளை—உபாயங்களையுடையவனாயிருப்பன் இவன். பாலைநிலத்திலே வருத்தமுற்றவனுக்குப் புகலிடமாயிருக்கும் குளம்; ஸம்ஸாரமருகாந்தாரத்திலே பரிதபிக்கின்ற எனக்குப் புகலிடமாயிருப்பவன இவன். இப்படிப்பட்ட எம்பெருமானாகிற தடாகத்திலே அவகாஹித்து, குளத்திலே தண்ணீர் புஷ்கலமாயிருக்குமாப்போலே அவனது திருமேனியில் வெள்ளமிடாநின்ற தேஜ:புஞ்ஜங்களை மனவுட்கொண்டு ஸகல தாபமும் தீருகின்றேனென்றவாறு. (௯)

**ஸரஸிஜநயநே ஸசங்கசக்ரே முரபிதி மாவிரம ஸ்வசித்த! ரந்தும்,**
**ஸுகதரமபரம் ந ஜாது ஜாநே ஹரிசரண ஸ்மரணாம்ருதேந துல்யம்.** (௰)

| | | | |
|---|---|---|---|
| ஸ்வ சித்த | எனக்குச் செல்வமான நெஞ்சே! | ஹரிசரண ஸ்மரண அம்ருதேந | எம்பெருமானது திருவடிகளைச் சிந்திப்பதாகிற அம்ருதத்தோடு |
| ஸரஸிஜ நயநே | தாமரைபோன்ற கண்களை யுடையனாய் | துல்யம் | ஒத்ததாய் |
| ஸ சங்க சக்ரே | திருவாழி திருச்சங்குகளோடு கூடினவனாய் | ஸுகதரம் | மிகவும் ஸுககரமாயிருப்பதான |
| முரபிதி | முராஸுரனைக் கொன்றவனை கண்ணபிரானிடத்து | அபரம் | வேறொன்றையும் |
| ரந்தும் | ரமிப்பதற்கு | ஜாது | ஒருகாலும் |
| மா விரம | க்ஷணமும் விட்டு ஒழியாதே; | ந ஜாநே | நான் அறிகின்றிலேன். |

* * *:—எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளைச் சிந்திப்பது ஒரு சிறந்த அம்ருத பானம்; அத்தோடொத்த இன்பம் வேறொன்று இருப்பதாக இவர் நினைக்கவில்லையாகையால், வலக்கையாழி யிடக்கைச் சங்கமுடையனாய் தாமரைபோற் கண்ணனை அக்கண்ணபிரானிடத்து இடைவிடாது நெஞ்சைச்செலுத்துவதே ஸ்வரூபமென்பதைத் தாம் கடைப்பிடித்தமையை வெளியிட்டபடி.

"விரமஸ்வ" என்று சிலர் பதம் பிரிப்பர்; அது வ்யாகரண மர்யாதைக்குப் பாங்கன்று; "வ்யாங் பரிப்யோ ரம:" என்கிற பாணிநிஸூத்ரத்தால், 'வி' என்னும் உபஸர்க்கத்தோடுகூடிய ரமு தாதுவுக்குப் பரஸ்மைபதம் விதிக்கப்பட்டிருப்பதால். விரம என்று பிரிப்பதே பொருந்தும்: இனி, விரமஸ்வ என்று பிரித்து "ஆர்ஷத்வாந்ந தோஷ :; நிரங்குசா : கவய:" என்றிப்புடைகளிலே ஸமாதானம் கூறுவாருமுளர்.

மாபீர் மந்தமநோ விசிந்த்ய பஹுதா யாமீச் சிரம் யாதநா :
நாமீ ந : ப்ரபவந்தி பாபரிபவஸ் ஸ்வாமீ நநு ஸ்ரீதர :,
ஆலஸ்யம் வ்யபநீய பக்திஸுலபம் த்யாயஸ்வ நாராயணம்
லோகஸ்ய வ்யஸநாபநோதநகரோ தாஸஸ்ய கிம ந க்ஷம : (கக)

| | |
|---|---|
| ஹே ! மந்தமந: ! | ஓ அற்பமான நெஞ்சே ! |
| யாமீ: | யமனுடையதான |
| யாதநா: | தண்டனைகளை |
| சிரம் | வெகுகாலம் |
| பஹுதா | பலவிதமாக |
| விசிந்த்ய | சிந்தித்து (உனக்கு) |
| பீ:மா(ஸ்து) | பயமுண்டாகவேண்டாம் ; |
| அமீ | இந்த |
| பாபரிபவ: | பாவங்களாகிற சத்துருக்கள் |
| ந: | நமக்கு |
| ந ப்ரபவந்தி | செங்கோல் செலுத்துமவையல்ல ; |
| நநு | பின்னையோ வென்றால் , |
| ஸ்ரீதர: | திருமால் |

| | |
|---|---|
| ந: ஸ்வாமீ | நமக்கு ஸ்வாமியாயிருக்கிறார். |
| ஆலஸ்யம் | சோம்பலை |
| வ்யபநீய | தொலைத்து |
| பக்தி ஸுலபம் | பக்திக்கு எளியனை |
| நாராயணம் | ஸ்ரீமந்நாராயணனை |
| த்யாயஸ்வ | த்யானம் பண்ணு ; |
| லோகஸ்ய | உலகத்துக்கு எல்லாம் |
| வ்யஸந அப நோதநகர: | துன்பத்தைப் போக்குகின்றவர் |
| தாஸஸ்ய | அவர்க்கே அடிமைப்பட்டிருக்கும் எனக்கு |
| ந க்ஷம: கிம் | (பாபத்தைப்போக்க) மாட்டாதவரோ ?. |

* *—தமது நெஞ்சைக் குறித்துக் கூறுகின்றார்;—நெஞ்சே! நாம் பல பாவங்கள் செய்திருக்கிறோமாகையால் பரலோகத்தில் நமக்கு யமதண்டனைகள் விசேஷமாகக் கிடைக்குமே, என் செய்வோம்? என்று கவலைப்பட்டு அஞ்சாதே! நமக்கு ஸ்வாமி ஸ்ரீமந் நாராயணனேயன்றி இப்பாவங்களல்ல; ஆகையால் இப்பாவங்களாகிற சத்துருக்கள் நம்மேல் ஒரு அதிகாரத்தையுஞ் செலுத்த யோக்யதையற்றவையாகும். ஆனபின்பு ஸ்ரீமந் நாராயணனையே நீ இடைவிடாது சிந்தித்தல் வேண்டும்; அவ்வெம்பெருமான் ஞாநயோகிகட்கும் எட்டாதவனாயிற்றே! என்று நீ மயங்கவேண்டாம்; அவன் பத்துடையடியவர்க்கு எளியவன் காண்.

அஜ்ஞாதஸுக்ருதம் யாத்ருச்சிகஸுக்ருதம் என்றாற் போலச் சில வியாஜங்களைத்தானே கற்பித்துக்கொண்டு உலகத்தாருடைய துன்பங்களைத் தொலைக்குமவன் 'உனக்கே நாம் ஆட் செய்வோம்' என்று இசைந்துவந்தடிமைப்பட்ட நமது துன்பங்களைத் தொலைக்காமற்போவனோ?

மாபீ:என்றவிடத்து பீ: என்பதைத் திஙந்தபதமாகப் பலர் மயங்குவர்; அது பயம் என்னும் பொருளதான ஸுபந்தபதமேயன்றித் திஙந்தபதமன்று. ஆகவே, தே-உனக்கு, பீ: பயமானது. மா( பூத் )-உண்டாகவேண்டாம் என்றிங்ஙனே பொருள் கொள்ளக்கடவது, இங்ஙனாகில், விசிந்த்ய என்னும் ல்யபந்தாவ்யயத்திற்கு வியாகரண விதிப்படி க்ரியையில் அந்வயம் தேறவில்லையேயெனில்; விசிந்த்ய வர்த்தமாநஸ்யதவ" என்று அத்யாஹாரம் செய்து கொள்ளவேண்டுமத்தனையே- இவ்வாறு பல மஹாகவி ப்ரயோகங்களுண்டென்றறிக.

த்யாயஸ்வ-என்பதை ஆர்ஷப்ரயோகமாகக்கொள்ளவேணும்; த்யைதாது, பரஸ்மைபதியாதலால். இனி, 'த்யாய, ஸ்வநாராயணம்' எனப் பிரித்தலும் பொருந்துமென்க. . (கக)

**பவஜலதிகதாநாம் த்வந்த்வவாதாஹததாநாம்**
**ஸுததுஹித்ருகளத்ரத்ராணபாரார்திதாநாம்,**
**விஷமவிஷயதோயே மஜ்ஜதாமப்லவாநாம்**
**பவது சரணமேகோ விஷ்ணுபோதோ நராணாம்.** (கஉ)

| | | | |
|---|---|---|---|
| பவ ஜலதி கதாநாம் | ஸம்ஸார ஸாகரத்தில் வீழ்ந்தவர்களாயும் | மஜ்ஜதாம் | மூழ்கினவர்களாயும் |
| த்வந்த்வ வாத ஆஹதாநாம் | ஸுக துக்கங்களாகிற பெருங் காற்றினால் அடிபட்டவர்களாயும் | அப்லவாநாம் | (இப்படிப்பட்ட ஸம்ஸார ஸாகரத்தைக் கடத்துதற்கு உரிய) ஓடமற்றவர்களாயுமிருக்கிற |
| ஸுத-துஹித்ரு களத்ர த்ராண பார- அர்திதாநாம் | மகன், மகள், மனைவி, இவர்களைக் காப்பாற்றுவதாகிற பாரத்தால் பீடிக்கப்பட்டவர்களாயும் | நராணாம் | மனிதர்களுக்கு |
| | | விஷ்ணு போதஃ ஏகஃ | விஷ்ணுவாகிற ஓடம் ஒன்றே |
| விஷம விஷய தோயே | க்ரூரமான சப்தாதி விஷயங்களாகிற ஜலத்தில் | சரணம் | ரக்ஷகமாக |
| | | பவது | ஆகக்கடவது. |

* * *:—ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே வீழ்ந்து, அற்ப ஸுகமும் மஹாதுக்கங்களுமாகிற பெருங்காற்றினாலே அடிபட்டு, மக்கள் மனைவி முதலானோரைக் காப்பாற்றுவதாகிற சுமையைத் தாங்கி வருந்தி, கொடிய விஷயங்களாகிற ஜலத்துக்குள்ளே மூழ்கிப்போய், கரையேறுவதற்கு ஓடமில்லாமல் தவிக்கிற மனிதர்கட்கு எம்பெருமானாகிற தோணியே ரக்ஷகமாக வற்று என்றவாறு. "துன்பக் கடல்புக்கு வைகுந்தனென்பதோர் தோணி பெருதுழல்கின்றேன்" என்ற நாய்ச்சியார் திருமொழி நோக்கத்தக்கது. (கஉ)

**பவஜலதிமகாதம் துஸ்தரம் நிஸ்தரேயம்**
**கதமஹமிதி சேதோ மாஸ்மகா: காதரத்வம்,**
**ஸரஸிஜத்ருசி தேவே தாவகீ பக்திரேகா**
**நரகபிதி நிஷண்ணா தாரயிஷ்யத்யவச்யம்.** (கந)

| | | | |
|---|---|---|---|
| ஹே சேதஃ! | வாராய் மனமே! | நரகபிதி | நரகாஸுரனைக் கொன்றவனும் |
| அகாதம் | ஆழமானதும் | | |
| துஸ்தரம் | தன் முயற்சியால் தாண்டக்கூடாததுமான | ஸரஸிஜத்ருசி | தாமரைபோன்ற திருக்கண்களை யுடையவனுமான |
| பவஜலதிம் | ஸம்ஸாரஸாகரத்தை | | |
| அஹம் | நான் | தேவே | எம்பெருமானிடத்தில் |
| கதம் | எப்படி | நிஷண்ணா | பற்றியிருக்கிற |
| நிஸ்தரேயம் | தாண்டுவேன்? | தாவகீ | உன்னுடையதான |
| இதி | என்று | பக்திஃ ஏகா | பக்தியொன்றே |
| காதரத்வம் | அஞ்சியிருப்பதை | அவச்யம் | நிஸ்ஸம்சயமாக |
| மா ஸ்ம காஃ | அடையாதே; [அஞ்சாதே என்றபடி] | தாரயிஷ்யதி | தாண்டுவிக்கும். |

* * *:—வாராய் மனமே! நரகநாசனான எம்பெருமானிடத்து நீ வைக்கும் பக்தியானது உன்னைப் பிறவிப் பெருங்கடலினின்றும் தவறாது கரையேற்றிவிடுமாதலால், "கரை காணவொண்ணாத ஆழ்ந்த ஸம்ஸாரக்கடலில் வீழ்ந்து வருந்துகிற நாம் அதனை எவ்வாறு கடக்கவல்லோம்?" என்று சிறிதும் அஞ்ச வேண்டியதில்லை என்றவாறு.

மாகா:—என்றாலும், மாஸ்மகா:—என்றாலும் பொருள் ஒன்றேயாம். "மாஙிலுங்" "ஸ்மோத்த ரேலங்ச" என்ற பாணினி ஸூத்ரங்கள் இங்கு அறியத்தக்கன.

நரகாஸுரனைக் கொன்ற வரலாறு கீழ் ஆறாவது ச்லோகத்தின் உரையிற்காண்க ...(கந)

**த்ருஷ்ணுதோயே மதநபவநோ**
**தாராவர்த்தே தநயஸஹஜக்ர**
**ஸம்ஸாராக்க்யே மஹதி ஜல**
**பாதாம்போஜே வரத ! பவ**

த்ரிதாமந் ! { மூன்று இட
தருளியிருக்

ஹே வரத ! வாராய் வர

த்ருஷ்ணு தோயே { ஆசையாகிற
யுடையது

மதநபவந உத்தூத மோஹ ஊர்மி மாலே { மந்மதனாகிற
கிளப்பப்ப
கிற அலை
களை யுடை

தார ஆவர்த்தே { மனைவியா
யுடையத

* * * :—ஸம்ஸாரத்தை
தங்கள் கூறப்படுகின்றன ;
இறங்கினவர்களை உள்ளே த
விசேஷமாக இருக்கும்; அது
யும், காமமாகிற காற்றினால்
உள்ளே அமுக்குவதில் சு
தின்பதில் முதலையோடொ
யுடையதாயும் இருக்கின்றது
எதுவென்றால் எம்பெருமா
ஸம்பாதித்துக் கொள்ளமு
மானை நோக்கி அத்தகைய
வேண்டுகிறார். "காம்பினு
திருமங்கையாழ்வாரும் ப்ர

இங்கு பக்தி எ
ஸாமாந்யமாக ஸேவை

த்ரிதாமந்:—"விண்
பதத்திலும் இருப்பாற்க
வனே ! என்றபடி. "அ
ஸர்வவ்யாபித்வத்துக்கு

**மாத்ராக்ஷம்க்ஷீண**
**மாச்ரௌஷம் ச்ர**
**மாஸ்மார்ஷம் மா**
**மாபூவம் த்வத்**

ஹே புவந பதே !
பவத:
பத அப்ஜே
க்ஷணம் அபி
பக்திஹீநாந்

திரஸ்கரிக்குமவர்களை
நெஞ்சால்
நினைக்கமாட்டேன்
ரே அமி { ஜன்மஜன்மாந்தரங்களிலும
யபதி ந்றிதஃ { தேவரீருடைய திருவாராதநமில்லாதவனாக
இருக்கமாட்டேன்.

செய்கிறார். உலகுக்கோரரசா
பொழுதும் அன்பு பூண்டிராத
ணக்கடவேனல்லேன்; செவிக்
ரித்ராம்ருதமயமான திருவாய்
பயும் செவிதாழ்த்துக் கேட்கக்
து குணமில்லை, விக்ரஹமில்லை,
வேனல்லேன்; ["கண்ணுளன்
ணாத மானிடத்தை எண்ணாத
அநுஸந்திக்க.] எப்பிறவியிலும்
ட வேனல்லேன்.

இப்படியெல்லாம் நான் இரு
ம விளங்கும். ... (கரு)

ருஷ்ணு,
யம்

(கசா)

இரண்டு கண்களே!
கண்ணபிரானை
ஸேவியுங்கள்;
இரண்டு கால்களே!
எம்பெருமானுடைய
ஸந்நிதியைக் குறித்து
போங்கள்;
வாராய் மூக்கே!
ஸ்ரீ கிருஷ்ணனது திருவடிகளிற் சாத்திய திருத்துழாயை
அநுபவி;
ராய் தலையே!
ம்பெருமானை
ணங்கு.

ன்னும் இந்திரியங்களை
லாம் பகவத் விஷயத்தி

ப்ரஹ்மருத்ரர்களுக்கு
நுவிதமாகப் பொருள்

ளில் கேசி என்பவன்
த் தூத்திக்கொண்டு

| | | | |
|---|---|---|---|
| த்வத் சரண அர விந்த யுகளத்யாந அம்ருத ஆஸ் வாதிநாம் | { வரீருடைய இரண்டு திரு வடித் தாமரைகளைச் சிந் திப்பதாகிற அமுதத்தை அருந்துகின்ற | அஸ்மாகம் | அடியோங்களுக்கு |
| | | ஜீவிதம் | ஜீவநமானது |
| | | ஸததம் | எக்காலத்திலும் |
| | | ஸம்பத்யதாம் | குறையற்றிருக்க வேண்டும். |

***:—"காதுமெழா கண்ணநீரும் நில்லா உடல் சோர்ந்து நடுங்கிக் குரல் மேலு மெழா மயிர்கூச்சுமறு என தோள்களும் வீழ்வொழியா" என்றபடி-தலைவணங்கிக் கைக்கூப்பி மயிர்க் கூச்செறிந்து குரல்தழுத்தொழிந்து கண்ணீர்தளும்பி இடைவிடாது உன் திருவடி களையே சிந்தித்துக்கொண்டு "உண்ணுநாள் பசியாவதொன்றில்லை" என்று இச்சிந்தனையையே அம்ருதபானமாகக் கொண்டு களித்திருக்கின்ற அடியேனுக்கு இப்படிப்பட்ட பரமோஜ்ஜீவந மான வாழ்ச்சியே என்றும் மாறாமல் செல்லும்படி அருள் புரிய வேணுமென்று எம்பெரு மானை நோக்கிப் பிரார்த்திக்கின்றார். "தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து நின் தாளிணைக்கீழ் வாழ்ச்சி யான் சேரும் வகையருளாய் வந்தே" என்று வேண்டினாரிறே நம்மாழ்வாரும். (உ0)

**ஹேகோபாலக ! ஹேக்ருபாஜலநிதே ! ஹேஸிந்துகந்யாபதே!**
**ஹேகம்ஸாந்தக ! ஹேகஜேந்த்ரகருணாபாரீண ! ஹேமாதவ !,**
**ஹேராமாநுஜ! ஹேஜகத்த்ரயகுரோ! ஹேபுண்டரீகாக்ஷ! மாம்**
**ஹேகோபீஜநநாத ! பாலய பரம் ஜாநாமி நத்வாம் விநா.** (உக)

| | | | |
|---|---|---|---|
| ஹே கோபாலக ! | ஆநிரை காத்தவனே ! | ஹேஜகத் த்ரயகுரோ! | மூவுலகங்கட்கும் தலைவனே! |
| ஹே க்ருபா ஜலநிதே ! | கருணைக் கடலே ! | ஹேபுண்டரீ காக்ஷ ! | தாமரைக் கண்ணனே ! |
| ஹே ஸிந்து கந்யாபதே ! | { பாற்கடல் மகளான பிராட் டியின் கணவனே ! | ஹே கோபீ ஜந நாத ! | { இடைச்சியர்க்கு இறை வனே ! |
| ஹே கம்ஸ அந்தக ! | கம்ஸனை யொழித்தவனே ! | | |
| ஹே கஜேந்த்ர கருணா பாரீண ! | { கஜேந்திராழ்வானுக்கு அருள்புரிய வல்லவனே ! | மாம் | அடியேனை |
| | | பாலய | ரக்ஷித்தருளவேணும் ; |
| ஹே மாதவ ! | மாதவனே ! | த்வாம் விநா | உன்னைத்தவிர |
| ஹே ராமாநுஜ ! | { பலராமனுக்குப் பின் பிறந்த வனே ! | பரம் | வேறொரு புகலை |
| | | ந ஜாநாமி | அறிகிறேனில்லை. |

***:—கண்ணபிரானுடைய பல திருநாமங்களைக் கூவியழைத்து 'நீதான் என்னைக் காத்தருளவேணும்; வேறொரு ரக்ஷகனை நான் அறியேன்' என்கிறார்.

ஹே கோபாலக! என்றவிடத்தில் குன்றெடுத்துக் கோநிரைகாத்த கதையை அநுஸந் திக்கலாம். அதாவது—திருவாய்ப் பாடியில் இடையர்கள் வழக்கப்படி இந்திர பூஜைக் கென்று சமைத்த சோறு முதலியவற்றை யடங்கலும் கண்ணபிரான் அவ்விந்திரனுக்கு இட வொட்டாமல் கோவர்த்தனமலைக்கு இடுவித்துப் பின்பு தானே ஒரு தேவதாரூபங்கொண்டு அவற்றையடைய அமுது செய்துவிட, பிறகு இந்திரன் பசிக்கோபத்தினால் மேகங்களை ஏவி ஏழுநாள் விடாமழை பெய்விக்க, கண்ணபிரான் அந்த கோவர்த்தநகிரியைக் குடையாகத் தூக் கிக் கோக்களையும் கோவலரையுங் காத்தருளினன் என்பதாம்.

கம்ஸனைக் கொன்ற வரலாறு:—தன்னைக்கொல்லப்பிறந்த தேவகீபுத்திரன் யசோதையி னிடம் ஒளித்து வளர்கின்றான் என்பது முதலிய வரலாறுகளை நாரதர் சொல்லக்கேட்ட கம் ஸன் அதிக கோபங்கொண்டு கண்ணனைக்கொல்ல நிச்சயித்து, வில்விழா என்கிற வியாஜம் வைத்துக் கண்ணனை மதுரைக்கு வரவழைத்துப் பலவகையில் வதைக்க வழிதேடுகையில், கம்ஸ ஸபையிலே கண்ணபிரான் வேகமாக எழும்பிக் கம்ஸனது மஞ்சத்தின் மேலேறி அவனது கிரீடம் கழன்று கீழே விழும்படி அவனைத் தலைமயிர்பிடித்துத் தரையில் தள்ளி அவன் மேல் தான் விழுந்து அவனைக்கொன்றிட்டனன் என்பதாம்.

கஜேந்திராழ்வானுக்குக் கருணை புரிந்த வரலாறு ப்ரஸித்தம்.

"ஹே ஸிந்துகந்யாபதே!" என்பதனால் கூறப்பட்ட லக்ஷ்மீ பதித்வமே மீண்டும் மாதவ! என்பதனால் கூறப்படுவது கூறியது கூறவென்கிற குற்றமாகாது; திருநாமஸங்கீர்த்தனம் இங்கு விவக்ஷிதமாதலால். ... ... ... (உக)

**பக்தாபாய புஜங்க காருடமணிஸ் த்ரைலோக்யரக்ஷாமணி:**
**கோபீலோசந சாதகாம்புதமணிஸ் ஸௌந்தர்யமுத்ராமணி:,**
**ய: காந்தாமணிருக்மிணீ கநகுச த்வந்த்வைகபூஷாமணி:**
**ச்ரேயோ தேவசிகாமணிர் திசது நோ கோபால சூடாமணி:. (உஉ)**

| | |
|---|---|
| பக்த அபாய புஜங்க காருடமணி: | அடியார்களின் ஆபத்துக்களாகிற ஸர்ப்பத்துக்கு கருடமணியாயும் |
| த்ரைலோக்ய ரக்ஷாமணி: | மூவுலகங்கட்கும் ரக்ஷணார்த்தமான மணியாயும் |
| கோபீ லோசநசாதக அம்புதமணி: | ஆய்ச்சிகளின் கண்களாகிற சாதகப் பறவைகளுக்கு மேகரத்நமாயும் |
| ஸௌந்தர்ய முத்ராமணி: | ஸௌந்தர்யத்திற்கு முத்ரா மணியாயும் |
| காந்தாமணி ருக்மிணீ கநகுச த்வந்த்வ ஏக பூஷாமணி: | மாதர்க்குள் சிறந்தவளான ருக்மிணிப் பிராட்டியின் நெருங்கிய இரண்டு ஸ்தநங்களுக்கு முக்கியமான அலங்கார மணியாயும் |
| தேவ சிகாமணி | தேவர்களுக்குச் சிரோபூஷணமான மணியாயும் |
| கோபால சூடாமணி: | இடையர்களுக்குத் தலைவராயுமிருப்பவர் |
| ய: | யாவரொருவரோ, |
| (ஸ:)— | அந்த ஸ்ரீ கிருஷ்ணன் |
| ந: | நமக்கு |
| ச்ரேய: | நன்மையை |
| திசது | அருளவேணும். |

***:—காருடமணியானது ஸர்ப்பத்தினால் நேர்ந்த ஆபத்தைப் போக்குவதுபோல் அடியவர்கட்கு உண்டாகும் துன்பங்களைப் போக்குமவனையும், மூன்று லோகங்களையும் ரக்ஷிப்பதற்காக ஏற்பட்ட ஒருமணிபோன்றவனையும், சாதகபக்ஷிகளை மேகங்கள் மகிழ்விப்பதுபோல் ஆயர்மங்கைகளின் கண்களுக்கு மஹோத்ஸவமாயிருப்பவனையும், உலகத்திலுள்ள அழகுகளை யெல்லாம் ஒன்றாகத்திரட்டி முத்ரையிட்டு வைத்தாற்போலப் பரமஸௌந்தரனையும், ருக்மிணிப்பிராட்டியின் திருமுலைத்தடங்களிலே ஒப்பற்றதொரு நீலமணி அழுத்தினாற்போல் விளங்குமவனையும், அறிவிற் சிறந்த தேவர்கட்கும், இடக்கைவலக்கையறியாத ஆயர்கட்கும் தலைவனையுமுள்ள கண்ணபிரான் நமக்கு நன்மைகளைத் தருக என்கிறது. (உஉ)

**சத்ருச்சேதைகமந்த்ரம் ஸகல முபநிஷத்வாக்ய ஸம்பூஜ்யமந்த்ரம்**
**ஸம்ஸாரோத்தாரமந்த்ரம் ஸமுபசித தமஸ்ஸங்க நிர்யாண மந்த்ரம்,**
**ஸர்வைச்வர்யைகமந்த்ரம் வ்யஸநபுஜகஸந்தஷ்ட ஸந்த்ராணமந்த்ரம்**
**ஜிஹ்வே ஸ்ரீக்ருஷ்ணமந்த்ரம் ஜபஜப ஸததம் ஜந்மஸாபல்யமந்த்ரம் (உந)**

| | |
|---|---|
| சத்ருச் சேத ஏக மந்த்ரம் | சத்துருக்களின் நாசத்திற்கு மந்த்ரமாய் |
| உபநிஷத் வாக்ய ஸம்பூஜ்ய மந்த்ரம் | வைதிக வாக்கியங்களால் மிகவும் பூஜ்யமாகச் சொல்லப்பட்ட மந்த்ரமாய் |
| ஸர்வ ஐச்வர்ய ஏக மந்த்ரம் | ஸகலவித செல்வங்களையும் கொடுக்கவல்ல முக்ய மந்த்ரமாய் |
| வ்யஸநபுஜக ஸந்தஷ்ட ஸந்த்ராண மந்த்ரம் | துன்பங்களாகிற ஸர்ப்பத்தினால் கடிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றும் மந்த்ரமாய் |
| ஸம்ஸார உத்தார மந்த்ரம் | ஸம்ஸாரத்தில் நின்றும் கரையேற்ற வல்ல மந்த்ரமாய் |
| ஸமுபசிததமஸ் ஸங்க நிர்யாண மந்த்ரம் | மிகவும் வளர்ந்திருக்கிற அஜ்ஞாநவிருளைப் போக்க வல்ல மந்த்ரமாய் |
| ஜந்ம ஸாபல்ய மந்த்ரம் | ஜந்மத்திற்குப் பயன்தர வல்ல மந்த்ரமாயுமிருக்கிற |
| ஸகலம் ஸ்ரீக்ருஷ்ண மந்த்ரம் | ஸமஸ்தமான ஸ்ரீ க்ருஷ்ண மந்த்ரத்தையும் |
| ஹே ஜிஹ்வே | வாராய் நாக்கே! |
| ஸததம் | எப்போதும் |
| ஜப ஜப | இடைவி[illegible]ல் ஜபம் பண்ணு. |

***:—ஆச்ரித விரோதிகளை ஒழிக்கக்கூடியதாய், வேத வாக்குக்களி[illegible] பூஜிக்கத் தக்கதாகச் சொல்லப்பட்டிருப்பதாய், பிறவிக்கடலில் நின்றும் நம்மைக் கரை[illegible]றுவிப்பதாய், செறிந்த அஜ்ஞாநவிருளை அகற்றுமதாய், அவரவர்கள் வேண்டுகின்ற [illegible]வங்களை

அருளக்கூடியதாய், துன்பப்படுமவர்களை ஸுகப்படுத்தவல்லதாய், நம்முடைய ஜன்மத்தை ஸபலமாக்குமதான ஸ்ரீக்ருஷ்ண மந்த்ரம் எத்தனையுண்டோ, அத்தனை மந்த்ரங்களையும் எப்போதும் அநுஸந்திக்கவேணுமென்று தமது திருநாவுக்கு உபதேசிக்கிறார். ... ... ... (உ௩)

வ்யாமோஹப்ரசமெளஷதம் முநிமநோவ்ருத்திப்ரவ்ருத்த்யெளஷதம்
தைத்யேந்த்ரார்த்திகரெளஷதம் த்ரிஜகதாம் ஸஞ்ஜீவநைகெளஷதம்,
பக்தாத்யந்தஹிதெளஷதம் பவபயப்ரத்வம்ஸநைகெளஷதம்
ச்ரேய:ப்ராப்திகரெளஷதம் பிப மந:! ஸ்ரீக்ருஷ்ணதிவ்யெளஷதம். (உ௪)

| | | | |
|---|---|---|---|
| ஹே மந: | வாராய் மனதே! | ஸஞ்ஜீவந ஏக ஒளஷதம் | உஜ்ஜீவனத்துக்குரிய முக்கியமான மருந்தாயும் |
| வ்யாமோஹ ப்ரசம ஒளஷதம் | (விஷயாந்தரங்களிலுள்ள) மோஹத்தைப் போக்க வல்ல மருந்தாயும், | பக்த அத்யந்தஹித ஒளஷதம் | அடியவர்கட்கு மிகவும் ஹிதத்தைச் செய்கிற ஒளஷதமாயும், |
| முநிமநோ வ்ருத்தி ப்ரவ்ருத்தி ஒளஷதம் | முனிவர்களின் மனதைத் தன்னிடத்திற் செலுத்திக் கொள்ளவல்ல மருந்தாயும் | பவ பய ப்ரத்வம்ஸந ஏக ஒளஷதம் | ஸம்ஸார பயத்தைப் போக்குவதில் முக்கியமான மருந்தாயும், |
| தைத்யேந்த்ர ஆர்த்திகர ஒளஷதம் | அஸுரர்களில் தலைவரான காலநேமி முதலியவர்களுக்குத் தீராத துன்பத்தைத் தரும் மருந்தாயும் | ச்ரேய: ப்ராப்திகர ஒளஷதம் | நன்மையை அடைவிக்கும் மருந்தாயுமுள்ள |
| | | ஸ்ரீக்ருஷ்ண திவ்ய ஒளஷதம் | கண்ணபிரானாகிற அருமையான மருந்தை |
| த்ரிஜகதாம் | மூவுலகத்தவர்க்கும் | பிப | உட்கொள்ளாய். |

***:—"மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா" என்று வைத்யனாகவும்; "மருந்தே! நங்கள் போக மகிழ்ச்சிக்கு" என்று மருந்தாகவும் கூறப்படுவன் கண்ணபிரான். இங்கு மருந்து என்கிற ஸமாதியைக்கொண்டு பேசுகிறார். மருந்துக்கு நோய்களாகிற தீமையை அடக்கவல்ல சக்தியும் ஆரோக்கியமாகிற நன்மையை அதிகரிக்கச் செய்யவல்ல சக்தியும் இருப்பதோடு கூட, சிலர்பால் நோயை அபிவிருத்தி செய்வதுமுண்டு. இந்த ஸ்ரீக்ருஷ்ணனாகிற மருந்து-விஷயாந்தரங்களிலுண்டாகும் மோஹமாகிற நோயை அடக்கவல்ல மருந்தாயும், முனிவர்களும் மனத்தைத் தன்பக்கல் ப்ரவர்த்திக்கச் செய்வதாகிற நன்மையைப் பயக்கும் மருந்தாயும், காலநேமி முதலிய ஆஸுர ப்ரக்ருதிகளுக்குத் துன்பங்களாகிற நோயை உண்டு பண்ணும் மருந்தாயும், மூவுலகத்தவர்க்கும் பேரின்பத்தை அளிக்கும் மருந்தாயும், பக்தர்களுக்கு ஹிதமாகிற நன்மையைச்செய்யும் மருந்தாயும், அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதாகிற நன்மையை நல்கும் மருந்தாயுமுள்ளது. இம்மருந்தை உட்கொள் என்று தமது திருவுள்ளத்தைக் குறித்து உபதேசிக்கின்றார். கண்ணபிரானை ஸேவிக்கவே எல்லாவித நன்மைகளும் மல்கித் தீமைகளெல்லாம் தொலையுமென்றபடி. ... ... (உ௪)

ஆம்நாயாப்யஸநாந் யரண்யருதிதம் வேதவ்ரதாந் யந்வஹம்
மேதச்சேதபலாநி பூர்த்தவிதயஸ் ஸர்வே ஹுதம் பஸ்மநி,
தீர்த்தாநா மவகாஹநாநிச கஜஸ்நாநம் விநா யத்பத
த்வந்த்வாம்போருஹ ஸம்ஸ்ம்ருதீர் விஜயதே தேவஸ் ஸ நாராயண:. (உ௫)

| | | | |
|---|---|---|---|
| யத்பத த்வந்த்வ அம்போருஹ ஸம்ஸ்ம்ருதீ: விநா | யாவனொரு ஸ்ரீக்ருஷ்ணனுடைய திருவடித் தாமரையிணைகளின் சிந்தனையில்லாமற் போனால் | வேத வ்ரதாநி | வேதத்திற் சொன்ன (உபவாஸம் முதலிய) வ்ரதங்கள் |
| ஆம்நாய அப்யஸநாநி | வேதாத்யயநங்கள் | மேதச்சேத பலாநி | மாம்ஸ சோஷணத்தையே பலனாக உடையனவோ |
| அரண்ய ருதிதம் | காட்டில் அழுததுபோல் வீணே; | ஸர்வே பூர்த்த விதய: | குளம் வெட்டுதல், சத்திரம் கட்டுதல் முதலிய தர்ம காரியங்கள் யாவும் |
| அந்வஹம் | நாள்தோறும் (செய்கிற) | | |

| | | | |
|---|---|---|---|
| பஸ்மநி ஹுதம் | சாம்பலில் செய்த ஹோமம் போல் வியர்த்தமோ | கஜஸ்நாநம் | யானை முழுகுவதுபோல் வியர்த்தமோ, |
| தீர்த்தாகாம் | கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களில் | ஸ: தேவ: நாராயண: | அப்படிப்பட்ட தேவனான நாராயணன் |
| அவகாஹநாநி ச | நீராடுவதும் | விஜயதே | அனைவரினும் மேம்பட்டு விளங்குகின்றார். |

* * *.—வேதமோதுவதும், அந்த வேதம் முதலிய சாஸ்த்ரங்களிற்கூறிய உபவாஸம் முதலிய விரதங்களை அநுஷ்டிப்பதும், குளம்வெட்டுதல், கோவில்கட்டுதல் முதலிய தர்மகாரியங்களும், கங்கைநீராடுதல் திருவணையாடுதல் முதலிய புண்யதீர்த்த ஸ்நாநங்களுமெல்லாம் எம்பெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டே செய்யப்பட்டால்தான் பயன்படுமேயன்றி, அந்த நாராயணசரண ஸ்மரணமில்லாமல் செய்யப்பட்டால் எல்லாம் பழுதேயாம் என்றவாறு.

அரண்யருதிதம்—துன்பத்தைப் பரிஹரிக்க வல்லவர்களின் அருகில் அழாமல் காட்டில் உட்கார்ந்து அழுதால், அது எப்படி ஒருபயனையும் தராதோ அப்படி நிஷ்பலம் என்றபடி. வேதவ்ரதாநி என்றவிடத்தில், வேதசப்தம் வேதோபப்ரும்ஹணங்களுக்கும் உபலக்ஷணமென்க. வ்ரதங்களை அநுஷ்டிப்பார் ஊன்வாடவுண்ணாது உயிர்காவலிட்டு உடலிற்பிரியாப் புலனைந்தும் நொந்து செய்ய வேண்டியிருப்பதால் அந்த நோவுதவிர வேறொருபயனும் அந்த விரதங்களுக்கு இல்லையாமென்றபடி. ஸம்ஸ்ம்ருதி:—த்விதீயாபஹுவசநம். ... (உரு)

ஸ்ரீமந்நாம ப்ரோச்ய நாராயணாக்க்யம்
கே நப்ராபுர் வாஞ்ச்சிதம் பாபிநோபி,
ஹா ந: பூர்வம் வாக் ப்ரவ்ருத்தா ந தஸ்மிந்
தேந ப்ராப்தம் கர்ப்பவாஸாதி து:க்கம். (உசு)

| | | | |
|---|---|---|---|
| நாராயண ஆக்க்யம் | நாராயணனென்கிற | பூர்வம் | முன்னே |
| ஸ்ரீமத் நாம | திருமாலின் திருநாமத்தை | தஸ்மிந் ந ப்ரவ்ருத்தா | அந்த நாராயண நாமோச்சாரணத்தில் செல்லவில்லை; |
| ப்ரோச்ய | சொல்லி | தேந | அதனால் |
| கே பாபிந: அபி | எந்த பாபிகளானவர்களுந் தான் | கர்ப்பவாஸ ஆதி து:க்கம் | கர்ப்பவாஸம் முதலான துக்கமானது |
| வாஞ்சிதம் | இஷ்டத்தை | ஹா ! ப்ராப்தம் | அந்தோ! நேர்ந்தது. |
| ந ப்ராபு: | அடையவில்லை; | | |
| ந: வாக் | நம்முடைய வாக்கானது | | |

* * *:—எப்படிப்பட்ட பாவிகளா யிருந்தபோதிலும் ஸ்ரீமந்நாராயண நாமத்தைச் சொல்லி அதனால் தங்கள் அபேக்ஷிதங்களைப் பெறாதவர்கள் யாருமில்லை. "வைதுநின்னை வல்லவா பழித்தவர்க்கும், மாறில்போர் செய்து நின்ன செற்றத்தீயில் வெந்தவர்க்கும், வந்துனையெய்தலாகு மென்பர்" என்ற திருச்சந்தவிருத்தமும், "மொய்த்தவல்வினையுள் நின்று மூன்றெழுத்துடைய பேரால், கத்திரபந்துமன்றே பராங்கதி கண்டுகொண்டான்" என்ற திருமாலையும் இங்கு அநுஸந்திக்கத்தகும்.

விஷயாந்தரங்களை வர்ணிப்பதிலும் வாய்பிதற்றுவதிலுமே சென்ற நம்முடைய வாக்கானது முன்பு அத்திருநாமத்தை ஒருகாலும் உச்சரியாமையால்தான் நமக்கு இக்கருவிருத்தக் குழி வீழ்கை முதலிய துன்பங்கள் விளைந்தன என்கிறார் உத்தரார்த்தத்தில். "நாவாயிலுண்டே நமோநாரணாவென்று, ஓவாதுரைக்கு முரையுண்டே—மூவாத, மாக்கதிக்கட் செல்லும் வகையுண்டே, என்னொருவர் தீக்கதிக்கட் செல்லுந்திறம்." ... ... (உசு)

மஜ்ஜந்மந: பலமிதம் மதுகைடபாரே !
மத்ப்ரார்த்தநீய மதநுக்ரஹ ஏஷ ஏவ,
த்வத்ப்ருத்யப்ருத்ய பரிசாரகப்ருத்யப்ருத்ய
ப்ருத்யஸ்ய ப்ருத்ய இதி மாம் ஸ்மர லோகநாத! (உஎ)

| | | | |
|---|---|---|---|
| ஹே மதுகைடப அரே ! | மதுகைடபர்களை அழித்தவனே ! | (எது? என்னில்;) | |
| மத்ஜந்மந: | அடியேனுடைய ஜன்மத்திற்கு | ஹே லோக நாத ! | வாராய் லோகநாதனே ! |
| இதம் பலம் | இதுதான் பலன் ; | மாம் | அடியேனை |
| மத் ப்ரார்த்தநீய மதநுக்ரஹ: ஏஷ: ஏவ | என்னால் ப்ரார்த்திக்கத் தக்கதாய் என் விஷயத்தில் நீ செய்யவேண்டிய தான அநுக்ரஹம் இதுவே தான் ; | த்வத்ப்ருத்ய ப்ருத்ய பரிசாரகப்ருத்ய ப்ருத்ய ப்ருத்யஸ்ய ப்ருத்ய: இதி | உனக்குச் சரமாவதி தாஸனாகை |
| | | ஸ்மர | திருவுள்ளம் பற்றவேணும். |

* * *:''யஸ் ஸப்தபர்வவ்யவதாந துங்காம் சேஷத்வ காஷ்டாமபஜந்முராரே:'' என்று பாதுகா ஸஹஸ்ரத்தில் ஸ்ரீ தேசிகன் புகழும்படி "அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கு அடியாரடியார்தம் அடியாரடியோங்களே" என்று திருவாய்மொழியில் சரமாவதிதாஸ்யத்தை அருளிச்செய்த நம்மாழ்வாரை அடியொற்றி இவரும் அப்படிப்பட்ட தாஸ்யத்தைவிரும்புகின்றார். எம்பெருமானே! தேவரீருடைய தாஸனுக்கு தாஸனுடைய பரிசாரகனுக்கு தாஸதாஸனுக்கு வேலைக்காரனுடைய வேலைக்காரன் நான் என்று திருவுள்ளம்பற்றினால் இதற்கு மேற்பட வேறொரு அனுக்ரஹமும் தேவரீர் செய்யவேண்டா; இவ்வளவே அடியேன் ப்ரார்த்திப்பது; இங்ஙனே தேவரீர் திருவுள்ளம் பற்றினால்தான் என் ஜந்மம் ஸபலமாகும் என்கிறார். ... ... (உஎ)

நாதே ந: புருஷோத்தமே த்ரிஜகதாமேகாதிபே சேதஸா
ஸேவ்யே ஸ்வஸ்ய பதஸ்ய தாதரி ஸுரே நாராயணே திஷ்டதி,
யம்கஞ்சித் புருஷாதமம் கதிபயக்ராமேச மல்பார்த்ததம்
ஸேவாயை ம்ருகயாமஹே நரமஹோ! மூகா வராகா வயம். (உஅ)

| | | | |
|---|---|---|---|
| புருஷ உத்தமே | புருஷர்களில் தலைவனையும் | கதிபய க்ராமஈசம் | சில க்ராமங்களுக்குக் கடவனையும் |
| த்ரிஜகதாம் ஏக அதிபே | மூன்று லோகங்களுக்கும் ஒரே கடவுளாயும் | அல்ப அர்த்ததம் | ஸ்வல்பதநத்தைக் கொடுப்பவனையும் |
| சேதஸா ஸேவ்யே | நெஞ்சினால் நினைக்கத்தக்கவனையும் | புருஷ அதமம் | புருஷர்களில் கடைகெட்டவனையுமிருக்கிற |
| ஸ்வஸ்ய பதஸ்ய தாதரி | தன் இருப்பிடமான பரமபதத்தை அளிப்பவனையுமுள்ள | யம்கஞ்சித் நரம் | யாரோவொரு மனிதனை |
| | | ஸேவாயை ம்ருகயாமஹே | ஸேவிப்பதற்குத் தேடுகிறோம் ; |
| நாராயணே ஸுரே | ஸ்ரீமந்நாராயண தேவன் | அஹோ ! | ஆச்சரியம் ! |
| ந: நாதே திஷ்டதி ஸதி | நமக்கு நாதனாயிருக்குமளவில் (அவனைப் பற்றாமல்) | வயம் மூகா: வராகா: | இப்படிப்பட்ட நாம் ஊமைகளாயும் உபயோகமற்றவர்களாயுமிராநின்றோம். |

* * *:—பூர்வார்த்தத்தால் எம்பெருமானுடைய பெருமேன்மைகளை அருளிச்செய்து, இப்படிப்பட்ட புருஷோத்தமன் நம்மைக் காத்தருள ஜாகரூகனாயிருக்கச் செய்தேயும், அல்ப ராஜாக்களை அடிபணியத் தேடுகின்ற நாம் என்ன மநுஷ்யர்கள்! என்று கர்ஹிக்கிறார் உத்தரார்த்தத்தில். "வயம் ம்ருகயாமஹே" என்று உத்தமபுருஷனாகை [தன்மை] இருந்தாலும், "நீங்கள் இப்படி ஓடித்திரிகிறீர்களே" என்று பிறரை அதிக்ஷேபிக்கிறபடியாகக் கொள்ளத் தடையில்லை. திருவாய்மொழியில், "சரணமாகிய நான்மறை நூல்களும் சாராதே, மாணந் தோற்றம் வான்பிணிமூப்பென்றிவை மாய்த்தோம்'' என்ற பாட்டில் கைவல்யார்த்திகளை அதிக்ஷேபிக்கிறஆழ்வார் மாய்த்தீர் என்ன வேண்டுமிடத்து, மாய்த்தோம் என்று தன்மையாக அருளிச்செய்தது இதற்கு ஒப்பாகுமென்க. முன்னிலையாகச்சொல்லி அதிக்ஷேபிக்க வேண்டுமிடத்து இங்ஙனே தன்மையாகக் கூறுதல் உலகவழக்கிலும் பெரும்பாலும் காணத்தகும். 'உனக்கு ஓரெழுத்தும் வராது' என்று வையவேண்டுமிடத்து, "நீயும் நானும் வாசித்து நன்றாக வித்வானாய்விடுவோம்!" என்றாற்போலக் காண்க.

நமக்கு வகுத்தஸ்வாமியாயும், புருஷர்களில் தலைவனாயும், ஸகலலோகங்களுக்கும் நியாமகனாயும், ஆடுமாடு பலிகொடுக்கையாகிற அரிய ஆராதநங்கள் செய்து வழிபடவேண்டிய தேவதாந்தரங்கள் போலன்றி, கேவலம் நிர்மலமான மனஸ்ஸினால் ஆராதிக்கத்தக்கவனாயும், சிறந்தபதவியை அளிக்கவல்லவனாயுமிருக்கிற ஸ்ரீமந்நாராயணன் நம்மைத்தேடிநிற்க, அவனை விட்டு, தூராக்குழி தூர்ப்பதற்காக க்ஷுத்ர ராஜாக்களைப் பணிகின்றவர்களும் ஒரு மநுஷ்ய கோடியா? என்றபடி. ... ... ... ... ... ... (உஅ)

**மதந! பரிஹர ஸ்திதிம் மதீயே மநஸி முகுந்தபதாரவிந்ததாம்நி,**
**ஹரநயநக்ருசாநுநா க்ருசோஸி ஸ்மரஸி ந சக்ரபராக்ரமம் முராரே:** (உக)

| | | | |
|---|---|---|---|
| ஹே மதந! | வாராய் மன்மதனே! | க்ருச: அஸி | (முன்னமே) சரீரமற்றவனாக இருக்கிறாய்; |
| முகுந்தபதாரவிந்த தாம்நி | ஸ்ரீக்ருஷ்ணனுடைய திருவடித்தாமரைகட்கு இருப்பிடமான | முராரே: | கண்ணபிரானுடைய |
| மதீயே மநஸி | எனது நெஞ்சில் | | |
| ஸ்திதிம் பரிஹர | இருப்பை விட்டிடு; | சக்ர பராக்ரமம் | திருவாழி யாழ்வானது பராக்கிரமத்தை |
| ஹர நயந க்ருசாநுநா | சிவனுடைய நெற்றிக்கண்ணில் நின்று முண்டான நெருப்பினால் | ந ஸ்மரஸி? | நீ நினைக்கவில்லையோ? |

* * *:—முன்பொருகால் ருத்ரன் தவஞ் செய்துகொண்டிருந்தபோது மன்மதன் அத்தவத்தைக்கெடுக்க முயன்று, அதுபற்றிச் சினங்கொண்ட அச்சிவபிரானது நெற்றிக் கண்ணின் நெருப்பினால் நீறுபட்டொழிந்து அநங்கன் என்று பேர்பெற்ற வரலாற்றைத் திருவுள்ளம் பற்றி மன்மதனை நோக்கிக் கூறுகின்றார்.

மன்மதனே! என் ஹ்ருதயம் இப்போது முன்புபோலில்லை; எம்பெருமான் உகந்து எழுந்தருளியிருக்குமிடமாயிற்று. ஆதலால் உன் சேஷ்டையை இனி என்னிடத்துக் காட்ட வேண்டா. முன்பு ருத்ரனிடத்தில் சேஷ்டைபண்ணி மிக்க அநர்த்தத்தை அடைந்தவனன்றோ நீ; என்னிடத்தில் வாலாட்டினாயாகில் மறுபடியும் உனக்குப் பெருத்த சிக்ஷை நேரிடும்; நான் உன்னை ஒன்றுஞ் செய்ய முடியாதவனேயாயினும் எம்பெருமானை அண்டைகொண்ட பலன் என்னிடத்திலுள்ளதுகிடாய்; திருவாழியாழ்வானுடைய பராக்ரமப் பெருமையை நீ அம்பரீஷோபாக்யாநம் $ மாலிகோபாக்யாநம் முதலியவற்றில் கேட்டறியாயோ? என்கிறார். (உக)

**தத்வம் ப்ருவாணாநி பரம்பரஸ்மாத் மது க்ஷரந்தீவ ஸதாம் பலாநி**
**ப்ராவர்த்தய ப்ராஞ்ஜலிரஸ்மி ஜிஹ்வே! நாமாநி! நாராயண கோசராணி** (௩0)

| | | | |
|---|---|---|---|
| ஹேஜிஹ்வே! | வாராய் நாக்கே! | நாராயண கோசராணி | ஸ்ரீமந்நாராயணன் விஷயமான |
| பரஸ்மாத் பரம் | மேலானதிற் காட்டிலும் மேலானதாகிய [மிகவுஞ் சிறந்த] | நாமாநி | திருநாமங்களை |
| தத்வம் | தத்துவத்தை | ப்ராவர்த்தய | அடிக்கடி அநுஸந்தாநம் செய்; [ஜபஞ்செய்.] |
| ப்ருவாணாநி | சொல்லுகின்றனவாய் | | |
| ஸதாம் மது க்ஷரந்தி | ஸத்துக்களுக்கு மதுவைப் பெருக்குகிற | ப்ராஞ்ஜலி: அஸ்மி | (நீ அப்படி செய்வதற்காக உனக்குக்) கைகூப்பி நிற்கின்றேன்; |
| பலாநி இவ | பழங்களைப் போன்றனவாய் | | |

* * *:—ஆழ்வார் தமது திருநாவை நோக்கி அருளிச்செய்கிறார்; உபயோகமற்ற விஷயங்களிற் பரந்தோடுகிற நாக்கே! உனக்கொன்று சொல்லுகிறேன்; அதை நீ விரும்பி அநுஷ்டிப்பதற்காக அஞ்ஜலியும் பண்ணுகிறேன்; அது என்ன காரியமென்கிறாயோ? ஸ்ரீமந் நாராயணனுடைய திருநாமங்களையே நீ இடைவிடாது உச்சரிக்கவேணும்; அத்திருநாமங்களுக்கு அப்படிப்பட்ட பெருமை என்ன இருக்கிறதென்கிறாயோ? சிறந்த தத்துவங்களையெல்லாம் அவை உணர்த்தும்; தேனொழுகும் இனிய பழங்கள்போலே ஸத்துக்களுக்குப் பரம போக்கியமாயிருக்கும். அன்ன திருநாமங்களை நீ எப்போதும் அநுஸந்திக்க வேணுமென்கிறார். (௩0)

$ "சீமாலிக னவனோடு... சக்கரத்தால் தலைகொண்டாய்."

**இதம் சரீரம் பரிணும பேசலம் பதத்யவச்யம் ச்லதஸந்தி ஜர்ஜரம்**
**கிமௌஷதை: க்லிச்யஸி மூடதுர்மதே! நிராமயம் க்ருஷ்ணரஸாயநம் பிப.** (௩க)

| | | | |
|---|---|---|---|
| இதம் சரீரம் | இந்த சரீரமானது | ஔஷதைঃ | மருந்துகளினுல் |
| பரிணும பேசலம் | நாளடைவில் துவண்டும் | | |
| ச்லத ஸந்தி ஜர்ஜரம் | தளர்ந்த கட்டுக்களை யுடையதாய்க்கொண்டு சிதிலமாயும் | கிம் க்லிச்யஸி | ஏன் வருந்துகிருய்? |
| அவச்யம் பததி | அவச்யம் நசிக்கப்போகிறது; | நிராமயம் | (ஸம்ஸாரமாகிற) வியாதியைப் போக்குமதான |
| ஹே மூட! துர்மதே | வாராய் அஜ்ஞாநியே! கெட்ட புத்தியை யுடையவனே! | க்ருஷ்ண ரஸாயநம் | ஸ்ரீ க்ருஷ்ணனுகிற ரஸாயநத்தை |
| | | பிப | பாநம் பண்ணு. |

***:—அறிவில்லாமலும் கெட்ட புத்தியுடையதாயுமிருக்கிற ஜனத்தை நோக்கி அருளிச்செய்கிருர். ஓ மூட ஜனங்களே! இப்பாழும் சரீரத்திற்காக நீங்கள் சாகும் வரைக்கும் கண்ட மருந்துகளையும் தின்பதும் கொடிய பத்தியமிருப்பதுமாய் என் வருத்தப்படுகிறீர்கள்? என்றைக்காவது ஒருநாள் இச்சரீரம் கட்டுக்குலைந்து தளர்ந்து நசிக்கப்போகிறதேயொழிய சாச்வதமாயிருக்கப் போகிறதில்லை யென்பது திண்ணம். ஆதலால் இப்பிறவியென்னும் நோய்க்கு மருந்து உண்ணவேண்டியதே உத்தமமாகும். ஸ்ரீக்ருஷ்ணநாம திவ்யௌஷதத்தைப் பானம் பண்ணுங்கள் என்று உபதேசிக்கின்ருர். க்லிச்யஸே என்று ஆத்மநேபதியாக ப்ரயோகிக்க வேண்டியிருக்க க்லிச்யஸி என்று பரஸ்மைபதியாக ப்ரயோகித்தது அபாணிநீயம்; ஆர்ஷமெனக் கொள்ளவேணும். (௩க)

**தாரா வாராகரவரஸுதா தே தநூஜோ விரிஞ்ச:**
**ஸ்தோதா வேதஸ்தவ ஸுரகணோ ப்ருத்யவர்க்க: ப்ரஸாத:**
**முக்திர் மாயா ஜகதவிகலம் தாவகீ தேவகீ தே**
**மாதா மித்ரம் வலரிபுஸுதஸ் த்வய்யதோங்யந் நஜாநே.** (௩௨)

| | | | |
|---|---|---|---|
| தே தாராঃ | தேவரீருக்கு மனைவி | தாவகீ மாயா | தேவரீருடைய ப்ரக்ருதி; |
| வாராகரவர ஸுதா | திருப்பாற்கடலின் மகளான பிராட்டி, | தே மாதா தேவகீ | தேவரீருக்குத் தாய் தேவகிப் பிராட்டி; |
| தநூஜঃ விரிஞ்சঃ | மகனே சதுர்முகன்; | மித்ரம் வலரிபுஸுதঃ | தோழன் இந்திரன் மகனுன அர்ஜுனன்; |
| ஸ்தோதா வேதঃ | துதிபாடகனே வேதம்; | | |
| ப்ருத்யவர்க்கঃ ஸுரகணঃ | வேலைக்காரர்களோ தேவதைகள்; | அதঃ அந்யத் | அதைக்காட்டிலும் வேருன வற்றை |
| முக்திঃ தவப்ரஸாதঃ | மோக்ஷம் தேவரீருடைய அநுக்ரஹம்; | த்வயி ந ஜாநே | உன்னிடத்தில் நான் அறிகிறேனில்லை. |
| அவிகலம் ஜகத் | ஸகல லோகமும் | | |

***:—ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் "ஓ குலசேகரரே! என்னை நீர் விசேஷமாகத் துதிக்கின்றீரே; என்னைப்பற்றிய பெருமைகளை நீர் என்ன தெரிந்து கொண்டீர்?" என்று கேட்க; அதற்கு விடை கூறுகின்ருர். பாற்கடலில் பிறந்த பிராட்டி உன் தேவியென்று தெரிந்து கொண்டேன்; சராசரப்ரபஞ்சத்தைப் படைக்கின்ற பிரமன் உனக்கு மகனென்று தெரிந்து கொண்டேன்; அபௌருஷேயங்களான வேதங்களே உன்னைத் துதிக்கின்றனவென்று தெரிந்து கொண்டேன்; அற்ப தெய்வங்களின் அநுக்ரஹத்தால் ஸ்வல்ப பலன் கிடைக்கும்; உனது அநுக்ரஹத்தால் பேரின்பமான மோக்ஷஸாம்ராஜ்யம் கிடைக்குமென்று தெரிந்துகொண்டேன்; உன் சாமர்த்தியத்தைக் காட்டவேணுமென்று அநந்தகோடி ப்ரஹ்மாண்டங்களை ஸ்ருஷ்டி செய்வாய் என்று தெரிந்துகொண்டேன்; உன் இருப்பிடம் ஸ்ரீவைகுண்டமாயினும் உன் குணங்களை விளக்கிக்கொண்டு நிலவுலகத்தில் அவதரித்து, தேவகியை மாதாவாகவும் அர்ஜுனனைத் தோழனுகவும் கொண்டாய் என்பதை அறிந்துகொண்டேன்; இதுதவிர வேருென்றையும் நான் அறிந்துகொள்ளவில்லை என்கிருர்.

“தத் த்வதந்யம் நஜாநே” என்றும் ஒரு பாடமுண்டாம்; தத்—இன்ன பெருமைகள் உனக்கு இருப்பதனால், த்வத் அந்யம்—நீ தவிர வேறொருவரை நஜாநே—அறியேன் என்று பொருள்... ... ... ... ... (௩௨)

க்ருஷ்ணோ ரக்ஷது நோ ஜகத்த்ரய குரு: க்ருஷ்ணம் நமஸ்யாம்யஹம்
க்ருஷ்ணேநாமரசத்ரவோ விநிஹதா: க்ருஷ்ணாய தஸ்மை நம:
க்ருஷ்ணாதேவ ஸமுத்திதம் ஜகதிதம் க்ருஷ்ணஸ்ய தாஸோஸ்ம்யஹம்
க்ருஷ்ணே திஷ்டதி ஸர்வமேததகிலம் ஹேக்ருஷ்ண! ஸம்ரக்ஷ மாம். (௩௩)

| | | | |
|---|---|---|---|
| ஜகத் த்ரய குரு: | மூன்று லோகங்களுக்கும் தலைவனான | க்ருஷ்ணாத் ஏவ ஸமுத்திதம் | கண்ணனிடமிருந்தே உண்டாயிற்று; (ஆகையால்) |
| க்ருஷ்ண: ந: ரக்ஷது | க்ருஷ்ணன் நம்மைக் காப்பாற்றுக; | அஹம் க்ருஷ்ணஸ்ய தாஸ: அஸ்மி | நான் கண்ணனுக்கு அடியனா யிருக்கிறேன்; |
| அஹம் க்ருஷ்ணம் நமஸ்யாமி | நான் க்ருஷ்ணனை வணங்குகிறேன்; | ஏதத் ஸர்வம் அகிலம் | இந்த ஸமஸ்த ப்ரபஞ்சமும் |
| யேந க்ருஷ்ணேந | யாவனொரு க்ருஷ்ணனால் | | |
| அமரசத்ரவ: விநிஹதா: | அஸுரர்கள் கொல்லப்பட்டார்களோ, | க்ருஷ்ணே திஷ்டதி | கண்ணனிடத்தில் நிலைபெற்றிருக்கிறது. |
| தஸ்மை க்ருஷ்ணாய நம: | அந்த க்ருஷ்ணனுக்கு நமஸ்காரம்; | ஹேக்ருஷ்ண! | ஸ்ரீக்ருஷ்ணனே! |
| இதம் ஜகத் | இவ்வுலகமானது | மாம் ஸம்ரக்ஷ | அடியேனைக் காத்தருள வேணும். |

* * *:—மூவுலகங்கட்கும் அஞ்ஞானவிருளை ஒழித்தவனும், இரணியன் சிசுபாலன் முதலான ஆஸுரப்ரக்ருதிகளை அடியறுத்தவனும், எல்லாவுலகங்களையும் தன்னிடத்தில் நின்றும் பிறக்கும்படி செய்தவனும், தன்னிடத்திலேயே உலகமெல்லாம் நிலைத்திருக்கும்படி நிற்பவனுமான கண்ணபிரானை நான் வணங்கி வழிபடுகின்றேன்; அவன் என்னைக் காத்தருள வேணும் என்கிறது.

“க்ருஷ்ணம் நமத்வம் ஸதா” என்றும் பாடமுண்டு. ஸர்வம் என்றும் அகிலம் என்றும் பர்யாயபதங்களையே இரட்டித்துச் சொன்னது-ஒன்றுதப்பாமல் எல்லாவுலகும் என்ற பொருளைக் காட்டும்.

இந்த ச்லோகத்தில் ப்ரதமை முதலிய எட்டு விபக்திகளும் வரிசையாய் அமைக்கப்பட்டிருக்கிற அதிசயம் நோக்கத்தக்கது. (௩௩)

ஸ த்வம் ப்ரஸீத பகவந் குரு மய்யநாதே,
விஷ்ணோ! க்ருபாம் பரமகாருணிக: கில த்வம்
ஸம்ஸாரஸாகர நிமக்நமநந்த! தீநம்
உத்தர்த்து மர்ஹஸி ஹரே! புருஷோத்தமோஸி. (௩௪)

| | | | |
|---|---|---|---|
| ஹேபகவந்! | ஷாட்குண்ய பரிபூர்ணனே! | அநந்த! | இன்ன காலத்திலிருப்பவன், இன்ன தேசத்திலிருப்பவன், இன்ன வஸ்துவைப் போலிருப்பவன் என்று துணிந்து சொல்லமுடியாதபடி மூன்றுவித பரிச்சேதங்களுமில்லாதவனே! |
| விஷ்ணோ! | எங்கும் வியாபித்திருப்பவனே! | | |
| ஸ: த்வம் | வேதப்ரஸித்தனான நீ | | |
| அநாதே மயி | வேறு புகலற்ற என்மீது | | |
| க்ருபாம் குரு | அருள்புரியவேணும்; | த்வம் பரம காருணிக: கில | நீ பேரருளாளனன்றோ? |
| ப்ரஸீத | குளிர்ந்த முகமாயிருக்க வேணும்; | ஸம்ஸார ஸாகர நிமக்நம் | ஸம்ஸாரக் கடலில் மூழ்கினவனாய் |
| ஹேஹரே! | அடியார் துயரைத் தீர்ப்பவனே! | தீநம் | அலைந்து கொண்டிருக்கிற அடியேனை |

| | | | |
|---|---|---|---|
| உத்தர்த்தும் அர்ஹஸி | கரையேற்றக் கடவை; | புருஷோத்தமः அஸி | புருஷர்களிற் சிறந்தவனு யிருக்கிறாய். |

***:—"தத் த்வம் ப்ரஸீத" என்றும் ஓதுவர்; தத்—ஆகையாலே என்றபடி 'ஸ த்வம்' என்ற பாடமே சிறக்குமென்க.

எம்பெருமானே! அடியேன் செய்திருக்கும் எண்ணிறந்த பாவங்களைநோக்கி என் மேல் சீறுபாறென்றிராமல் வாத்ஸல்யத்தை முன்னிட்டு ப்ரஸந்ந முகமாய் இருக்கவேணும். பேரருளாளன் என்னும் திருநாமத்துக்குத் தகுதியாக அடியேன்மீது பரம கருணையைப் பரவச் செய்யவேணும்; ஸம்ஸாரக்கடலில் அழுந்தி அலைகின்ற அடியேனைக் கரையேற்றியருளினால்தான் புருஷோத்தமனென்கிற உன்னுடைய திருநாமம் விலைச்செல்லுமென்கை. (௩௪)

நமாமி நாராயணபாதபங்கஜம் கரோமி நாராயணபூஜநம் ஸதா,
வதாமி நாராயணநாம நிர்மலம் ஸ்மராமி நாராயணதத்த்வ மவ்யயம். (௩௫)

| | | | |
|---|---|---|---|
| நாராயண பாத பங்கஜம் | ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடித் தாமரையை | நிர்மலம் | குற்றமற்ற |
| | | நாராயண நாம | ஸ்ரீமந்நாராயண நாமத்தை |
| நமாமி | ஸேவிக்கிறேன்; | வதாமி | உச்சரிக்கிறேன்; |
| நாராயண பூஜநம் | எம்பெருமானுடைய திருவாராதநத்தை | அவ்யயம் நாராயண தத்வம் | அழிவற்ற பரதத்வமான நாராயணனை |
| ஸதா கரோமி | எப்போதும்பண்ணுகிறேன்; | ஸ்மராமி | சிந்திக்கிறேன். |

***:—தமது மநோ வாக் காயங்களாகிற மூன்று கரணங்களும் ஸ்ரீமந்நாராயணன் திறத்திலேயே ஆழங்காற்படும்படியை இதனால் அருளிச் செய்தவாறு. (௩௫)

ஸ்ரீநாத! நாராயண! வாஸுதேவ! ஸ்ரீக்ருஷ்ணபக்தப்ரிய! சக்ரபாணே!
ஸ்ரீ பத்மநாபாச்யுத! கைடபாரே! ஸ்ரீராம! பத்மாக்ஷ! ஹரே! முராரே!. (௩௬)

அநந்த! வைகுண்ட! முகுந்த! க்ருஷ்ண! கோவிந்த! தாமோதர! மாதவேதி,
வக்தும் ஸமர்த்தோபி ந வக்தி கச்சித் அஹோ! ஜநாநாம் வ்யஸநாபிமுக்யம் (௩௭)

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீநாத! | ஹே லக்ஷ்மீபதியே! | அநந்த | முடிவில்லாதவனே! |
| நாராயண | நாராயணனே! | வைகுண்ட | வைகுண்டனே! |
| வாஸுதேவ | வாஸுதேவனே! | முகுந்த | முகுந்தனே! |
| ஸ்ரீக்ருஷ்ண | ஸ்ரீக்ருஷ்ணனே! | க்ருஷ்ண | கண்ணபிரானே! |
| பக்த ப்ரிய | பக்தவத்ஸலனே! | கோவிந்த | கோவிந்தனே! |
| சக்ரபாணே | சக்கரக்கையனே! | தாமோதர | தாமோதரனே! |
| ஸ்ரீபத்மநாப | ஹே பத்மநாபனே! | மாதவ! இதி | மாதவனே என்றிப்படி (பகவந்நாமங்களை) |
| அச்யுத | அடியாரை ஒருகாலும் நழுவவிடாதவனே! | வக்தும் | சொல்லுவதற்கு |
| கைடப அரே | கைடபனென்னும் அசுரனைக் கொன்றவனே! | ஸமர்த்தः அபி | ஸமர்த்தனாயினும் |
| ஸ்ரீராம | சக்ரவர்த்தி திருமகனே! | கச்சித் ந வக்தி | ஒருவனும் சொல்லுகிறதில்லை. |
| பத்மாக்ஷ | புண்டரீகாக்ஷனே! | ஜநாநாம் | இவ்வுலகத்தவர்களுக்கு |
| ஹரே | பாபங்களைப் போக்குமவனே! | வ்யஸந ஆபிமுக்யம் | (விஷயாந்தரங்களில் மண்டித்) துன்பப்படுவதிலேயே நோக்கமாயிருக்குந்தன்மை |
| முராரே | முராசுரனைக் கொன்றவனே! | அஹோ! | ஆச்சரியம்! |

***:—ஒரு நொடிப்பொழுதும் ஓயாமல் பலவம்புகளையும் வாய்பிதற்றுகின்ற ஜனங்களுக்கு பகவந்நாமங்களை ஸங்கீர்த்தனம் பண்ணுவது ஒரு கஷ்டமான காரியமா? அன்று; ஸ்ரீநாத! நாராயண! இத்யாதி பகவந்நாமங்களை அநாயாஸமாக ஸங்கீர்த்தனம் பண்ண எல்லாராலும் முடியும்; ஆயினும் ஒருவன்கூட இந்தத் திருநாமங்களை அநுஸந்தியாமல் விஷயாந்தரப் படுகுழியிலே விழுந்து அனர்த்தப்பட்டுப்போவதே! இதென்ன கொடுமை!! என்று பராநர்த்த சிந்தையாலே பரிதாபப்படுகிறார். (௩௬—௩௭)

த்யாயந்தி யே விஷ்ணு மநந்த மவ்யயம் ஹ்ருத்பத்மமத்யே ஸததம் வ்யவஸ்திதம்,
ஸமாஹிதாநாம் ஸததாபயப்ரதம் தே யாந்தி ஸித்திம் பரமாஞ்ச வைஷ்ணவீம் (௧அ)

| | | | |
|---|---|---|---|
| ஹ்ருத்பத்மமத்யே | ஹ்ருதய கமலத்தின் நடுவில் | அநந்தம் | அபரிச்சின்நராயுமுள்ள |
| ஸததம் வ்யவஸ்திதம் | எப்போதும் வீற்றிருப்பவரும் | விஷ்ணும் | ஸ்ரீமஹாவிஷ்ணுவை |
| ஸமாஹிதாநாம் | ஸமாதியிலே ஊன்றியிருக்கும் யோகிகளுக்கு | யே த்யாயந்தி | எவர் தியானம் செய்கிறார்களோ, |
| | | தே | அவர்கள் |
| ஸதத அபய ப்ரதம் | ஸர்வ காலத்திலும் 'அஞ்சேல்' என்று அபய ப்ரதானம் பண்ணுமவரும் | பரமாம் வைஷ்ணவீம் ஸித்திம் | சிறந்த வைஷ்ணவ ஸித்தியை |
| அவ்யயம் | ஒருநாளும் அழியாதவரும் | யாந்தி | அடைகின்றார்கள். |

***:—விஷயாந்தரப் பற்றற்றுத் தன்னையே ஊன்றிச் சிந்திக்குமவர்களுக்கு எப்போதும் அபயப்ரதானம் செய்தருள்பவனும், அடியார் நினைத்தபோது சடக்கென உதவுகைக்காக எப்போதும் ஹ்ருதய புண்டரீகத்திலேயே ஸந்நிஹிதனாயிருப்பவனுமான எம்பெருமானை தியானம் பண்ணும் பாகவதர்கள் எல்லா விதத்தாலுமுயர்ந்த விஷ்ணுவின் ஸ்தாநமான பரமபதத்தைப் பெறுவர்களென்றபடி. ... ... ... ... (௧அ)

க்ஷீர ஸாகர தரங்க சீகராஸார தாரகித சாரு மூர்த்தயே,
போகிபோக சயநீய சாயிநே மாதவாய மதுவித்விஷே நம: (௧௯)

| | | | |
|---|---|---|---|
| க்ஷீரஸாகர தரங்க சீகர ஆஸார தாரகிதசாரு மூர்த்தயே | திருப்பாற்கடலில் அலைகளின் சிறு திவலைகளின் பெருக்கினால் நக்ஷத்திரம் படிந்தாற்போன்று அழகிய திருமேனியை யுடையராய் | போகிபோக சயநீய சாயிநே | திருவனந்தாழ்வானுடைய திருமேனியாகிற திருப்படுக்கையில் கண் வளருமவராய் |
| | | மதுவித்விஷே | மதுவென்கிற அசுரனைக் கொன்றவரான |
| | | மாதவாய | திருமாலுக்கு |
| | | நம: | நமஸ்காரம். |

***:—திருப்பாற்கடலில் பிராட்டியுடன் திருவனந்தாழ்வானது திருமேனியாகிற திருப்பள்ளியின்மீது சாய்ந்து கண்வளரும்போது அக்கடலில் வீசுகின்ற அலைகளினின்றும் சிறு துளிகள் வந்து திருமேனியில் முத்துமுத்தாகத் தெறித்திருப்பதைப் பார்த்தால் நக்ஷத்ரங்கள் படிந்திருக்கின்றனவோ! என்று உத்ப்ரேக்ஷிக்கும்படி அழகாக விளங்குகின்ற திருமேனியையுடைய திருமாலை வணங்குகின்றேனென்றபடி. ... ... (௧௯)

யஸ்ய ப்ரியௌ ச்ருதிதரௌ கவிலோகவீரௌ
மித்ரே த்விஜந்மவரபத்மசராவபூதாம்,
தேநாம்புஜாக்ஷ சரணாம்புஜ ஷட்பதேந
ராஜ்ஞா க்ருதா க்ருதிரியம் குலசேகரேண. (௨௰)

| | | | |
|---|---|---|---|
| யஸ்ய | யாவரொரு குலசேகரர்க்கு | அம்புஜாக்ஷ சரணாம்புஜ ஷட்பதேந | தாமரைக் கண்ணனை எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளுக்கு வண்டு போல் அந்தரங்கரான |
| ச்ருதிதரௌ | வேத வித்துக்களாயும் | | |
| கவிலோக வீரௌ | கவிகளுக்குள் சிறந்தவர்களாயும் | | |
| த்விஜந்மவர பத்மசரௌ | ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களாயுமுள்ள 'பத்மன்' 'சரன்' என்னும் இருவர்கள் | தேந | அந்த |
| | | குலசேகரேண ராஜ்ஞா | குலசேகர மஹாராஜராலே |
| ப்ரியௌ மித்ரே அபூதாம் | ஆப்தமித்திரர்களாக இருந்தார்களோ | இயம் க்ருதி: க்ருதா | இந்த ஸ்தோத்ர க்ரந்தம் செய்யப்பட்டது. |

* * *:—மஹா வைதிகோத்தமர்களும் அத்விதீயமான கவந சக்தியை யுடையவர்களும் அந்தணர்களிற் சிறந்தவர்களுமான 'பத்மன்' 'சரன்' என்னும் இரண்டு அந்தரங்க மித்ரனே யுடையவராய் மஹாபாகவத சிகாமணியான ஸ்ரீ குலசேகர மஹாராஜராலே இந்த முகுந்த மாலாஸ்தோத்ரம் அருளிச்செய்யப்பட்டதென்கை.

"த்விஜந்மவர பத்மசரௌ" என்பதற்குப் பலர் பலவகையாகப் பொருள் கூறிப்போருவர். த்விஜந்மவரச்ச பத்மசரச்ச என்று விக்ரஹம் பண்ணி, த்விஜந்மவரனென்றும் பத்மசரனென்று மிரண்டு நண்பர்களிருந்தார்களென்பர் சிலர். பத்மச்ச சரச்ச பத்மசரௌ—த்விஜந்வரௌச தௌ பத்மசரௌச என்பர் சிலர். இவ்விரண்டு படியுமன்றிக்கே, த்விஜந்மவரச்ச பத்ம சரச்ச என்று விக்ரஹமாய் இரண்டையும் ஜாத்யேகவசனமாகக்கொண்டு, ப்ராஹ்மணர்களும் க்ஷத்ரியர்களும் இஷ்டர்களாயிருந்தார்களென்பர் சிலர்; பத்மசர சப்தம் க்ஷத்ரிய வாசகமான படி எங்ஙனேயென்னில்; பத்மம் என்று ஒரு உயர்ந்த எண்ணிக்கையைச்சொல்லிற்றாய், சர சப்தம் பாணவாசியாய், பத்ம ஸங்க்யா: சரா: யஸ்ய ஸ: என்று க்ஷத்ரியனைச் சொல்லிற்றாகக் கடவதென்பர்.

மற்றுஞ் சிலர் கூறுமாறு:—ஆழ்வார்களுடைய அவதாரக்ரமத்தில், குலசேகராழ்வாருக்கு முன்னே நம்மாழ்வாரும், பின்னே பெரியாழ்வாருமா யிருப்பதால் அவர்களைச் சொல்லுகிறது; பெரியாழ்வார் ப்ராஹ்மணச்ரேஷ்டராகையால் த்விஜந்மவர சப்தம் பெரியாழ்வாரைச் சொல்லிற்றாகிறது; இனி, பத்மசர சப்தம் நம்மாழ்வாரைச் சொல்லிற்றாகிறபடி எங்ஙனேயென்னில்; தாமரைமலரை அம்பாகவுடையவன் என்று மன்மதனைச் சொல்லிற்றாய் மதனோ மன்மதோ 'மார:". என்ற நிகண்டுவின்படி மன்மதனுக்குள்ள மார னென்ற பெயரைக் கொண்டு "மாறன் சடகோபன்" என்கிற நம்மாழ்வாரை லக்ஷித லக்ஷணா ப்ரக்ரியையாலே சொல்லிற்றாகக்கடவது: ரகரத்தில் தோன்றும் வல்லின இடையின மாறுபாட்டை அகிஞ்சித்கரமாகக் கொள்ளவேணுமென்பர். ஆக இங்ஙனே கூறும் பொருள்கள் யாவும் அடியேனுடைய நெஞ்சுக்கு இசைந்தவையல்ல. இந்த முகுந்தமாலா ஸ்தோத்ரம் ஸ்ரீ குலசேகராழ்வாருடைய க்ருதியன்றென்பது பெரியோர்களின் கொள்கை என்பதை முகவுரையில் விரித்துரைத்திருக்கிறேன். குலசேகராழ்வாருடைய பரம்பரையில் வேறொரு குலசேகரர் என்கிற பரம வைஷ்ணவ சிகாமணியான மஹாராஜர் இருந்தாரென்றும், அவர் ஸம்ஸ்க்ருதபண்டிதராய் நாடகம், காவ்யம், சம்பூ முதலிய பல வடநூல்கள் இயற்றியுள்ளாரென்றும், அவர்க்கு பத்மனென்றும் சரனென்றும் இரண்டு இஷ்டமித்ரர்களிருந்தனரென்பது அவருடைய ஒரு நாடகத்தில் புலப்படுகின்றதென்றும், இந்த முகுந்தமாலையும் அவ்வரசர் இயற்றியதாயிருக்கவமையும் என்றும் அடியேன் மலைநாட்டுத் திருப்பதி யாத்திரையில் சில மஹநீயர்பால் கேட்டுணர்ந்தேன். இதில் ஔசித்யமும் தோன்றியிருக்கிறது.

ஆனால், குலசேகராழ்வாருடைய ஸ்ரீ ஸூக்தியாகவே இம்முகுந்தமாலையை ஆதரிக்கும் பெரியோர்களும் பலர் இருப்பதாலும், அங்ஙனன்றென்று மறுப்பதால் பல மஹான்களுக்குத் திருவுள்ளம் புண்படுவதாகத் தெரிகிறபடியாலும் "மஹாஜநோயேந கதஸ் ஸ பந்தா" என்றபடி அவ்வழியைப் பின் செல்வதே பாங்கெனத் துணிந்து அடியேனும் இதனைக் குலசேகராழ்வார் ஸ்ரீஸூக்தியாகவே கொள்கின்றேன்.

சொற்சுவை பொருட்சுவை இரண்டும் அழகாக அமையப் பெற்றுள்ள இத்தோத்திரம் ஸ்ரீமந்நாதமுனிகள் காலந்தொடங்கியே ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களாலும் ஆதரத்துடன் அநுஸந்திக்கப்பட்டு வந்ததென்பதில் விப்ரதி பத்தியுடையார் யாருமில்லை.

"தத்வம் ஸவேத்தி பகவாநிஹ ஸர்வவேத்தா"

ஸ்ரீ குலசேகரப் பெருமாள் திருவடிகளே சரணம்

பெருமாள்கோயில் ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
**முகுந்தமாலே உரை**
முற்றுப்பெற்றது.



ஸ்ரீ:

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த

ஆளவந்தார் ஸ்தோத்ரமென்று பிரஸித்தமான

# ஸ்தோத்ரரத்நம்.

45204
O,2,3:1(7:0)9,8
31H7

ஸ்ரீ:

## உரைகாரர் விண்ணப்பம்.

---

நமக்குத் தாயும் தந்தையுமாய் ப்ரியங்களையும் ஹிதங்களையுமே சிந்தித்தும் நடத்தியும் வருகின்ற எம்பெருமானுடைய கட்டளைகளை மீறிமீறி நடப்பதன் பலனாக இந்த இருள் தருமா ஞாலமாகிற ஸம்ஸார மண்டலத்திலேயே மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து அலைந்து திரிந்து வருந்துகின்ற ஸம்ஸாரிகளுக்கு அவ்வெம்பெருமானுடைய முகமலர்த்தியை ஸம்பாதித்துக் கொள்வது தவிர வேறொரு மோக்ஷோபாயமும் இல்லையென்பது அனைவர்க்கும் தெரிந்ததே. திருவுள்ளம் உவந்தாலல்லது திருமுகம் மலராதாகையால் எம்பெருமானுடைய திருவுள்ளத்தினுகப்பே நமக்கு அவசியமாக ஸம்பாதித்துக்கொள்ளத்தக்கது என்றதாயிற்று.

அவனுடைய திருவுள்ளத்தை உகப்பிக்கவேண்டியதற்கு உரிய உபாயங்கள் ச்ரவணம் என்றும் மநநம் என்றும் பலவகையாக சாஸ்த்ரங்களில் சொல்லப்படுகின்றன. அவற்றுள் சில உபாயங்கள் யாரோ சில உத்தமர்கட்கே அதிகரிக்க உரியவையாதலால் எல்லார்க்கும் எளிதானவையல்ல. மற்றுஞ் சில உபாயங்கள், பாவங்கள் தொலைந்து புண்ணியங்கள் நிரம்பின சில மஹான்களுக்கே உரியவையாதலால் பாவங்களைக் கூடுபூரித்துக் கிடக்கின்ற நம்போலியர்க்குப் பெரும்பாலும் அவை பயன்படா. இவ்விஷயத்தை நமது முன்னோர்கள்தாமே நன்கு ஆராய்ந்து, எவ்வகையாலும் உஜ்ஜீவிக்கமாட்டாதநம்மையும் உஜ்ஜீவிப்பிக்கத்திருவருள் நிரம்பிய திருவுள்ளத்தினராய் ஸ்தோத்ரம் என்கிற ஒரு சிறந்த உபாயத்தைப் பிரகாசிப்பித்தருளினார்கள்.

எம்பெருமானை ஸ்தோத்ரஞ் செய்வதென்பது இன்னார்க்குத்தான் உரியது என்று நியமமில்லாமைபற்றி இது ஸர்வாதிகாரமென்றும், பல கருமங்களுக்கு முன்னும் பின்னும் அங்க

மாகச் செய்யவேண்டிய சடங்குகள் பல இருப்பதுபோல் இதற்கு யாதொன்று மில்லாமையாலே இது எளிதான காரியமென்றும், ஸ்தோத்ரம் பண்ணத்தொடங்கும்போதே விலக்ஷணமான வொரு பக்தி விசேஷம் நெஞ்சிலே தோன்றுகின்றமையால் இது பரமானந்த ஜநகமென்றும் ஆக இப்படிகளாலே புகழப்பெற்றதான துதித்தல் என்னுமுபாயம் எம்பெருமானுடைய திருவுள்ளத்தை எளிதில் உகப்பிக்கக் கூடியதேயாம். வேதங்களிலும் புராணங்களிலும் இதிஹாஸங்களிலும் இதன் பெருமை பரக்கக் கூறப்பட்டுள்ளது.

கிருதயுகத்தில் தியானிப்பது சிறந்ததென்றும், த்ரேதாயுகத்தில் யஜ்ஞயாகங்கள் செய்வது சிறந்ததென்றும், த்வாபரயுகத்தில் அர்ச்சனைகள் செய்வது சிறந்ததென்றும், இக்கலியுகத்தில் ஸ்துதிப்பது சிறந்ததென்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றமை இங்கு நோக்கத்தக்கது.

நாமாகச் சில சொற்களைத் தொடுத்து ஸ்துதி செய்வதிற்காட்டிலும் அறிவிற்சிறந்த ஆரியர்கள் அருளிய ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு ஸ்துதி செய்வது எம்பெருமான் திருவுள்ளத்துக்கு மிக உகப்பாதலால் ஜ்ஞானபக்திவிரக்திகளால் ஒப்புயர்வற்றவர்களென விளங்கி நின்ற நம் பூருவாசாரியர்கள் பரம கருணையால் நமக்காகவே அருளிச்செய்த ஸ்தோத்ரங்களை அநுஸந்தித்து உஜ்ஜீவித்தல் நன்று.

நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் எண்ணிறந்த ஸ்தோத்ரங்கள் அவதரித்திருந்தாலும் ஆளவந்தார் அருளிச் செய்த ஸ்தோத்ரத்திற்கு உள்ள பெருமை ஒப்புயர்வற்றது. ஸ்தோத்ர ரத்நம் என்று இதற்குத் திருநாமம் வழங்கிவருதல் கொண்டே இதன் பெருமையை நாம் நன்கு உணர்தற்குரியோம். எப்படிப்பட்ட கல்நெஞ்சினர்க்கும் இதில் ஒரு ச்லோகத்தைச் செவியுற்ற மாத்திரத்தில் நெஞ்சு நீர்ப்பண்டமாய் உருகுமென்பதைப் பன்னி யுரைக்கவும் வேண்டுமோ? ஆளவந்தாருடைய பக்திப் பெருங்காதலும், ரஸங்களில் அவர் தந்மயமாயிருந்ததும், அரிய பெரிய சாஸ்த்ரார்த்தங்களை அவலீலையாகவே எடுத்துரைத்ததும் இதில் ஒவ்வோரக்ஷரத்திலும் ஒளிமல்குமன்றே.

பகவத் விஷயத்தில் ஸ்தோத்ரம் செய்தவர்களான எம்பெருமானார் ஆழ்வான் பட்டர் தேசிகன் முதலாயினோர்க்கும் இவ்வாளவந்தார் ஸ்தோத்ரமே வழிகாட்டியாக அமைந்ததென்பதையும், இதில் அநுஸந்திக்கப்பட்டுள்ள அர்த்தங்களே பெரும்பாலும் மற்ற ஸ்தோத்திரங்களில் சப்த பேதத்தால் அநுஸந்திக்கப்படுகின்றனவென்பதையும், இதிலுள்ள சொற்பொருளின்பங்கள் வேறு எதிலும் அமையமாட்டா என்பதையும் நன்குணர்ந்த நம் முன்னோர்கள் இந்த ஸ்தோத்ர ரத்நத்தில் அளவற்ற அபிநிவேசத்தைக் காட்டிவந்தார்கள். இதுதன்னைக் கற்றுணராதவர்களை அவைஷ்ணவர்களென்றே நம்மவர்கள் நிச்சயிப்பார்கள். ஆஸ்திக ஸ்ரீவைஷ்ணவர்களாயுள்ளவர்கள் ஆழ்வாரருளிச் செயல்களில் திருப்பல்லாண்டையும் திருப்பாவையையுமாவது அதிகரிப்பதுபோல், ஸ்தோத்ரங்களிலும் இதை நியமேந அதிகரித்துவரக் காண்கிறோம்.

எம்பெருமானுடைய ஸ்தோத்ரமாயுள்ளவற்றை அநுஸந்திக்கும்போது அர்த்தஜ்ஞானமில்லாமல் வெறும் மூலத்தை மாத்திரம் உச்சரித்தாலும், உச்சரிப்பவர்களின் நெஞ்சு ஆநந்தமுறுவதிலும் எம்பெருமான் திருவுள்ளமுகப்பதிலும் தடையில்லையாயினும் அர்த்தஜ்ஞானமுமிருந்து அநுஸந்திப்பதில் விலக்ஷணமான ஆநந்தம் விளையுமாதலால் ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரும் இதன் பொருளையும் கருத்தையும் அறிய விரும்புவது அவசியமேயாம்.

இதற்குப் பெரியவாச்சான்பிள்ளையும் வேதாந்ததேசிகனும் வியாக்கியானங்கள் அருளிச் செய்திருந்தாலும், கற்றுணர்ந்த வித்வான்களுக்கன்றி மற்றையோர்க்கு அவற்றில் ப்ரவேசம் அருமைப்படுமாதலால் அனைவர்க்கும் எளிதில் உபயோகமாம்படி அடியேன் திவ்ய ப்ரபந்தங்கட்கு உரையிட்டதுபோலவும், முகுந்தமாலை பஞ்சஸ்தவம் முதலிய மற்ற ஸ்தோத்ரங்களுக்கு உரையிட்டது போலவும் இந்த ஸ்தோத்ரரத்நத்திற்கும் ரத்நப்ரபா என்னும் ஒருரை இடப்புகுகின்றேன். இதிலுள்ள குற்றங்குறைகளைப் பெரியோர் பொறுத்தருள்வாராக.

இங்ஙனம்:

ஸ்ரீவைஷ்ணவதாஸன்,

**ப்ர. அண்ணங்கராசிரியன்**

ஸ்ரீ:

ஆளவந்தார் ஸ்தோத்ரம் என்னும்

# ஸ்தோத்ரரத்நம்.

(தனியன்)

**ஸ்வாதயந்நிஹ ஸர்வேஷாம் த்ரய்யந்தார்த்தம் ஸுதுர்க்ரஹம்.**
**ஸ்தோத்ரயாமாஸ யோகீந்த்ர: தம் வந்தே யாமுநாஹ்வயம்.**

பதவுரை

| | | | |
|---|---|---|---|
| ய: யோகீந்த்ர: | யாவரொரு (ஆளவந்தாரென்கிற) யோகிச்ரேஷ்டர் | ஸ்வாதயந் | எளிதாக அனுபாவ்யமாக்கிக் கொண்டு |
| ஸுதுர் க்ரஹம் | (ஒருவராலும்) அடியோடு க்ரஹிக்க முடியாத | ஸ்தோத்ரயாமாஸ | ஸ்தோத்ரரூபமாக வெளியிட்டாரோ |
| த்ரய்யந்த அர்த்தம் | வேதாந்தப்பொருளை | | |
| இஹ | இவ்வுலகில் | தம் யாமுந ஆஹ்வயம் | அந்த ஆளவந்தாரை |
| ஸர்வேஷாம் | அனைவர்க்கும் | வந்தே | ஸேவிக்கிறேன். |

* *:—இந்த ஸ்தோத்ரத்தில் ஒவ்வொரு ச்லோகத்திலும் வேதாந்த விழுப்பொருள்கள் அடங்கியிருக்கின்றனவென்பதைக் காட்டும் இத்தனியன். வேதாந்தமாவது உபநிஷத்துக்கள். அவற்றின் பொருள்களை அவற்றையே கொண்டு நேராக அறிவது அருமை; இந்த ஸ்தோத்ரத்தை அர்த்தத்துடன் தெரிந்து கொண்டால் வேதாந்தங்களின் ஸாரமான பொருள்கள் யாவும் எளிதில் தெரிந்துவிடும். ஆளவந்தார் வேதாந்த தாத்பரியங்களை அஸ்மதாதிகளுக்கு ஸுலபமாகத் தெரிவிக்கத் திருவுள்ளம் பற்றியே ஸ்தோத்ரமென்கிற திருநாமத்தால் இந்த திவ்ய க்ரந்தத்தை அருளிச்செய்தார். வித்வான்களாயுள்ளவர்கள் உபநிஷத்துக்களைக் கொண்டே அவற்றின் பொருள்களை அறிந்து கொள்ளலாமாயினும், இந்த ஸ்தோத்ர மூலமாய் எவ்வளவு போக்யமாக அறிந்து கொள்ளக்கூடுமோ அவ்வளவு மதுரமாக உபநிஷத்துக்களால் அறிந்துகொள்ள முடியாது. வேதார்த்தங்களை இதில் வெளியிடுகிற முறையானது பண்டிதர்களோடு பாமரர்களோடு வாசியற எல்லார்க்கும் இனிமையாயிருக்கும். இப்படி நமக்கு மஹோபகாரஞ் செய்தருளின "எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன்" என்று ப்ரஸித்தரான ஆளவந்தாரை வணங்குகிறேனென்கிறது....

(மற்றொரு தனியன்.)

**நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம:,**
**நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம:,**

* *:—ஆளவந்தார்க்கு நமஸ்காரம், ஆளவந்தார்க்கு நமஸ்காரம் என்று ஆதராதிசயத்தாலே பலகால் சொல்லி வணங்குவதாம். ... ... ... ...

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீரஸ்து

ஆழ்வாரெம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.



ஆளவந்தார் திருவடிகளே சரணம்.

ஆளவந்தார் அருளிச்செய்த

# ஸ்தோத்ரரத்நம்

பெருமாள்கோயில் ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்யர் இயற்றிய

ரத்நப்ரபா என்னும் உரையுடன் கூடியது

---

**நமோ சிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்ய ராசயே.**
**நாதாய முநயே காத பகவத் பக்தி ஸிந்தவே.** (க)

| | | | |
|---|---|---|---|
| அசிந்த்ய அத்புத அக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்ய ராசயே | இப்படிப்பட்டதென்று நினைக்கமுடியாததும் ஆச்சரியமானதும் (எம்பெருமானருளாலே) எளிதாகக் கிடைத்ததுமான ஞானத்தினுடையவும் வைராக்கியத்தினுடையவும் திரட்சி போன்றவராயும் | அகாத பகவத் பக்தி ஸிந்தவே | ஆழ்ந்த பகவத் பக்திக்குக் கடலாயுமிருக்கிற |
| | | நாதாய முநயே | ஸ்ரீமந்நாதமுநிகளுக்கு |
| | | நம: | நமஸ்காரம் (செய்கிறேன்.) |

* * *:—ஸ்ரீமந்நாதமுநிகளை நமஸ்கரிக்கிறார். அவர் எப்படிப்பட்டவர்? ஞானமும் விரக்தியும் இங்ஙனே ஒரு வடிவு கொண்டனவோ! என்று நினைக்கக்கூடியவர்; ஆழ்ந்த பகவத்பக்திக்கு இருப்பிடமானவர். எனவே, ஜ்ஞாநபக்தி விரக்திகளாலே பரிபூர்ணரான ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு நம:—என்றாராயிற்று. இவருடைய ஞானமும் விரக்தியும் எப்படிப்பட்டவையென்னில்; [அசிந்த்ய, அத்புத, அக்லிஷ்ட.] அசிந்த்யமாகையாவது—இன்னாருடைய ஞானவிரக்திகள்போலே யிருக்குமென்று நினைக்க முடியாமையும், இவ்வளவென்று ஓரளவிட்டு அறிய முடியாமையும். அத்புதமாகையாவது—அசிந்த்யமான இவருடைய ஞானவிரக்திகளிலே நாம் நமது சிற்றறிவுக்கு எட்டியவரையில் எவ்வளவு க்ரஹிக்கிறோமோ அவ்வளவுதானும் ஆச்சரியமாயிருக்கை. அக்லிஷ்டமாகையாவது—அநாயாஸமாகக் கிடைத்ததாகை. வ்யாஸர், பராசரர் முதலிய ரிஷிகளுக்கும் ஞானவிரக்திகள் உண்டாயிருந்தாலும் அவை அவர்களால் தவம் முதலிய ஆயாஸங்களாலே ஸம்பாதித்துக் கொள்ளப்பட்டனவாதலால் க்லிஷ்டமாயிருக்கும். ஸ்ரீமந்நாதமுநிகளின் ஞானவிரக்திகள் அப்படி ஸ்வப்ரயத்நமூலகமன்றியிலே ஆழ்வார்களுக்குப் போலே எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையினால் கிடைத்தனவாகையால் அக்லிஷ்டமென்கிறது. இப்படிப்பட்ட ஜ்ஞானவைராக்கியங்கள் கும்பலாகக் குவிந்து நாதமுநிகளாகத் தோற்றுகின்றன போலும். ஞானமென்று ஒரு பதார்த்தமும் வைராக்கியமென்று ஒரு பதார்த்தமும் ஆக இரண்டு வஸ்துக்கள்தானே உள்ளது, இவை கும்பலாகக் குவிகின்றன வென்பது எங்ஙனே கூடும்? என்னில்; ஜ்ஞானத்திற்கு விஷயமாகக்கூடிய வஸ்துக்கள்

—எம்பெருமானுடைய ஸ்வரூபம் ரூபம் குணம் விபூதி முதலியவை பல்லாயிரமுண்டாகையாலும், வைராக்யத்துக்கு விஷயமான வஸ்துக்களும்—* அன்னை, அத்தன், புத்திரர், பூமி, வாசவார் குழலார் என்னுமவை பலபல உண்டாகையாலும் சொல்லக்குறையில்லை.

[அகாத பகவத்பக்தி ஸிந்தவே.] பகவத் பக்திரஸத்திற்கு நாதமுனிகள் ஆழ்ந்ததொரு கடல் போலே யிருப்பாராம். கடலானது கீழ்த்தரை கண்டுபிடிக்க முடியாதிருப்பதும், கலக்கிவிடவேணுமென்ற எண்ணங்கொண்டு எவ்வளவு கலக்கினாலும் கலங்கமுடியாதிருப்பதும் ப்ரஸித்தம். நாதமுனிகளின் பக்தியும் அப்படிப்பட்டதே. பகவத்பக்திக்கு ஸமுத்ரமாயிருப்பவர் என்றும் பகவத்பக்தியாகிற ஸமுத்திரத்தைத் தம்மிடத்திலேயே உடையவர் என்றும் இருவகையாகப் பொருள் கொள்வர் ஸமாஸபேதத்தாலே. ஜ்ஞானவைராக்கியங்களைவிட பக்தி முக்யமென்பது தோன்ற பக்தியுடைமையைத் தனிவிசேஷணத்தால் கூறினர்.

நாதமுனிகளின் பூர்ணமான திருநாமம் ஸ்ரீரங்கநாதமுனி என்பதாம். அதன் ஏகதேசத்தாலே ப்ரஸித்தி. முனி = எப்போதும் எம்பெருமானையே மநநம் செய்பவர். ... ... (க)

**தஸ்மை நமோ மதுஜிதங்க்ரிஸரோஜதத்வ ஜ்ஞாநாநுராக மஹிமாதிசயாந்தஸீம்நே**
**நாதாய நாதமுநயேத்ர பரத்ரசாபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம்.** (உ)

| | | | |
|---|---|---|---|
| மதுஜித் அங்க்ரி ஸரோஜ தத்வ ஜ்ஞாந அநுராக மஹிமாதிசய அந்த ஸீம்நே | எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளைப் பற்றின உண்மையுணர்ச்சியென்ன ஆசையென்ன இவற்றின் பெருமேன்மைக்கு எல்லை நிலமாயும் | அத்ர | இவ்வுலகத்திலும் |
| | | பரத்ர அபி | மேலுலகத்திலும் |
| | | நித்யம் | எப்போதும் |
| | | யதீய சரணௌ | எந்த ஸ்ரீமந்நாதமுனிகளுடைய திருவடிகள் |
| நாதாய | எனக்கு நாதராயுமிருக்கிற | மதீயம் சரணம் | என்னுடையதான புகலிடமோ, |
| தஸ்மை நாத முநயே நம: | அந்த நாதமுனிகளுக்கு நமஸ்காரம்; | | [அந்த நாதமுனிகளுக்கு நமஸ்காரமென்கை.] |

* * *:—ஆழ்வார்க்குப்பின்னே நம் ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதமாசார்யரான ஸ்ரீமந்நாதமுனிகளை மீண்டும் நமஸ்கரிக்கின்றார். ஸ்ரீமந்நாதமுனிகளுடைய திருவடித்தாமரைகள் இந்த லோகத்திலும் பரலோகத்திலும் ஸர்வகாலத்திலும் அடியேனுக்கு சரணமாகிறபடியால் அவர்க்கு மீண்டும் நமஸ்காரம். அவர் எப்படிப்பட்டவர்? எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளைப்பற்றின தத்வஜ்ஞாநத்தால் பரிபூர்ணர்; அத்திருவடிகளில் அன்பினாலும் பரிபூர்ணர். எம்பெருமானுடைய அவதாரரஹஸ்யம், வாத்ஸல்யாதி குணங்கள் முதலியவற்றின் உண்மையை உள்ளபடி உணர்ந்து அவன்பக்கல் ப்ரேமம் கனத்திருப்பவர்களில் இவர் நிகரற்றவர் என்றபடி.

"மதுஜித் தத்வஜ்ஞாந" என்றாலே போதுமாயினும், சிசுக்களுக்குத் தாய்மார்களின் ஸ்தனம்போல் தத்வஜ்ஞானிகளுக்கு எம்பெருமானுடைய பாதாரவிந்தமே பரமோத்தேச்யம் என்பது தோன்ற அங்க்ரி ஸரோஜ என்று இடையில் தொடுக்கப்பட்டது. எம்பெருமானுடைய திருவடிகளைப்பற்றின தத்வஜ்ஞானமாவது எம்பெருமானைப்பற்றின தத்வஜ்ஞானமேயாம். அந்த தத்வஜ்ஞானத்தின் மஹிமாதிசயமாவது அரைகுறையன்றிக்கேபரிபூர்ணமான தத்வஜ்ஞானம். அதற்கு நாதமுனிகள் முடிவெல்லையாயிருப்பர் என்றது—இவரைப்போன்ற தத்வஜ்ஞாநிகள் வேறுயாருமில்லையென்றபடி. பகவத் தத்வஜ்ஞானமும் பகவதநுராகமும் முடிவாக நாதமுனிகளிடத்தே வந்து விச்ரமித்தனபோலும். மற்றும் பல யோகிகள் பகவத்தத்வஜ்ஞாநிகளாகவும் பகவத் பக்தர்களாகவும் இருந்தாலும் அவர்களெல்லாரும் இவர்க்குத் தாழ்ந்தவர்களே என்கை.

[அத்ர பரத்ரசாபி.] மோக்ஷமடைவதற்கு முன்னும் மோக்ஷமடைந்த பின்னும் ஆகிய எக்காலத்திலும் நாதமுனிகளுடைய திருவடிகளே தமக்குத் தஞ்சம் என்கிறாரே, இது கூடுமோ? திருநாட்டில் எம்பெருமானுக்கன்றோ சேஷமாயிருப்பது; நாதமுனிகளின் திருவடிகள் அவ்விடத்தில் இவர்க்குஎப்படி தஞ்சமாகும்? என்னில்; பரமபதத்துக்குச் செல்ல விரும்புகிறவர்கள் "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ" [திருவாய்மொழி 2—3—10] என்றும் "மத்தைவதை: பரிஜநைஸ் தவ ஸங்கஸீய" [ஸ்ரீவைகுண்டஸ்தவம்.] என்றும் திருநாட்டிலுள்ள பாகவதர்களுக்குத் தொண்டு பூண்டிருக்கவே விரும்புகிறபடியாலும், பரம

பதத்திற்கு 'வானவர் நாடு' என்று பெயராகையாலே பாகவதர்களுக்கே அங்கு ப்ராதாந்ய மிருப்பதாலும், உலகில் திருநாட்டுக்கெழுந்தருளும் ஸ்வாமிகளை 'ஆசாரியன் திருவடியடைந் தார்' என்றே சொல்லும்படி பெரியோர் நம்மைக் கற்பித்திருப்பதாலும்— பரமபதத்திலும் நாதமுநிகளின் திருவடிகளே எனக்கு உபேயம் என்று இவர் கூறுவது பொருந்தும். 'சரணம்' என்கிற பதம் உபாயத்துக்கும் உபேயத்துக்கும் வாசகம். ... ... (உ)

**பூயோ நமோ பரிமிதாச்யுத பக்திதத்வ ஜ்ஞாநா ம்ருதாப்தி பரிவாஹசுபை: வசோபி: லோகேவதீர்ண பரமார்த்த ஸமக்ர பக்தி யோகாய நாதமுநயே யமிநாம் வராய. (ங)**

| | | | |
|---|---|---|---|
| அபரிமித அச்யுத பக்தி தத்வஜ்ஞாந அம்ருதாப்தி பரிவாஹ சுபை: | அளவில்லாத பகவத்பக்தி யென்ன, தத்வஜ்ஞாந மென்ன இவையாகிற அமுதக் கடலின் பரிவாஹம் போன்று ப்ரஸந்நசீதளங் களான | அவதீர்ண பரமார்த்த ஸமக்ர பக்தி யோகாய | அவதாரம் செய்திருக்கிற பரம புருஷார்த்தமாயும் பரிபூர்ணமாயுமிருக்கிற பக்தியோகத்தை யுடைய வராகிய |
| வசோபி: | ஸ்ரீஸூக்திகளாலே | யமிநாம் வராய | யோகிகளில் சிறந்தவரான |
| லோகே | இவ்வுலகத்தில் | நாதமுநயே | நாதமுநிகளுக்கு |
| | | பூய: நம: | மறுபடியும் நமஸ்காரம். |

* * *:—தாஹித்தவனுக்குத் தண்ணீர் குடிக்கக் குடிக்க மேன்மேலும் தாஹம் கிளர் வதுபோல் இவர்க்கும் நாதமுநிகள் திருவடிகளிலேயே மேன்மேலும் ப்ரேமம் அதிகரித்து அவரையே மீண்டும் வணங்குகிறார். [யமிநாம் வராய நாதமுநயே பூயோ நம:] யோகிகளுக்குள் தலைவரான நாதமுநிகளுக்கே மறுபடியும் நமஸ்காரம். அவர் எப்படிப்பட்டவர்?;—தம்மு டைய ஸ்ரீஸூக்திகளாலே இவ்வுலகில் பக்தியோகத்தைப் பரிபூர்ணமாகவும் உண்மையாகவும் வெளியிட்டருளினவர். அவருடைய அந்த ஸ்ரீஸூக்திகள் எப்படிப்பட்டவை யென்னில்; [அபரிமித அச்யுதபக்தி தத்வஜ்ஞாந அம்ருதாப்திசுபை:] எம்பெருமானிடத்தில் அவர் கொண்டி ருந்த அளவற்ற பக்தியென்ன, அவன் விஷயமான தத்வஜ்ஞாநமென்ன ஆகிய இவை ஒரு பெரிய அமுதக்கடலாகத் திருவுள்ளத்தினுள் நிரம்பி, உள்ளே அடங்கமாட்டாது வெளியே பெருகிவந்த அம்ருதப்ரவாஹமோ இந்த ஸ்ரீஸூக்திகள் என்று நினைக்கக்கூடியவை. தம்மு டைய பக்தியையும் தத்வஜ்ஞாநத்தையும் நன்கு வெளிப்படுத்துகின்ற போக்யமான ஸ்ரீஸூக்தி களாலே பக்தியோகத்தின் ரஹஸ்யங்களை இவ்வுலகத்தவர்க்கு உரைத்தருளின நாதமுநிகட்கு நமஸ்காரம் என்றாராயிற்று.

ஏரி முதலியவை நிறைந்துவிட்டால் உடைபடாமல் அவற்றை ரக்ஷிப்பதற்காகக் கலங்கல் எடுத்துவிடுவதுண்டே, அதற்குப் பரீவாஹ மென்று பெயர்- ஸ்ரீஸூக்திகளை பக்திபரீவாஹ மென்றதனால்—வாய்விட்டுச் சொற்களைச் சொல்லாவிடில் சரீரம் தரிக்கமுடியா தென்பதும், அவர் சொன்ன சொற்கள் யாவும் பக்திபலாத்காரத்தாலே அவதரித்தனவேயன்றி ஸ்வதந்த்ர மாகச் சொன்னவையல்ல என்பதும் தெரிவிக்கப்படும். அம்ருதபரீவாஹம்போல் சுபங் களான ஸ்ரீஸூக்திகளென்றது—ப்ரஸந்நமாயும் மதுரமாயும் சீதளமாயுமிருக்கிற திவ்ய ஸூக்தி களென்றபடி. இந்த ஸ்ரீஸூக்திகளாவன வை யென்னில் ந்யாய தத்வம் என்கிற ஒரு சிறந்த க்ரந்தம் நாதமுநிகளால் அருளிச் செய்யப்பட்டிருந்ததென்று ஸ்ரீதேசிகன் முதலானோர் எடுத் துக்கூறுகிறபடியால், தற்காலம் அந்த திவ்யக்ரந்தம் துர்லபமாய்விட்டாலும் ஆளவந்தார் காலத்திலே ப்ரஸித்தமாயிருந்ததனால் அதைத் திருவுள்ளம்பற்றி இங்கு [வசோபி:] என்கிறார் என்னலாம். அன்றி, சிஷ்யர்களுக்கு உஜ்ஜீவநமாக நாடோறும் உபதேசித்துக்கொண்டிருந்த நித்யகாலக்ஷேப ஸ்ரீஸூக்திகளைச் சொல்லுகிறாரென்னவுமாம்.

நாதமுநிகள் உபதேசித்தருளின பக்தியோகம் இன்றைக்கும் இவ்வுலகத்தில் வழங்கி வருகின்றதோ வென்னில்; இல்லை. 'குருகை காவலப்பன்' என்கிற ஸ்வாமியால் ஆளவந்தார்க் குக் கிடைக்கவேண்டியதாயிருந்தது; ஆனால் அவர் குறிப்பிட்டிருந்த ஸமயத்தில் ஆளவந்தார் திருவனந்தசயநக்ஷேத்ர யாத்திரை யெழுந்தருளி ஸமயத்தை இழந்ததனால் அந்த பக்தியோகம் குருகைகாவலப்பனோடே விச்ராந்தமாயிற்றென்று ஸம்ப்ரதாயஜ்ஞர் கூறுவர். யோகம் என்கிற சப்தத்திற்கு "யோகஸ் ஸந்நஹநோபாய த்யாநஸங்கதியுக்திஷு" என்ற நிகண்டின்படி பல பொருள்களுண்டாதலால், பக்தியாகிற உபாயம் என்றாவது ப்ரீதிரூபமான த்யானம் என்று

வது பொருள்கொள்ளலாம். நெஞ்சுகனிந்து எம்பெருமானைச் சிந்திப்பதென்கிற ஒரு நல் வழியை இவ்வுலகில் நாதமுனிகளே காட்டியருளினராதலால் அதை இங்குச் சொல்லுகிறு ரென்றுங் கொள்ளலாம்; அப்போது, குருகைகாவலப்பனோடு விச்ராந்தமான பக்தியோகத் தைப்பற்றி இங்கு ப்ரஸ்தாவமில்லையென்று கொள்க. பக்தியோகத்திற்கு, பரமார்த்த என்றும் ஸமக்ர என்றும் இரண்டு விசேஷணங்கள் கொடுத்திருப்பதனுல்—நாதமுனிகள் அவதரிப்பித்த பக்தியானது ஸ்வயம் ப்ரயோஜநமென்பதும் எம்பெருமானைப் பெறுதற்குப் பர்யாப்தமான உபகரணமென்பதும் விளங்கும். (௩)

தத்த்வேந யச் சிதசிதீச்வர தத் ஸ்வபாவ போகாபவர்க்க ததுபாய கதீருதார:
ஸந்தர்சயந் நிரமிமீத புராணரத்நம் தஸ்மை நமோ முநிவராய பராசராய. (௪)

| | | | |
|---|---|---|---|
| உதார: | உதாரஸ்வபாவமுடையரான | தத்த்வேந | உள்ளபடி |
| ய: | யாவரொரு பராசரர் | ஸந்தர்சயந் | விளக்காநின்றுகொண்டு |
| சித் அசித் ஈச்வர, தத்ஸ்வபாவ, போக, அபவர்க்க, ததுபாய கதீ: | சித்து அசித்து ஈச்வரன் என்கிற தத்வத்ரயமென்ன அவற்றின் தன்மைகளென்ன, விஷயாநுபவமென்ன, மோக்ஷமென்ன, மோக்ஷோபாயங்களென்ன, இவ்வாத்மா போகக்கூடிய வழிகளென்ன ஆகிய இவற்றை | புராண ரத்நம் | புராணங்களுள் சிறந்ததான ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை |
| | | நிரமிமீத | அருளிச்செய்தாரோ |
| | | தஸ்மை | அப்படிப்பட்ட |
| | | பராசராய முநிவராய | பராசரமஹர்ஷிக்கு |
| | | நம: | நமஸ்காரம். |

* * *:—கீழ் மூன்று ச்லோகங்களாலே ஸ்ரீமந்நாதமுனிகளை நமஸ்கரித்தபின் ஸ்ரீவிஷ்ணு புராண முகத்தாலே தத்வத்ரயஜ்ஞாநத்தையும் மற்றும் பல விசேஷார்த்தங்களையும் உலகத் தவர்க்கு உபகரித்த மஹாநுபாவராகிற ஸ்ரீபராசர மஹர்ஷியை வணங்குகிறார் இதில். ஈமஹா பாரதம் முதலியவற்றால் வ்யாஸரும் உபகாரகராயிருந்தாலும், அவச்யம் தெரிந்துகொள்ளவேண் டிய ஸாரமான அர்த்தங்களை மிக்க விஸ்தாரமின்றியும் ஸ்பஷ்டமாகவும் ஸ்ரீவிஷ்ணுபுராணத் தாலே தெரிவித்தருளினவர் ஸ்ரீபராசரரேயாகையால் வ்யாஸாதிகளை விட்டு இவரிடத்தில் க்ரு தஜ்ஞதாதிசயத்தைக் காட்டுகிறார்.

ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்களில் முக்கியமான சிலவற்றை இங்கே பூர்வார்த்தத்தில் எடுத்துக் காட்டுகிறார் [சிதசிதீச்வர தத்ஸ்வபாவ போகாபவர்க்க ததுபாயகதீ:] சித்து, அசித்து, ஈச்வரன் என்கிற தத்வத்ரயமென்ன, இவற்றின் ஸ்வபாவங்க ளென்ன; விஷயாநுபவம் ஸ்வர்க்காநுபவம் முதலான போகங்களென்ன, கைவல்யாநுபவம் பரமபதாநுபவம் என்கிற மோக்ஷங்களென்ன, இவற்றின் ஸாதநங்களென்ன, அந்தப்பலனை அநுபவிக்கப்போகிற மார்க்கங்களென்ன ஆகிய இவ்விஷயங்கள் முக்கியமாக ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் காட்டப்பட்டுள்ளவையாம். ஹேயமான விஷயபோகங்களைப்பற்றியும் அஸ்திர மான ஸ்வர்க்காதி போகங்களைப்பற்றியும் அஸாரமான கைவல்யபோகத்தைப் பற்றியும் நாம் எதுக்குத் தெரிந்துகொள்ளவேண்டும்? அவச்யமல்லாத இவ்விஷயங்கள் ஸ்ரீவிஷ்ணுபுராணத் தில் ஏன் கூறப்படவேண்டும்? என்னில்; உபாதேயமாகைக்காக நல்ல விஷயங்களின் ஏற்றத் தைத் தெரிந்து கொள்ளும்போது ஹேயவிஷயங்களின் கெடுதல்களையும் அவற்றை விடுகைக் காகத் தெரிந்துகொள்ளவேண்டியது அவச்யமேயாம்.

[புராணரத்நம்] ரஹஸ்யங்களில் ஒன்றான த்வயமானது "மந்த்ரரத்நம்" என்று சிறப் பித்துக் கூறப்படுதல்போல ஸ்ரீவிஷ்ணு புராணம் விஷய கௌரவத்தால் புராணரத்நம் என்று சிறப்பித்து வழங்கப்பெறும். ... ... ... ... ... (௪)

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ் ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்.
ஆத்யஸ்ய ந:குலபதேர் வகுளாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா. (௫)

| | | | |
|---|---|---|---|
| மத் அந்வயாநாம் | என்னைச் சேர்ந்தவர்களுக்கு | ந: ஆத்யஸ்ய குல பதே: | நமக்குக் குலகூடஸ்தராகிய ஆழ்வாருடைய |
| நியமேந | எப்பொழுதும் | வகுள அபிராமம் | மகிழமலர்களினால் அழகாயும் |
| மாதா பிதா யுவதய: தநயா: விபூதி: ஸர்வம் | தாய், தந்தை, மாதர், மக்கள், செல்வம் (மற்றுமுள்ள எல்லாமும் | ஸ்ரீமத் | நித்யோஜ்வலமாயுமிருக்கிற |
| | | தத் அங்க்ரி யுகளம் | அந்தத் திருவடியிணையை |
| யத் ஏவ | யாதொரு ஆழ்வார் திருவடியேயோ, | மூர்த்நா ப்ரணமாமி | தலையால் வணங்குகின்றேன். |

* * * கீழ்ச் சொல்லப்பட்ட பராசரருடைய க்ரந்தத்தைவிட பரமபோக்யமும்பரமோஜ்ஜீவநமும் பரமோபகாரகமும் பலபடிகளாலும் நிகரற்றதுமான திருவாய்மொழி முதலிய திவ்யப் பிரபந்தங்களை அருளிச் செய்தவரும், ஸ்ரீமந்நாதமுனிகளுக்கும் யோகதசையில் ஸேவை ஸாதித்து நேரில் ஸகலோபநிஷத்ஸாரார்த்தங்களை உபதேசித்தவரும், ப்ரபந்நஜந கூடஸ்தருமான நம்மாழ்வாரை நமஸ்கரிக்கின்றார் இதில். "சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும், மேலாத தாய் தந்தையும் அவரேயினியாவாரே" [திருவாய்மொழி-5-1-8] என்று ஆழ்வார்க்கு மாதாபிதாக்கள் முதலிய எல்லா உறவு முறையாரும் எம்பெருமானேயானது போல் ஸ்ரீவைஷ்ணவர்கட்கெல்லாம் ஆழ்வார் திருவடிகளே ஸர்வஸ்வமாகிறதென்று அருளிச்செய்கிற இவருடைய அத்யவஸாயத்தை என் சொல்வோம்? நம்மாழ்வார்க்குப் பல திருநாமங்களிருக்கவும், அவற்றையெல்லாம் விட்டு "ஆத்யஸ்ய ந: குலபதே:" என்று—'நம்முடைய குலத்துக்குத் தலைவர்' என்று அருளிச்செய்யும்படியான திருவுள்ளக் கனிவு விலக்ஷணமானதே. "விப்ரர்க்கு கோத்ரசரண ஸூத்ர கூடஸ்தர் பராசர பாராசர்ய போதாயநாதிகள்; ப்ரபந்நஜநகூடஸ்தர் பராங்குச பரகால யதிவராதிகள்" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸூக்தி இங்கு ஸ்மரிக்கத்தக்கது.

மதந்வயாநாம் என்கிற பதத்தினால்-தமக்கு முன்னே அவதரித்திருந்த பெரியோர்களும், தமக்குப்பிறகு ஜனித்த, ஜனிக்கின்ற, ஜனிக்கப்போகிற ஸ்ரீவைஷ்ணவ ஸந்தாநங்களும் விவக்ஷிதம். ஸ்ரீவைஷ்ணவர்களென்று பேர்பெற்ற அனைவர்க்கும் ஆழ்வார் திருவடிகளே ஸர்வஸ்வம் என்றாராயிற்று.

"லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்.....வந்தே குருபரம்பராம்" என்றபடி எம்பெருமான் ப்ரதமாசார்யனாகையாலே ஆத்யஸ்ய ந: குலபதே: என்று எம்பெருமானைச் சொல்லுகிறதென்று கொண்டு, அங்க்ரியுகளம் என்கிற பதத்தினால் நம்மாழ்வாரைச் சொல்லுகிறது என்பாருமுளர். எம்பெருமானுடைய திருவடிநிலைக்கு ஸ்ரீசடகோபன் என்று திருநாமமாகையாலே இப்படியும் சொல்லலாம். வகுளாபிராமம் என்கிற விசேஷணத்தினால் இவ்வர்த்தம் நன்கு நிலைபெறும்; "மகிழ்மாலை மார்பினன்" என்றும் 'வகுளாபரணர்' என்றும் நம்மாழ்வாரைச் சொல்லக்கடவதிறே. இவ்வர்த்தம் பொருந்துமாயினும்ஆத்யஸ்ய ந:குலபதே:என்பதால்நம்மாழ்வாரைச்சொல்லுகிறதெனபதே ஏற்றதாகையாலும் பூர்வாசார்யர்களின் வியாக்கியானமும இவ்வண்ணமேயாகையாலும் இதுவே கொள்ளத்தக்கது. ... ... ... ... ... ....(ரு)

**யந்மூர்த்நி மே ச்ருதிசிரஸ்ஸு ச, பாதி யஸ்மிந் அஸ்மந்மநோரதபதஸ் ஸகலஸ் ஸமேதி.**
**ஸ்தோஷ்யாமி ந: குலதநம் குலதைவதம் தத் பாதாரவிந்த மரவிந்த விலோசநஸ்ய. (சா)**

| | | | |
|---|---|---|---|
| யத் | யாதொரு எம்பெருமானுடைய திருவடியானது | ஸமேதி | போய்ச்சேருகின்றதோ, |
| | | தத் | அப்படிப்பட்டதாய் |
| மே மூர்த்நி | என் தலையிலும் | ந: குலதநம் | வம்ச பரம்பரையாக நமக்குச் சேர்ந்த செல்வமாய் |
| ச்ருதி சிரஸ்ஸு ச | வேதங்களின் தலைகளிலும் (வேதாந்தங்களிலுமென்றபடி.) | குலதைவதம் | (நம்) குலத்துக்கெல்லாம் ஆராத்யமாயிருக்கிற |
| பாதி | விளங்கா நின்றதோ, | அரவிந்த விலோசநஸ்ய பாத அரவிந்தம் | செங்கண்மாலின் திருவடித் தாமரையை |
| யஸ்மிந் | யாதொரு திருவடியிலே | | |
| அஸ்மத் மநோரத பத: ஸகல: | நமது ஆசைப்பெருக்கமெல்லாம் | ஸ்தோஷ்யாமி | துதிசெய்யப்போகிறேன். |

*** கீழ் ஐந்துச்லோகங்களால், நம்முடைய ஸம்ப்ரதாயத்துக்கு மஹோபகாரகர்களான மஹான்கள் மூவரை வணங்கியானபின், இனிமேல் எம்பெருமானுடைய ஸ்தோத்திரத்தில் இறங்குகிறார். என்னுடைய குலத்துக்கு அழியாச் செல்வமான பகவத்பாதாரவிந்தத்தைத் துதிக்கப்போகிறேனென்று இந்த ச்லோகத்தால் ப்ரதிஜ்ஞை பண்ணுகிறார்.

செந்தாமரைக்கண்ணனை எம்பெருமானுடைய யாதொரு திருவடித்தாமரையானது என்னுடைய முடியின்மீதும் மறைமுடியின்மீதும் விளங்காநின்றதோ, என்னுடைய ஆசை முழுவதும் யாதொரு திருவடியில் முடிவடைகின்றதோ, என்னுடைய குலத்துக்குச் செல்வமாகவும் தெய்வமாகவும் யாதொரு திருவடி இராநின்றதோ, அப்படிப்பட்ட திருவடித்தாமரையை நான் துதிக்கப் போகிறேன் என்று உபக்ரமிக்கிறார்.

திருவடிகள் வேதாந்தங்களில் விளங்குகையாவது—வேதாந்தங்களில் விஸ்தாரமாக வருணிக்கப்படுகையாம். இவருடைய முடிமீது விளங்குகிறதோ வென்னில்; "அடிச்சியோந் தலைமிசை நீயணியாய் ஆழியங்கண்ணா உன் கோலப்பாதம்" [திருவாய்மொழி 10—3—6] என்று ஆழ்வார் ப்ரார்த்தித்ததுபோல் ப்ரார்த்தித்து நம்மாலும் சிரோபூஷணமாக அணிந்துகொள்ளக்கூடிய திருவடி என்றபடி. எம்பெருமானை வணங்கும்போது அவன் திருவடிகளிலே தலையை மடுத்து வணங்கவேண்டுமாதலால் அப்போது இவருடைய திருமுடியிலே அத்திருவடிகள் விளங்கக் குறையில்லையிறே.

[யஸ்மிந் அஸ்மந்மநோரதபதஸ் ஸகலஸ் ஸமேதி.] உலகத்தில் தந்தையென்றும், தாயென்றும், மக்களென்றும், மாதரென்றும், செல்வமென்றும், சேலையென்றும் பலவற்றை விரும்ப, அவற்றிலே உண்டாகிற விருப்பமெல்லாம் இவர்க்கு எம்பெருமான் திருவடிகள் தவிர மற்றொன்றில் இல்லையென்றபடி. எம்பெருமான் திருவடிகள் கிடைத்துவிட்டால் ஸர்வஸ்வமும் கிடைத்துவிட்டதாக நினைத்து மகிழ்பவர் என்கை. குலதநம் என்கிற விசேஷணத்தினால் உபாயத்வமும், குலதைவதம் என்கிற விசேஷணத்தினால் உபேயத்வமும் சொல்லப்பட்டதாம் (௬)

தத்வேந யஸ்ய மஹிமார்ணவ சீகராணு: சக்யோந மாதுமபி சர்வ பிதாமஹாத்யை:,
கர்த்தும் ததீயமஹிமஸ்துதி முத்யதாய மஹ்யம் நமோஸ்து கவயே நிரபத்ரபாய. (௭)

| | | | |
|---|---|---|---|
| யஸ்ய | எந்த எம்பெருமானுடைய | கர்த்தும் | செய்வதற்கு |
| மஹிம அர்ணவ சீகர அணு: | பெருமையாகிற கடலில் ஒரு சிறிய திவலையளவு கூட | உத்யதாய | ஆரம்பம் செய்தவனையும் |
| சர்வ பிதாமஹ ஆத்யை: அபி | சிவன் பிரமன் முதலானவர்களாலும் | நிரபத்ரபாய | வெட்கங்கெட்டவனையும் |
| தத்வேந | உள்ளபடி | கவயே | கவியென்று பேர் சுமப்பவனையுமிருக்கிற |
| மாதும் ந சக்ய: | அளவிட்டறிய முடியாததோ, | மஹ்யம் | எனக்கே |
| ததீய மஹிம ஸ்துதிம் | அந்த எம்பெருமானுடைய பெருமையைப் பற்றின ஸ்தோத்ரத்தை | நம: அஸ்து | நமஸ்காரம் செய்துகொள்ள வேண்டும். |

***:—'எம்பெருமானுடைய திருவடிகளைத் துதிக்கப்போகிறே' னென்று கீழ்ச்லோகத்தில் கூறியவர், ஞானத்திற்சிறந்த மஹான்களுடைய மனமொழிகட்கும் எட்டாத விஷயத்தை அல்பஜ்ஞனாகிய நான் துதிக்கத் தொடங்குவது என்ன ஸாஹஸம்! என்று வெட்கப்பட்டு ஸ்தோத்ரம் செய்யப் புகுவதில் நின்றும் பின்வாங்கி, என்னகாரியஞ் செய்யத்துணிந்தோமென்று தம்மைத் தாமே நிந்தித்துக்கொள்ளுகிறார் இதில். பிரமன் சிவன் என்று சொல்லப்படுகிற சில மஹான்களே எம்பெருமானுடைய மஹிமையைப்பற்றிப் பேசத்தொடங்கி பெரிய கடல் போன்ற அந்த மஹிமையில் ஒரு சிறிய திவலையளவுகூடப் பேச முடியாமல் வெள்கி நின்றார்கள் என்னும்போது சிற்றறிவாளனாகிய நான் எவ்வளவு? ஸ்தோத்ரமென்பதை நான் நெஞ்சால் நினைக்கவும் யோக்யதையுடையேனல்லேன். இஃது எனக்குத் தெரிந்திருந்தும் கவி என்று பேர்பெற நினைத்து ச்லோகங்கள் சொல்லத் தொடங்கிவிட்டேனே! என்னைப் போன்ற வெட்கங்கெட்டவன் உலகிலுண்டோ? இப்படிப்பட்ட மூடனை எனக்கேயன்றோ முதலில் நமஸ்காரம் செய்துகொள்ளவேண்டும் என்கிறார்.

எம்பெருமானுடைய குணங்களில் ஸ்வல்ப பாகமும் ஸர்வஜ்ஞர்களான ப்ரஹ்மருத்ராதிகளாலும் அளவிட முடியாதென்பது பூர்வார்த்தத்தின் கருத்து.

அப்படிப்பட்ட அநந்தகல்யாண குணார்ணவனை எம்பெருமானுடைய வைபவங்களை அல்பஜ்ஞனாகிய நான் துதிக்கவேணுமென்று நெஞ்சினால் நினைப்பதும், அந்த நினைவை வாய்விட்டுச் சொல்லுவதும் வெட்கங்கெட்ட வியாபாரமன்றோ. கேவலம், கவியென்று பேர் சுமப்பதற்காகவன்றோ நான் ஸ்தோத்திரம் பண்ணத் தொடங்குவது; என் அழகையன்றோ ஆலத்தியெடுக்கவேணுமென்கிறார் போலும்.

மஹ்யம் நம: அஸ்து—என்னை எல்லாரும் நமஸ்கரிக்கட்டும் என்றது தம்மைத்தாமே நிந்தித்துக்கொள்ளுகிறபடி. உலகில் ஸாஹஸிகர்களைக் கைகூப்பி வணங்கவேணுமென்று சொல்வதுண்டு. ... .... ... ... ... ... (எ)

யத்வா ச்ரமாவதி யதாமதி வாப்யசக்த: ஸ்தௌம்யேவமேவ கலு தேபி ஸதா ஸ்துவந்த:
வேதாச் சதுர்முக முகாச்ச மஹார்ணவாந்த: கோ மஜ்ஜதோரணுகுலாசலயோர் விசேஷ: (அ)

| | | | |
|---|---|---|---|
| யத்வா | அல்லது, | சதுர்முக முகாச்ச | பிரமன் முதலியவர்களும் |
| அசக்த: (அஹம்) | சக்தியற்றவனான நான் | ஏவம் ஏவ கலு | இப்படியேயல்லவோ (துதிப்பது.) (என்னைவிட சிறிது அதிகமாக அவர்கள் துதிப்பார்களெனினும்) |
| ச்ரம அவதி | ச்ரமம் உண்டாகிற வரையிலாவது | | |
| யதாமதி வா அபி | புத்திக்கு எட்டிய வரையிலாவது | மஹா அர்ணவ அந்த: | பெரிய கடலினுள்ளே |
| ஸ்தௌமி | ஸ்தோத்ரம் பண்ணுகிறேன்; | | |
| ஸதா அபி | எப்பொழுதும் | மஜ்ஜதோ: | முழுகிப்போகிற |
| ஸ்துவந்த: | ஸ்தோத்ரம் செய்துகொண்டிருக்கிற | அணு குலாசலயோ: | சிறியதொரு வஸ்துவுக்கும் (பெரிய) குலபர்வதத்திற்கும் |
| தே | அந்த | | |
| வேதா: | வேதங்களும் | க: விசேஷ: | என்ன வாசி? |

* * *— 'பரமபுருஷனைத் துதிக்க நாம் எவ்வளவு? முடியாத காரியத்தை நெஞ்சாலும் நினைப்பது கூடாது' என்றெண்ணி ஸ்துதிப்பதில் நின்றும் கைவாங்கப் பார்த்த ஆளவந்தார், 'நம்மாலானமட்டும் துதிப்பது தகுதியே' என்று ஒருவாறு நெஞ்சை ஸமாதாநப்படுத்திக்கொள்ளுகிறார் இதில். எம்பெருமானுடைய வைபவங்களை எல்லைகண்டு பேச என்னால் முடியாதென்கிற விஷயம் உண்மையே; அதற்கு நான் அசக்தனாயினும், ஸ்துதிப்பதில் நின்று அடியோடு நிவர்த்திப்பேனல்லேன். பகவத்குணங்களைப் பரிபூர்த்தியாகப் பேசவல்லவர்கள்தாம் ஸ்துதிப்பதற்கு இறங்கலாமென்று யாதொரு நியமமும் கண்டதில்லை. எவனெவனுக்கு எவ்வளவு பேச சக்தியும் புத்தியும் உள்ளதோ அவ்வளவு பேசி நிற்பதற்கு யாதொரு தடையுமில்லையே. ஆகையாலே, எவ்வளவு துதிப்பதற்கு எனக்கு சக்தியுள்ளதோ, அறிவும் உள்ளதோ, அவ்வளவு துதிக்கப் புகுகின்றேன்.

இப்படி துதிப்பது நான் மாத்திரமல்ல; "வேதமுரைத்திமையோர் வணங்கும் செந்தமிழ் பாடுவார் தாம் வணங்குந்தேவர்" என்கிறபடியே தேவர்களும் வைதிகர்களும் வேதங்களும் மற்றும் எத்தனையோ பேர்கள் அவ்வெம்பெருமானைத் துதித்திருக்கிறார்கள், துதித்துக்கொண்டு மிருக்கிறார்கள்; அன்னவர் துதிப்பது ஒருநாளிருநாளல்ல; அல்லும் பகலும் துதிப்பர்; அப்படி துதித்தவர்களும் தங்களுக்குள்ள ஜ்ஞாநசக்திகளளவே துதித்தார்களேயன்றி எம்பெருமானுடைய புகழ்களைப் பேசித் தலைக்கட்டினார்களென்றில்லை. ஆகவே, 'அவரவர்களுடைய ஜ்ஞாநசக்திகளுக்கிணங்க அவரவர் பேசக்கடவர்கள்' என்று ஏற்பட்ட பின்பு, நானும் என்னுடைய சக்திக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு துதிப்பதில் தடையில்லையாதலால் ஏதோ ஆனமட்டும் துதிக்கப் பார்க்கிறேன் என்கிறார்.

"ஸதா ஸ்துவந்த: தே வேதா: சதுர்முகமுகாச்ச ஏவமேவ" என்று சொல்லிவிடலாமோ? உம்முடைய சக்தி எங்கே? அவர்களுடைய சக்தி எங்கே? உம்முடைய ஜ்ஞானமெங்கே? அவர்களுடைய ஜ்ஞானமெங்கே? பலவகைகளிலும் உம்மைவிட எவ்வளவோ மேம்பட்டவர்

களான சதுர்முகாதிகளை நீர் உம்மோடு ஒப்புச் சொல்லிக்கொள்வது தகுதியாகுமோ? என்று சிலர் கேட்கக் கூடுமாதலால் அக்கேள்விக்கும் தாமே ஸமாதான மருளிச்செய்கிறார் [கோ மஜ் ஜதோரணுதுலாசலயோர் விசேஷ:?] என்று. இதன் கருத்தாவது:—என்னுடைய ஜ்ஞாந சக்திகள் அற்பமென்பதும் அவர்களுடைய ஜ்ஞாந சக்திகள் அதிகமென்பதும் உண்மையே; ஆனாலென்ன? எம்பெருமானுடைய புகழை உள்ளபடி பேசமாட்டாமையில் அவர்கட்கும் எனக்கும் ஏதேனும் வாசியுண்டோ? என்னைவிட அவர்கள் அதிக ஜ்ஞாநசக்தியுக்தர்களாக இருப்பதுபற்றி பத்து நூறாயிரம் வாக்கியங்கள் அதிகமாகப் பேசியிருக்கிறார்களென்றே கொள்வோம்; நான் சொன்ன சொற்கள் ஸ்வல்பமேயாயிடுக. ஆனதாலென்ன? பேசப்புகுந்த விஷயத்தை அவர்களும் எல்லை காணவில்லை; இதில் ஸாம்யத்திற்குக் குறையில்லையே. ஒரு த்ருஷ்டாந்தம் காண்மின்;—ஒரு துரும்பு; ஒரு பெரிய மலை; இவை யிரண்டுக்கும் உருவத்தில் எவ்வளவோ வாசியுண்டுதான்; இருந்தாலும், இவ்விரண்டையும் கடலினுள்ளே எறிந்தோமாகில், சிறிய துரும்பும் பெரிய மலையும் கடலினுள் ஒருபுறத்தில் உருத்தெரியாமல் மூழ்கிக்கிடப்பது ஒக்குமன்றோ? அணுவுக்கும் மலைக்கும் வெளிநிலத்தில் நெடுவாசி கண்டோமாகிலும், இவை கடலினுள் அழுந்தும் விஷயத்தில் இவற்றுக்கு யாதொரு வாசியும் காண்கிறோமில்லை, ஸாம்யமே காண்கிறோம். ஆனால், அணுவைக் காட்டிலும் மலையானது ஸமுத்ரத்தின் அதிக பாகத்தை ஆக்ரமித்திருக்கின்றதென்பது மாத்திரம் உள்ளது. அஃது இருக்கட்டுமே. இவை கடலினுள் இருக்கிற இடம் தெரியாமல் ஒரு மூலையில் மங்கிப்போகும் விஷயத்தில் வாசியுண்டோ சொல்லுங்கள்; அதுபோலவே, அணுவைப்போன்ற எனது உக்திகளும் மலையைப் போன்ற சதுர்முகாதிகளின் உக்திகளும் அளவில் ஏற்றத்தாழ்வுடையனவாயிருந்தாலும் பகவத் குணஸாகரத்தில் ஏதோவொரு மூலையில் மறைந்துபோம் விஷயத்தில் வாசியற்றிருப்பனவேயாம் என்றாராயிற்று.

''அவரவர் தாந்தாமறிந்தவாறேத்தி'' என்று பொய்கைப் பிரானும் ''தங்களன்பாரத் தமது சொல்வலத்தால் தலைத்தலைச் சிறந்து பூசிப்ப'' என்று நம்மாழ்வாரும் அருளிச்செய்தபடி அவரவர்கள் தம்தம் ஜ்ஞாந சக்திகளுக்கு இணங்கியவளவே போற்றத்தக்கவர்களாதலாலும், அநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாண குணகணார்ணவனான எம்பெருமானுடைய புகழ்களைப்பேசித் தலைக்கட்டுதல் ஆர்க்கும் முடியாத காரியமாகையாலும், நானும் ஏதோ எனக்குத் தெரிந்தவரையில் போற்றப் புகுதல் குற்றமல்ல என்று ஒருவாறு மனஸ்ஸை ஸமாதாநம் பண்ணிக்கொண்டாராயிற்று.

ச்லோகம் தொடங்கும்போதே யத்வா என்றது—கீழ் ச்லோகத்தில் சொன்ன விஷயத்தைத் தள்ளி, இதில் வேறு விஷயம் சொல்லுவதைக் காட்டும். 'ஸ்துதித்தல் தகுதியல்ல' என்றன்றோ கீழிற்சொன்னது; இதில் அங்ஙனல்லாமல் ஸ்தௌமி என்று துதிக்க இழிகிறாராகையாலே இதுதோன்ற யத்வா என்றாரென்க.

ச்ரமாவதி=ச்ரமம் உண்டாகிற வரையில் என்றது-சக்தியுள்ளவரையில் என்றபடி. நான் களைத்துப்போகிறவரையில் தண்ணீர் இறைக்கிறேன்' என்றால் சக்தியுள்ளவரையில் இறைக்கிறேன் என்று பொருள்படுதல் காண்க. ச்ரம: அவதி: யஸ்மிந் கர்மணி தத்—ச்ரமாவதி. ... ... ... ... ... (அ)

**கிஞ்சைஷ சக்த்யதிசயேந நதேநுகம்ப்ய: ஸ்தோதாபிது ஸ்துதிக்ருதேந பரிச்ரமேண**
**தத்ர ச்ரமஸ்து ஸுலபோ மம மந்தபுத்தே: இத்யுத்யமோய முசிதோ மமசாப்ஜநேத்ர.(கூ)**

| | | | |
|---|---|---|---|
| ஏஷ: | இந்த | ஹே அப்ஜ நேத்ர | செங்கண்மாலே! |
| ஸ்தோதா | துதிப்பவனாகிய (அடியேன்) | தத்ர | துதிக்கும் விஷயத்தில் |
| சக்தி அதிசயேந | (எனது) சக்தியின் மிகுதியினால் | மந்த புத்தே: | மந்தபுத்தியை யுடையவனான |
| | | மம து | எனக்கோவென்றால் |
| தே | உனக்கு | ச்ரம: | பரிச்ரமம் |
| ந அநுகம்ப்ய: | இரங்கத் தகுந்தவனல்லேன்; | ஸுலப: | எளிதில் உண்டாகக் கூடியது; |
| அபி து | பின்னை எக்காரணத்தினால் இரங்கத் தகுந்தவன் எனில்; | இதி | என்கிற காரணத்தினால் |
| ஸ்துதிக்ருதேந பரிச்ரமேண | துதிப்பதனாலுண்டாகும் பரிச்ரமத்தைப் பார்த்து (இரங்கத் தகுந்தவன்); | மம ச | எனக்கே |
| | | அயம் உத்யம: உசித: | இந்த முயற்சி ஏற்றிருக்கிறது. |

*** எம்பெருமானுடைய பெருமைகளைப் பூர்த்தியாகப் பேசமாட்டாமையில் பிரமன் முதலியோர்க்கும் தமக்கும் யாதொரு வாசியுமில்லையென்றார் கீழ் ச்லோகத்தில். வாசியில்லையென்பது மாத்திரமேயல்ல; அவர்களிற் காட்டில் தமக்கு ஒருவகையான ஏற்றமுமுண்டென்கிறார் இந்த ச்லோகத்தில்.

உலகத்தில் ஒரு மஹானுக்கு ஒருவனிடத்தில் இரக்கம் பிறக்கவேணுமானால் அதற்கு இரண்டு வகையான காரணங்களுண்டு; அளவற்ற ஸாமர்த்தியம் இருந்தால் அதைப்பற்றியும் தயை பிறக்கும்; அதிகமாக ச்ரமப்பட்டு தீநனாயிருந்தால் அந்த தைந்யத்தைப்பார்த்தும் தயை பிறக்கும்; ஆகவே, தயை உண்டாவதற்கு ஸாமர்த்தியம் ஒரு காரணம், தைந்யம் ஒரு காரணம். இவ்விரண்டு காரணங்களுள் முதற்காரணமாகிய சாமர்த்தியமென்பது எனக்கில்லை; அதாவது—உன்னுடைய திருப்புகழ்களைப் பூர்த்தியாகப் பேசவல்ல சக்திவிசேஷம் எனக்கில்லை; இது பிரமன் முதலானவர்களுக்கும் இல்லையென்பது ஸித்தமாதலால் இவ்விஷயத்தில்ஸாம்யமேயுள்ளது; இனி இரண்டாவது காரணமாகிய தைந்யம் ஒன்றே தயைக்கு ஸாதநமாகவேண்டும்; அந்த தைந்யம் என்னிடத்தில் அதிகமாகவுள்ளதா? ப்ரஹ்மாதிகள் பக்கல் அதிகமாகவுள்ளதா? என்று ஆராயுமளவில் என்னிடத்தே அதிகமுள்ளது. எங்ஙனேயென்றால், எவன் அதிகமான பரிச்ரமத்தையடைகிறானோ அவனே தீநன் எனப்படுவான்? ப்ரஹ்மாதிகளும் நானும் உன்னுடைய பெருமைகளைப் பூர்த்தியாகச் சொல்லவல்லோமல்லோம் என்பது உண்மையாயினும் நெடுங்காலம்வரை நீண்ட சப்தராசிகளைச் சொல்லிக்கொண்டிருக்க அவர்களுக்கு சக்தியுண்டாகையால் அவர்கள் சளைக்காமல் சொல்லிக்கொண்டிருப்பார்கள்; அவர்களுக்கு ஸுலபமாகப் பரிச்ரமம் உண்டாகமாட்டாது; ஆகையால் அவர்களிடத்தில் தைந்யம் காண்பதில் சிறிது அருமை யுண்டு. எனக்கோ அப்படியில்லை; என்னுடைய புத்தி ஸ்வல்பமாதலால் அதிகமாகப் பேச எனக்கு சக்தியில்லை; சிறிது பேசினவாறே மிக்க ச்ரமம் உண்டாய்விடும்; ஆகையாலே என் பக்கல் தைந்யம் காண்பது எளிது; தைந்யம் கண்டவாறே நீ தயைபண்ணுகிறவனாகையால் நான் சீக்கிரமாகவே உனது தயைக்கு விஷயமாய்விடுவேன்; ப்ரஹ்மாதிகள் என்னைவிட அதிகமான சக்தியையுடையவர்களாகையால் அவர்களுக்குப் பரிச்ரமம் விரைவில் உண்டாகமாட்டாது; உன் குணங்களைப் பூர்த்தியாகப் பேசவல்ல சிறந்த சக்தியும் அவர்களுக்கு இல்லை; தைந்யமும் அவர்களுக்கில்லை. அவர்களுடைய சக்தியெல்லாம் மாண்டபிறகு என்றைக்கோ அவர்களுக்குப் பரிச்ரமம் உண்டாகி தைந்யம் விளையப்போகிறது; அல்பசக்தியையுடைய நான் இன்னும் சற்று நாழிகைக்குள் பரிச்ரமமடைந்து தீனனாய்விடப்போகிறேன். உடனே உனது தயை என்மீது பெருகப் போகிறது, ஆகையாலே சீக்கிரமாய் உனது தயையைப் பெறுகையாகிற ஏற்றமெனக்குள்ளது. ஆகவே ஸ்துதி செய்வதில் இறங்குவது எனக்கே உரியது; நீ விரைந்து தயை பண்ணுவதற்கு இது ஒரு வழியாகத் தேறுகிறபடியால்—என்றாராயிற்று.

மந்தபுத்தே: என்று தமக்கு விசேஷணமிட்டுக் கொண்டதன் கருத்து யாதெனில்; ப்ரஹ்மாதிகளைப்போல் நெடுநாள்வரையில் துதிக்கவல்ல அவ்வளவு புத்தி இல்லாமையால் எனக்கு சீக்கிரமாகவே ச்ரமமுண்டாய் விடுமென்கை.

“மம ச” என்றவிடத்தில் சகாரம் ஏவகாரம் போன்று அவதாரணப் பொருள்படும்; எனக்கே என்றபடி. ப்ரஹ்மாதிகள் உன்னை ஸ்துதிப்பது வீண்; நான் ஸ்துதிப்பதுதான் தகுதி என்றதாகிறது. சகாரத்தின் இயற்கைப் பொருளாகிய ஸமுச்சயமும் இங்கு அர்த்தமாகக் கொள்ளக் கூடியதே; அதாவது எனக்கும் என்றபடி. ப்ரஹ்மாதிகளுக்கு எப்படி உரியதோ அப்படி எனக்கும் உரியது என்றவாறும். பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த வியாக்கியானத்தில்—“ச சப்தம் அவதாரணமாய் எனக்கே உசிதமென்னுதல்; ஸமுச்சயமாய், எனக்கும் ஸமுசிதமென்று கீழ்ச்லோகத்தோடே கூட்டுதல்” என்று இரண்டு வகைப்பொருளும் அருளிச் செய்யப்பட்டிருப்பதை ஸேவித்தருளின ஸ்ரீ தேசிகன் தம்முடைய பாஷ்யத்தில் அவதாரணப்பொருளை மாத்திரம் கொண்டு ஸமுச்சயார்த்தம் கொள்வது மந்தம் என்றெழுதியுள்ளார்; அப்பொருளில் என்ன அஸ்வாரஸ்யம் கண்டாரோ அறியோம். “இருக்குவாய் முனிக்கணங்களேத்த யானு மேத்தினேன்” என்றாற்போலே சொல்லுவதாகக் கொள்ளக் குறையில்லையே.

அப்ஜநேத்ர!—என்னுடைய முயற்சி ஈடேறும்படி தாமரைக்கண்களால் நோக்காய் என்றவாறு.

முதலடியில் அஹம் என்று உத்தம புருஷனைச் சொல்ல வேண்டுமிடத்து ஏஷ: என்று ப்ரதம புருஷனைச் சொல்லியிருப்பது ஸம்ஸ்க்ருத மர்யாதை. அநுகம்பிதும் யோக்ய:— அநுகம்ப்ய:. (௯)

**நாவேக்ஷஸே யதி ததோ புவநாந்யமூநி நாலம் ப்ரபோ பவிதுமேவ குத: ப்ரவ்ருத்தி:,**
**ஏவம் நிஸர்க்க ஸுஹ்ருதி த்வயி ஸர்வஜந்தோ: ஸ்வாமிந் நசித்ர மிதமாச்ரிதவத்ஸலத்வம்.(௰)**

| | | | |
|---|---|---|---|
| ப்ரபோ ! | பகவானே ! | ஏவம் | இப்படி |
| ந அவேக்ஷஸே யதி | நீ கடாக்ஷியாவிடில் | ஸர்வ ஜந்தோ: | எல்லா வுயிர்கட்கும் |
| தத: | அப்போது | நிஸர்க்க ஸுஹ்ருதி | இயற்கையாகவே நன்மை விரும்புமவனை |
| அமூநி புவநாநி | இவ்வுலகங்கள் | த்வயி | உன்னிடத்தில் |
| பவிதும் ஏவ ந அலம் | உண்டாகவே மாட்டா ; | ஆச்ரிதவத்ஸலத்வம் இதம் | ஆச்ரித வாத்ஸல்யமாகிற இந்தக் குணமானது |
| ப்ரவ்ருத்தி: குத: | ஒரு காரியமும் செய்ய மாட்டா என்பது சொல்லவும் வேணுமோ ? | நசித்ரம் | ஆச்சரியமல்ல. |
| ஸ்வாமிந் ! | ஸ்வாமியே ! | | |

* * *—ஸ்தோத்ரம் பண்ணுவதில் தமக்கு அதிகாரமுண்டென்று ஸமர்த்தித்தபின் ஸ்தோத்ரம் பண்ணத் தொடங்குகிறார் இதுமுதலாக.

கீழ்ச்லோகத்தில் அப்ஜநேத்ர! என்று ஸம்போதித்தவுடனே எம்பெருமான் திருவுள்ள மிரங்கித் தனது தண்டாமரைக் கண்களால் நோக்கியருளி அநுக்ரஹித்தான்; என் அப்பனே! இவ்வநுக்ரஹம் ஆச்சரியமல்ல; பிரளயகாலத்திலே இறகொடிந்த பறவைபோலே மங்கிக் கிடந்த ஆத்மவர்க்கங்களை உனது விசேஷ கடாக்ஷத்தாலே உண்டாக்கி, உண்டான ஜகத்துக்கள் காரியம் செய்யும்படியாகவும் கடாக்ஷித்துப் போருகிற நீ, உன்னாலே உண்டாக்கப் பட்ட எனக்கு இன்று முகம் கொடுத்தாய் என்பது ஓர் ஆச்சரியமல்ல என்கிறார்.

ஸ்ருஷ்டிக்குமுன் எம்பெருமான் ஸ்ருஜ்ய வஸ்துக்களில் திருக்கண் சாத்துகிறானென் பதைச் சொல்லுகிற உபநிஷத்தில் "தத் ஐக்ஷத-பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி" என்று ஐக்ஷத என்றிருப்பதால் அதனையடியொற்றி இவரும் அவேக்ஷஸே என்கிறார். ந அவேக்ஷஸே யதி என்றது-நீ திருக்கண்ணோக்கம் செய்தருளாவிடில் என்றபடி. ஈக்ஷணமாவது அநுக்ரஹத்தோடு கூடிய ஸங்கல்பம். அநுக்ரஹ விசிஷ்டனாய் ஸங்கல்பம் செய்தருளாவிடில் கார்ய வர்க்கங்களில் ஒரு பதார்த்தமும் உண்டாயிருக்கமாட்டாது. உத்பத்திக்கே உன்னுடைய ஸங்கல்பம் காரணமென்னும்போது, உத்பந்நங்களான கார்ய வர்க்கங்களின் ப்ரவ்ருத்திக்கு உன் ஸங்கல்பம் காரணமென்பது சொல்லவும் வேணுமோ? ஆனபின்பு மங்கிக்கிடந்த எல்லாப் பொருள்களும் ஸத்தை பெறும்படியும் ப்ரவ்ருத்தி சக்தியையுடையனவாம்படியும் நிர்ஹேதுக கருபையாலே ஸங்கல்பித்தருளுகிற நீ இன்று என்னை ஸ்தோத்ரத்தில் ப்ரவர்த்திப்பித்து விஷயீகரித்தவிது ஒரு ஆச்சரியமான விஷயமோ? ஆச்ரிதர் ஆநாச்ரிதர் என்கிற வாசி பாராமல் எல்லார் விஷயத்திலுமே இயற்கையாக ஸுஹ்ருத்தாயிருக்கிற உனக்கு ஆச்ரிதனான என் விஷயத்தில் வாத்ஸல்யமுண்டானது அற்புதமன்று என்றபடி.

வாத்ஸல்யமாவது ப்ரீதி விசேஷம். ... ... ... (௧௰)

**ஸ்வாபாவிகாநவதிகாதிசயேசித்ருத்வம் நாராயண த்வயி நம்ருஷ்யதி வைதிக:க: ?**
**ப்ரஹ்மா சிவச் சதமக: பரமஸ்ஸ்வராடிதி ஏதேபி யஸ்ய மஹிமார்ணவ விப்ருஷஸ்தே.(௧௧)**

| | | | |
|---|---|---|---|
| நாராயண ! | நாராயணனே ! | மஹிம அர்ணவ விப்ருஷ: | பெருமையாகிற கடலில் திவலையாக ஆகின்றனரோ, |
| ப்ரஹ்மா | பிரமன் | (தஸ்மிந்) த்வயி | அப்படிப்பட்ட உன்னிடத்தில் |
| சிவ: | சிவன் | ஸ்வாபாவிக அநவதிகாதிசய ஈசித்ருத்வம் | இயற்கையானதும் உயர்வற்றதுமான ஐச்வரியத்தை |
| சதமக: | இந்திரன் | க: வைதிக: | எந்த வைதிகன் |
| பரம: ஸ்வராட் | (இவர்களை விட) சிறந்தவனை முக்தாத்மா | ந ம்ருஷ்யதி | ஸஹிக்கமாட்டான் ? |
| இதி ஏதே அபி | என்கிற இவர்கள் எல்லோரும் | | |
| யஸ்ய தே | யாவனொரு உன்னுடைய | | |

(ஸஹியாதவன் அவைதிகன் என்கை.)

* * *—ஜகத்காரணத்வம் ஸ்வாமித்வம் முதலியவை ஸ்ரீமந்நாராயணனுக்கு உள்ளதாகக் கீழ்ச்லோகத்தில் அருளிச் செய்தார்; பிரமன் சிவன் முதலான தேவதாந்தரங்களுக்குப் பரத்வமுண்டென்று பலர் பிரமித்திருக்கிறபடியால் அந்த ப்ரமத்தைப் போக்கி 'ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரன்' என்பதை ஸ்தாபிக்கத் திருவுள்ளம்பற்றி அதற்கு அடியிடுகிறார் இதில்.

ஸ்ரீமந்நாராயணனே! நீயே பரமபுருஷன் என்பதை அவைதிகர்கள் பொறுமையாலே இசையாதொழிந்தாலும் வைதிகர்கள் இசையத் தடையில்லை; இதற்கு இசையாத வைதிகன் ஒருவனுமில்லை; பிரமன் சிவன் முதலானவர்களையும் வேதத்தில் ஒவ்வொரு மூலையில் பரத்வமுள்ளவர்களாகச் சொல்லியிருந்தாலும் அவர்களெல்லாரும் உன்னுடைய பெருமைப் பெரு வெள்ளத்தில் ஒரு சிறுதுளி யாவர்கள். அதாவது, உன்னுடைய விபூதியில் ஒரு மூலையில் அழுங்கிக் கிடப்பவர்களென்கை. ஆகையாலே அவர்களுக்குப் பெருமைசொன்னவிடமெல்லாம் உன்னுடைய விபூதியின் பெருமை சொல்லப்பட்டதாய் ஒப்புயர்வற்ற பெருமை உபய விபூதி நிர்வாஹகனான உனக்கே சொல்லப்பட்டதாகிறது.

ஈசித்ருத்வமாவது—ஈச்வரனாயிருக்குந்தன்மை; அதற்கு ஸ்வாபாவிக என்றும் அநவதிகாதிசய என்றும் இரண்டு விசேஷணங்கள் இடப்பட்டன. பிரமன் முதலிய தேவர்களுக்கும் ஒவ்வொரு விதமான ஈச்வரத்வமிருந்தாலும் அவர்களுக்கு அது ஸ்வாபாவிகமல்ல; எல்லையில்லாத மேன்மையை யுடையதுமல்ல; எம்பெருமானொருவனுடைய ஐச்வரியமே அப்படிப்பட்டதாம். மற்றையோருடைய ஐச்வரியமெல்லாம் கருமங்களைக் காரணமாகவுடையதும் துக்கங்களோடு கூடினதும் அநித்யமுமாயிருக்கும். ஸ்வாபாவிகமாய், இதற்குமேலில்லையென்னும்படி மிகச் சிறந்ததுமான ஐச்வரியம் ஸ்ரீமந்நாராயணனொருவனுக்கே அஸாதாரணமென்பது வேதங்களிலும் விசேஷித்து நாராயணாநுவாகத்திலும் ஸித்தமான விஷயம் என்று இதனால் சொல்லிற்றாகிறது.

[பரமஸ் ஸ்வராட்.] "ஸ ப்ரஹ்மா ஸ சிவஸ் ஸேந்த்ரஸ் ஸோக்ஷர: பரமஸ்ஸ்வராட்" என்ற வேதவாக்கியம் இங்கு ஸ்மரிக்கத்தக்கது. முக்தாத்மாவின் பெருமையைச் சொல்லுமிடத்தில் "ஸ ஸ்வராட் பவதி" என்று சொல்லப்பட்டது. அதாவது—ஸ்வதந்த்ரனாக ஆய்விடுகிறான் என்றது. என்றாலும் 'முக்தாத்மாக்கள் கர்மவச்யர்களல்லர்' என்பது மாத்திரம் அதற்குப் பொருளேயன்றி 'அவர்கள் எம்பெருமானுக்கும் பரதந்த்ரப்பட்டவர்களல்லர்' என்கிறதல்ல. அவனுக்கு சரீரமாக இருக்கும் ஆத்மாக்கள் எப்பொழுதும் அவனுக்குப் பரதந்த்ரர்களேயாவர். "நிரஞ்ஜந: பரமம் ஸாம்ய முபைதி" என்ற வேதவாக்கியத்தின்படி முக்தர்களுக்கு எம்பெருமானோடு சிறந்த ஸாம்யம் கிடைக்கிறதென்றாலும், ஜகத்ஸ்ருஷ்டி முதலிய சில அம்சங்கள் அவர்களுக்கு இல்லையென்று நிர்த்தாரணம் செய்யப்பட்டிருப்பதால் அவர்களுடைய ஐச்வரியம் அளவுக்கு உட்பட்டதேயாம்.

"உன்னுடைய ஐச்வர்யத்தை எல்லா வைதிகர்களும் கூறுகின்றனர்" என்னாமல் 'எந்த வைதிகன் ஸஹிக்கமாட்டான்?' என்று சொல்லியிருப்பதன் கருத்து—ஸ்ரீமந்நாராயணனுடைய ஜகத்காரணத்வம் ஸர்வஸ்வாமித்வம் முதலிய ஐச்வரியத்தைப் பொறாதவர்கள் வேதபாஹ்யர்கள் என்றதாம். .... ... ... ... (கக)

**கச்ஸ்ரீ:ச்ரிய: பரமஸத்வ ஸமாச்ரய: க: க: புண்டரீக நயந: புருஷோத்தம: க:**
**கஸ்யாயுதாயுதசதைக கலாம்சகாம்சே விச்வம் விசித்ர சிதசித்ப்ரவிபாக வ்ருத்தம். (கஉ)**

| | | | |
|---|---|---|---|
| ச்ரிய: ஸ்ரீ: க:? | திருவுக்கும் திருவாகிய செல்வன் யார்? | கஸ்ய | எவனுடைய |
| பரம ஸத்வ ஸமாச்ரய: க:? | சிறந்த ஸத்வ குணத்திற்கு இருப்பிடம் யார்? | அயுத அயுத சத ஏக கலா அம்சக அம்சே | அனேகமாயிரம் கோடி பாகங்களின் ஓர் பகுதியில் |
| | | விச்வம் | இப் பிரபஞ்சம் முழுவதும் |
| புண்டரீக நயந: க:? | செங்கண்மால் யார்? | விசித்ர சித் அசித் ப்ரவிபாக வ்ருத்தம் | விசித்திரமான சேதநாசேதநப் பிரிவுகளை யுடையதாக இருக்கின்றது? |
| புருஷோத்தம: க:? | புருஷோத்தமனென்னப்படுவான் யார்? | | |

* * *—ஸ்ரீமந்நாராயணனுக்கே பரத்வமுள்ளது, மற்றையோர்க்கு அது இல்லை—என்பதை த்ருடப்படுத்துகிறார் இதில். "திருவுக்கும் திருவாகிய செல்வன்" என்று போற்றப்படுமவன் ஸ்ரீமந்நாராயணனோ? தேவதாந்தரமோ? சொல்லுங்கள்; வேதாந்தாஸ் தத்வசிந்தாம

ஃமராபிதுரஸி யத்பாதசிஹ்நைஸ் தரந்தி" (ஸ்ரீ குணரத்நகோசம்.) என்று பட்டர் அருளிச் செய்கிறபடி ச்ரிய: பதித்வம் பரத்வஸாதகங்களில் முதன்மையாதலால் அது ஸ்ரீமந்நாராயணனுக்கேயிறே உள்ளது.

ரஜோகுணமும் தமோகுணமும் கலசாமல் கேவலம் ஸத்வகுணமே வடிவெடுத்திருப்பவன் வேறு யார்? பிரமனிடத்தில் ரஜோகுணம் அதிகமென்றும், ருத்ரனிடத்தில் தமோகுணம் அதிகமென்றும் ஸ்ரீமந்நாராயணனிடத்தில் ஸத்வகுணமே பரிபூர்ணமென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகையாலே பரமஸாத்விகனான இவனேயன்றோ பரதத்வமாகவேண்டுமென்கை.

உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக் கண்ணன் வேறு யார்? சாந்தோக்ய உபநிஷத்தில் "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவமக்ஷிணீ" என்று புண்டரீகாக்ஷத்வம் பரத்வலிங்கமாகச் சொல்லப்பட்டுள்ளது; அது ஸ்ரீமந்நாராயணனுக்கேயன்றி மற்றையோர்க்கு இல்லாமையால் இதுகொண்டும் இவனுடைய பரத்வம் வெளியாகிறதென்கை. ஸ்ரீமந்நாராயணனே புருஷோத்தமனாகவும் வேத வேதாந்த வேதாங்கங்களில் சொல்லப்பட்டிருப்பதால் புருஷோத்தமத்வமாகிற பரத்வலிங்கமும் ஸ்ரீமந்நாராயணனுக்கே உள்ளது.

[கஸ்யாயுதாயுத இத்யாதி.] ப்ரஹ்மருத்ராதிகள் முதற்கொண்டு புல்பூண்டு வரையிலுள்ள ஸகல கார்ய வர்க்கமும் யாருடைய ஸ்வரூப ஏகதேசத்தில் அடங்கிக் கிடக்கின்றது? "யஸ்யாயுதாயுதாம்சாம்சே விச்வசக்திரியம் ஸ்திதா" "மேரோரிவாணுர் யஸ்யைதத் ப்ரஹ்மாண்டமகிலம்முநே!" இத்யாதி ப்ரமாணங்களால் ஸ்ரீமந்நாராயணனே ஸர்வ வியாபகனென்றும் ப்ரஹ்மருத்ராதிகளெல்லாம் அவனுடைய ஸ்வரூப ஏகதேசத்தில் இருக்கிறார்கள் என்றும் விளங்கா நிற்கும். ஸ்ரீ பகவத் கீதையில் விச்வரூபாத்யாயத்தில் அர்ஜுனன் வியந்து சொல்வதும் காண்க. அயுதம்—பதினாயிரம். கலா என்பதும் அம்சம் என்பதும் அத்யல்பமான ஏகதேசத்தைச் சொல்லும்.

விசித்ர சிதசித் ப்ரவிபாக வ்ருத்தம்—சித்—சேதநவஸ்துக்கள்; அசித்—அசேதநவஸ்துக்கள்; இவை தேவமநுஷ்யாதிரூப பேதத்தாலும் போக்ய போகோபகரண போகஸ்தாநாதி பேதத்தாலும் விசித்திரங்களாயிருப்பதால் விசித்ரசிதசித்ப்ரவிபாக எனப்பட்டது. ப்ரவிபாகமாவது வகுப்பு; சேதநாசேதநவகுப்புகள் என்றதாய்த்து. வ்ருத்தம் என்றது—நிலைத்திருக்கிறபடியைச் சொல்லுகிறது. இந்த பிரபஞ்சம் முழுவதும் எவனுடைய ஸ்வரூபைக தேசத்திலே விசித்திரமான சேதநாசேதநப் பாகுபாடுகளையுடையதாய்க்கொண்டு பொருந்தியிருக்கின்றது? என்றவாறு. பின்னடிகளிரண்டாலும், 'ஸர்வவ்யாபகன் யார்?' என்று கேட்டபடி.

இந்த ச்லோகமும் மேல் இரண்டு ச்லோகங்களும் "க:? க:? கஸ்ய? கஸ்ய?" என்று கேள்வி கேட்கிற ச்லோகங்களாயிராநின்றன. யாரைப் பார்த்துக் கேள்வி கேட்கிறாரென்னில்; பதினான்காம் ச்லோகத்தில் த்வதந்ய: க: [உன்னைத் தவிர வேறு யார்?] என்று எம்பெருமானை நோக்கிக் கேட்பதாக ஸ்பஷ்டமாயிருப்பதால் இந்த மூன்று ச்லோகங்களிலுமுள்ள கேள்விகளெல்லாம் எம்பெருமானையே நோக்கிக் கேட்கப்படுகின்றனவென்றுணர்க. இப்படி கேள்வி கேட்பதன் கருத்து யாதெனில்;—ஸ்ரீமந்நாராயணனாகிய நீதான் திருவுக்கும் திரு; நீதான் பரமஸாத்விகன்; நீதான் புண்டரீகாக்ஷன்; நீதான் புருஷோத்தமன்; நீதான் ஸர்வவ்யாபகன்; ஆகையாலே நீதான் பரம்பொருள் என்று விஞ்ஞாபித்தபடி. ... ... ... (கஉ)

**வேதாபஹார குருபாதக தைத்யபீடாதி ஆபத்விமோசந மஹிஷ்ட பல ப்ரதாநை:**
**கோந்ய: ப்ரஜாபசுபதீ பரிபாதி கஸ்ய பாதோதகேந ஸசிவஸ் ஸ்வசிரோத்ருதேந.** (கங)

| | | | |
|---|---|---|---|
| வேத அபஹார, குரு பாதக தைத்ய பீடா ஆதி ஆபத் விமோசந மஹிஷ்ட பலப்ரதாநை: | வேதங்களைக் கொள்ளை கொண்டதென்ன, தகப்பனிடத்தில் செய்த ப்ரஹ்மஹத்தி பாபமென்ன, அஸுரர்களினலுண்டாகிய உபத்ரவமென்ன, இவை முதலாகிய ஆபத்துக்களை விடுவிப்பதனாலும் உயர்ந்த பலன்களை அளிப்பதனாலும் | அந்ய: க: | (உன்னைத்தவிர) வேறு யார் |
| | | ப்ரஜா பசுபதீ பரிபாதி | ப்ரஜாபதியான பிரமனையும் பசுபதியான சிவனையும் ரக்ஷிப்பார்? |
| | | ஸ: சிவ: | அந்த சிவனானவன் |
| | | ஸ்வ சிரோத்ருதேந | தன் தலையில் தரிக்கப்பட்ட |
| | | கஸ்ய பாத உதகேந | யாருடைய ஸ்ரீ பாததீர்த்தத்தாலே |
| | | சிவ: | பரிசுத்தனானான்? |

* * *—இதிஹாஸ புராணவ்ருத்தாந்தங்களாலும் ஸ்ரீமந்நாராயணனுக்கே பரத்வமுள்ள தென்று மூதலிக்கிறாரிதில். வேதாபஹாரமாகிற ஆபத்தின் விமோசநமென்ன, குருபாதகமாகிற ஆபத்தின் விமோசநமென்ன, அஸுரபீடையாகிற ஆபத்தின் விமோசநமென்ன, இவற்றாலும் சிறந்த பலன்களைக் கொடுப்பதனாலும் ப்ரஜாபதியான பிரமனையும் பசுபதியான சிவனையும் காத்தருளினவன் உன்னைக்காட்டிலும் வேறு யார்? எவனுடைய ஸ்ரீ பாததீர்த்தத்தைச் சிரமேல் தாங்கி சிவன்பரிசுத்தனானான்? என்று கேட்கிறார்.

வேதாபஹாரமாவது—வேதங்களைப் பறிகொடுத்துப் பிரமன் தவித்து நின்றது. இவ்வாபத்தைப் போக்கினது ஹயக்ரீவாவதாரத்தில். எங்ஙனே யென்னில்; எம்பெருமான் ஆதிகாலத்தில் நான்முகனைப் படைத்து, ப்ரளயகாலத்தில் மறைந்துகிடந்த வேதங்களைப் பிரகாசப் படுத்தி அவனுக்கு உபதேசித்து அநுக்ரஹிக்க, அப்பிரமன் அந்த வேதங்களைக் கண்ணாகக் கொண்டு விச்வஸ்ருஷ்டியைச் செய்ய ஆரம்பித்தபொழுது பகவானிடத்தினின்று ரஜஸ்தமோ குணங்களின் வடிவமாகத் தோன்றிய மதுகைடபர்களென்னும் இரண்டு அஸுரர்கள் அந்த வேதபுருஷர்களை அபஹரித்துக்கொண்டு கடலினுட் புகுந்து பாதாளலோகத்திற்குப் போய் விட்டார்கள்; வேதங்களைப் பறிகொடுத்த நான்முகன் இன்னது செய்வதென்று தோன்றாது திகைத்து நெடுங்காலம் "கண்ணிழந்தேன் தனமிழந்தேன்" என்று கதறியழுது பிறகு சிறிது தெளிந்து எம்பெருமானைத் துதிக்க, ஹயக்ரீவரூபியாக எழுந்தருளிப் பாதாளத்திற் சென்று மதுகைடபர்களை ஸம்ஹரித்து வேதங்களை மீட்டுக் கொணர்ந்து பிரமனுக்கு அளித்தனன்.

முன் ஒரு கல்பத்தின் அந்தத்தில் பிரமன் துயிலுகையில் அவன் முகங்களினின்று வெளிப்பட்டுப் புருஷரூபத்துடன் உலாவிக்கொண்டிருந்த நான்கு வேதங்களையும் சோமுக னென்னும் கொடிய அசுரன் கவர்ந்துகொண்டு பிரளய வெள்ளத்தினுள் மறைந்து செல்ல, எம்பெருமான் அதனை யுணர்ந்து ஒரு பெரு மீனாகத் திருவவதரித்து அப்பெருங்கடலினுட் புகுந்து அவ்வசுரனைத் தேடிப்பிடித்துக் கொன்று, அவன் கவர்ந்து சென்ற வேதங்களை மீட்டுக் கொணர்ந்து பிரமனுக்குக் கொடுத்தருளினன் என்ற வரலாறுமுண்டு. இவ்வசுரன் பெயர் ஹயக்ரீவனென்றலுமுண்டு. மத்ஸ்யாவதாரம், ஹம்ஸாவதாரம், ஹயக்ரீவாவதாரம் ஆக மூன்று அவதாரங்களால் எம்பெருமான் வேதாபஹாரமாகிற ஆபத்தில் நின்றும் பிரமனை விடுவித்தான். இக்கதைகள் புராணபேதத்தாலும் கல்பபேதத்தாலும் சிறிது வேறுபடக் கூறுதலுமுண்டு.

குருபாதகமாவது மஹாபாதகம்; தகப்பனது தலையைக் கிள்ளி யெறிந்த பாபத்திற் காட்டிலும் மேற்பட்ட பாபம் வேறு இல்லாமையால் சிவனுக்கு நேர்ந்த அந்த ப்ரஹ்மஹத்தி பாபத்தை குருபாதக மென்கிறார். குருவிஷயமான பாபம் என்றாவது, மஹத்தான பாபம் என்றாவது பொருள் கொள்ளலாம். ப்ராஹ்மணோத்தமனாய்த் தனக்குக் குருவுமாகிய பிதாவை வதம் செய்த மஹாபாபத்தைப் போக்கின வரலாறு எங்ஙனே யென்னில்;—ஒரு காலத்திலே பரமசிவன், தன்னைப்போலவே பிரமனும் ஐந்து தலையுடையனாயிருப்பது பலரும் பார்த்து மயங்குவதற்கு இடமாயிருக்கின்றதென்று நினைத்து, அவனது சிரமொன்றைக் கிள்ளி யெடுத்துவிட, அக் கபாலம் அப்படியே சிவன்கையில் ஒட்டிக்கொள்ளுதலும், அவன் 'இதற்கு என் செய்வது' என்று கவலைப்பட, தேவர்களும் முனிவர்களும் 'இப்பாவந் தொலையப் பிச்சை யெடுக்க வேண்டும்; என்றைக்குக் கபாலம் நிறையுமோ அன்றைக்குத்தான் இது கையை விட்டு அகலும்' என்று உரைக்க, சிவபிரான் பலகாலம் பலதலங்களிலுஞ் சென்று பிச்சை யேற்றுக்கொண்டே வருந்தித் திரிந்தும் அக் கபாலம் நீங்காதாக, பின்பு ஒருநாள் பதரிகாச்ரமத்தை யடைந்து அங்கு எழுந்தருளியுள்ள நாராயணமூர்த்தியை யடைந்து வணங்கி இரந்தபோது அப்பெருமான் 'அக்ஷயம்' என்று பிக்ஷையிட, உடனே அது நிறைந்து கையை விட்டகன்றது என்பதாம்.

தைத்ய பீடையாவது—அஸுரர்களால் உண்டான உபத்ரவம்; முன் ஒரு காலத்தில் அந்தகாஸுரனுக்கும் சிவபிரானுக்கும் வலிதான போர் நடந்தது; அப்போது சிவபிரானால் பிரயோகிக்கப்பட்ட சஸ்த்ரத்தினால் அந்தகனுடைய சரீரத்தினின்றும் ரக்தவெள்ளம் குழம்பி யெழுந்து தரையில் பெருக, கீழே விழுந்த ஒவ்வொரு ரக்த பிந்துவில் நின்றும் ஒவ்வொரு அந்தகனாகப் பல அந்தகாஸுரர்கள் கிளம்பி ருத்ரனை எதிர்க்கவே அவன் அவர்களை வெல்ல

முடியாமல் வியாகுலப்பட்டு ஸ்ரீமந்நாராயணனைச் சரணம் புக, அப்பெருமான் சுஷ்கரேவதியை ஸ்ருஷ்டிக்க, அது ஒரு நொடிப்பொழுதில் அந்தகர்களுடைய சரீர ரக்தங்களைக் குடித்து அவர்களை ஒழித்திட்டது என்ற மாத்ஸ்யபுராண கதையும்; ருத்ரனால் வரம்பெற்ற வ்ருகாஸுரன் தனது ஸாமர்த்தியத்தை அந்த ருத்ரனிடத்திலேயே பரீக்ஷித்துப் பார்க்கவேணுமென்று தொடங்கினபோது அந்த வ்ருகாஸுரனுடைய கொடுமையைத் தவிர்த்து ஸ்ரீமந்நாராயணன் ருத்ரனுக்குப் பய நிவ்ருத்தியைச் செய்தருளினன் என்ற கதையும், மற்றும் ஹிரண்ய ராவணாதிகளைக் கொன்ற கதைகளும் அறியத்தக்கன. பிரமனுக்கும் சிவனுக்கும் நேர்ந்த ஆபத்துக்கள் பலவாகையாலும், அவற்றை யெல்லாம் போக்கினது எம்பெருமானேயாகையாலும் "தைத்ய பீடாதி" என்று ஆதிசப்த ப்ரயோகம் பண்ணிற்று. இவைமுதலிய பலபல ஆபத்துக்களென்றபடி.

ஒருவனை ஒருவன் ரக்ஷிப்பதாவது—அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டங்களைத் தருகை. அநிஷ்டங்களைப் போக்கினபடியை அருளிச்செய்தபின் இஷ்டங்களை அளித்தபடியையும் அருளிச் செய்கிறார் மஹிஷ்டபலப்ரதாநை: என்று. ஸாமாந்ய ஜீவர்களான ப்ரஹ்மருத்ரர்களை ஈச்வரர்களென்று பலரும் கொண்டாடும்படியான பதவிகளை அவர்களுக்குக் கொடுத்தமை சொல்லுகிறது. யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ: புநஸ் த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதி சுச்ரும." [நான்முகனைவன் கணக்கற்ற கோடி யுககாலம் விஷ்ணுவை ஆராதித்து த்ரிலோக ஆதிபத்யத்தைப் பெற்றான்] என்றும், "ப்ரஹ்மாதயஸ் ஸுராஸ் ஸர்வே விஷ்ணுமாராத்ய தே புரா—ஸ்வம் ஸ்வம் பதமநுப்ராப்தா: கேசவஸ்ய ப்ரஸாதத:" [பிரமன் முதலிய தேவர்களெல்லாரும் பண்டு விஷ்ணுவை ஆராதித்துத் தம் தம் பதவிகளைப் பெற்றனர்] என்றும் சாஸ்த்ரங்கள் கூறும்.

[கஸ்ய பாதோதகேந***] உலகளந்த காலத்து ஸ்ரீ மஹாவிஷ்ணு திருவடிகளை நீட்ட, அத்திருவடியைப் பிரமன் விளக்க, அந்த ஸ்ரீபாத தீர்த்தத்தைச் சிவபிரான் திருமுடியிலேற்றனன் என்று புராணங்கள் கூறும். "சதுர்முகன் கையில் சதுப்புயன்தாளில் சங்கரன் சடையினில் தங்கிக், கதிர்முக மணிகொண்டிழி புனற் கங்கை" என்றார் பெரியாழ்வாரும். "ததம்பு பரயா பக்த்யா ததார சிரஸா ஹர:—பாவநார்த்தம் ஜடாமத்யே" என்று ஈச்வர ஸம்ஹிதையிலும் சொல்லிற்று. ஸ்ரீ பாகவதத்திலும் இவ்வர்த்தத்தை ஸ்ரீசுகர் பின்வருமாறு விளக்கியிருக்கிறார்:— "யச்சௌசநிஸ்ஸ்ருத ஸரித்ப்ரவரோதகேந தீர்த்தேந மூர்த்நி வித்ருதேந சிவச் சிவோ பூத்." [பகவானுடைய திருவடியில் நின்றும் பெருகின கங்கா தீர்த்தத்தை முடிமேல் தாங்கிச் சிவபிரான் பரிசுத்தியையடைந்தனன்] என்று.

இவை போன்ற பல புராண கதைகள் ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்வத்தை நன்கு விளக்குகின்றன. ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்று மூன்று பகுதியாக வகுக்கப்பட்டுள்ள புராணங்களுள் ஸாத்விக புராணங்களில் எம்பெருமானுக்கே பரத்வம் பொலியும். ராஜஸ தாமஸ புராணங்களில் நான்முகனுக்கும் சிவனுக்கும் பரத்வம் கூறப்படும். ஸாத்விக புராணங்களைத் துணை கொண்ட வேதங்களை அடியொற்றி ஸ்ரீமந்நாராயணனுக்கே பரத்வம் ஸ்தாபிக்கப்படுகிறபடியால் இதற்கு விருத்தமான அர்த்தங்களைப் பகர்கின்ற ராஜஸ தாமஸ புராணங்கள் விரோதாதிகரண ந்யாயத்தாலே ஒதுக்கப்படுகின்றன வென்றுணர்க.

பிள்ளைப்பெருமாளையங்கார் பாடிய "மங்கைபாகன் சடையில் வைத்த கங்கை யார் பதத்து நீர்? வனசமேவு முனிவனுக்கு மைந்தனானதில்லையோ?, செங்கையாலிரந்தவன் கபாலமாரகற்றினார்? செய்ய தாளின் மலரரன் சிரத்திலானதில்லையோ? வெங்கண் வேழம் மூலமென்ன வந்ததுங்கள் தேவனோ? வீறுவாணனமரிலன்று விறலழிந்ததில்லையோ? அங்கண் ஞால முண்டபோது வெள்ளிவெற்பகன்றதோ? ஆதலாலரங்கனன்றி வேறு தெய்வமில்லையே." என்ற பாசுரம் இங்கே நினைக்கத்தக்கது. (கரு)

**கஸ்யோதரே ஹரவிரிஞ்ச முக: ப்ரபஞ்ச: கோ ரக்ஷதீமமஜநிஷ்டச கஸ்ய நாபே:,**
**க்ராந்த்வா நிகீர்ய புநருத்கிரதி த்வதந்ய: க: கேந வைஷ பரவாநிதி சக்யசங்க:** (கசு)

| | | | |
|---|---|---|---|
| ஹர விரிஞ்சமுக: ப்ரபஞ்ச: | சிவன் பிரமன் முதலான உலகம் | இமம் க: ரக்ஷதி | இந்தப் பிரபஞ்சத்தை யார் காப்பாற்றுகிறார்? |
| கஸ்ய உதரே | யாருடைய வயிற்றில் (இருக்கிறது)? | கஸ்ய நாபே: | எவனுடைய உந்தியில் நின்றும் |

| | |
|---|---|
| (ப்ரபஞ்ச:) அஜநிஷ்ட | இவ்வுலகம் உண்டாயிற்று! |
| த்வத் அந்ய: க: | உம்மைவிட வேறு யார் |
| (இமம்) | இவ்வுலகத்தை |
| க்ராந்த்வா | (ஒரு கால்) அளந்தும் |
| நிகீர்ய | (ஒருகால்) விழுங்கியும் |
| புந: உத்கிரதி | மற்றொருகால் வெளிநாடு காண உமிழ்கிறான்? |
| ஏஷ: | இவ்வுலகம் |
| கேந வா | வேறு எவனால் |
| பரவாந இதி | தலைவனையுடையது என்று |
| சக்ய சங்க: | சங்கிப்பதற்கும் கூடியது? |

*** சிவனுடையவும் பிரமனுடையவும் விருத்தாந்தங்களை ஆராயுமளவில் அவர்கள் கர்மவச்யர்களென்பதும் பரதத்வமாயிருக்கக் கூடாதவர்களென்பதும் நன்கு விளங்குகின்றதென்று கீழ்ச்லோகத்தில் காட்டினர். அந்த ப்ரஜாபதி பசுபதிகளும் மற்றுமுள்ள பிரபஞ்சங்களும் ஸ்ரீமந்நாராயணனாலேயே ஸ்ருஷ்டிக்கப்பட்டும் ரக்ஷிக்கப்பட்டும் ஸம்ஹரிக்கப்பட்டும் வரக்காண்கையாலும், இவ்விஷயம் ராஜஸ தாமஸபுராணங்களிலுங்கூடச்சொல்லப்பட்டிருப்பதாலும், எம்பெருமானுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்கள் எவ்வளவோ இருப்பதாலும் அவர்கள் பரத்வமற்றவர்களென்பதும் இவனே பரதேவதை யென்பதும் நன்கு விளங்குமென்கிறாரிதில்.

ப்ரஹ்மா ருத்ரன் முதலான ஸகல பதார்த்தங்களும் ப்ரளய காலத்திலே ஆருடைய வயிற்றில் சேர்ந்து நிலை பெறுகின்றன? என்கிறார் முதல் பாதத்தில். "அன்றெல்லாருமறியாரோ எம்பெருமானுண்டுமிழ்ந்த எச்சில் தேவர்" என்றார் திருமங்கையாழ்வாரும்.

உதரே என்பதற்கு, 'திருவயிற்றினுள்ளே' என்று பொருளாயினும் இது ஔபசாரிக ப்ரயோகம். பிரளயகாலத்தில் ஸகல ப்ரபஞ்சமும் பகவானிடத்தில் லயிக்கின்றதென்றுதான் சாஸ்த்ரங்கள் கூறும். திருமழிசைப்பிரானும் "நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும், நின்னுளே யடங்குகின்ற" என்றார். ஆகையாலே இங்கு 'திருவயிற்றினுள்ளே' என்று சொன்னது—தன்னுள்ளே என்றபடியாம். "நாராயணே ப்ரலீயந்தே" என்றும், "லீயேதே பரமாத்மநி" என்றும் ச்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லப்படுவதுங் காண்க.

இமம் கோ ரக்ஷதி? = ப்ரஹ்மருத்ரர்களோடு மற்றுள்ளாரோடு வாசியற எல்லார்க்கும் ஒரு ஆபத்து விளைந்தால் எம்பெருமானைத் தானே சரணம் புகவேணும்; எம்பெருமான் தானே அவர்களுக்கு அநிஷ்டங்களைப்போக்கி இஷ்டங்களை யளிக்கவேணும். ஆகையாலே "காக்கு மியல்வினன் கண்ணபெருமான்" என்கிறது.

ஹரவிரிஞ்சமுக: ப்ரபஞ்ச: கஸ்ய நாபே: அஜநிஷ்ட ?—"உய்ய உலகு படைக்கவேண்டி உந்தியில் தோற்றினாய் நான்முகனை' என்றபடி திருநாபிக் கமலத்தில் நாராயணன் நான்முகனைப் படைக்க, நான்முகனும் சங்கரனைப் படைக்க இப்படியே மேன்மேலும் லோக ஸ்ருஷ்டி நிகழ்ந்ததாகையால் ஸகல ப்ரபஞ்சங்களுக்கும் நாபிக்கமலமே முதற்கிழங்காம். "அஜஸ்ய நாபாவத்யேகமர்ப்பிதம் யஸ்மிந்நிதம் விச்வம் புவனமதிச்ரிதம், விச்வ கர்மாஹ்யஜநிஷ்ட தேவ:" என்று வேதத்திலும் சொல்லப்பட்டது.

[க்ராந்த்வா இத்யாதி.] "பாரையுண்டு பாருமிழ்ந்து பாரளந்து பாரையாண்ட பேராளன்" (திருநெடுந்தாண்டகம்) என்ற அருளிச் செயலைத் திருவுள்ளம்பற்றி அருளிச் செய்கிறார். உலகமளக்கிற வியாஜத்தாலே எல்லார் தலைகளிலும் திருவடிகளை வைத்தவன் நீ தவிர வேறு யார்? அவாந்தரப்ரளயங்களிலே திருவயிற்றிலே வைத்துப் பின்பு வெளிநாடு காணப் புறப்பட விட்டவன் நீ தவிர வேறு யார்?

க்ராந்த்வா என்பதனாலே உலகளந்தபடியைச் சொல்லுவதுந் தவிர, எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் உறைந்திருந்து காரியங்களைச் செய்வதற்காக அந்தந்த வஸ்துக்களை ஆக்ரமித்திருக்கு மிருப்பைச் சொல்லுவதாகவும் ஒரு யோஜனை தேசிகன் அருளிச் செய்வர் ஸர்வ அந்தர்யாமியாயுள்ளவன் நீ தவிர வேறு யார்? என்றதாம்.

ஏஷ: (லோக:) கேநவா பரவாநிதி சக்யசங்க:? = பர:] என்றால் தலைவன் என்றபடி. பரவாந் என்றால் தலைவனை யுடையது என்றபடி. எல்லாப் பிரபஞ்சத்திற்கும் ஆதாரமாகவும் நியாமகனாகவும் சேஷியாகவும் ஸ்ரீமந்நாராயணனான நீயே இருக்கிறபடியால் நீதான் பரன்; உன்னையே தலைவனாக வுடையது இவ்வுலகம். நீ தவிர வேறு தலைவன் இருப்பதாக சங்கிப்பதற்கும் இடமில்லை. நிச்சயமில்லாத விஷயத்தில் தானே ஸந்தேகம் பிறக்கக்கூடியது; கீழ்ச் சொன்ன பலவகைகளாலும் உனக்கே பரத்வம் பொலிகின்றபடியால் வேறொரு தெய்வத்தினிடத்தில் பரத்வசங்கை உண்டாவதற்கும் இடமில்லை யென்று நிகமநம் செய்தாராயிற்று. (கச)

த்வாம் சீல ரூப சரிதை: பரமப்ரக்ருஷ்ட
ஸத்வேந ஸாத்விகதயா ப்ரபலைச்ச சாஸ்த்ரை:,
ப்ரக்யாத தைவபரமார்த்த விதாம் மதைச்ச
நைவாஸுர ப்ரக்ருதய: ப்ரபவந்தி போத்தும் (கரு)

| | | | |
|---|---|---|---|
| த்வாம் | (இப்படிப்பட்ட) உன்னை | ப்ரக்க்யாத தைவ பரமார்த்த விதாம் மதைச்ச | ப்ரஸித்தர்களாய் தெய்வத்தின் உண்மையை யுணர்ந்தவர்களான மஹான்களினுடைய மதங்களினாலும் |
| சீல ரூப சரிதை: | குணங்களாலும் ரூபத்தாலும் சரிதைகளாலும், | | |
| பரம ப்ரக்ருஷ்ட ஸத்வேந | மிகச்சிறந்த ஸத்வகுணத்தினாலும், | ஆஸுரப்ரக்ருதய: | அஸுரத்தன்மை பொருந்திய நீசர்கள் |
| ஸாத்விகதயா ப்ரபலை: சாஸ்த்ரைச்ச | ஸாத்விகங்களென்கிற காரணத்தாலே சிறப்புற்ற சாஸ்திரங்களினாலும் | போத்தும் ந ப்ரபவந்தி | அறிவதற்கு வல்லரல்லர். |

* * *—இப்படி ஸ்ரீமந்நாராயணனே பரதத்வமென்கிற விஷயம் சாஸ்த்ரஸித்தமாகில், சாஸ்த்ரம் பயின்றவர்களனைவரும் இவ்விஷயத்தை ஏன் இசையக்கூடாது? சிலர் ஈச்வரனே இல்லை யென்கிறார்கள்; சிலர் சிவனே தத்துவமென்கிறார்கள்; சிலர் த்ரிமூர்த்திகளும் ஸமர் என்கிறார்கள்; மற்றும் பலபலவகையாகப் பலபல மதஸ்தர்கள் வாதிக்கின்றார்களே; இப்பரமார்த்தம் எல்லார் நெஞ்சிலும் ஏன் படவில்லை; யாரோ சிலர் மாத்திரமேயன்றோ நாராயண பாரம்யம் இசைகின்றனர்; இங்ஙனே சிலரறிந்து சிலரறியாமைக்கு என்ன காரணம்? என்கிற கேள்வி உண்டாகக்கூடியதாகையால் அதற்கு ஸமாதாநம்போல் இந்த ச்லோக மருளிச்செய்கிறார். அஸுர ப்ரக்ருதிகளாயிருப்பார்க்கு எம்பெருமானுடைய பரத்வமறிந்து கொள்ள வழியில்லை யென்கிறார். எல்லாரும் சாஸ்த்ரம் முதலியவற்றாலே எம்பெருமானுடைய பரத்வத்தைக் கண்டறிந்து அநுபவிக்கலாமாயிருக்க அநியாயமாகச் சில ஆஸுரப்ரக்ருதிகள் இழக்கிறார்களே யென்று மூடர்களைப் பற்றிப் பரிதாபப்படுகிறார் என்றும் கொள்ளலாம். விலக்ஷணமான பகவத் விஷயம் நல்ல காலமாக துஷ்டர்களின் கண்ணில் படாமல் விளங்குகிறதேயென்று மகிழ்ந்துகொள்ளுகிறாரென்னவுமாம். அப்படிப்பட்ட ஆஸுரப்ரக்ருதிகளிலே நாமும் ஒருவராக இருந்துவிடாமல் அவர்கள்நடுவே நாம் பகவத் பரத்வத்தை நன்கு அநுபவிக்கப் பெற்றோமே! என்கிற உகப்பும் உள்ளுறையும்.

எம்பெருமானை அறிவதற்குப் பல வழிகளுண்டு; அவற்றில் ஐந்தாறு வழிகளை இந்த ச்லோகத்தில் எடுத்துரைத்து, இவற்றாலே அஸுர யோநிகள் எம்பெருமானை அறியாமற் போகிறார்களே! அந்தோ இழக்கிறார்களே! என்கிறார். எங்ஙனே எந்த வழிகளாலே எம்பெருமானை அறியலாமென்னில்; சீலரூபசரிதை: என்று தொடங்கி அடைவே அருளிச் செய்கிறார். ஸ்ரீராமக்ருஷ்ணாதி அவதாரங்களில் வேடன் வேடுவிச்சி குரங்கு இடையன் இடைச்சி முதலானார்க்கும் ஒரு நீராகக் கலந்து பரிமாறலாம்படி விளங்கக்காட்டிய ஸௌசீல்ய குணத்தை சீலமென்கிறது. மஹானாயிருப்பவன் மந்தர்களோடு ஒருநீராகக் கலந்து பரிமாறச் செய்தேயும் பலபல பிரகாரணங்களில் பரத்வமும் பொலிய நின்றமை காண்க. பரமபுருஷனாயிருக்கச் செய்தேயும் அதிக்ஷுத்ரங்களான சேதநாசேதநங்களோடும் கலந்து பரிமாறி லீலாரஸங்களை அநுபவிக்க ஆசைப்பட்டுத் தானே "பஹு ஸ்யாம்" என்று ஸங்கல்பித்துக் காரியப் செய்த நீர்மையும் இங்கு சீலபதார்த்தமாகும்.

ரூபமாவது அப்ராக்ருதமான சோதிவடிவு. சரிதங்களாவன—"வேதாபஹார குரு பாதக" இத்யாதி (13.) ச்லோகத்தில் சொல்லப்பட்ட சரித்திரங்களும், "க்ராந்த்வா நிகீர்ய புநருத்கிரதி" என்று கீழ்ச்லோகத்திற் சொல்லப்பட்ட சரித்திரங்களும் ஸ்ரீராமாயண ஸ்ரீபாகவதாதிகளிலுள்ள மற்றும் பல அதிமாநுஷ சேஷ்டிதங்களுமாம்.

பரமப்ரக்ருஷ்ட ஸத்வமாவது—அப்ராக்ருதசுத்தஸத்வம்; இது எம்பெருமானுக்கே உள்ளதொன்று. [ஸாத்விகதயா ப்ரபலைச்ச சாஸ்த்ரை:] ஸாத்விகங்களென்றும் ராஜஸங்களென்றும் தாமஸங்களென்றும் சாஸ்த்ரங்கள் பலவாகையால் அவற்றுள் துர்ப்பலங்களான ராஜஸ தாமஸ சாஸ்த்ரங்களில் பெரும்பாலும் தேவதாந்தரங்களுக்குப் பரத்வம் விளங்குகிற படியால் அவற்றை யொழித்து, ஸாத்விகங்களாய் ப்ரபலங்களுமான சாஸ்த்ரங்களை இங்குக்

கூறுகின்றார். "ஸாத்விகேஷ்வத கல்பேஷு மாஹாத்ம்ய மதிகம் ஹரே:" என்று மாத்ஸ்ய புராணத்தில் பிரமன் தானே சொல்லிவைத்தான்.

[ப்ரக்யாததைவபரமார்த்தவிதாம் மதைச்ச] கீழ்ச் சொன்ன சீலரூப சரிதாதிகளெல்லாம் ஒருபுற மிருக்கட்டும். "மஹாஜநோ யேநகத: ஸபந்தா:" [பெரியோர்கள் எந்த வழியில் செல்லு கிறார்களோ அதுவே நல்வழி] என்றபடி ஸுகமாக நிச்சயிப்பதற்கு ஸாதநமாகிய மஹாஜந ஸித்தாந்தமும் ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்வஸ்தாபநத்திலேயே பொலிகின்றதென்று காட்டு கிறார். ப்ரக்யாத என்கிற பதத்தை தைவத்துக்கு விசேஷணமாக்கி யுரைத்தார் பெரியவாச் சான்பிள்ளை; தைவபரமார்த்த வித்துக்களுக்கு விசேஷணமாக்கி யுரைத்தார் வேதாந்த தேசிகன். இரண்டுபடியும் பொருந்தியதே. நாராயணாநுவாகம், ஸுபாலோபநிஷத்து, அந் தர்யாமி ப்ராஹ்மணம் முதலியவற்றில் ப்ரஸித்தமான யாதொரு தைவமுண்டு—தேவதை, அத னுடைய [-பரமபுருஷனுடைய] உண்மை நிலைமையைக் கண்டறிந்தவர்களான வ்யாஸர், பரா சரர், வால்மீகி, மநு, யாஜ்ஞவல்க்யர், சௌநகர், ஆபஸ்தம்பர், ஆழ்வார்கள் முதலானவர்களைப் பரமார்த்தவித்துக்க ளென்கிறார் இங்கு.

ஆக இத்தனை வழிகளாலும் எம்பெருமானுடைய பரத்வத்தைக் கண்டறிந்து வாழ லாமாயிருக்கச் செய்தேயும் தாமஸப்ரக்ருதிகளாயுள்ளவர்கள் தௌர்ப்பாக்யத்தாலே அறிய மாட்டாமல் இழக்கிறார்களென்று அருளிச்செய்கிற புடையிலே, பாக்யசாலிகளாயுள்ளவர்கள கீழ்ச்சொன்ன வழிகளாலே நன்கறிந்து வாழ்கிறார்கள் என்று ஸூசிப்பித்தாராயிற்று ... (கரு)

**உல்லங்கித த்ரிவித ஸீமஸமாதிசாயிஸம்பாவநம் தவ பரிப்ரடிம ஸ்வபாவம்.**
**மாயாபலேந பவதாபி நிகுஹ்யமாநம் பச்யந்தி கேசிதநிசம் த்வதநந்யபாவா:** (கசு)

| | | | |
|---|---|---|---|
| உல்லங்கித த்ரிவித ஸீம ஸம அதிசாயி ஸம்பாவநம் | மூன்று விதமான பரிச்சே தங்களையுடையதோ! என்று சங்கிப்பதற்கும் கூடாததும், ஒத்தார் மிக்கா ரையுடையதோ வென்று சங்கிப்பதற்கும் கூடாதது மான | பவதா மாயாபலேந நிகுஹ்யமாநமபி | நீ மாயையினால் மறைத்த போதிலும் |
| | | த்வத் அநந்யபாவா: | உன்னிடத்திலேயே மனம் பொருந்தியுள்ளவர்களான |
| | | கேசித் | சில மஹான்கள் |
| தவ பரிப்ரடிம ஸ்வபாவம் | உன்னுடைய பரத்வமாகிற ஸ்வபாவத்தை | அநிசம் | எப்போதும் |
| | | பச்யந்தி | ஸாக்ஷாத்கரிக்கிறார்கள் |

* * *—கீழ் ச்லோகத்தில் சொல்லியபடி ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்வம் சாஸ்த்ரங் களால் மாத்திரம் அறியத்தக்கதன்று; அதை நேராக ஸாக்ஷாத்கரிக்கிற மஹான்களும் சிலர் உண்டென்கிறாரிதில்.

எம்பெருமானுடைய ஸ்வரூபம் எப்படிப்பட்டதென்னில்; மூன்று வகையான பரிச் சேதங்களையும் கடந்திருப்பது; 'பகவானோடு ஒத்தார் மிக்கார் உண்டோ' என்கிற ஸந்தேஹத் துக்கும் நிலமல்லாதது. மூன்று வகையான பரிச்சேதங்களாவன :—தேச பரிச்சேதம், கால பரிச்சேதம், வஸ்து பரிச்சேதம். 'பகவான் இன்னவிடத்திலுள்ளான், இன்னவிடத்தில் இல்லை' என்பது இல்லாமல் ஸர்வதேசங்களிலும் வியாபித்திருப்பதனால் தேச பரிச்சேதமில்லை யென்றுணர்க. 'இன்னகாலத்திலுள்ளான், இன்னகாலத்திலில்லை' என்பது இல்லாமல் ஸர்வ காலத்திலும் உள்ளவனாதலால் கால பரிச்சேதமில்லை; 'இன்ன வஸ்துபோலே யிருப்பவன்' என்ன முடியாமையால் வஸ்து பரிச்சேதமில்லை. ஆக இந்த மூவகையான பரிச்சேதங்களு மில்லாமை சொல்லுகிறது உல்லங்கிதத்ரிவிதஸீம என்று. ஸீமையாவது எல்லை; அதுதான் பரிச்சேதமென்பது. "ஸீமஸீமே ஸ்த்ரியாமுபே" என்ற அமரகோசத்தின்படி ஆகாராந்தமான ஸீமா சப்தமும் நகாராந்தமான ஸீமந் சப்தமும் உண்டாகையால் இங்கு ஸீம என்று ஹ்ரஸ்வமாக ப்ரயோகிக்கப்பட்டது. நகாராந்த சப்தங்களின் நகாரம் ஸமாஸத்தில் லோபித்து விடும். உல்லங்கித என்ற விசேஷணம் ஸமாதிசாயி ஸம்பாவநையிலும் அந்வயிக்கும். பகவத் ஸ்வரூபம் த்ரிவித ஸீமாக்களைக் கடந்திருப்பதுபோல் ஸமாதிசாயி ஸம்பாவநையையும் கடந்தி ருக்கின்றது. ஸமமென்று துல்யமான வஸ்துவைச் சொல்லுகிறது; அதிசாயி என்று மேற் பட்ட வஸ்துவைச் சொல்லுகிறது. எம்பெருமானுக்கு துல்யமான வஸ்துவாவது மேற்பட்ட வஸ்துவாவது உண்டோவென்று ஸம்பாவிப்பதற்கும் ப்ரஸக்தியில்லை யென்று சொல்லிற்று

யிற்று. த்ரிவிதஸீமாச ஸமாதிசாயிஸம்பாவநாச—த்ரிவித ஸீமஸமாதிசாயிஸம்பாவநே; உல்லங்கிதே த்ரிவித்+ஸம்பாவநே யேந தம். ஸம்பாவநாபதத்தை த்ரிவித ஸீமாவிலும் அந்வயித்து "த்ரிவிதஸீம்ந: ஸமாதிசாயிநோச்ச ஸம்பாவநா உல்லங்கிதா யேந" என்று விக்ரஹம் கொள்வதும் பொருந்தும்.

இப்படிப்பட்டதான யாதொரு பரிப்ரடிமஸ்வபாவமுண்டு—பரத்வஸ்வரூபம், இது எல்லார்க்கும் தெரியக்கூடாதென்று நீ மாயையினால் மறைத்து வைத்தாலும், உன்னைத் தவிர வேறு புகலிடமறியாதவர்களாயும் உன்னையே ஸகல ப்ரயோஜநமாகக் கொண்டவர்களாயுமுள்ள அநந்ய பக்தர்கள் அந்த மாயையைக் கடந்து உன்னுடைய பரத்வ ஸ்வரூபத்தை எப்போதும் ஸாக்ஷாத்கரிக்கின்றனர்.

[மாயாபலேந பவதாபி நிகுஹ்யமாநம்] மாயாபலமாவது குணமயமான ப்ரக்ருதியின் ஸாமர்த்தியம்; அதனால், தனது ப்ரபாவத்தை ஸாமாந்யஜனங்கள் அறியாதபடி எம்பெருமானே மறைத்துக் கொள்ளுகிறான். "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்றும் "அஹம் வோ பாந்தவோஜாத:" என்றும் அவதாரங்களில் அருளிச்செய்து பகவானே தனது ப்ரபாவத்தை மறைத்திருக்கிறானென்றுணர்க. அப்படி மறைத்திருந்தாலும், புண்யாத்மாக்களின் திவ்ய சக்ஷுஸ்ஸை மாயையானது மறைக்கமாட்டாதாகையால் அவர்கள் தாராளமாகவே ஸாக்ஷாத்கரிக்கிறார்களென்றாராயிற்று.

பச்யந்தி என்றால் பார்க்கிறார்கள் என்று அர்த்தம்; முதலில் சாஸ்த்ரங்களால் பார்க்கிறார்கள்; பிறகு யோகபலத்தால் ஸாக்ஷாத்கரிக்கிறார்கள் என்கை. அவதாரங்களில் சரபங்க மஹர்ஷி, ததிபாண்டன் முதலானவர்கள் கண்ணாலேயே பார்த்துத் தெரிந்துகொண்டார்கள். அநிசம் என்பதை பச்யந்தி யென்கிற க்ரியையிலும், த்வதநந்யபாவா: என்பதிலும் அந்வயிக்கலாம். ... ... ... ... ... (கசு)

யதண்ட மண்டாந்தர கோசரஞ்ச யத் தசோத்தராண்யாவரணாநி யாநி ச,
குணா: ப்ரதாநம் புருஷ: பரம்பதம் பராத்பரம் ப்ரஹ்ம ச தே விபூதய:. (கஎ)

| | | | |
|---|---|---|---|
| யத் அண்டம் | ஏது ப்ரம்மாண்டமோ, | குணா: | ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் குணங்களும் |
| அண்டாந்தர கோசரம் ச | அண்டங்களுக்குள்ளே இருக்கக்கூடியது | ப்ரதாநம் | ப்ரக்ருதியும் |
| யத் | ஏதுவோ, | புருஷ: | ஜீவாத்மவர்க்கமும் |
| தச உத்தராணி | ஒன்றுக்கொன்று பத்து மடங்கு மேற்பட்டுச் செல்லுகின்ற | பரம்பதம் | ஸ்ரீவைகுண்டமும் |
| ஆவரணாநி ச | (அண்டங்களின்) ஆவரணங்களும் | பராத் பரம் | அசேதநத்திற் காட்டில் மேற்பட்டதான சேதநவர்க்கத்தினுள் சிறந்த முக்தாத்மவர்க்கமும் (அல்லது) நித்யாத்ம வர்க்கமும் |
| யாநி | எவையோ, (ஆகிய இவைகளும்) | ப்ரஹ்ம ச | திவ்யமங்கள விக்ரஹமும் |
| | | தே விபூதய: | உமக்கு சேஷப்பட்டவை. |

* * * கீழ் ச்லோகத்தில் சொன்ன ஸர்வேச்வரத்வத்தை இதில் த்ருடப்படுத்துகிறார். எம்பெருமானுக்கு அஸாதாரணமான விபூதிகள் உண்டென்று காட்டவே அவனுடைய ஐச்வர்யம் விளங்குமிறே.

அண்டம் என்கிற ஏகவசநம் ஜாத்யேகவசநமாகையாலே அண்ட ஸமுதாயத்தைச் சொல்லுகிறது. அண்டாநாந்து ஸஹஸ்ராணும் ஸஹஸ்ராண்யயுதாநிச, ஈத்ருசாநாம் ததாதத்ர கோடி கோட்யயுதாநி ச." என்று சாஸ்த்ரம் சொல்லுகிறபடியால் அண்டங்கள் அளவற்றவை என்றுணர்க. நாம் கண்ணாலே பார்க்கிற சராசரங்களுக்கே கணக்கில்லை; இவற்றையெல்லாம் அடக்கிக்கொண்டுள்ளது ஒரு லோகம்; அப்படிப் பதினான்கு லோகங்களை யடக்கி அவற்றை ஆவரணஞ்செய்துகொண்டு நிற்கும் பெரியதொரு கோளமே இங்கு அண்டமெனப்படுகின்றது. இப்படிப்பட்ட அண்டங்களுக்குத் தொகையில்லையென்று நூல்கள் கூறும். ஒவ்வொரு அண்டத்திலும் அண்டாதிபதியென்னும் ஒரு அதிகாரியும், கர்மவசத்தால் போகத்திற்காக அந்த அண்டத்திற்குள் அகப்பட்டிருக்கும் சதுர்வித ஜந்துக்களும், அந்த ஜந்துக்

களுக்கு போக்யமாயும் போகோபகரணமாயுமுள்ள பதார்த்தங்களும் எல்லையற்றுக் கிடக்கின்றன. இவைகள்தாம் இங்கு அண்டாந்தரகோசரம் எனப்பட்டது.

கணக்கில்லாத இந்த அண்டங்களைச் சுற்றிப் பல ஆவரணங்கள் நிற்கின்றன. இவற்றில் ஒவ்வொன்றும் மேன்மேலும் பத்து மடங்கு அதிகமாயுள்ளதாகையால் தசோத்தராணி என்று விசேஷிக்கப்பட்டது. இவ்வாறு பலவிதமாக ஆவிர்ப்பவித்து நிற்குமவையெல்லாம் பிரகிருதியென்று சொல்லப்படுகிற வஸ்துவின் ஒரு சிறிய அம்சத்தில் உண்டாகும் விகாரமென்றும், இப்படிப்பட்ட விகாரங்களையடையாமலிருக்கிற பிரகிருதியின் பாகம் எல்லையில்லாதவளவு விஸ்தரித்து நிற்கிறதென்றும் உணர்க. இவையெல்லாவற்றுக்கும் ஆதாரனாகவும் நியாமகனாகவும் சேஷியாகவும் எம்பெருமான் இருக்கையால் இவையெல்லாம் அந்த எம்பெருமானுடைய விபூதிகளென்று கொள்ளப்படுகிறது. ஈச்வரனுடைய விபூதி இவ்வளவேயல்ல; ஸத்வரஜஸ்தமோ குணங்களும் பத்த முக்த ஜீவகோடிகளும் முக்திஸ்தாநமும் தனது திவ்ய மங்கள விக்ரஹமும் இவையெல்லாமும் அவனுடைய விபூதிகளே. அவனுடைய ஐச்வரியம் இப்படிப்பட்டதாயிருந்தால் அவனைப் பராத்பரனென்று சொல்லத் தடை என்ன? என்பதாகத் தாத்பரியங்கொள்க.

கோசர சப்தம் நித்ய புல்லிங்கமாயினும் பஹுவ்ரீஹி ஸமாஸத்தாலே விசேஷ்ய நிக்நமாயிற்று. அண்டங்களின் உட்புறங்களை ஸ்தாநமாக வுடையது என்று பொருள்.

குண:—ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் பிரகிருதி குணங்கள். இவை எம்பெருமானிட்ட வழக்கு என்கை. ப்ரதாநமாவது—விகாரமற்றிருக்கும் குணத்ரயமுள்ள த்ரவ்யம்; மூலப்ரக்ருதி குணியான பிரகிருதியிற்காட்டில் குணங்களைத் தனிப்படப் பிரித்துச் சொன்னது—"ஸாம்யாவஸ்த்தமான குணத்ரயமே ப்ரக்ருதி" என்று கொள்ளுகிற ஸாங்க்யர்களின் கொள்கையை விலக்குகைக்காகவாம்.

புருஷ:—ப்ரக்ருதியை வியாபித்து நிற்கும் க்ஷேத்ரஜ்ஞஸமுதாயம் என்றபடி. தாருண்யக்நிர் யதா தைலம் திலே தத்வத் புமாநபி | ப்ரதாநே வஸ்திதோ வ்யாபீ"[கட்டைக்குள் நெருப்புப் போலவும் எள்ளுக்குள் எண்ணெய் போலவும், புமாந் என்று சொல்லப்படும் க்ஷேத்ரஜ்ஞ ஸமுதாயம் ப்ரதாநத்தில் உறைந்திருக்கின்றது] என்ற பிரமாணம் காண்க. பரம் பதம்—நலமந்த மில்லதோர் நாடு.

பராத் பரம்—இங்கே இரண்டு பர சப்தங்கள் உள்ளன; முதலிலுள்ள பரசப்தமானது பிரகிருதியிற்காட்டிலும் பரமாக இருக்கிற க்ஷேத்ரஜ்ஞஸாமாந்யத்தைக் குறிக்கின்றது; அதிற்காட்டிலும் பரமாக இருக்கின்றது முக்தாத்ம வர்க்கம். அல்லது, முதல் பரசப்தத்தாலே முக்தாத்மாவைச் சொல்லுகிறதாகக் கொண்டு, பராத்பர மென்று நித்ய ஸித்தஸமுதாயத்தைச் சொல்லுகிறதென்றும் கொள்ளலாம்.

ப்ரஹ்ம—சுபாச்ரயமாயுள்ள நித்யமங்கள விக்ரஹம் என்றபடி. ஸாமாந்யமாக ப்ரஹ்ம சப்தத்தால் பகவத் ஸ்வரூபமே குறிக்கப்படுவதாயினும் இவ்விடத்திற்கு அந்தப் பொருள் ஒவ்வாது; "இவையெல்லாம் உன்னுடைய விபூதிகள்' என்று முடிக்கிறபடியாலே ஸ்வரூபத்தை விபூதியாகச் சொல்வது பொருந்தாதிறே. ஆகையாலே இங்கு ப்ரஹ்ம சப்தம் திவ்யமங்கள விக்ரஹத்தையே சொல்லுகிறது. இவ்வர்த்தத்தில் ப்ரமாண ப்ரஸித்தியு முண்டு.

தே விபூதய: = இவையெல்லாம் உனக்கு ஆதேயங்களாகவும் நியாம்யங்களாகவும் சேஷங்களாகவுமிருக்கின்றன என்றபடி. ... ... ... (கஎ)

**வசீ வதாந்யோ குணவாந் ருஜு: சுசி: ம்ருதுர் தயாளுர் மதுர: ஸ்திரஸ் ஸம:**
**க்ருதீ க்ருதஜ்ஞஸ் த்வமஸி ஸ்வபாவத: ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததி: (கஅ)**

| | | | |
|---|---|---|---|
| ஸ்வபாவத: | இயற்கையாகவே | ம்ருது: | ஸுகுமாரனாய் |
| வசீ | ப்ரபுவாய் (அல்லது) ஆச்ரித பரதந்த்ரனாய் | தயாளு: | இரக்கமுடையவனாய் |
| | | மதுர: | ஸாரஸனாய் |
| வதாந்ய: | உதாரனாய் | ஸ்திர: | ஒருவராலும் அசைக்க முடியாதவனாய் |
| குணவாந் | ஸௌசீல்ய குணசாலியாய் | | |
| ருஜு: | த்ரிகரணங்களிலும் கபடமற்றுச் செவ்வியனாய் | ஸம: | எல்லாரிடத்திலும் வாசியின்றிக்கே ஒத்துப் பரிமாறுமவனாய் |
| சுசி: | பரிசுத்தனாய் | | |

| | | | |
|---|---|---|---|
| க்ருதீ | நன்றி புரியுமவனை | த்வம் | நீ |
| க்ருதஜ்ஞ: | ஆச்ரிதர் பண்ணின ஸ்வல்ப ஆநுகூல்யத்தையும் பெருக்க மதிப்பவனை | ஸமஸ்த கல்யாண குண அம்ருத உததி: அஸி | கல்யாண குணங்களெல்லாவற்றிற்கும் அமுதக் கடலாயிரா நின்றாய். |

* * *—எம்பெருமானுடைய விபூதிகள் அளவற்றவை என்றார் கீழ் ச்லோகத்தில்; அதுபோலவே திருக் கல்யாண குணங்களும் அளவற்றவை என்கிறாரிதில். எல்லாக் குணங்களையும் எடுத்துச் சொல்ல முடியாமையால் பத்தெட்டு குணங்களையெடுத்துச் சொல்லி அநுபவிக்கிறார்.

வசீ = மூன்றும் பாதத்திலுள்ள ஸ்வபாவத: என்ற பதம் எல்லாவற்றிலும் அந்வயிக்கக் கடவது. "ஸ்வபாவத: வசீ, ஸ்வபாவத: வதாந்ய: என்க. "ஸ்வபாவத: ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததி:" என்று உள்ளபடியே அந்வயிக்கவுமாம். "வசீ" என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம்; வசமென்று ப்ரபுத்வத்துக்கும் வசப்பட்டிருப்பதற்கும் பேராகையாலே ப்ரபுத்வமுடையவன் என்றும், ஆச்ரிதர்களுக்கு வசப்பட்டிருப்பவன் என்றும். தூதுபோனது முதலியவற்றில் ஆச்ரிதர்களுக்குக் கையாளாயிருக்குந் தன்மை காணத்தக்கது. இந்தப் பராதீநத்வம் கருமத்தால் வந்ததன்றிக்கே ஸ்வேச்சையாலே வந்ததென்று காட்டும் ஸ்வபாவத: என்பது.

வதாந்ய: = உதாரன் என்றபடி. தன்னையும் தன்னுடைமையையும் ஆச்ரிதர்கட்கு அளிப்பவன்.

குணவாந் = மொத்தமாகக் 'கல்யாண குணமுடையவன்' என்று பொருள் கூறுகை யுக்தமல்ல; விசேஷ குணங்களின் நடுவே குணவாந் என்னும்போது இது ஒரு விசேஷ குணமாகவே யிருக்கவேண்டும். எல்லாக் குணங்களிற் காட்டிலும் ஸௌசீல்யம் சிறந்ததாதலால் அதுவே இங்கு குணசப்தத்தால் விவக்ஷிதம். தன் மேன்மை பாராமல் தாழ்ந்தவர்களோடும் புரையறக் கலந்து பரிமாறும் சீலகுணமுடையவன் என்கை. குஹப்பெருமாள், சபரி, முதலானோரிடங்களில் இக்குணம் மிக விளங்கிற்று.

ருஜு: = மன மொழி மெய்கள் மூன்றிலும் கபடமற்றிருப்பவன். இது தமிழில் செம்மைக்குண மெனப்படும். நம்மை ஒருவன் 'அப்பா! நீ எவ்விடம்?' என்று கேட்டால் 'தற்காலமிருப்பது இவ்விடம்' என்போம்; 'எப்போது வந்தாய்?' என்றால் 'நீ பார்த்தபோது தான் வந்தேன்' என்போம்; 'உன் பெயர் என்ன?' என்றால் 'உண்டு வளர்ந்தான்' என்போம். ஒரு கேள்விக்காவது ருஜுவான உத்தரம் சொல்லமாட்டோம்; ஏன்? செம்மைக் குணம் நமக்கில்லாமையாலே. எம்பெருமான் இப்படிப்பட்டவனல்லன்; மிகத் தாழ்ந்தார் வந்து ஏது கேட்டாலும் ருஜுவாகவே விடையளிப்பவன்; பஞ்சவடியில் எழுந்தருளியிருக்கும் போது சூர்ப்பணகைவந்து பெருமாளைநோக்கி 'நீர் ஆர்?' என வினவ, தீய கருத்துடன் வந்த இவளுக்கு நாம் ருஜுவான உத்தரம் ஏன் சொல்லவேண்டுமென்று எண்ணாமல் தம்முடைய வரலாற்றை ஆதி தொடங்கி உள்ளது உள்ளபடியே சொல்லிமுடித்தார் பெருமாள்; அவ்விடத்தில் வான்மீகி கூறுகின்றார்—"ருஜுபுத்திதயா ஸர்வமாக்க்யாது முபசக்ரமே" [இராமபிரான் செம்மையான புத்தியையுடையவனாகையால் தனது வரலாறுகளெல்லாவற்றையும் உள்ளபடியே சொல்லத்தொடங்கினான்] என்று. இக்குணமே ஆர்ஜவகுணமெனப்படும்.

சுசி: = பரிசுத்தன் என்றபடி. அபிப்ராயத்தில் சுத்தியும் சரீரத்தில் சுத்தியும் ஆக இருவகைப் பரிசுத்திகளுண்டு; ஒருவர்க்கு ஒருபகாரம் செய்ய நினைத்தால் ஒரு பிரயோஜனத்தைக் கணிசியாமல் வெறும்புறத்திலே உபகரிக்கும்படியான அபிப்ராய சுத்தியை உடையவன் என்றும்; பலவகை அசுத்திகளையுடைய நித்யஸம்ஸாரியைத் தனது ஸம்பந்தத்தாலே நித்யஸூரிகளோடொக்கும்படி பரிசுத்தனாக்கவல்ல தூய்மையையுடையவன் என்றும் பொருள்படும். "பரம பவித்திரன்" என்று வேத வேதாங்கங்களிற் சொல்லப்பட்டவன்.

ம்ருது: = ஸுகுமாரன் என்றபடி. ஸௌகுமார்யமாவது மென்மைத்தன்மை, இது சரீர குணங்களுள் ஒன்றாகவும் ஆத்ம குணங்களுள் ஒன்றாகவும் படிக்கப்படும். ஸுகுமாரமான திருமேனியையுடையவன் என்றும், அடியவர்களுடைய பிரிவை ஸஹிக்கமாட்டாத மெல்லிய மனமுடையவன் என்றும் பொருள்படும். ஆத்மகுணத்தைச் சொல்லுவதாகக் கொள்வதே இங்கு உரியது.

தயாளு:—கருணையுடையவன். கருணையாவது பிறர் படும் துக்கத்தைக்கண்டு தானும் துக்கப்படுகை என்று எம்பெருமானார் ஆழ்வான் பட்டர் முதலான ஆசிரியர்களின் திருவுள்ளம். அகிலஹேய ப்ரத்யநீகனாய் ஆநந்தமயனான எம்பெருமானுக்கும் துக்கமுண்டாவதாகச் சொல்லுவது கூடாதாகையாலே, பிறர் படும் துக்கத்தைப் போக்கவேணுமென நினைக்கையே கருணையென்னவேணும் என்று ஸ்ரீதேசிகன் திருவுள்ளம். இவ்விஷயமாகத் தனியே க்ரந்தம் வரைந்துளோம்; அதிற் கண்டுகொள்க. ஆச்ரிதருடைய துக்கத்தைக் கண்டு எம்பெருமான் தானும் துக்கமடைவான் என்பது சிறந்த குணமேயன்றி ஹேயகுணமல்லவென்பது உய்த்துணரத் தக்கது.

மதுர:—மதுரமான பேச்சுகளைப் பேசி அடியவர்களை இனிமைப்படுத்துமவன் என்றும், "எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ்சோலைக்கோனே" என்றபடி ஆச்ரிதர்கட்குப் பரமபோக்யமான திருமேனியையுடையவன் என்றும் பொருள்படும். ஒவ்வொருவருடைய ருசி ஒவ்வொரு வகையாக இருந்தாலும் அவரவர்கள் நின்ற நின்ற நிலைகளிலே எல்லார்க்கும் இனியனாயிருப்பவனென்க. "ரஸோ வை ஸ:" என்று உபநிஷத்தும் சொல்லிற்று.

ஸ்திர: —ஆச்ரிதர்கள் விஷயத்திலே பிடித்த பிடி விடாதவன். "தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல், என்னடியாரது செய்யார்" என்றபடி பிராட்டியினாலும் மாறுபடுத்த வொண்ணாத உறுதியையுடையவன்; ஆச்ரிதர்களுடைய அபராதங்களைக் கண்டும் திருவுள்ளஞ்சீறிக் கை விடாதவன்.

ஸம:—ஜாதியாலும் குணத்தாலும் நடவடிக்கையாலும் வெவ்வேறுபட்டவர்களிடத்திலும் ரக்ஷணத்தில் வாசியின்றி ஸமமாகப் பொருந்துமவன். "ஸமோஹம் ஸர்வபூதேஷு" என்று தானே கீதையில் ஓதிவைத்தானிறே. எம்பெருமான் எல்லார் திறத்திலும் ஸமனாயிருப்பவனாகில் சிலரை அதமர்களாகவும் சிலரை மத்யமர்களாகவும் சிலரை உத்தமர்களாகவும் இப்படி எவ்வளவோ வாசிகள் காணும்படி ஸ்ருஷ்டிக்கக் கூடுமோ? என்று ஆக்ஷேபம் தோன்றும்; அவரவர்களுடைய கருமங்களுக்குத் தக்கபடி விஷமஸ்ருஷ்டிகள் விளைகின்றபடியால் எம்பெருமானுடைய ஸர்வஸமத்வத்திற்குக் குறையொன்றுமில்லையென்று ப்ரஹ்மஸூத்ரம் பரிஹரித்தது. "வைஷம்யவாதபரிஹார:" என்ற வடமொழி நூலிலே இவ்விஷயத்தை விரிய வரைந்தோம்; அங்கே சுருக்கமறக் கண்டுகொள்வது.

க்ருதீ — தனக்காகச் செய்துகொள்ள வேண்டியதொன்றுமில்லாதவன்; ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதையே தன் காரியமாகவுடையவன்.

க்ருதஜ்ஞ: — "என் ஊரைச் சொன்னாய், என் பேரைச் சொன்னாய், என் அடியாரை நோக்கினாய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தாய்" என்று மடிமாங்காயிட்டு ஸுக்ருதங்களை ஒன்று பத்தாக்கிக் கொண்டு போருகிறவனிறே எம்பெருமான்; அடியவர்கள் ஸ்வல்பமாகச் செய்த ஆநுகூல்யத்தையும் பஹுவாகத் திருவுள்ளம் பற்றுகிறவன் என்கை.

"கோவிந்த புண்டரீகாக்ஷ! ரக்ஷ மாம் சரணாகதாம்" என்று த்ரௌபதி மனமுருகி வருத்தம் தாங்கமுடியாமல் வெகு தூரத்திலிருந்த என்னைப் பேர் சொல்லிக் கதறி யழைத்தாளே!; அதற்குத் தகுதியாக அவளுக்கு நான் ஒன்றும் செய்யப் பெற்றிலேனே!; கடன் ஏறுவது போல் அது வளர்ந்து சென்று கொண்டே என் மனத்தை எப்போதும் கலக்கிக்கொண்டிருக்கின்றதே! என்று கண்ணபிரான் பரிதாபப்பட்டுச் சொன்ன சொல்லை அநுஸந்திப்போமாகில், அவனைவிட க்ருதஜ்ஞன் வேறொருவர் உண்டோ?

இங்ஙனே சில திருக்குணங்களைச் சொல்லி, அவனுக்குள்ள குணங்கள் எல்லையற்றவைகளாதலால் அவ்வளவுஞ் சொல்லமுடியாமல், "இப்படிப்பட்ட ஸமஸ்த கல்யாண குணங்களுக்கும் நீ அமுதக்கடலாயிராநின்றாய்" என்று உபஸம்ஹரித்தருளினர். ... ... (கஅ)

**உபர்யுபர்யப்ஜபுவோபி பூருஷாந் ப்ரகல்ப்ய தே யே சதமித்யநுக்ரமாத்,**
**கிரஸ் த்வதேகைக குணாவதீப்ஸயா ஸதா ஸ்திதா நோத்யமதோதிசேரதே.** (கக)

| | | | |
|---|---|---|---|
| கிர: | வேதவாக்கியங்களானவை | த்வத் ஏகைக குண அவதி ஈப்ஸயா | உன்னுடைய ஒவ்வொரு குணத்தினுடையவும் எல்லையைக்கண்டு பிடிக்கவேணுமென்கிற விருப்பத்தோடே |
| உபரி உபரி | மேன்மேலும் | ஸதா ஸ்திதா: | எப்போதும் இருக்கின்றன (ஆகையினால்) |
| அப்ஜபுவ: அபி | ப்ரஹ்மாக்களையும் | உத்யமத: ந அதி சேரதே | ஆரம்ப அவஸ்தையைக் கடந்து அப்பால் செல்லவில்லை. |
| பூருஷாங்ப்ரகல்ப்ய | மநுஷ்யர்களாகக் கல்பனை செய்து | | |
| தே யே சதம் இதி அநுக்ரமாத் | "தே யே சதம்—தே யே சதம்" என்று ஓயாமல் சொல்லிக் கொண்டே போவதனால் | | |

*** எம்பெருமான் கணக்கில்லாத கல்யாண குணங்களையுடையவன் என்று கீழ்ச் ச்லோகத்தில் அருளிச்செய்தார். குணங்கள் கணக்கில்லாதவை என்பது மாத்திரமேயல்ல, ஒவ்வொரு குணமும் எல்லை காணமுடியாதபடி அநவதிகமாயு மிருக்கின்றது என்கிறார் இந்த ச்லோகத்தில். எம்பெருமானே! வேதங்கள் உன்னுடைய ஒவ்வொரு குணத்தினுடையவும் எல்லையைக் காணவிரும்பி, இந்த வுலகத்தில் ஸம்பவிக்கமுடியாத ஒப்பற்ற குணங்கள் வாய்ந்த ஒரு மநுஷ்யனைக் கல்பித்து அவனுக்கு மேன்மேலாகப் பலபேர்கள் இருப்பது போலவும், கீழ்ச்சொல்லப்படுகிறவர்களைக் காட்டிலும் மேன்மேலும் சொல்லப்படுகிறவர்களுடைய குணங்கள் நூறுமடங்கு அதிகமாக இருக்கின்றன போலவும் கல்பித்துக்கொண்டுபோய் அப்படிப் பெருக்கிக் கடைசியாகத் தேறும் தொகையை உன்னுடைய கல்யாண குணத்தின் அளவாகச் சொல்லலாமென்றெண்ணிப் பார்த்து, அவ்வளவிலே சொல்லி முடிக்கப் பொருந்தாமையால் அந்த பர்யாயத்தில் ப்ரஜாபதியின் ஸ்தானத்திலே நின்றவனை மறுபடியும் மநுஷ்ய ஸ்தானத்திலே நிறுத்தி, கீழ்க்கூறியபடியே அவனுக்கு மேன்மேலாகப் பலபேர்களிருப்பது போலவும் அவர்களுக்கும் க்ரமேண சதகுணிதோத்தரமான ஆநந்தம் இருப்பது போலவும் சொல்லிக்கொண்டுபோய் கடைசியிலே ப்ரஜாபதிஸ்தானத்திலே நின்றவனுடைய ஆநந்தத்திற் காட்டிலும் நூறுமடங்கு அதிகமான ஆநந்தம் எம்பெருமானுக்குள்ளது என்று சொல்லப் பார்த்து அதுவும் பொருந்தாமையாலே, இந்த இரண்டாவது பர்யாயத்தில் ப்ரஜாபதிஸ்தாநத்தில் நின்றவனை மீண்டும் மநுஷ்யஸ்தானத்திலே நிறுத்தி அவன் முதலாகப் படிப்படியாக ப்ரஜாபதியளவும் போவது மறுபடியும் திரும்புவதாய் இப்படியே அந்தாதியாகப் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கிறதேயொழிய, 'எம்பெருமானுடைய ஆநந்தம் இவ்வளவு' என்று இன்னமும் எல்லை கண்ட பாடில்லை என்கிறார். தைத்திரீய உபநிஷத்தில் ஆநந்தவல்லீ என்றொரு பகுதியுள்ளது; அது, எம்பெருமானுடைய திருக்குணங்களுள் ஒன்றான ஆநந்த குணத்தைப்பற்றிப் பேசுகின்றது. அந்த ஆநந்தம் இவ்வளவு கொண்டதென்று சொல்ல முடியாதென்பதைக் காட்டுவதற்கு வேதமே ஒருவகையான கல்பனையைச் செய்திருக்கிறது. (அதாவது—) ஒரு மநுஷ்யன்; அவன் நல்ல யௌவன பருவத்திலுள்ளவன்; ஸகலசாஸ்த்ரங்களையும் ஒன்றுவிடாமல் ஓதிப் பிறர்களுக்கும் ஓதுவிப்பவன்; ஆலஸ்யமின்றி எல்லாக்காரியங்களையும் வழுவாமற் செய்பவன்; தேஹத்திலும் மனத்திலும் திடமுள்ளவன்; இவ்வளவும் வாய்ந்தாலும் தரித்ரனாயிருந்தால் பயனில்லையே, அப்படியன்றிச் செல்வமெல்லாம் நிறைந்த பூமண்டலம் முழுவதையும் செங்கோல் செலுத்தி ஆளும்படியான ஒப்புயர்வற்ற ஸம்பத்தும் வாய்ந்தவன்; இப்படிப்பட்ட அதிசயங்கள் நிறைந்த ஒரு மனுஷ்யனிருந்தால் அவனுக்கு உண்டாகக் கூடிய ஆநந்தத்தை முன்னே எடுத்துக்காட்டி, அதைவிட நூறுபங்கு அதிகமான ஆநந்தமுடையவர்களாக மநுஷ்யகந்தர்வர்கள் என்ற வகுப்பைக் கூறி, அவர்களைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தமுடையவர்களாக தேவகந்தர்வர்களைக் கூறி; இப்படியே நூறு நூறு பங்கு அதிகமான ஆநந்தமுள்ளவர்களாக வரிசையாய் சிரலோகலோக பித்ருக்களையும் ஆஜாநஜதேவர்களையும் கர்மதேவதேவர்களையும் தேவர்களையும் இந்திரனையும் ப்ருஹஸ்பதியையும் ப்ரஜாபதியையும் சொல்லிவந்து அந்த ப்ரஜாபதியின் ஆநந்தத்தைவிட நூறுபங்கு அதிகமான ஆநந்தமுடையது பரப்ரஹ்மம் என்று சொல்லப் பார்த்து, "பரப்ரஹ்மத்தின் ஆநந்தத்தை இவ்வளவு மட்டமாகவா சொல்லிவிடுகிறது!" என்று குறைபட்டு "யதோ வாசோ நிவர்த்தந்தே" எனறபடி மறுபடியும் திரும்புகிறதாம்;—அதாவது, கீழ்ச்சொல்லிக்கொண்டு வந்த ப்ரக்ரியையில் கடைசியாக யாதொரு ப்ரஜாபதி சொல்லப்பட்டானோ அவனை, அடுத்த பர்யாயத்தில் மநுஷ்யஸ்தானத்திலே நிறுத்தி அவன் முதலாக ப்ரஜாபதியளவும் சொல்லிக்கொண்டு போய், அந்த ப்ரஜா

பதியின் ஆநந்தத்தைவிட நூறுபங்கு அதிகமான ஆநந்தம் பரப்ரஹ்மத்தினுடையது என்று சொல்லி முடிக்கப் பார்த்து அதுவும் கூடாமையாலே முன்போலே மறுபடியும் ஒரு பர்யாயம் சொல்லுவது—இப்படியே அந்தாதியாக இன்றைக்கும் புந:புநராவ்ருத்தியிலேயே கிடக்கின்றனவாம் வேதங்கள்.

இவ்விடத்திலே ஒரு கேள்வி பிறக்கும்; உபநிஷத்திலே ஸைஷாநந்தஸ்ய மீமாம்ஸா பவதி! யுவாஸ்யாத் ஸாது யுவாத்யாயக: ஆசிஷ்டோ த்ரடிஷ்டோ பலிஷ்ட: தஸ்யேயம் ப்ருதிவீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணா ஸ்யாத் ஸஏகோ மாநுஷ ஆனந்த: என்று தொடங்கி "தே யே சதம் ப்ரஜாபதேரானந்தா: என்று பரப்ரஹ்மத்தின் ஆநந்தத்திற்கு ஒரு அளவு கண்டாற்போல் சொல்லி முடிக்கப்பட்டிருக்கிறதேயொழிய, மறுபடியும் மறுபடியும் அந்தாதியாய்த் திரும்பிக் கொண்டேயிருப்பதாகக் காணப்படவில்லையே; தவிரவும், மநுஷ்யாநந்தத்தை முதலிலே வைத்து ஆரம்பித்திருக்கிறதேயொழிய, பிரமனை மநுஷ்யஸ்தானத்திலே நிறுத்திச் சொல்லப்படுவதாகவும் உபநிஷத்தில் விளங்கவில்லையே!; இல்லாத இவ்விரண்டு விஷயங்களையும் எங்ஙனே ஏறிட்டுச் சொல்லலாம்?—என்றால்;

ஸமாதாநம் சொல்லுகிறோம், கேண்மின்;—தே யே சதம் ப்ரஜாபதேரானந்தா: ஸஏகோ ப்ரஹ்மண ஆனந்த: என்று முடிவு கட்டினாற்போல் சொல்லியிருந்தாலும், அடுத்தபடியாக அவ்விடத்திலேயே யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" என்று சொல்லப்பட்டிருப்பதால் அதில் "வாச: நிவர்த்தந்தே—வாக்குக்கள் திரும்பிக்கொண்டேயிருக்கின்றன" என்று வர்த்தமாநகாலமாகப் பிரயோகிக்கப்பட்டிருப்பதால் இங்ஙனே பல பல பர்யாயங்கள் ஓதப்பட்டே வருகின்றனவென்று கொள்ளவேணுமென்று ஆளவந்தாருடைய திருவுள்ளம். ஸ்ரீபராசரபட்டரும் ஸ்ரீரங்கராஜ ஸ்தவ உத்தர சதகத்திலே "மர்த்யோத்தாயம் விரிஞ்சாவதிக முபரி சோத்ப்ரேக்ஷ்ய மீமாம்ஸமாநா ரங்கே த்ராநந்தவல்லீ தவகுணநிவஹம் யேளவனாநந்தபூர்வம், நஸ்வார்த்தம் ஸ்ப்ரஷ்டுமீஷ்டே ஸ்கலதி பதி பரம்" என்றருளிச் செய்தது ஆராயத்தக்கது. "உபரி சோத்ப்ரேக்ஷ்ய" என்கிறாரிறே. ஸ்தோத்ரபாஷ்யத்தில் ஸ்ரீ தேசிகனும்—"தே யே சதமித்யநுக்ரமாத் ப்ரத்யக்ஷஸ்துதிபடிதாநுக்ரமேண அவித்யமாந அஸங்க்யாதபாட பர்யாயாப்யூஹம் க்ருத்வேதி பாவ:" என்கிற ஸ்ரீஸூக்தியினால் இதனை வெளியிட்டருளினார். இனி, ப்ரஜாபதியை மநுஷ்யஸ்தானத்திலே நிறுத்தினதாக உபநிஷத்தில் எங்ஙனே விளங்குகின்றதென்னில்; "யுவாஸ்யாத்" என்று தொடங்கி "தஸ்யேயம் ப்ருதிவீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணா ஸ்யாத்' என்று சொல்லப்பட்டிருக்கிற விஷயம் மநுஷ்யர்களுள் ஒருவர்க்கும் ஒருபோதும் ஸம்பவிக்க முடியாதாகையாலும் ப்ரஜாபதிக்கே அது ஸம்பாவிதமாகையாலும், அந்த ப்ரஜாபதியையே வேதமானது மநுஷ்யஸ்தானத்திலே நிறுத்திப் பேசுகின்றதென்று கொள்ளலாம். இப்படி எல்லையான ஆநந்தத்தை ஆதியாக வைத்துப் பேசிக்கொண்டு போய் அதை நூறு நூறு பங்காகப் பெருக்கிக்கொண்டே போய்ச் சொல்லிப் பார்த்தாலும் ப்ரஹ்மாநந்தத்திற்கு ஒரு அவதி ஏற்பட வழியில்லையென்று சொல்லுகிறவிது "ப்ரஹ்மாநந்தம் எல்லையற்றதென்று ஒரு முடிவு செய்துவிடுவதற்கும் முடியவில்லை" யென்பதை விளக்குகின்றதுபோலும். வேதமே இப்படி ஒரு அபூர்வகல்பனையைப் பண்ணுகிறதாயிற்று—ப்ரஹ்மாநந்தத்தின் அத்யந்த அபரிச்சேத்யத்வத்தைப் பேசவேண்டி.

ஆனால், "ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:" [ப்ரஜாபதியின் ஆநந்தத்தின் நூறு கொண்டது ப்ரஹ்மாநந்தம்] என்று வேதம் ஏன் சொல்லிற்று? என்று கேட்கலாம்; இக்கேள்விக்கு ஆநந்த மயாதிகரண பாஷ்யச்ருதப்ரகாசிகையில் ஸமாதாநம் அருளிச்செய்யப்பட்டுள்ளது;—"க்ஷிப்தேஷுரிவ ஸர்ப்பதி"—எறியப்பட்ட அம்புபோலே ஸூர்யன் ஓடுகிறான்" என்று சொல்லப்பட்டிருந்தால், ஒரு நிமிஷத்தில் பல காத வழிகளைக் கடந்து செல்லுகிற ஸூர்யனுக்கு, அற்பமான அம்பு ஒப்பாக மாட்டாமையாலே "க்ஷிப்தேஷுரிவ ஸர்ப்பதி" என்ற அந்த வாக்கியத்திற்கு—'ஸூர்யனுடைய கதி அமந்தம்' என்பதில் மாத்திரம் தாற்பரியமாவதுபோல் "ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:" என்ற இவ்வாக்கியத்திற்கும் ஆநந்த ஆதிக்யத்தில் மாத்திரம் தாற்பரியமாகக் கடவது—என்றருளிச் செய்யப்பட்டது, மற்றொருவகையான ஸமாதாநமும் அங்கே கண்டு கொள்க.

[உபர்யுபரி அப்ஜபுவோபி பூருஷாந் ப்ரகல்ப்ய] 'அப்ஜபுவ:' என்பதை த்விதீயாபஹுவசநமாகக் கொள்க. கீழ் விவரித்தபடி ஆநந்தவல்லீ வாக்கியங்களின் ஆவ்ருத்திகளால் பலபல ப்ரஹ்மாக்கள் தேறுகிறபடியால் பஹுவசநப்ரயோகம் பண்ணிற்று. அபி என்ற அவ்யயத்

தின் கருத்து யாதெனில்; நான்முகனை மநுஷ்ய ஸ்தானத்திலே நிறுத்தி அவனுக்கு மேலே படிப்படியாகச் சில வ்யக்திகளைச் சொல்லிக்கொண்டுபோகிற இந்த க்ரமம் அஸம்பாவிதமென்பதையும், ச்ருதிதானே ஏறிட்டுக் கல்பனை செய்கிறது என்பதையும் இந்த அந்வயம் காட்டும்.

“அப்ஜபுவ: உபர்யுபரி” என்று இப்படியே அந்வயிப்பது தவிர “அப்ஜபுவ: பூருஷாந் ப்ரகல்ப்ய” என்று ஸமாநாதிகரணமாக அந்வயிப்பதும் பொருந்தும்; ப்ரஹ்மாக்களை மநுஷ்யர்களாகக் கல்பித்து என்றபடி. ஒவ்வொரு பர்யாயத்திலும் “ஸஏகோ மாநுஷ ஆனந்த:” என்றவிடத்திலுள்ள மாநுஷ சப்தம்—மநுஷ்ய ஸ்தாநத்தில் நிறுத்தப்பட்ட ப்ரஜாபதியைக் கருதுகின்றதென்று கீழே விவரித்ததைக் குறிக்கொள்க.

“உபர்யுபரி தேயேசதமித்யநுக்ரமாத்” என்றும் அந்வயிக்கலாம்; உபர்யுபரி ப்ரகல்ப்ய” என்றும் அந்வயிக்கலாம். ப்ரஹ்மாக்களை மநுஷ்ய ஸ்தாநத்திலே வைத்துவைத்து மேலேமேலே ஓயாமல் கல்பனைகள் நிகழ்கின்றனவேயன்றி, ஓரளவில் வந்து முடிந்தபாடில்லை என்ற கருத்து இதில் வெளியாகும்.

[தேயேசதமித்யநுக்ரமாத்] உபநிஷத்தில் “தே யே சதம், தே யே சதம், தே யே சதம்” என்று மேன்மேலும் ஓதப்படுவதை நினைக்க. அநுக்ரமமாவது—ஒன்றின்பின் ஒன்றாகச் சொல்லிக்கொண்டேபோகை.

[கிர:] என்பதற்கு வாக்குக்கள் என்று ஸாமாந்யமாகப் பொருளாயினும் “தே யே சதம்” என்றெடுத்த ப்ரகரண பலத்தால் வேதவாக்குக்களென்று விசேஷார்த்தம் தேறும். “ஸதா ஸ்திதா:” என்பதை இதற்கு விசேஷணமாக அந்வயித்து, எப்போதுமுள்ள வாக்குக்கள்—வேதவாக்குக்கள் என்றலுமுண்டு.

[த்வதேகைககுணாவதீப்ஸயா] உதாஹரித்த உபநிஷத்தில் ஆநந்த குணமொன்று மாத்திரமே ப்ரஸ்தாவிக்கப்பட்டுள்ளதென்று நினைக்கவேண்டா; தொடக்கத்தில் “யுவா ஸ்யாத்” என்று தொடங்கி ஆநந்தத்திற்குக் காரணமாக மற்றும் பல (யௌவநம் உபதேசகத்வம் ஆசிஷ்டத்வம் த்ரடிஷ்டத்வம் பலிஷ்டத்வம் ஸர்வப்ருதிவீபதித்வம் முதலிய) குணங்களும் கூறப்பட்டிருக்கின்றமையால் அவற்றின் எல்லையில்லாமையும் இதில் அர்த்தாத் ஸித்தமென்று திருவுள்ளம்பற்றி “ஏகைககுண” என்றருளிச் செய்தார். ‡ “ஆநந்தவல்லீ தவ குணநிவஹம் யௌவநாநந்த பூர்வம்” என்று பட்டர் ஸ்ரீஸூக்தியும், † “த்ரயுத்யதா தவ யுவத்வமுகைர் குணௌகை ராநந்த மேதித மியாநிதி ஸம்கியந்தும்” என்றும், $ ஏவம் தயா சதுரயா தவ யௌவநாத்யா: ஸர்வே குணாஸ்ஸஹ ஸமஸ்த விபூதிபிச்ச ப்ரவ்யாஹ்ருதா: ஸ்யுரவதீநவதீரயந்தோ வாசாமகோசரமஹாமஹிமாந ஏவ” என்றும் ஆழ்வான் அருளிச் செய்ததையும் காண்க.

ஸதா ஸ்திதா:—உன்னுடைய ஒவ்வொரு குணத்தினுடையவும் எல்லையைக் காணவேணுமென்கிற விருப்பத்தோடே எப்போதும் இருக்கிற வேதங்கள், [உத்யமத: ந அதிசேரதே.] ஆரம்ப தசையை விட்டு அப்பால் போகவில்லை;—“குணங்களின் எல்லையைக் காண்பதற்குத் தொடங்கியிருக்கிறது வேதம்” என்கிற வார்த்தையே என்றைக்கும் நிகழ்வதேயன்றி, எல்லைகண்டு முடித்ததென்கிற வார்த்தைக்கு ஒரு நாளும் அவகாசமில்லையென்க. * “உயர்வறவுயர்நலமுடையவன்” என்று ஆழ்வார் பேசினாப்போலே பேசிவிடாமல் வேதம் ஏதோ பேசத்தொடங்கிப் பரிபவப்பட்டதென்கிறார் போலும். † “நான்மறைகள் தேடியென்றுங் காணமாட்டாச் செல்வன்” என்ற திருமங்கையாழ்வாரருளிச்செயல் நோக்கத்தக்கது.

ஆப்து மிச்சா-ஈப்ஸா; ஏகைககுணாவதே: ஈப்ஸா இதி விக்ரஹ:.

இந்த ச்லோகத்தின் பொருளை யாம் இவ்வளவு பண்ணியுரைத்தோமாகிலும் ஓர் ஆசிரியன் பக்கல் குனிந்து கேட்டாலன்றிக் கருத்தும் பொருளும் களங்கமறத் தெரிவரிது. அருமையான வேதாந்த விழுப் பொருளிறே ... ... ... ... (கசு)

**த்வதாச்ரிதாநாம் ஜகதுத்பவஸ்திதிப்ரணாச ஸம்ஸாரவிமோசநாதய:**
**பவந்தி லீலா விதயச்ச வைதிகாஸ் த்வதீய கம்பீர மநோநுஸாரிண:.** (உ௰)

---

‡. ஸ்ரீரங்கராஜஸ்தவம் உத்தரசதகம் 35.
†. ஸ்ரீவைகுண்டஸ்தவம் 51.
$. ஷை 52.

| | |
|---|---|
| ஜகத் உத்பவ ஸ்திதி ப்ரணச ஸம்ஸார விமோசந ஆதய: லீலா: | உலகத்தைப் படைப்பது காப்பது அழிப்பது மோக்ஷமளிப்பது முதலிய விளையாடல்கள் |
| த்வத் ஆச்ரிதாநாம் பவந்தி | உனது அடியவர்களுக்காக ஆகின்றன; |
| வைதிகா: விதயச்ச | வேத விதிகளும் |
| த்வதீய கம்பீர மநோநுஸாரிண: பவந்தி | உன்னுடைய பக்தர்களுடைய கம்பீரமான திருவுள்ளத்தைப் பின் செல்லுகின்றவைகளாக இருக்கின்றன. |

[இதற்கு வேறு வகையான அந்வயமும் பொருளும் மேலே காண்க.]

* * *—கீழ்ச் சொல்லப்பட்டுள்ள அபரிமித குணவிபூதிகளின் மஹிமையை அநுபவிக்க ஒருவருமில்லாவிட்டால் அவையெல்லாம் காட்டில் காய்ந்த நிலாப்போலே வீணாகி விடுமே; அப்படி யாகாமல் அவற்றை அநுபவிப்பார் பலருண்டு என்னவேண்டி இந்த ச்லோகமருளிச் செய்கிறார். அவனுடைய குணங்களும் விபூதிகளும் அவனுக்கு லீலையாக உபயோகப்படுவது தவிர, ஆச்ரிதர்களின் ஆநந்தத்திற்காகவே முக்கியமாக உபயோகப்படுகின்றன என்கிறார்.

ஜகதுத்பவஸ்திதிப்ரணச ஸம்ஸார விமோசநாதய: (தவ) லீலா: த்வதீய கம்பீரமநோநுஸாரிண: [தவ) வைதிகா: விதயச்ச த்வதாச்ரிதாநாம் பவந்தி'' என்று அந்வயிப்பது. உலகங்களைப் படைப்பது காப்பது அழிப்பது மோக்ஷமளிப்பது முதலிய உன்னுடைய லீலைகளும், பரமைகாந்திகளான பாகவதர்களுடைய திருவுள்ளத்தைப் பின்செல்லுகின்ற சாஸ்த்ர விதிகளும் எல்லாம் உன்னுடைய ஆச்ரிதர்களுக்காக ஆகின்றன.

இப்படி அருளிச் செய்வதன் கருத்து யாதெனில்: கேண்மின்; எம்பெருமான் உலகங்களை ஆக்குவது நோக்குவது அழிப்பது, மறுபடியும் ஆக்குவது நோக்குவது அழிப்பது இப்படியாக அடிக்கடி ஸ்ருஷ்டி முதலியவற்றைச் செய்வது தன்னுடைய ப்ரயோஜநத்துக்காகவன்று; அவன் அவாப்த ஸமஸ்தகாமனாகையாலே அவன் தனக்காகச் செய்துகொள்ள வேண்டியது ஒன்றுமில்லை. "நின்று நின்று பல்நாளுய்க்கு மிவ்வுடல் நீங்கிப்போய்ச், சென்று சென்றாகிலுங்கண்டு சன்மங்கழிப்பானெண்ணி, ஒன்றியொன்றி யுலகம்படைத்தான்'' என்று ஆழ்வாரருளிச் செய்தபடியே, முமுக்ஷுவான சேதநன் ஒருவனாவது அகப்படுவனோ? என்கிற ஆசையினால் தான் அடிக்கடி ஸ்ருஷ்டி முதலியவற்றைச் செய்தருள்வதும் விதிநிஷேத ரூபங்களான சாஸ்த்ரங்களைக் காட்டியருள்வதும். ஒரு ஸ்ருஷ்டியில் திருந்தாவிட்டாலும் மற்றொரு ஸ்ருஷ்டியிலாகிலும் திருந்தக்கூடுமே என்றும், பல சாஸ்த்ரங்களை வெளியிட்டு வைத்தால் ஏதோ ஒரு சாஸ்த்ரத்தாலாவது ஒருவனாவது திருந்தக் கூடுமே என்றும் கருதி அடுத்தடுத்து ஸ்ருஷ்ட்யாதிகளைச் செய்கிறாய், சாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பிக்கிறாய என்கிறார்.

இந்த ச்லோகத்திற்கு மற்றொரு படியாகவும் தாத்பர்யம் கூறலாம்;—ஜகதுத்பவஸ்திதிப்ரணச ஸம்ஸார விமோசநாதய: த்வதாச்ரிதாநாம் லீலா பவந்தி, வைதிகா: விதயச்ச த்வதீய கம்பீர மநோநுஸாரிண: பவந்தி என்று அந்வயிப்பது. லோகஸ்ருஷ்டி முதலியவைகள் உன்னுடைய அடியவர்களான பிரமன் முதலியோர்க்கு விளையாட்டாக ஆகின்றன; (அதாவது) உன்னுடைய கிருபையினால் ப்ரஹ்மாதிகள் ஸ்ருஷ்டி முதலியவற்றை ஆயாஸமில்லாமல் அவலீலையாகச் செய்துமுடிக்க வல்லவராகிறார்கள். அப்படியே, சாஸ்த்ர விதிகளும் உன்னை யடிபணிந்தவர்களுடைய ஆழ்ந்த திருவுள்ளத்தை அநுஸரித்திருக்கின்றன. (அதாவது) தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாச்ச என்று சிஷ்டாசாரத்தை முதன்மையான பிரமாணமாகச் சொல்லி அதற்குப் பிந்தின பிரமாணமாக வேதங்களைச் சொல்லவேண்டும்படி யிராநின்றன.

உன்னை ஆச்ரயித்தவர்களுடைய பெருமையே இப்படி யிருந்தால் உன்னுடைய பெருமையின் அளவு எண்ணவும் முடியுமோ? என்று காட்டினபடி.

பிரமனுக்குப் படைப்புத் தொழிலும் இந்திரனுக்குக் காத்தல் தொழிலும் சிவனுக்கு அழித்தல் தொழிலும் இருந்தாலும், ஸம்ஸார விமோசநம் [ஸம்ஸாரத்தில் நின்றும் விடுவித்து முக்தியளித்தல்] என்கிற தொழில் ஸ்ரீமந்நாராயணனுக்கே அஸாதாரண மன்றோ; இங்கே அதையும் சேர்த்து "த்வதாச்ரிதாநாம் லீலா: பவந்தி'' என்று சொல்வது பொருந்துமோ? என்று சங்கிக்கக் கூடும். இவர்களுக்கு ஸாக்ஷாத்தாக மோக்ஷமளிக்க வல்லமையில்லையாயினும், உபதேசாதிகளாலே விஷ்ணு பக்தியை உண்டுபண்ணி அவ்வழியாலே ஸம்ஸார விமோசநம் செய்விக்கக் கூடுமாகையாலே இங்கு அதனையும் சேர்த்துச் சொன்னது பொருந்தும்.

* த்ரிபி: ப்ரஜாபதேர்ப் பக்த: ஸப்தபிச் சங்கரஸ்ய து—விம்சத்யாக்நீந்த்ரஸூர்யாதே: விஷ்ணு பக்த: ப்ரஜாயதே [மூன்று பிறவிகள் பிரமனிடத்தில் பக்தி செய்பவனும், ஏழு பிறவிகள் சிவனிடத்தில் பக்தி செய்பவனும், இருபது பிறவிகள் அக்கி இந்திரன் ஸூர்யன் முதலானவர்களிடத்தில் பக்தி செய்பவனும் அந்த தேவதைகளின் அநுக்ரஹத்தினால் விஷ்ணு பக்தனாக ஆகிறான்] என்று சொல்லப்பட்டுள்ளது காண்க.

[த்வதீயகம்பீரமநோநுஸாரிண:] அநந்ய ப்ரயோஜநராய் உன்னையே ஆச்ரயித்தவர்களின் கம்பீரமான திருவுள்ளத்தைப் பின்செல்லுகின்றன; (அதாவது) வேதங்களில் ப்ரஹ்மவாதிநோ வதந்தி" என்று அடிக்கடி வருகிறபடியாலும், "யத்வை கிஞ்ச மநுரவதத் தத்பேஷஜம்" [மநுமஹர்ஷி சொன்னதெல்லாம் மருந்து போன்றது] என்றும்; "ஸஹோவாசவ்யாஸ: பாராசர்ய:" [பராசருடைய புதல்வரான வ்யாஸர் சொன்னார்] என்றும் இத்யாதி வசனங்களாலும் ப்ரஹ்மவித்துக்களின் அபிப்ராயத்தைத் தழுவுகின்ற வேதங்கள்; தவிரவும், தைத்திரீய உபநிஷத்தில், "அத யதி தே கர்மவிசிகித்ஸாவா வ்ருத்தவிசிகித்ஸாவாஸ்யாத்" என்று தொடங்கி "யதா தே தத்ர வர்த்தேரந் ததா தத்ர வர்த்தேதா:...யதா தே தேஷு வர்த்தேரந் ததா தேஷு வர்த்தேதா:" [உனக்கு ஸந்தேஹமுண்டாகுமிடங்களில் ப்ரஹ்மஜ்ஞானிகளுடைய நடவடிக்கையைப் பின்சென்று நடந்துகொள்ளுதல் வேண்டும்] என்று சொல்லப்பட்டுள்ளது. ... (௨௦)

**நமோநமோ வாங்மநஸாதிபூமயே நமோநமோ வாங்மநஸைகபூமயே,**
**நமோநமோநந்த மஹாவிபூதயே நமோநமோநந்த தயைகஸிந்தவே.** (௨௧)

| | | | |
|---|---|---|---|
| வாங்மநஸ அதி பூமயே | (ஸ்வதந்த்ரர்களுடைய) வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாதவனான உன் பொருட்டு | நம: நம:—; | |
| நம: நம: | நமஸ்காரம் நமஸ்காரம்; | அநந்த மஹா விபூதயே நமோ நம: | எல்லையில்லாத பெரிய ஐச்வரியங்களையுடைய உனக்கு நமஸ்காரம்; |
| வாங்மநஸ ஏக பூமயே | (அந்தரங்கர்களுடைய) வாக்குக்கும் மநஸ்ஸுக்குமே விஷயமாயிருக்கிற உன் பொருட்டு | அநந்த தயா ஏக ஸிந்தவே நமோ நம: | எல்லையில்லாத கருணைக்கே கடலாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம். |

* * *—எம்பெருமானுடைய பெருமையைப் பரக்கப் பேசினபின் அந்தப் பெருமைக்குத் தோற்றுத் தொழுகின்றாரிதில், வாங்மநஸாதிபூமயே (துப்யம்) நமோ நம:—ஒருவருடைய வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எம்பெருமான் எட்டாதவன் என்று பொருளல்ல; அப்போது அடுத்த விசேஷணம் பொருந்தாது; வேத வேதாந்த வேதாங்கங்களும் கட்டுக்கதைகளாய் விடும். ஆகையாலே, 'ஸ்வப்ரயத்நத்தால் அறிந்துகொள்ளப் பார்க்குமவர்களுடைய வாக்குக்கும் நெஞ்சுக்கும் எட்டாதவன்' என்றே பொருள் கொள்ளவேண்டும்.

வாங்மநஸைகபூமயே (துப்யம்) நமோ நம:—கீழ்ச்சொன்ன விசேஷணத்திற்குத் தப்பான பொருள் கொள்ளக்கூடு மென்றெண்ணி இவ்விசேஷணமருளிச் செய்தாரெனக. தன்னுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்திற்கு யார் பாத்திரமாகிறார்களோ, அவர்களுடைய வாக்குக்கும் மநஸ்ஸுக்குமே விஷயமாயிருப்பவன் என்றபடி.

கீழ்ச்சொன்ன இரண்டு விசேஷணங்களுக்கும் பொருத்தமாக மேலே இரண்டு விசேஷணங்களருளிச் செய்கிறார்; அநந்த மஹாவிபூதயே (துப்யம்) நமோ நம:—வேத வேதாந்தங்களாலும் எல்லைகாணவொண்ணாதபடி அளவற்றிருக்கிற ஐச்வரியத்தை யுடையவனாகையாலே, ஸ்வப்ரயத்நத்தால் காணவிரும்புமவர்களுடைய வாக்குக்கும் நெஞ்சுக்கும் எட்டாதவனாயிருக்கிறாய் என்று காட்டுகிறபடி.

அநந்த தயைகஸிந்தவே (துப்யம்) நமோநம:—நீ அநந்த மஹாவிபூதி யுக்தனாயிருக்கச் செய்தேயும், அருள் என்கிற ஒரு சிறந்த மஹா குணத்தை உடையையாயிருக்கிறபடியால் அந்தத் திருவருளுக்கு விஷயமாகிறவர்களுடைய வாக்கையும் மநஸ்ஸையும் ஒருபோதும் விட்டுப் பிரியாதிருக்கிறாய் என்று காட்டுகிறபடி. இவ்விடத்தில் 'தயா' என்கிற ஒரு குணத்தைக் கூறியது—வாத்ஸல்யம் ஸௌசீல்யம் ஸௌலப்யம் முதலான மற்றும் பல திருக்குணங்களுக்கும் உபலக்ஷணமெனக. ... ... ... ... (௨௧)

**ந தர்மநிஷ்டோஸ்மி நசாத்மவேதீ நபக்திமாந் த்வச்சரணாரவிந்தே;**
**அகிஞ்சநோநந்யகதிச் சரண்ய ! த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே. (உஉ)**

| | | | |
|---|---|---|---|
| சரண்ய ! | ஸர்வரக்ஷகனே !, | ந பக்திமாந் அஸ்மி | பக்தியையும் உடையவனல்லேன் ; |
| தர்மநிஷ்டஃ ந அஸ்மி | (அடியேன்) கர்மயோகத்தில் நிலையுடையேனல்லேன் ; | அகிஞ்சநஃ | ஒரு ஸாதனமுமில்லாதவனும் |
| ஆத்மவேதீ ச ந அஸ்மி | ஆத்மஜ்ஞாநமும் உடையவனல்லேன் ; | அநந்ய கதிஃ | வேறு புகலற்றவனுமான அடியேன் |
| த்வத் சரண அரவிந்தே | உனது திருவடித் தாமரைகளில் | த்வத் பாதமூலம் சரணம் ப்ரபத்யே | உனது திருவடிவாரத்தை சரணமாக அடைகின்றேன். |

* * *—எம்பெருமான் திருவடிகளில் சரணாகதி பண்ணுகிறார் இந்த ச்லோகத்தால். கருமம், ஞானம், பக்தி, ப்ரபத்தி என்று நான்கு வகையான உபாயங்கள் சாஸ்த்ரங்களில் காட்டப்பட்டுள்ளன ; அவற்றுள் கர்மஜ்ஞாநபக்திகளில் தமக்கு அந்வயமில்லாமையை முன்னிட்டுக்கொண்டு ப்ரபத்தி பண்ணுகிறார்.

எம்பெருமானே! கர்மயோகத்தை அநுஷ்டித்து அவ்வழியாலே உன்னைப் பெறுகைக்கு எனக்கு யோக்யதையில்லை ; அதில்லாமற்போகவே பரிசுத்த ஆத்மாவை அறியும் யோக்யதையும் எனக்கு இல்லையாயிற்று. இவ்விரண்டுமில்லாமற்போகவே உன்னுடைய திருவடித் தாமரைகளில் பக்தி செய்யும் யோக்யதையும் இல்லாதொழிந்தது. ஆகவிப்படி நான் வேறு உபாயமற்றவனாயும் வேறு புகலற்றவனாயுமிருக்கையாலே ஸர்வலோக சரண்யனான உன்னுடைய பாத மூலத்தையே ஒரே சரணமாகப் பற்றுகின்றேனென்கிறார்.

"நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" "குளித்து மூன்றனலையோம்புங் குறிகொளந்தணமை தன்னை, ஒளித்திட்டேன் என்கணில்லை நின்கணும் பத்தனல்லேன்" "புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" இத்யாதிகளான அருளிச்செயல்களைத் திருவுள்ளத்திற் கொண்டு இந்த ச்லோகமருளிச் செய்யப்பட்டதென்றுணர்க.

பகவத் ஸந்நிதிகளில் எம்பெருமானை ஸேவிக்கும் போதுகளில் இந்த ச்லோகத்தை அநுஸந்தித்துக்கொண்டே தண்டன் ஸமர்ப்பித்தல் நம்மவர்களுடைய ஸம்ப்ரதாயமென்றறிக.

**ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே ஸஹஸ்ரசோ யந் ந மயா வ்யதாயி,**
**ஸோஹம் விபாகாவஸரே முகுந்த க்ரந்தாமி ஸம்ப்ரத்யகதிஸ் தவாக்ரே. (உந)**

| | | | |
|---|---|---|---|
| முகுந்த ! | பகவானே!, | ஸோஹம் | அப்படிப்பட்ட கடுவினைகளைச் செய்தவனான அடியேன் |
| யத் | யாதொரு | | |
| நிந்திதம் கர்ம | (சாஸ்த்ரங்களாலும் சிஷ்டர்களாலும்) நிந்திக்கப்பட்ட பாபக்ருத்யமானது | விபாக அவஸரே ஸம்ப்ரதி | அக் கடுவினைகள் பலன் கொடுக்கும் தருணமாகிய இப்போது. |
| மயா | அடியேனால் | | |
| ஸஹஸ்ரசஃ | பல்லாயிரம் தடவை | அகதிஃ | வேறு கதியற்றவனாய் |
| ந வ்யதாயி | செய்யப்படவில்லையோ | | |
| தத் | அப்படிப்பட்ட தீவினை | தவ அக்ரே | உனது முன்னிலையில் |
| லோகே நாஸ்தி | உலகத்திலேயே இல்லை ; | க்ரந்தாமி | கதறுகின்றேன். |

* * *—கீழ் ச்லோகத்தில் "அகிஞ்சந:" என்ற ஆளவந்தாரை நோக்கி எம்பெருமான் "உம்மிடத்தில் ஒன்றுமில்லையென்கிறீரே ; இது உண்மையாயிருக்குமோ? கரண களேபரங்களையுடையவன் சற்றுப்போதாகிலும் வெறுமனிருக்க முடியாதன்றோ ; ஏதோ காரியங்களைச் செய்தேயிருக்கவேணுமே ; அப்படி யிருக்கும்போது "அகிஞ்சந:" என்று நீர் எப்படி சொல்லுவீர்?" என்று கேட்க ; பிரானே! உன்னைப் பெறுதற்கு உறுப்பானவை ஒன்றுமில்லையென்றேனே யொழிய, வேறு எவ்வகையான க்ருத்யமும் என் பக்கல் இல்லையென்று சொன்னேனல்லேன் ; ப்ரதிபந்தக ஸாமக்ரிகள் என்னிடத்தில் அளவற்றவை யுண்டென்கிறார் முன்னடிகளால்.

உலகத்தில் ஒருவன் நல்ல காரியங்களைச் செய்யாமலிருக்கலாம் ; அப்படியே கெட்ட காரியங்களையும் செய்யாமலிருக்கலாம் ; அப்படிப்பட்டவனை நோக்குமிடத்து, 'இவனிடத்தில்

நன்மை இல்லாதொழிந்தால் ஒழிகிறது; தீமை ஒன்றுமில்லாமலிருக்கிறதன்றோ’ என்று அந்தத் தீங்கில்லாமையையே ஒரு பெரிய நன்மையாகக்கொண்டு பெரியோர் இரங்குவர்கள்; அப்படி நானும் ஒருவித நன்மையும் செய்யாதாப்போலே தீமையும் செய்யாதிருந்தேனாகில் பெரிய குணசாலிகளில் முதல்வனாக நான் கணக்கிடப்படலாம்; அந்தோ! அதற்கும் ப்ரஸக்தியில்லாதபடி பாவங்களை அளவறச் செய்துகிடக்கிறேனே யென்கிறார்.

யத் நிந்திதம் கர்ம மயா ஸஹஸ்ரச: நவ்யதாயி தத் லோகே நாஸ்தி—நான் செய்யாத இழிதொழில் உலகத்திலேயே இல்லையென்கிறார். “எல்லா இழிதொழில்களையும் நான் செய்திருக்கிறேன்” என்று சொல்லலாமாயிருக்க, அப்படி சொல்லாமல் இப்படி சொல்லுவதன் கருத்து—தாம் ஒப்பற்ற பாபாத்மா என வெளியிடுதலேயாம்.

மூலத்தில் லோகே என்ற பதத்திற்கு—உலகத்திலே என்று ஸாமாந்யமாகப் பொருள் தோன்றினாலும், ‘சாஸ்த்ரத்திலே’ என்று பொருள் கொள்வது சிறக்கும். பெரியவாச்சான் பிள்ளையின் திருவுள்ளமிதுவேயாம். “ஆயிரம் மடங்கு என்னால் பண்ணப்படாதது யாதொரு நிந்தித கர்மமுண்டு—அதிபாதக மஹாபாதகாதிகள் அது சாஸ்த்ரத்திலுமில்லை;... அநுஷ்டாதாக்கள் பக்கலில்லாத நிஷித்தங்களும் சாஸ்த்ரத்தில் காணலாமிறே” என்பது பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி. இப்பொருளை தேசிகனும் ஆதரித்து உரைத்தனர், லோக சப்தத்திற்கு சாஸ்த்ரமென்ற பொருள் வ்யுத்பத்தி ஸித்தம். ஹேமாத்ரி முதலிய நூல்களின் அட்டவணையை நாம் நோக்குவோமானால் விசித்ர விசித்ரமான பாவங்கள் ஆங்குக் குறிப்பிடப்பட்டு அவற்றுக்கு ப்ராயச்சித்தங்கள் விதிக்கப்பட்டிருக்கும்; அப்படிப்பட்ட பாவங்களையெல்லாம் நாம் உலகத்தாரிடம் காணமுடியாது. சாஸ்த்ரங்களில் மாத்திரமே காணலாம்; நான் செய்த பாவங்கள்யாவும் அந்த சாஸ்த்ரங்களில்தான் காணமுடியும் என்கிறாரிவர். இது ஒரு சமத்காரச் சொல்லாகும்.

பாவங்களை அதிகமாகச் செய்துவிட்டாலும், பிறகாவது அஞ்சுதல் அநுதாபப்படுதல் வெட்கப்படுதல் ப்ராயச்சித்தஞ் செய்துகொள்ளுதல் முதலியவற்றால் அப்பாவங்களைப் போக்கிக்கொள்ள வழியுண்டு; பாவங்களைப் போக்கிக்கொள்வதாவது—அப்பாவங்கள் தீய பலன்களைக் கொடாதபடி தடைசெய்து கொள்ளுதல். அப்படி தடை செய்து கொள்வதற்கான வழிகளில் இழியாவிடில் அவை பலன் கொடுத்தே தீரும்; செய்த பாவங்கள் கடுமையாயிருந்தால் இப்பிறவியிலேயே விரைவில்தானே அவற்றின் பலன்களை அநுபவிக்க நேரும். அப்படியே நான் செய்த பாவங்கள் மிகக் கடுமையாதலாலும் அவற்றுக்கு நான் ஒருவகையான ப்ராயச்சித்தமும் செய்துகொள்ளவில்லையாகையாலும் அவை இப்போதே பலன் கொடுக்கத் தொடங்கிவிட்டன; பலவகைத் துன்பங்களை அநுபவிக்க நேர்ந்துவிட்டது; தாங்கமுடியாமையால் கதறுகின்றேன் என்கிறார் பின்னடிகளில். “காரொளி வண்ணனே கண்ணனே! கதறுகின்றேன், ஆருளர்களைகணம்மா அரங்கமா நகருளானே!” என்ற திருமாலைப் பாசுரத்தைத் தழுவினர் போலும்.

[விபாகாவஸரே] விபாகமாவது பரிபக்குவமாகை; அதாவது பலன் கொடுக்கை. [தவ அக்ரே க்ரந்தாமி.] “கோவிந்தாவென்று த்ரௌபதி கதறினது இன்றைக்கும் என்னெஞ்சைப் புண்படுத்திக் கிடக்கின்றது” என்று பரிதாபந்தோற்ற அருளிச்செய்த தேவரீர் முன்னே இப்போது நான் கதறுகின்றேன் காணென்கிறார். இப்போது என்னுடைய கதறலுக்குப் பரிஹாரம் செய்யாவிடில், த்ரௌபதியின் கதறலைப் பற்றிப் பிற்பாடு பரிதாபந்தோற்ற நீ பேசினது வெளிவேஷமென்று நிச்சயித்துக் கொள்வேனென்பது உள்ளுறை ... ... ... (உங)

**நிமஜ்ஜதோ நந்தபவார்ணவாந்த: சிராய மே கூல மிவாஸி லப்த:**
**த்வயாபி லப்தம் பகவந்நிதாநீம் அநுத்தமம் பாத்ரமிதம் தயாயா:.** (உச)

| | | | |
|---|---|---|---|
| ஹே அநந்த! | எல்லையற்ற குண விபூதிகளையுடைய பெருமானே! | கூலம் இவ லப்த: அஸி | கரைபோலே நீ கிடைத்தாய்; |
| பவ அர்ணவ அந்த: | ஸம்ஸாரமாகிற கடலினுள்ளே | பகவந்! | பகவானே! |
| | | த்வயா அபி | உன்னாலும் |
| நிமஜ்ஜத: மே | மூழ்கிக்கொண்டே கிடக்கிற அடியேனுக்கு | தயாயா: அநுத்தமம் பாத்ரம் இதம் இதாநீம் லப்தம் | உனது அருளுக்குச் சிறந்த பாத்திரமாகிய இந்த வஸ்து [நான்] இன்றே அடையப்பட்டது. |
| சிராய | நெடுநாள் கழித்து | | |

* * *—"இன்று உன்னெதிரில் கதறுகின்றேன்" என்று கீழ் ச்லோகத்திற் கூறிய ஆளவந்தாரை நோக்கி எம்பெருமான் "நெடுநாளாகவே ஸம்ஸாரியாயிருக்கின்ற நீர் இன்று கதறுவதற்குக் காரணமேது?" என்ன; ஒருவன் கடலில் அழுந்தித் தடுமாறிக்கொண்டே செல்லுமளவில் தைவவசத்தாலே ஒருநாள் கரை காண்பதுபோல, ஸம்ஸாரக் கடலில் மூழ்கி நின்ற எனக்கும் நெடுநாள் கழித்து இன்று நீ அகப்பட்டாய்; உன்னுடைய கிருபைக்கும் பாத்திரமாக உனக்கு நான் அகப்பட்டேன்; ஆகையாலே ரக்ஷ்யனான எனக்கும் ரக்ஷகனான உனக்கும் லாபம் கிடைக்க நேர்ந்த இப்போது இழக்கலாமோ வென்று கதறுகின்றேன் என்கிறார் போலும்.

அநந்த பவார்ணவாந்த: என்றவிடத்து அநந்த என்று தனியே பிரித்து எம்பெருமானுடைய ஸம்போதநமாகக் கொள்க; அன்றி, ஒரே பதமாகக்கூட்டி பவார்ணவத்திற்கு விசேஷணமாக்கி உரைப்பதும் ஒக்கும். ஸம்போதநமாமிடத்தில், ஸ்வரூபத்தாலும் குணங்களாலும் விபூதிகளாலும் எல்லையற்றவனே! என்று பொருளாம். இரண்டாவது யோஜனையில், 'கரைகாண வொண்ணாத ஸம்ஸாரக்கடலினுள்ளே' என்று பொருளாம்.

1. "ஆவாரார் துணையென்று அலைநீர்க்கடலுள் அழுந்தும் நாவாய்போல் பிறவிக்கடலுள் நின்று நான் துளங்க" என்ற அருளிச் செயலைத் திருவுள்ளம்பற்றி முதலடி அருளிச் செய்தார்.

இப்படி ஸம்ஸாரக் கடலினுள்ளே அழுந்திக் கிடக்கின்ற எனக்கு நெடுநாளாகவே கரை கிடைக்காதொழிந்தது; இன்று நீ கரைபோலக் கைக்கு எட்டினாய் என்கிறார் இரண்டாமடியில்.

எனக்கு நீ அகப்பட்டா யென்கிறது மாத்திரமல்ல; உனக்கு நானகப்பட்டேனென்பதும் உன்னுடைய லாபம் ஒன்றுண்டு என்கிறார் பின்னடிகளால். உன்னை நான் தேடித் திரிவது போலவே நீயும் என்னைத் தேடித் திரிகிறாயன்றோ நெடுநாளாக. 2. "எதிர் சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய" என்றபடி எத்தனையோ ஜன்மமாக என்னைப் பிடிப்பதற்கு நீ படுகிற பாடு சொல்லிமுடியுமோ? அப்படிப்பட்ட உன்னுடைய க்ருஷியும் இன்று பலித்ததென்பதை நீ நோக்கவேணும். என்னை நீ அநுக்ரஹியாவிடில் உன்னுடைய அருள் வேறு எங்கே காரியம் செய்து ஸபலமாகப் போகிறது? என்கிறார். இத்தால்—என்னிடத்தில் யோக்யதைகளைக்கண்டு என்னை நீ கைக்கொள்ள விஷயமில்லாவிடினும், உன்னுடைய நிர்ஹேதுக க்ருபையினால் கைக்கொண்டே தீரவேண்டிய நிலைமையுண்டு என்று விஜ்ஞாபித்தபடி.

அநுத்தமம்—"ந வித்யதே உத்தமம் யஸ்மாத் தத்" என்று வ்யுத்பத்தி பண்ணிக் கொள்க; இதற்குமேல் சிறந்ததில்லை யென்னும்படி லோகோத்தமமானது என்றபடி ... (உச)

**அபூதபூர்வம் மம பாவி கிம்வா ஸர்வம் ஸஹே மே ஸஹஜம் ஹி து:க்கம்,**
**கிந்து த்வதக்ரே சரணாகதாநாம் பராபவோ நாத ந தேநுரூப:.** (உரு)

| | | | |
|---|---|---|---|
| ஹே நாத! | நாதனே! | ஸர்வம் ஸஹே | எல்லாத் துயரங்களையும் பொறுத்துக் கொண்டேயிருக்கிறேன். |
| மம | அடியேனுக்கு | கிந்து | ஆனால்; |
| அபூத பூர்வம் | இதற்கு முன்பு உண்டாகாத | த்வத் அக்ரே | உன் எதிரில் |
| கிம் வா து:க்கம் பாவி? | என்ன துக்கம் இப்போது புதிதாக உண்டாய்விடப் போகிறது; (ஒன்றுமில்லை.) | சரண ஆகதாநாம் | வந்து சரணம் புகுந்தவர்களுக்கு |
| து:க்கம் மே ஸஹஜம் ஹி | துக்கமென்பது என்னோடு கூடவே பிறந்ததன்றோ; | பராபவ: | ஒரு அவமானமுண்டாவது |
| | | தே ந அநுரூப: | உனக்குத் தகுதியல்ல. |

* * *—"க்ரந்தாமி ஸம்ப்ரத்யகதிஸ் தவாக்ரே" [உன்னெதிரில் இன்று கதறுகின்றேன்] என்ற ஆளவந்தாரை நோக்கி எம்பெருமான் 'சேஷபூதரான நீர் உம்முடைய பாதந்த்ர்ய ஸ்வரூபத்தை நன்கு அறிந்துவைத்தும் நம்மெதிரே இப்படி கதறலாமோ? உம்முடைய துக்கங்களை நானாக எப்போது பரிஹரிக்க விரும்புகிறேனோ அப்போதுதானே பரிஹரிக்க முடியும்.

1. திருவாய்மொழி 5—1—9. 2. திருவாய்மொழி 2—7—6.

அதுவரையில் இவ் விருள்தருமா ஞாலத்திற்கு இன்றியமையாத துக்கங்களை ஒருவாறு ஸஹித்திருப்பதன்றோ உமக்குப் பணி; என்னை நிர்ப்பந்திப்பது உம்முடைய பாரதந்திரிய ஸ்வரூபத்துக்குத் தகாதுகாணும்" என்றருளிச் செய்ய, "அந்தோ! பிரானே! என்னுடைய துக்கங்களைத் தீர்க்கவேணுமென்று நான் வேண்டுகிறேனல்லேன்; பின்னை என்ன வேண்டுகிறேனெனில்; என்னை நீ கைக்கொள்ளாதே கைவிடுமளவில் உலகமெங்கும் உன்னைப்பற்றி அபகீர்த்தியான வார்த்தை பரவப்போகிறது; 'எம்பெருமான் ஸர்வரக்ஷகன் என்று பேர் சுமந்து கொண்டு ஆளவந்தாரை ரக்ஷியாமல் கைவிட்டான்; அவர் விஷயாந்தரங்களின் கையில் அகப்பட்டுக்கொண்டு பரிபவப்படுகிறார், அதை ஸர்வ சக்தனென்று பேரிட்டுக்கொண்டிருக்கிற எம்பெருமான் விலக்காமல் பார்த்துக்கொண்டிருக்கிறான்; இப்படிப்பட்டவனையோ எல்லாரும் சரணாகதரக்ஷகனென்று புகழ்கிறார்கள்!' என்று பலரும் உனக்குப் பெரிதும் அபவாதமாக வம்பளப்பர்களாகில் இது உன் பெருமைக்குத் தகுதியன்றே; எனக்குச் சொந்தமாக நேர்கின்ற துக்கங்களை நான் பொறுத்துக் கொள்ளத் தடையில்லையாயினும், 'நம் தலைவனுக்கு இப்படிப்பட்ட அபவாதம் நேருகின்றதே' என்று உண்டாகிற துக்கத்தை மாத்திரம் நான் பொறுக்கவல்லேனல்லேன்" என்கிறார் போலும்.

மம அபூதபூர்வம் கிம்வா து:க்கம் பாவி?—இதுவரையில் நான் மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்தவனாதலால் கர்ப்பங்களிலும் நரகங்களிலும் மற்றும் பல பல அவஸ்தைகளிலும் நான் எவ்வளவோ துயரங்கள் அநுபவித்திருக்கின்றேன்; இதுவரை நான் அநுபவியாத துக்கம் இன்று புதிசாக யாதொன்றும் அநுபவிக்கக்கூடியதில்லை; எத்தனை விதங்களான துக்கங்கள் உண்டோ, அத்தனைவிதமும் கண்டுவிட்டேனாகையால் இனி நூதனமான விதம் ஒன்றுமில்லை. துக்கமென்பது என்னோடு கூடவே பிறந்ததாகையால் அதை நான் ஸஹியாமல் என்ன செய்யப்போகிறேன். தன் காய்களைப் பொறாத கொம்பு உலகிலுண்டோ? எனக்கு நேர்கின்ற துக்கங்களை நான் பொறுத்துக்கொண்டே வருகிறேன் என்கிறார் முன்னடிகளில்.

இப்படி கூறின ஆளவந்தாரை நோக்கி எம்பெருமான், "துக்கங்களை நீர் ஸஹித்துக் கொண்டிருப்பது உண்மையாகில் கதறுவானேன்?" என்று கேட்க; அதற்குப் பின்னடிகளால் உத்தரமருளிச் செய்கிறார். கீழ் 'ந தர்மநிஷ்டோஸ்மி" என்கிற ச்லோகத்தினால் நான் உன் பக்கல் சரணாகதி பண்ணிவிட்டேனாகையால், என்னை நீ உடனே கைக்கொண்டிருக்க வேண்டும்; அப்படி நீ கைக்கொள்ளாததனால் நான் பரிபவப்படுகிறேன்; உன்னிடத்தில் சரணாகதி செய்த நான் இப்படி பரிபவப்பட்டால் இது உனக்குப் பெரிய குறையன்றோ? அக்குறை நீங்குவதற்காகவே கதறுகின்றேனென்றாராயிற்று. 'என்னை நீ தவறாமல் இப்போதே ரக்ஷித்துத் தீரவேணும்' என்று பிரார்த்திக்கிற முறைமைகளில் இது ஒரு விசித்திரமான முறை என்க. ... ... ... ... ... ... (உரு)

நிராஸகஸ்யாபி ந தாவதுத்ஸஹே மஹேச ஹாதும் தவ பாதபங்கஜம்.
ருஷா நிரஸ்தோபி சிசு: ஸ்தநந்தய: ந ஜாது மாதுச் சரணௌ ஜிஹாஸதி. (உசு)

| | | | |
|---|---|---|---|
| மஹேச! | ஸர்வேச்வரனே! | சிசு: | குழந்தை |
| நிராஸகஸ்ய அபி | என்னை நீ துரத்தித் தள்ளினாலும் | ருஷா | கோபத்தினால் |
| தவ | உன்னுடைய | நிரஸ்த: அபி | தள்ளப்பட்டாலும் |
| பாதபங்கஜம் | திருவடித்தாமரையை | மாது: | தாயினுடைய |
| ஹாதும் | விடுவதற்கு | சரணௌ | கால்களை |
| ந உத்ஸஹே தாவத் | அடியேன் துணியமாட்டேன் காண்; | ஜாது | ஒருபோதும் |
| ஸ்தநந்தய: | முலைப்பால் குடிக்கும் பருவமுள்ள | ந ஜிஹாஸதி | விடுவதற்கு விரும்பமாட்டாதன்றோ. |

***—கீழ்ச்லோகத்தைக் கேட்ட எம்பெருமான், "எனக்கு அபவாதம் வந்தால் வரட்டும்; அதைப்பற்றி உமக்குக் கவலை வேண்டியதில்லை; நீர் எண்ணிறந்த பாவங்கள் செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்; அவற்றுக்குப் பிராயச்சித்தங்கள் செய்துகொண்டு உம்மைப் புனிதமாக்கிக் கொள்ளப்பாரும்; பிறகு நாமே உம்மைக் கைக்கொள்வோம்; இப்போது ஒன்றும் தொந்தரவு செய்யாமலிரும்" என்று அருளிச்செய்ய, அதுகேட்ட ஆளவந்தார்

'எம்பெருமான் இவ்விதமாக நம்மைக் கைவிடப் பார்க்கிறான்போலும்' என்றெண்ணி வருத்தமுற்று, "எம்பெருமானே! என்னை நீ கழுத்தைப் பிடித்துத்தள்ளினாலும் நான் உன் திருவடிகளை விட்டு அகல்வேனல்லேன்; முலையுண்கிற குழந்தையைத் தாயானவள் முன்கோபத்தினால் சீறித் தள்ளிவிட்டாலும் அக்குழந்தை பின்னையும் தாயின் காலையே கட்டிக்கொண்டு அழுமேயல்லது அகன்று போய்விடமாட்டாது. அது போலவே, என்னை நீ நெறிகாட்டி நீக்கப் பார்த்தாலும் நான் உன் திருவடிகளை விட்டு நீங்குவேனல்லேன்" என்று தம்முடைய திண்ணிய உறுதியை உரைத்தாராயிற்று. ஹாது மிச்சதி—ஜிஹாஸதி. "தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை...அரிசினத்தாலீன்ற தாய் அகற்றிடினும் மற்றவள்தனருள் நினைந்தே அழுங்குழவியதுவே போன்றிருந்தேனே" என்ற ஸ்ரீகுலசேகராழ்வார் பாசுரத்தைப் பெரும்பாலும் தழுவி இந்த ச்லோகமருளிச் செய்யப்பட்டது. (உகூ)

தவாம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே நிவேசிதாத்மா கதமந்யதிச்சதி
ஸ்திதே ரவிந்தே மகரந்தநிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே. (உஎ)

| | | | |
|---|---|---|---|
| அம்ருதஸ்யந்திநி | அம்ருதத்தைப் பெருக்குகின்ற [பி. மோக்ஷத்தை அளிக்கின்ற] | இச்சதி | விரும்பும்? |
| | | மகரந்த நிர்ப்பரே | தேன் நிறைந்த |
| | | அரவிந்தே | தாமரைப்பூவானது |
| தவ பாத பங்கஜே | உன்னுடைய திருவடித் தாமரையில் | ஸ்திதே ஸதி | இருக்கும்போது |
| | | மதுவ்ரத: | வண்டு |
| நிவேசித ஆத்மா | வைக்கப்பட்ட மனமானது | இக்ஷுரகம் | முள்ளிப்பூவை |
| அந்யத் | வேறொன்றை | ந வீக்ஷதே ஹி | கண்ணெடுத்தும் பார்க்கமாட்டாதன்றோ. |
| கதம் | எப்படி | | |

* * *:—வேறு புகலில்லாமையினாலே உன் திருவடியை விட்டு அகல முடியாதென்றார் கீழ்ச்லோகத்தில். வேறு புகல் உண்டு என்று வைத்துக்கொண்டாலும், உன் திருவடித் தாமரைகளின் போக்யதையை நோக்குமிடத்து வேறொன்றில் நெஞ்சு செல்லுமோ என்கிறாரிதில்.

அம்ருதத்தைப் பெருக்குகின்ற உன் திருவடித் தாமரையில் படிந்த நெஞ்சானது மற்றொரு வஸ்துவை எப்படி விரும்பும்? விரும்பமாட்டாது என்றபடி. பரம போக்யமான வஸ்து இருக்கும்போது சுவையற்றதொரு வஸ்துவைக் கண்ணெடுத்துப் பார்ப்பாருண்டோ? தேன் நிறைந்த தாமரைப்பூ இருக்க, அதைவிட்டு முள்ளிப்பூவைத் தேடியோடுமோ வண்டு.

அம்ருதஸ்யந்திநி என்கிற விசேஷணம் ச்லேஷமுடையது என்று தேசிகன் திருவுள்ளம்; அம்ருதமென்று மோக்ஷத்துக்கும் பேராகையாலே மோக்ஷத்தையளிக்கின்றது பகவத்பாதம் என்கை. தாமரையின் பக்ஷத்தில் மகரந்தரஸம் என்று பொருள். பெரியவாச்சான்பிள்ளை இங்ஙனே ச்லேஷமாகக்கொள்ளாமல் அம்ருதமென்பதற்குத் தேன் என்னும் பொருளையே திருவுள்ளம்பற்றினர்; "விஷ்ணோ: பதேபரமே மத்வ உத்ஸ:" [எம்பெருமானுடைய சிறந்த திருவடியில் தேன் வெள்ளமிடுகிறது] என்று வேதத்திலும் "உன் தேனேமலருந்திருப்பாதம்" என்று திருவாய்மொழியிலும் சொல்லுகிறபடியே மதுவென்கிற ஒருபொருளே இரண்டுக்கும் ஒத்திருக்கையாலே முக்கியமாக போக்யதையைச்சொல்லவேண்டிய இவ்விடத்திற்கு அப்பொருளே சிறந்திருக்கையாலே மோக்ஷமென்கிற பொருளில் நெஞ்சு செல்ல வேண்டாவென்று பெரியவாச்சான் பிள்ளை திருவுள்ளம்போலும். சப்த சக்தியினால் மோக்ஷ ப்ரதத்வமும் த்வநிக்கிறதென்று கொள்வதிலும் குறையில்லை.

நிவேசிதாத்மா என்றதில் கர்மதாரயஸமாஸம் பண்ணிப் பொருள் கொள்ளப்பட்டது. "தேவருடைய நிர்ஹேதுகமான ப்ரஸாதத்தாலே நிவேசிக்கப்பட்ட மநஸ்ஸானது" என்றருளிச் செய்தார் பெரியவாச்சான்பிள்ளையும். ஸ்ரீ தேசிகனும் தம்முடைய பாஷ்யத்தில் இப்பொருளையே ஆதரித்து உரைத்தருளினர்.

(நிவேசிதாத்மா) ரக்ஷணோந்முகேந 'ததாமி புத்தியோகம் தம்' இத்யாதி வாதிநா த்வயைவ த்ருடாவஸ்தாபிதாபுத்திரித்யர்த்த: தஸ்மாதித: பரம் புருஷார்த்தாந்தரே மநோ நிவேசயிதும் ந சக்யமிதிபாவ: என்பது ஸ்தோத்ர பாஷ்யத்தில் தேசிகன் ஸ்ரீஸூக்தி. சிலர், "நிவேசித: ஆத்மா யஸ்ய ஸ:" என்று பஹுவ்ரீஹிஸமாஸம் பண்ணி 'ஸ்தாபிக்கப்பட்ட மனமுடையவன்' என்று பொருளுரைப்பதில் ஆக்ரஹங்கொள்வர். அது தேசிக ஸ்ரீஸூக்திவிருத்தமும் அஸ்வரஸமுமாம். (உஎ)

**த்வதங்க்ரிமுத்திச்ய கதாபி கேநசித் யதா ததா வாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி:.**
**ததைவ முஷ்ணாத்யசுபாந்யசேஷத: சுபாநி புஷ்ணாதி நஜாது ஹீயதே** (உஅ)

| | | | |
|---|---|---|---|
| த்வத் அங்க்ரிம் உத்திச்ய | உனது திருவடியை நோக்கி | ததா ஏவ | அப்பொழுதே |
| கதாபி | எப்பொழுதாவது | அசுபாநி | பாவங்களை |
| கேநசித் | எவனாலாவது | அசேஷத: | மிகுதியில்லாமல் |
| யதா ததா வா அபி | எவ்விதமாகவாவது | முஷ்ணாதி | போக்கிவிடுகின்றது; |
| ஸக்ருத் | ஒருதடவை | சுபாநி | நன்மைகளை |
| க்ருத: | பண்ணப்பட்ட | புஷ்ணாதி | வளரச் செய்கின்றது; |
| அஞ்ஜலி: | கைகூப்புதலானது | ஜாது ந ஹீயதே | ஒருபோதும் குறைகிறதில்லை. |

* * *—'பெரிய பெரிய உபாயங்களாலே பெறவேண்டிய பேற்றை அகிஞ்சநான நீர் எப்படி பெறுவீர்?' என்று எம்பெருமான் திருவுள்ளமாக, அஞ்ஜலியின் வைபவம் தெரியாதோ? சொல்லுகிறேன் கேளாய் என்கிறார். உன்னுடைய திருவடியை நோக்கி ஒருவன் எப்பொழுதாவது எப்படியாவது ஒரு அஞ்ஜலி செய்தால் [கை கூப்பினால்], அந்த அஞ்ஜலி காலமல்லாத காலத்திலே செய்யப்பட்டிருந்தாலும் வெகு நீசனான புருஷனாலே செய்யப்பட்டிருந்தாலும் விதமல்லாத விதமாகச் செய்யப்பட்டிருந்தாலும் ஒரு தடவை செய்யப்பட்டிருந்தாலும் அது வெகு சீக்கிரமாகவே அவனது தீமைகளெல்லாவற்றையும் போக்கி எல்லா நன்மைகளையும் அவனுக்கு ஸாதித்துக் கொடுக்கின்றது; ஒரு பொழுதிலும் அந்த அஞ்ஜலிக்கு ஹாநியேயில்லை என்கிறார்.

இதன் கீழுள்ள இரண்டு ச்லோகங்களையுங் கூட்டி நோக்கினால், எம்பெருமானே! உன்னைத் தவிர்த்து வேறு புகலில்லாமையாலும் உன்னை விடமுடியவில்லை; போக்யதையின் மிகுதியாலும் உன்னை விடமுடியவில்லை; உன்னைப் பெறுதற்குரிய உபாயத்தின் ஸௌகரியத்தாலும் உன்னை விட முடியவில்லை என்கிறாரென்பது விளங்கும்.

கதாபி கேநசித் யதாததாவாபி ஸக்ருத் என்ற நான்கினாலும்—திதி வாரம் நக்ஷத்ரம் முதலிய காலங்களைத் தேடவேண்டா, நினைத்தபோது கையெடுத்துக் கும்பிடலாமென்பதும், நல்ல வம்சத்தில் பிறந்திருக்க வேணுமென்கிற அதிகாரி நியமங்களில்லை, விருப்பமுடையாரெல்லாரும் கைகூப்பலாமென்பதும், வாயு தோஷத்தினால் நேராகக் கூப்பமுடியாமற் போனாலும் போகலாம்; கோணலாகக் கூப்பினாலும், கூப்பவேணுமென்று நெஞ்சினால் நினைந்தாலும் வாயினால் மொழிந்தாலும் போதுமென்பதும், ஸந்த்யாவந்தநம் அக்நிஹோத்ரம் முதலிய நித்ய நைமித்திக கருமங்கள்போல் வாழ்நாளுள்ளவரை செய்யவேணுமென்கிறதில்லையென்பதும் விளக்கப்பட்டன.

அஞ்ஜலி என்பதற்கு "அம் ஜலயதி" என்று வ்யுத்பத்தி கூறுவதுண்டு; அம்—எம்பெருமானை; ஜலயதி—நீர்ப்பண்டமாக உருக்குகின்றது என்றபடி. கையெடுத்துக் கும்பிட்டுவிட்டானே, இவனுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம்!' என்று எம்பெருமானைக் கரையப் பண்ணுமாம். விசேஷமான பொருட்செலவு, தேஹச்ரமம் முதலிய ஆயாஸங்களால் ஸாதிக்க வேண்டிய அச்வமேதம் முதலியவை போலன்றி நினைத்த மாத்திரத்தில் எளிதாகச் செய்யக்கூடிய காரியம் என்பதைக் காட்டுகிறது அஞ்சலி: என்ற பதம். இரண்டு கைகளும் ஒன்று சேர்ந்த சேர்த்திக்கு அஞ்சலியென்று பெயர்.

ஆக முன்னிரண்டடிகளால் அஞ்சலியின் ஸௌகர்யாதிகளை அருளிச் செய்து, இனி பின்னடிகளால் அதன் பலன்களைப் பரக்கப் பேசுகிறார். வேறு காலத்திலே வேறு சரீரத்திலே பலன் தருகிற கருமங்களைப்போலல்ல. அநிஷ்டங்களைத் தவிர்ப்பதோடு மாத்திரம் நிற்பதல்ல. சுபங்களையும் போஷிக்கும்.

[ந ஜாது ஹீயதே] இதற்குப் பலபடியாகக் கொள்ளலாம். ஒருவன் அஞ்சலிசெய்தால் எம்பெருமானுடைய அநுக்ரஹம் அவனொருவனளவிலே நின்று விடாமல் அவனைச்சேர்ந்தவர்களுக்கும் நன்மைபயக்கப் பாரிக்கும் என்கை. யஜ்ஞம் செய்பவன் பொய் சொன்னால் அந்த யஜ்ஞம் நஷ்டமாய்விடும்என்பது போல, வேறொரு கெட்ட காரியத்தினால் அந்த அஞ்ஜலியின் ப்ரபாவம் குன்றாது என்றுமாம். பலனைக் கொடுத்துவிட்டுத் தான் ஓய்ந்துபோகிற

உபாயாந்தரங்களைப் போலல்ல: இது எப்போதும் அநுவர்த்தித்துக்கொண்டேயிருக்கும்; (அதாவது) பலன் கைபுகுந்த பின்னும் அஞ்ஜலியே போதுபோக்காயிருக்கும் என்னவுமாம்.

இந்த ச்லோகத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளை அவதாரிகையிடுமிடத்து, "மநோவாக்காயங்கள் மூன்றினாலும் பண்ணின ப்ரபத்தியெல்லாம் வேணுமோ?......காயிகமான அஞ்ஜலி யொன்றுமே அமையாதோ வென்கிறார்" என்றருளிச் செய்திருப்பதைக் கடாக்ஷித்த தேசிகன் இதனை அதிவாதபக்ஷமென்று திருவுள்ளம் பற்றி மறுப்பாகச் சில ஸ்ரீஸூக்திகளை அருளிச் செய்தார் போலும் தம்முடைய பாஷ்யத்திலே. ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் உபோத்காத ப்ரகரணத்தில்',ஏஷ மே ஸர்வதர்மாணாம்" என்ற ச்லோக பாஷ்யத்தில் பட்டர் விரிவாக அருளிச் செய்துள்ளவற்றை நோக்கித் தெளிக. ... ... ... ... (உஅ)

**உதீர்ண ஸம்ஸார தவாசுசுக்ஷணிம் க்ஷணேந நிர்வாப்ய பராஞ்ச நிர்வ்ருதிம்**
**ப்ரயச்சதி த்வச்சரணாருணாம்புஜ த்வயாநுராகாம்ருத ஸிந்துசீகர:. (உகூ)**

| | | | |
|---|---|---|---|
| த்வத் சரண அருண அம்புஜ த்வய அநுராக அம்ருத ஸிந்து சீகர: | உனது செந்தாமரைத் திருவடியிணையைப் பற்றின அன்பாகிற அமுதக் கடலின் ஒரு திவலையானது. | க்ஷணேந | ஒரு நொடிப்பொழுதில் |
| | | நிர்வாப்ய | தணித்துவிட்டு |
| | | பராம் | மேலான |
| உதீர்ண ஸம்ஸார தவ ஆசுசுக்ஷணிம் | மேன்மேலும் ஜ்வலிக்கின்ற ஸம்ஸாரமாகிற காட்டுத்தீயை | நிர்வ்ருதிம் ச | இன்பத்தையும் |
| | | ப்ரயச்சதி | தருகின்றது. |

* * *—ப்ரபத்திதான் வேணுமோ? அஞ்சலி மாத்திரமே போராதோ என்றார் கீழ் ச்லோகத்தில். அந்த அஞ்ஜலிதானும் வேணுமோ! நெஞ்சிலே சிறிது ஆசைகிடந்தால் போராதோ என்கிறாரிதில். எம்பெருமானே உன்னுடைய பாதாரவிந்தத்தில் உண்டாகிற ப்ரீதி விசேஷமானது பெரியதொரு அமுதக்கடல்போன்றது. அக்கடலின் ஒரு திவலை மாத்திரமே ஸம்ஸாரமாகிற காட்டுத்தீயை ஒருநொடிப் பொழுதில் அணைத்து விட்டு முக்தர்களின் அநுபவத்தோடொத்த பரமாநந்தத்தையும் அளிக்கின்றதுகாண் என்கிறார்.

இதில், ஸம்ஸாரத்தை கிளர்ந்தெரிகிற காட்டுத்தீயாகச் சொல்லுகிறார் கொடுமையின் கனத்தைப்பற்ற. தீயை அணைக்கக்கூடியது தண்ணீராதலால், பகவத்பக்தியை அம்ருத ஸமுத்ரமாகவும், அந்த பக்தியின் லவலேசத்தைத் திவலையாகவும் ரூபித்து அருளிச் செய்தார். ஆசுசுக்ஷணி என்று அக்நிக்குப்பெயர். அநந்ய ப்ரயோஜனமான பக்திலேச முண்டானாலும் அது பரமபக்தி தசையை அடைந்து ஸம்ஸார விமோசநத்தைப் பிறப்பித்து நித்யகைங்கரியச் செல்வத்தையும் அளித்திடுமென்றாராயிற்று. ... ... ... (உகூ)

**விலாஸ விக்ராந்த பராவராலயம் நமஸ்யதார்த்தி க்ஷபணே க்ருதக்ஷணம்.**
**தநம் மதீயம் தவ பாதபங்கஜம் கதா நு ஸாக்ஷாத் கரவாணி சக்ஷுஷா. (௩௰)**

| | | | |
|---|---|---|---|
| விலாஸ விக்ராந்த பர அவர ஆலயம் | விளையாட்டாகவே அளக்கப்பட்ட மேலுலகங்களையும் கீழுலகங்களையு முடைய தாயும் | மதீயம் தநம் | எனது செல்வமாயுமுள்ள |
| | | தவ பாத பங்கஜம் | உனது திருவடித் தாமரையை |
| நமஸ்யத் ஆர்த்தி க்ஷபணே | ஸேவிப்பவர்களின் துன்பங்களைத் தொலைப்பதில் | கதா | எப்பொழுது |
| | | சக்ஷுஷா | கண்ணினால் |
| க்ருதக்ஷணம் | போதுபோக்குடையதாயும் | ஸாக்ஷாத் கரவாணி | ஸேவிக்கப்போகிறேன். |

* * *:—எம்பெருமானைக்கிட்டும்வழியின் ஸௌகரியத்தைக் கீழெல்லாம் அருளிச் செய்தார்; இனி அந்த எம்பெருமானுடைய வைலக்ஷண்யத்தைப் பரக்க அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றிப் பதினேழு ச்லோகங்களாலருளிச் செய்கிறார். அவற்றுள் இந்த ச்லோகத்தில் சொல்லுகிறது என்னென்னில்; 1. "தாவி வையங்கொண்ட தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளுங்காலமின்னங்குறுகாதோ!" என்றும், 2. "அன்று தேர்கடவிய பெருமான் கனைகழல் காண்பதென்றுகொல் கண்களே" என்றும் ஆழ்வார் பதறினப்போலே தமக்கும் பகவத்பாதாரவிந்த ஸாக்ஷாத்காரத்தில் பதற்றமுண்டானபடியைப் பேசுகிறார்.

---

1. திருவாய் மொழி (6-9-9.)  2. ஷை (3-6-10.)

மந்த்ரங்களுள் சிறந்ததான த்வயமென்பது பூர்வகண்டமென்றும் உத்தரகண்டமென்றும் இரண்டு பகுதியாயிருக்குமே. அதில் முற்பகுதியானது பகவானை அடைவதற்கு வழியான ப்ரபத்தியைப் பேசுகின்றதென்றும், பிற்பகுதியானது உபேயமான பகவத் தத்துவத்தைப்பற்றிப்பேசுகின்றதென்றும் ஸம்ப்ரதாயமாகையாலே கீழ்ச்லோகம்வரையில் த்வயத்தின் பூர்வ கண்டத்தின் பொருளை விவரித்தனவென்றும் இனி மேல்ச்லோகங்கள் உத்தரகண்டத்தின் பொருளை விவரிக்கின்றன வென்றும், ஆகவே இந்த ஸ்தோத்ரம் முழுதும் பெரும்பாலும் த்வயத்தின் விவரணமாயிருக்குமென்று முணரத்தக்கது.

எம்பெருமானுடைய வைலக்ஷண்யத்தைச் சொல்லத் தொடங்கி முதலில் அவனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தைச் சிந்தித்துவிட்டு அந்தத்திருமேனியில் முக்கியமான திருவடியை ஸேவிப்பதில் தமக்குக் கரைபுரண்ட விருப்பமும் விரைவும் இருக்கின்றமையை இந்த ச்லோகத்தாலும் அடுத்த ச்லோகத்தாலும் வெளியிடுகிறார். கஷ்டப்படாமல் எளிதாகவே எல்லாவுலகங்களையும் அளந்ததாயும், ஆச்ரிதர்களுடைய ஆர்த்திகளையெல்லாம் அடியோடு அகற்றி விடுவதில் வியாபரிப்பதாயும் எனக்குப் பரம புருஷார்த்தமாயுமுள்ள உன் திருவடியை நான் எப்பொழுது இந்தக் கண்ணினால் கண்டுகளிப்பேனோ என்று அலமருகிறார்.

முதலடியில் த்ரிவிக்ரமாவதார சரித்திரத்தைச் சுருங்க அநுஸந்திக்கிறார். பூலோகம் முதல் ஸத்யலோக மளவுமுள்ள ஸகலலோகங்களையும் விளையாட்டாகவே ஆக்ரமித்து விட்டதாம் அந்தத்திருவடி.

பராவராலயம்—'பரர்' என்று நம்மைவிடச் சிறந்தவர்களான ப்ரஹ்மா முதலானவர்களைச் சொல்லுகிறது. அவர்களுடைய ஆலயம்—மேலுலகங்கள். 'அவரர்' என்று தாழ்ந்தவர்களான மநுஷ்யாதிகளைச் சொல்லுகிறது. இவர்களுடைய ஆலயம்—கீழுலகம். இவற்றையெல்லாம் தாவியளந்த அக்காலத்தில் தாமும் ஜீவித்திருக்கக்கூடாதாவென்று ஆளவந்தார் இங்கு வருந்துவதாகவும் தோன்றும்.

க்ருதக்ஷணம்—க்ஷணமென்று காலத்துக்குப்பெயர்; பகவத்பாதங்களின் போதுபோக்கு முழுவதும் ஆச்ரிதர்களின் ஆர்த்திகளைப் போக்குவதொன்றிலேயே என்று கருத்து. "க்ஷணோ வ்யாபாரவைகல்யே காலபேதால்ப காலயோ:" என்று நிகண்டு காண்கிறது. வேறொரு வியாபாரமில்லாமல் ஒன்றிலேயே ஊன்றியிருக்கைக்கும் க்ஷணமென்று பெயர். ஆச்ரிதக்ஷணத்துக்கென்றே கையொழிந்திருக்கிற திருவடிகள் என் வரையில் அருமைப்படுகின்றனவே! என வருந்துகின்றனர் போலும்.

சக்ஷுஷா என்றதனால். திருநாட்டிலே போய்க்காண்பதை விரும்புகின்றேனல்லேன்; சிலர்க்கு திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்தருளி இவ்விபூதியிலேயே வடிவழகைக் காட்டியருளினது போலப் பாவியேனுக்கும் அருளவேணுமென்கிறார் என்பது விளங்குகின்றது. நெஞ்சென்னும் உட்கண்ணாலே காணவிரும்புகிறார், (அதாவது) பரமபதப்ராப்தியை விரும்புகிறார் என்றும் சிலர் யோஜிப்பர்களாம். ... ... ... ... . (௩௦)

**கதாபுநச் சங்கரதாங்க கல்பக த்வஜாரவிந்தாங்குச வஜ்ரலாஞ்சநம்.**
**த்ரிவிக்ரம ! த்வச்சரணம்புஜத்வயம் மதீயமூர்த்தாந மலங்கரிஷ்யதி.** (௩௧)

| | | | |
|---|---|---|---|
| த்ரிவிக்ரம ! | மூவடி நிமிர்த்து மூவுலகளந்த பெருமானே !, | த்வத் சரண அம்புஜ த்வயம் | உனது திருவடித் தாமரையிணைகள் |
| சங்க ரதாங்க கல்பக த்வஜ அரவிந்த அங்குச வஜ்ர லாஞ்சநம் | சங்கு சக்கரம் கல்பவ்ருக்ஷம் கொடி தாமரைப்பூ மாவட்டி வஜ்ராயுதம்—இவற்றை அடையாளமாகவுடைய | மதீய மூர்த்தாநம் | எனது தலையை |
| | | கதா புந: அலங்கரிஷ்யதி | எப்போது அலங்கரிக்கப் போகிறது ? |

* * *—உன் திருவடியை நான் எப்போது கண்ணால் காணப்போகிறேனென்றார் கீழ்ச்லோகத்தில். அவ்வளவோடு த்ருப்தி உண்டாய்விடுமோ ?

1. "நீ ஒரு நாள் படிக்களவாக நிமிர்த்த நின் பாதபங்கயமே தலைக்கணியாய்" என்றும், 2. "கோலமாமென் சென்னிக்கு உன் கமலமன்ன குரைகழலே" என்றும், 3. "அடிச்சியோந்தலைமிசை நீயணியாய் ஆழியங்கண்ணா வுன் கோலப்பாதம்" என்றும் ஆழ்வார் விரும்

திருவாய் மொழி 1. (௯-௨-௨,) 2. (4-3-6) 3. (10-3-6)

பினபடியே விரும்பாதிருக்கமுடியுமோ? அந்த விருப்ப முண்டாகி, உன் திருவடிகளாலே என் தலையை அலங்கரிப்பது எப்போதோவென்கிறார். ஓங்கியுலகளந்த உத்தமனே! சங்கு வில் வாள் தண்டு சக்கரமென்கிற பஞ்சாயுதங்களும் ஸாம்ராஜ்ய லக்ஷணமாகப் பொலிகின்ற உன் திருவடியிணை என்சென்னிக்கு மலர்ந்த பூவாக என்றைக்கு ஆகுமோ? ஸ்ரீ பரதாழ்வான் முதலானார்க்குக் கிடைத்த் பேறு பாவியேனுக்கும் கிடைக்க வழியுண்டோ வென்கிறார்.

இந்த விபூதியிலேயே இப்படிப்பட்ட பேறு கிடைக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறார் என்னலாம். திருநாட்டிலே புகுந்து அப்ராக்ருத தேஹத்தைப்பெற்று அந்த நிலைமையில் பரவாஸுதேவனுடைய பாதாரவிந்தங்களைச் சிரோபூஷணமாகப் பெறுவதற்கு விரைகின்றார் என்றும் சொல்லுவர்கள். ... ... ... (௩௧)

**விராஜமாநோஜ்ஜ்வலபீத வாஸஸம் ஸ்மிதாதஸீஸூந ஸமாமலச்சவிம்,**
**நிமக்நநாபிம் தநுமத்ய முந்நதம் விசால வக்ஷஸ்ஸ்தல சோபி லக்ஷணம்.** (௩௨)

| | | | |
|---|---|---|---|
| விராஜமாந உஜ்ஜ்வல பீதவாஸஸம் | விளங்கிக் கொண்டிருக்கிற மிகவும் ப்ரகாசமான பீதாம்பரத்தை யுடையவனையும் | தநு மத்யம் | நுட்பமான இடையை உடையவனையும் |
| | | உந்நதம் | உயர்ந்தவனையும் |
| ஸ்மித அதஸீ ஸூந ஸம அமலச்சவிம் | மலர்ந்த காயாம்பூப் போன்ற நிர்மலமான ஒளியை யுடையவனையும் | விசால வக்ஷஸ் ஸ்தல சோபி லக்ஷணம் | விசாலமான திருமார்பிலே விளங்குகின்ற ஸ்ரீவத்ஸமென்கிற மறுவை யுடையவனுமிருக்கிற. |
| நிமக்ந நாபிம் | ஆழ்ந்த திருநாபியை உடையவனையும் | | |

* * *:—கீழிரண்டு ச்லோகங்களிலும் ப்ரார்த்தித்தபடி ஸாக்ஷாத்காரமும் ஸம்ச்லேஷமும் வாய்த்தால் அதன் பின்பு விளையக்கூடியதான கைங்கரியத்திற்கு உத்தேச்யனான எம்பெருமானை, திவ்யாவயவங்களடங்கிய திவ்யமங்கள விக்ரஹத்தோடும் திவ்யாயுதங்களோடும் பிராட்டிமார்களோடும் பரிஜநவர்க்கங்களோடும் கூடினவனாக இதுமுதல் பதினான்கு ச்லோகங்களால் விசதமாக அநுஸந்திக்கிறார். இந்தப்பதினான்கு ச்லோகங்களும் ஒரே அந்வயம். இவற்றில் எம்பெருமானுக்கு விசேஷணங்கள் மாத்திரமே யுள்ளன. விசேஷ்யபதம் க்ரியாபதம் முதலியவை இதிலிருந்து பதினைந்தாவதான "பவந்தமேவாநுசரந்" என்கிற நாற்பத்தாறும் ச்லோகத்தில் உள்ளன. ஆகையாலே அந்த ச்லோகம் வரையில் ஏகாந்வயம். இப்படிப்பட்ட உன்னையே இடைவிடாது அநுபவித்துக்கொண்டு கைங்கரியங்களைச் செய்து உன்னை நான் உகப்பிப்பது என்றைக்கோ? என்று தலைக்கட்டுகிறபடி. இப்படி பல ச்லோகங்கள் ஒன்று சேர்ந்து அந்வயித்து வாக்யார்த்தம் தெரியவேண்டும்படி அமைப்பதை, குளகம் என்று சொல்லுவர்கள். தமிழ்நூல்களிலும் கம்பராமாயணம் முதலியவற்றில் இப்படி வருவது காண்க.

திருவரை பூத்தாற்போலேயிருக்கிற திருப்பீதாம்பரத்தினழகை முதலடியில் அநுபவிக்கிறார். விராஜமாந, உஜ்ஜ்வல என்று இரண்டு விசேஷணமிட்டதன் கருத்தாவது — திருப்பீதாம்பரத்திற்கு இயற்கையாகவே ஒரு வகையான சோபா ப்ரகாசம் இருக்கச்செய்தேயும் இவ்விடத்தில் நீலநிறத்ததான திவ்யமங்கள விக்ரஹத்தோடு ஸம்பந்தித்திருப்பதனால் விலக்ஷணமான ஒரு பரபாகசோபையும் கூடிற்று என்று காட்டுவதாம்.

ஸ்மிதாதஸீஸூந ஸமாமலச்சவிம்=அதஸீ ஸூநமாவது காயாம்பூ. பூவைப்பூ என்பதும் இதுவே. இதன் நிறம் மிகவும் மநோஹரமாயிருக்குமாதலால் எம்பெருமான் திருநிறத்திற்கு இதனை உவமை கூறுவர். "காயமலர் நிறவா" என்றும் "பூவைப் பூவண்ணா" என்றும் ஆழ்வார்கள் பலகாலுமருளிச் செய்வர்கள்.

நிமக்நநாபிம்=நாபி உட்குழிந்திருத்தல் ஸூலக்ஷணமென்க. நான்கு பக்கங்களிலும் பெருகியோடும் பகவானுடைய ஸௌந்தரியமாகிற அமுதவெள்ளம் இங்ஙனே சுழித்துக் கிடக்கிறதோ! என்று சங்கிக்கலாம்படியிறே திருநாபி ஆழ்ந்திருக்கிறது.

தநுமத்யம்=இடை நுட்பமாயிருப்பது ஸூலக்ஷணம். எல்லாவுலகங்களுக்கும் இருப்பிடமாயிருக்கும் இந்த உதரம் க்ருசமாயிருக்கின்றதே! என்று ஆச்சரியப்படவேண்டும்படி.

யிருக்குமிறே. உந்நதம்=மிகக் குள்ளனாயிருப்பதும் மிக நீண்டிருப்பதும் லக்ஷணக்குறையாம்; அங்ஙனல்லாமல் லக்ஷணமான உயரமுடையவனென்கிறது. ஆகவே ஸர்வாதிகன் என்று தோன்றும்படியான திவ்யமங்கள விக்ரஹமுடையவன் என்றதாயிற்று.

விசால வக்ஷஸ்ஸ்தல சோபிலக்ஷணம்=அகன்ற திருமார்பிலே ஸ்ரீவத்ஸமென்கிற மறு விளங்கப் பெற்றவன். "திருமறு மார்வன்" என்பர் நம்மாழ்வாரும். இப்படியிருக்கிற உன்னை நான் என்றைக்கு அணுகப்போகிறேன் என்று நாற்பத்தாறும் ச்லோகத்தோடு கூட்டித் தலைக்கட்டிக்கொள்க. .... ... ... ... ... (௫௨.)

**சகாஸதம் ஜ்யாகிண கர்க்கசைச் சுபை: சதுர்ப்பி ராஜாநு விலம்பிபிர்ப் புஜை:.**
**ப்ரியாவதம்ஸோத்பலகர்ணபூஷண ச்லதாலகாபந்த விமர்த்தசம்ஸிபி:.** (௫௩)

| | |
|---|---|
| ஆஜாநு விலம்பிபி: | திருமுழந்தாள் வரை தொங்குகின்றவைகளாயும் |
| ஜ்யாகிண கர்க்கசை: | நாண் தழும்பேறிக் கரடுமுரடாயிருப்பவைகளாயும் |
| ப்ரியா அவதம்ஸ உத்பல கர்ண பூஷண ச்லத அலகாபந்த விமர்த்த சம்ஸிபி: | பிராட்டிமார்களுக்குக் கர்ணாலங்காரமான கருநெய்தல் மலரென்ன, கர்ண பூஷணங்களென்ன, அலைந்த திருக்குழல் கற்றையென்ன, ஆகிய இவை அழுந்தியிருக்கிறபடியைத் தெரிவிக்கின்றவைகளாயும் |
| சுபை: | அழகியவைகளாயுமுள்ள |
| சதுர்ப்பி: புஜை: | நான்கு புஜங்களோடே |
| சகாஸதம் | பிரகாசியா நிற்கிற. |

* * *—கீழ்ச்லோகத்தில் பீதாம்பரத்தைப் பிடித்துத் திருமார்வளவும் வந்தார்; திருமார்விலிருந்து தோளழகிலே துவக்குண்டு திருத்தோள்களின் ஐச்வர்ய வீர்யங்களையும் அழகையும் அநுபவித்துப் பேசுகிறார். திருத்தோள்களுக்கு நாலைந்து விசேஷணங்களிடுகிறார். ஜ்யாகிணகர்க்கசை: என்ற விசேஷணத்தினால் வீரச்செயலின் பெருமையைப் பேசுகிறார். "தழும்பிருந்த சார்ங்கநாண் தோய்ந்தவாமங்கை" என்ற பொய்கையாழ்வாருளிச் செயலைத் திருவுள்ளம்பற்றிப் பேசுகிறார். ஸ்ரீ சாரங்கவில்லின் நாணித்தழும்பாலே அலங்கரிக்கப்பட்டவை என்கை. விபவாவதாரங்களில் ஆச்ரித விரோதிகளைத் தொலைக்கும்பொருட்டுப் பலபல போர்களைப் பகவான் செய்தருளினது இதிஹாஸபுராண ப்ரஸித்தம். அந்த யுத்தங்களில் நேர்ந்த வில்நாணியின் வடுக்கள் அந்த அவதாரதசையில் ஸ்ரீ ராமக்ருஷ்ணாதி மூர்த்திகளின் திருக்கைகளை அலங்கரித்திருந்தன. அந்த வடுக்களே பரத்வதசையிலும் பரவாஸுதேவனுடைய திருக்கைகளில் விளங்குகின்றனவென்று ஆளவந்தாருடைய அநுஸந்தானமிருக்கிறபடி. பரத்வதசையிலும் அவதாரதசையிலும் எம்பெருமானுடைய திருமேனிக்கு யாதொரு பேதமுமில்லை என்பதைத் தெரிவித்தவாறும்.

ஔதார்யம் வீர்யம் ஸௌந்தர்யம் முதலிய எல்லாக் குணங்களும் திருத்தோள்களில் அமைந்துள்ளமை சுபை: என்ற விசேஷணத்தினால் விளங்கும். பரவாஸுதேவனுக்கும் சதுர்ப்புஜத்வம் ப்ரமாணஸித்தம் என்று காட்டுகிறார் சதுர்ப்பி: என்ற விசேஷணத்தால். "ஆஜாநுபாஹு" என்று உத்தம புருஷர்களை வருணிப்பது வழக்கமாகையால் ஆஜாநுவிலம்பிபி: என்கிறார். முழந்தாளளவும் தொங்குகின்றபடி.

பின்னடிகளிரண்டும் சேர்ந்து ஒரே பதம். எம்பெருமான் பிராட்டியை அணைக்கும்போது, அல்லது அவளுடைய திருக்கையைத் தலையணையாக வைத்துக்கொண்டு திருக்கண் வளரும்போது, அவளுடைய காதிலே அழகாகச் சாத்தியுள்ள கருநெய்தற்பூவும் தோடு முதலிய கர்ண பூஷணங்களும் அவிழ்ந்தலைந்த திருக்குழல் கற்றையும் தனது திருத்தோள்களின் மேல் உறைந்து அவ்வாபரணங்கள் அழுந்தின அடையாளமும், கருநெய்தற்பூவினுடையவும் திருக்குழல் கற்றையினுடையவும் திவ்ய பரிமளம் கமழ்வதும் அத்தோள்களில் ப்ரத்யக்ஷமாயிருக்கின்றன என்பது இவ்விசேஷணத்தின் கருத்து.

இப்படிப்பட்ட திருத்தோள்களோடு திகழ்கின்ற உன்னை என்றைக்கு அநுபவிக்கப் பெறுவேன் என்று நாற்பத்தாறும் ச்லோகத்தோடு கூட்டி உரைத்துக்கொள்க. ... (௫௩)

**உதக்ரபீநாம்ஸ விலம்பிகுண்டல- அலகாவளீ பந்துர கம்புகந்தரம்.**
**முகச்ரியா ந்யக்க்ருதபூர்ணநிர்மல- அம்ருதாம்சு பிம்பாம்புருஹோஜ்வலச்ரியம் (௩௪)**

| | | | |
|---|---|---|---|
| உத்க்ர பீந அம்ஸ விலம்பி குண்டல அலக ஆவலீ பந்துர கம்பு கந்தரம் | உயர்ந்தும் பருத்துமிருக்கிற திருத்தோள்கள் வரையில் தொங்குகின்ற திருக்குண்டலங்களாலும் திருக்குழல் கற்றைகளாலும் அழகு பெற்றுச் சங்கு போல் விளங்குகின்ற திருக்கழுத்தை யுடையவனாய் | முக ச்ரியா | திருமுகத்தின் காந்தியினாலே |
| | | ந்யக் க்ருத பூர்ண நிர்மல அம்ருதாம் சுபிம்ப அம்புருஹ உஜ்ஜ்வல ச்ரியம் | பூர்ணமாய் நிர்மலமான சந்த்ரமண்டலத்தையும் அப்போதலர்ந்த செந்தாமரைப் பூவையும் திரஸ்கரித்து மிக விளங்கா நிற்கிற. |

* * * திருத்தோள்களிலிருந்து திருக்கழுத்தைப் பற்றுகிறார்; அங்கிருந்து திருமுக மண்டலத்தைப் பற்றுகிறார். உயர்ந்து பருத்து விளங்குகின்ற திருதோள்வரையில் தளதள வென்று தொங்குகின்ற குண்டலங்களாலும் கூந்தல்களாலும் அழகுபெற்று விளங்குகின்ற தாம் திருக்கழுத்து. கழுத்தில் மூன்று ரேகைகள் இருப்பது உத்தமலக்ஷணமாக வருணிக்கப் படும். ஆனது பற்றியே கவிகள், கழுத்துக்குச் சங்கு உவமையென்பர். சங்கிலும் மூன்று கோடுகள் உண்டிறே. வடமொழியில் கம்பு என்று சங்குக்குப் பெயர். கம்புப்ரலம்பமலிம்லுச: என்று ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பட்டருமருளிச் செய்தார். தேசிகன் "ரேகாத்ரயாங்கிதாக்ரீவா கம்புக்ரீவேதி கத்யதே" [மூன்று கோடுகளமைந்த கழுத்துக்கு 'கம்புக்ரீவா' என்று பெயர்] என்றொரு பிரமாணம் எடுத்துக் காட்டியருளினார்.

பின்னடிகளில் திருமுகமண்டல சோபையைப் பேசுகிறார். ஸகல கலாபரிபூர்ணமாய் மறுக்கழற்றின சந்திரமண்டலத்தையும் அப்போதலர்ந்த செந்தாமரைப் பூவையும் தனது முக வொளியினால் வென்று விளங்குகின்றனன் எம்பெருமான் என்க.

இப்படிப்பட்ட உன்னை எப்போது ஸேவிக்கப் பெறுவேனென்று நாற்பத்தாறும் ச்லோகத்தோடு கூட்டி உரைத்துக் கொள்க. ... ... ... (௩௪)

**ப்ரபுத்த முக்தாம்புஜ சாருலோசநம் ஸவிப்ரம ப்ரூலத முஜ்வலாதரம்**
**சுசிஸ்மிதம் கோமலகண்ட முந்நஸம் லலாட பர்யந்த விலம்பிதாலகம். (௩௫)**

| | | | |
|---|---|---|---|
| ப்ரபுத்த முக்த அம்புஜ சாருலோசநம் | அப்போதலர்ந்த தாமரைப் பூப்போன்று அழகிய திருக்கண்களை யுடையனாய் | கோமல கண்டம் | அழகிய கபோலங்களை யுடையனாய் |
| ஸவிப்ரம ப்ரூலதம் | விலாஸத்தோடு கூடினதாய் கொடிபோன்றதான திருப் புருவங்களை யுடையனாய் | உந்நஸம் | உயர்ந்த திருமூக்கை யுடையனாய் |
| உஜ்ஜ்வல அதரம் | பிரகாசிக்கின்ற திரு அதரத்தை யுடையனாய் | லலாட பர்யந்த விலம்பித அலகம் | திருநெற்றியளவும் தொங்குகின்ற முன்னுச்சி மயிர்களை யுடையவனா யிருக்கிற. |
| சுசிஸ்மிதம் | கபடமற்ற புன்சிரிப்பை யுடையனாய் | | |

* * *—கீழ்ச்லோகத்தின் பின்னடிகளில் திருமுகமண்டலசோபையை ஸமுதாயமாகப் பேசினார். திருமுகத்திலே, திருக்கண் திருப்புருவம் திருப்பவளம் திருமூக்கு என்று சில உறுப்புகள் உண்டே; அவற்றையும் தனித்தனியே பேசி அநுபவிக்கிறார் இதில்.

மலர்ந்ததாய் புதிதான தாமரை மலர்போன்ற திருக்கண்களையும், நெறிப்புடன் கூடிக் கொடிபோன்று விளங்குகின்ற திருப்புருவ வட்டங்களையும், கொவ்வைக் கனிபோல் பழுத்துச் சிவந்த திருப்பவளத்தையும் கபடமற்ற புன்முறுவலையும், ஸுகுமாரமான திருக்கபோலங்களையும் கோலநீள்கொடிமூக்கையும் திருநெற்றியளவும் தொங்குகின்ற திருக்குழல்களையு முடையனான வுன்னை என்றைக்கு அநுபவிக்கப் பெறுவேனோ என்றாராயிற்று.

"முக்த" என்பதற்கு, அழகிய என்றும், புதிதான என்றும் பொருள் கொள்ளலாம். "முக்தம் ஸௌம்யே நவே மூடே" என்பது நிகண்டு.

சுசிஸ்மிதம்—சிரிக்கும்போது தந்தங்களின் வெளுத்த ஒளி பரவுமாதலால் சிரிப்பை வெளுப்பாகக் கவிகள் வருணிப்பர். ஆகையாலே இங்கு சுசி என்றது 'வெளுத்த' என்றபடியாகலாம். பரிசுத்தமென்று பொருள் கொண்டால், வேறுவிதமான கருத்து இல்லாமல் ருஜுவான அபிப்ராயத்துடன் சிரிக்கிறபடியைச் சொல்லிற்றும். அரசர்கள் சிரித்துக் கொண்டே தண்டித்து விடுகிறார்களன்றோ; அவர்களுடைய சிரிப்பு கபடமேயாம்; அங்ஙனன்றிக் கள்ளங்கவடற்றது எம்பெருமானுடைய சிரிப்பு.

லலாடபர்யந்தவிலம்பிதாலகம்—கீழ்ச்லோகத்தில், திருக்குழல்கள் பின்னே தோளளவும் தொங்குகின்றமை சொல்லிற்று; இதில், முன்னெற்றியில் தொங்குகின்றமை சொல்லுகிறது. 1 "களிவண் டெங்குங் கலந்தாற்போல் கமழ்பூங்குழல்கள் தடந்தோள் மேல், மிளிர நின்று விளையாட" என்று ஆண்டாளநுபவித்தபடியும், 2. "செங்கமலப் பூவில் தேனுண்ணும் வண்டேபோல், † பங்கிகள் வந்துன் பவளவாய் மொய்ப்ப" என்று பெரியாழ்வாரநுபவித்த படியும் அநுஸந்திப்பது. ... ... ... ... ... (௩௫)

**ஸ்புரத்கிரீடாங்கத ஹாரகண்டிகா மணீந்த்ர காஞ்சீ குணநூபுராதிபி:.**
**ரதாங்க சங்காஸிகதா தநுர்வரை: லஸத்துலஸ்யா வநமாலயோஜ்வலம். (௩௬)**

| | | | |
|---|---|---|---|
| ஸ்புரத் கிரீட அங்கத ஹார கண்டிகா மணீந்த்ர காஞ்சீ குண நூபுர ஆதிபி: | விளங்குகின்ற திருவபிஷேகம், திருத் தோள்வளை, முக்தாஹாரம், திருக்கழுத்தணி, ஸ்ரீ கௌஸ்துபம், திருவரைநாண், திருப்பாடகம் முதலிய திருவாபரணங்களாலும் | ரதாங்க சங்க அஸி கதா தநுர்வரை: | சக்கரம் சங்கு வாள் கதை சார்ங்கம் என்கிற பஞ்சாயுதங்களாலும் |
| | | லஸத் துலஸ்யா வநமாலயா | ஒளிவிடுகின்ற திருத்துழாய் மாலையை யுடைய வநமாலையினாலும் |
| | | உஜ்ஜ்வலம் | பிரகாசித்துக் கொண்டிருக்கிற. |

* * *:—ஆபரணங்களுடையவும் ஆயுதங்களுடையவும் சேர்த்தியழகை அநுபவிக்கிறார். கதிராயிரமிரவிகலந்தெரித்தாலொத்த நீண் முடியும் திருத்தோள்வளைகளும் நவரத்ந ஹாரங்களும் திருமிடற்றணிகலனும் "குருமாமணிப்பூண்" என்கிற ஸ்ரீ கௌஸ்துபமணியும் திருவரைநாணும் திருவடிச்சிலம்பும் முதலிய பலபல திவ்யாபரணங்களையணிந்தும், "சங்கு, வில் வாள் தண்டு சக்கர மேந்திய அங்கைகள்" என்கிறபடியே பஞ்சாயுதங்களையணிந்தும் திருத்துழாயலங்கலையணிந்தும் விளங்குகின்றவுன்னை எப்போது அநுபவிக்கப்பெறுவேன்.

லஸத்துலஸ்யா என்பதைத் தனி விசேஷ்யபதமாகவும் வநமாலைக்குவிசேஷணமாகவும் யோஜிக்கலாம். எம்பெருமான் அணிந்துள்ளதொரு மாலைக்கு வநமாலை யென்று திருநாமம் வழங்கும். ஆஜாநுலம்பிநீ மாலா ஸர்வர்த்து குஸுமோஜ்வலா, மத்யே ஸ்தூலகதம்பாட்யா வநமாலேதி கீர்த்யதே!! ... ... ... ... (௩௬)

**சகர்த்த யஸ்யா பவநம் புஜாந்தரம் தவ ப்ரியம் தாம யதீயஜந்மபூ:.**
**ஜகத் ஸமஸ்தம் யதபாங்க ஸம்ச்ரயம் யதர்த்தமம்போதி ரமந்த்யபந்திச. (௩௭)**

| | | | |
|---|---|---|---|
| தவ | உன்னுடைய | ப்ரியம் தாம | இனிதான இருப்பிடமாயிற்றோ, |
| புஜாந்தரம் | திருமார்வை | ஸமஸ்தம் ஜகத் | உலகமெல்லாம் |
| யஸ்யா: | யாவளொரு பிராட்டிக்கு | யத் அபாங்க ஸம்ச்ரயம் | யாவளொரு பிராட்டியின் கடாக்ஷத்தைப் பற்றியிருக்கிறதோ, |
| பவநம் | இருப்பிடமாக | யதர்த்தம் | யாவளொரு பிராட்டிக்காக. |
| சகர்த்த | பண்ணியருளினயோ, | அம்போதி: | கடலானது |
| யதீய ஜந்மபூ: | யாவளொரு பிராட்டியின் பிறந்தகமான திருப்பாற்கடல் | அமந்தி அபந்தி ச | கடையவும் அணைகட்டவும் பட்டதோ. |
| தவ | உனக்கு | | |

* * *—கீழ்ச் சொன்ன அவயவ ஸௌந்தர்யம் ஆபரண ஸௌந்தர்யம் முதலானவை எவ்வளவிருந்தாலும் பிராட்டியோடு சேர்த்தியில்லாதபோது அவை நிறம் பெறமாட்டாவாகையால் எல்லாவற்றிலும் மேம்பட்டதான லக்ஷ்மீபதித்வத்தைப் பரக்கப் பேசுகிறார்.

1. நாச்சியார் திருமொழி 14—3. 2. பெரியாழ்வார் திருமொழி 1—8—2. †. பங்கீ—மயிர்.

முப்பத்திரண்டாம் ச்லோகம் தொடங்கி, கீழ் முப்பத்தாறும் ச்லோகமளவும் ஒவ்வொரு ச்லோகமும் எம்பெருமானுடைய விசேஷணங்களைக் கொண்டே முடிந்தன. அந்த விசேஷணங்களுக்கெல்லாம், மேலே நாற்பத்தாறும் ச்லோகத்தில் "பவந்தம்" என்ற விசேஷ்ய பதத்திலே அந்வயமென்றும் சொல்லியிருக்கிறோம். இந்த ச்லோகத்திலும் அடுத்த ச்லோகத்திலும் அப்படிப்பட்ட விசேஷண மொன்றுமில்லை. இந்த ச்லோகத்தின் பொருள் இந்த ச்லோகத்தோடு முடியவில்லை, அடுத்த ச்லோகத்தோடும் முடியவில்லை. அதற்குமடுத்ததான "தயா ஸஹாஸீநம்" என்கிற முப்பத்தொன்பதாம் ச்லோகத்தில் ஒருவாறு முடிகிறது. அதிலும் பூர்த்தியாக முடியவில்லை யென்பதை மேலே காட்டுவோம்.

உன் திருமார்பை எந்தப் பிராட்டிக்கு "அகலகில்லேனிறையும்" என்று உறையுமிடமாகச் செய்திருக்கிறாயோ, எந்த பிராட்டியின் அவதாரஸ்தலமான திருப்பாற்கடல் உனக்கு இனிதான வாஸஸ்தலமாயிற்றோ, எந்தப் பிராட்டியின் கடாக்ஷத்திற்கு அதீநமாக உபயவிபூதியும் வாழ்கின்றதோ, எந்தப் பிராட்டியைப் பெறுவதற்காக நீ கடல் கடைந்தருளினையோ, எவளுடைய பிரிவாற்றாமையால் கடலில் அணைகட்டினையோ—

என்கிற இவ்வளவே இந்த ச்லோகத்தில் அருளிச்செய்யப்பட்டுள்ளது. மேல் ச்லோகத்தையும் ஸேவித்துக்கொண்டு அதற்கடுத்த ச்லோகத்தில் சென்றால் ஒரு முடிவு ஏற்படும்; அந்தப் பிராட்டியோடே கூடத் திருவனந்தாழ்வான் மேலே எழுந்தருளியிருக்கிற—என்று அந்த ச்லோகத்தில் ஏற்படும். நாற்பத்தாறும் ச்லோகத்தில் பூர்ணக்ரியாந்வயம்.

தேவர்களுக்குச் சாவாமைக்கு மருந்து கொடுப்பதற்காகக் கடல் கடைந்த காலத்து 1 "விண்ணவரமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமானே!" என்றபடி ஸ்ரீமஹாலக்ஷ்மி அக்கடலிடத்துத் தோன்றிய வரலாறும்,—ஸ்ரீராமாவதாரத்தில் இராவணனால் ஸீதாபிராட்டி அசோகவனத்தில் சிறைப்பட்டிருந்த காலத்து வாநரமுதலிகளைத் துணைகொண்டு தென்கடலில் ஸேதுகட்டின வரலாறும் ப்ரஸித்தம்.

இங்கே சிலர் கேட்பதொன்றுண்டு ; -கடலில் அணைகட்டினது பிராட்டிக்காக என்றது தகுதியே ; கடலைக் கடைந்ததும் பிராட்டிக்காகவே என்று சொல்லக்கூடுமோ ; தேவர்களுக்கு அமுதம் எடுத்துக்கொடுக்கவன்றோ கடல் கடைந்தது; அப்படியிருக்க, பிராட்டிக்காகவே கடலடைத்ததும் கடல் கடைந்ததும் என்று இங்கே அருளிச்செய்தது என்கொண்டு? என்பர்; சரித்திர நூல்களின்படி உண்மை இதுவாயினும், எம்பெருமானுடைய உட்கருத்தினால் கடல்கடைந்ததற்கு முக்கியமான பலன் பிராட்டியைப் பெறுவதேயென்று நம் ஆசிரியர்கள் அநுஸந்திப்பர்களென்க. பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்திலே "உந்மூல்யாஹர மந்த்ராத்ரிமஹிநா...பலேக்ரஹிர் ஹி கமலாலாபேந ஸர்வச் ச்ரம:" என்ற ச்லோகத்தில் இக்கருத்தைத் தோன்றுவித்தருளினர். "அதிசயிதவாநப்திம் நாதோ மமந்த பபந்த தம்" என்று ஸ்ரீ குணரத்நகோசத்திலும் அருளினர். ... .... ... ...(௩௭)

ஸ்வவைச்வ ரூப்யேண ஸதாநுபூதயாபி அபூர்வவத் விஸ்மய மாததாநயா
குணேந ரூபேண விலாஸ சேஷ்டிதை: ஸதா தவைவோசிதயா தவ ச்ரியா (௩௮)

| | | | |
|---|---|---|---|
| ஸ்வ வைச்வரூப்யேண | தனது விச்வரூப நிலைமையைக் கொண்டு | குணேந ரூபேண விலாஸ சேஷ்டிதை: | குணங்களாலும் வடிவழகாலும் விலாஸ சேஷ்டைகளாலும் |
| ஸதா | எப்போதும் | ஸதா | பரம் வ்யூஹம் முதலிய எல்லா நிலைமைகளிலும் |
| அநுபூதயா அபி | அநுபவிக்கப்பட்டாலும் | | |
| அபூர்வவத் | புதிய புதிய வஸ்து போலே | தவ ஏவ உசிதயா | உனக்கே ஏற்றவளாய் |
| விஸ்மயம் ஆததாநயா | ஆச்சரியத்தை விளைவிப்பவளாய் | தவ ச்ரியா | உனக்குச் செல்வமாயிருப்பவளான. |

* * *:—கீழ்ச்லோகத்திற்கு சேஷபூதம் இந்த ச்லோகம். இதிலும் அந்தப் பிராட்டியின் பெருமையே வருணிக்கப்படுகின்றது. * "தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க்கண்களாயிரத்தாய், தாள்களாயிரத்தாய்"என்கிறபடியே விஸ்தாரமான உருவத்தையெடுத்துக்கொண்டு நீ ஸர்வ விக்ரஹத்தாலும் ஸர்வகாலத்திலும் பிராட்டியை அநுபவித்தாலும்,

1 பெரிய திருமொழி 6—1—2 * திருவாய்மொழி 8—1—10.

அவள் உனக்கு அப்பொழுதைக்கப்பொழுது புதிதுபுதிதாக உண்டான விலக்ஷணவஸ்துபோலே யிருந்துகொண்டு ஆச்சரியத்தைக் கொடுப்பவளேயன்றி ஒருகாலும் வைரஸ்யத்தை விளைப்பவளல்லள். அப்படிப்பட்ட பிராட்டியுடனே சேஷசயனத்திலே வீற்றிருக்கின்ற வுன்னை எப்போது ஸேவிக்கப்போகிறேன் என்று மேலோடே சேர்ந்து முற்றுப்பெறுகின்றது.

குணேந ரூபேண விலாஸசேஷ்டிதை: என்கிற மூன்றுமடி மத்யமதீபமாய்க்கொண்டு கீழோடும் மேலோடும் அந்வயிக்கவுரியது. ஞானம் அருள் முதலிய குணங்களினாலும் திவ்ய மங்கள விக்ரஹத்தினாலும் ச்ருங்காரலீலா சேஷ்டைகளினாலும் எப்பொழுதும் அபூர்வவஸ்து போலே ஆச்சரியத்தை விளைவிப்பவள் என்றும், அந்த குணரூப விலாஸ சேஷ்டிதங்களாலே உனக்கே ஏற்றிருப்பவள் என்றும் கொள்க. "உனக்கேற்குங் கோலமலர்ப்பாவைக்கு" என்ற திருவாய்மொழியைத் திருவுள்ளம்பற்றி "தவைவ உசிதயா" என்றார்.

"தவைவ உசிதயா ச்ரியா" என்னுமளவே போதுமாயிருக்க மீண்டும் "தவச்ரியா" என்றது பிராட்டியின் அநந்யார்ஹத்வத்தை நன்கு நிலைநாட்டுதற்காகவாம். ... (௩அ)

**தயா ஸஹாஸீந மநந்த போகிநி ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பலைகதாமநி.**
**பணாமணி வ்ராதமயூக மண்டல ப்ரகாசமாநோதர திவ்ய தாமநி.** (௩௯)

**நிவாஸ சய்யாஸநபாதுகாம்சுக- உபதாநவர்ஷாதபவாரணாதிபி:**
**சரீரபேதைஸ் தவ சேஷதாங் கதை: யதோசிதம் சேஷ இதீரிதே ஜநை:.** (௪௰)

| | | | |
|---|---|---|---|
| தயா ஸஹ | அப்படிப்பட்ட பிராட்டியோடு கூட | நிவாஸ சய்யா ஆஸந பாதுகா அம்சுக உபதாந வர்ஷாதப வாரண ஆதிபி: | (எம்பெருமானுக்கு) எழுந்தருளியிருக்கிற திருமாளிகையாகவும் திருக்கண் வளர்ந்தருளுமிடமாகவும் சிங்காசனமாகவும் பாதுகையாகவும் திருப்பரியட்டமாகவும் அணையாகவும் குடையாகவும் மற்றும் பலவிதமாகவும் ஆவதற்கு உரியவைகளாய் |
| ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பல ஏகதாமநி | சிறந்த ஞான சக்திகளுக்கு முக்கியமான இருப்பிடமானவனும் | யதோசிதம் தவ சேஷதாம் கதை: சரீரபேதை: | உசிதமானபடி உனக்கு அடிமைப்பட்டவைகளான பலபல வடிவங்களாலே |
| பணா மணி வ்ராத மயூக மண்டல ப்ரகாசமாந உதர திவ்ய தாமநி | தனது பண மணிகளின் ஸமூஹங்களினுடைய கிரணராசிகளாலே பளபளவென்று விளங்காநின்ற மத்யப்ரதேசத்தை (எம்பெருமானுக்கு) திருக்கோயிலாக வுடையவனும், | சேஷ: இதி ஜநை: ஈரிதே | சேஷனென்று ஜநங்களால் சொல்லப்படுபவனுமான |
| | | அநந்த போகிநி ஆஸீநம் | திருவனந்தாழ்வானிடத்தில் எழுந்தருளியிருக்கின்ற. |

* * *:—கீழ் இரண்டு ச்லோகங்களாலும் பிராட்டி வருணிக்கப்பட்டாள். அப்படிப்பட்ட பிராட்டியோடு திருவரவணையின்மீது எழுந்தருளியிருப்பவன் எம்பெருமான் என்கிறது இந்த ச்லோகத்தில். இதுவும் மேல்ச்லோகமும் திருவனந்தாழ்வானை வருணிப்பன. இவ்விரண்டு ச்லோகங்களும் ஒன்று சேர்ந்து பொருள்படுதலால் ஒன்றுகூட்டி உரையிடுவோம். சிறந்த ஜ்ஞாநபலங்களுக்கு இருப்பிடமாயும், தனது பணமணி யொளிகளினாலே பளபளவென்று விளங்குகின்ற உட்புறம்பொருந்திய திவ்ய வைகுண்ட விமானத்தையுடையனாயும், உனக்கு வஸிக்குமிடமாகவும் படுக்கையாகவும் சிங்காசனமாகவும், மரவடியாகவும் திருப்பரியட்டமாகவும், தழுவிக்கொள்ளும் அணையாகவும் குடையாகவும் அந்தந்த ஸமயங்களுக்குத் தக்கபடி உனக்கே ப்ரயோஜநமாகும்படி பலபல வடிவுகளை யெடுத்துக்கொண்டு சேஷவ்ருத்திகள் செய்வது காரணமாக எல்லாராலும் சேஷன் என்று சொல்லப்படுகிறவனாயுமுள்ள திருவனந்தாழ்வானுடைய திருமேனியிலே பிராட்டியோடே எழுந்தருளியிருக்கிற வுன்னை எப்போது ஸேவிக்கப் பெறுவேன் என்று நாற்பத்தாறும் ச்லோகத்திலே சேர்ந்துமுடிகிறது.

"மன்னிய பலபொறி சோரயிரவாய் வாளரவின் சென்னிமணிக்குடுமித் தெய்வச்சுடர் நடுவுள் மன்னியநாகத் தணைமேல்" என்ற பெரிய திருமடலைத் திருவுள்ளத்திற்கொண்டு "பணாமணிவ்ராத"—இத்யாதி விசேஷணம் இடப்பட்டது. "சென்றாற்குடையாம் இருந்தாற்

சிங்காசனமாம், நின்றால் மரவடியாம் நீள் கடலுள்—என்றும், புணையாமணி விளக்காம் பூம்பட்டாம் புல்கும், அணையாம் திருமாற்கு அரவு" என்ற முதல் திருவந்தாதிப் பாசுரத்தைப் பெரும்பாலும் "நிவாஸசய்யாஸந—" என்ற ச்லோகமாக மொழிபெயர்த்தனர் போலும்.

வெய்யிலில் நின்றும் காப்பதும் மழையில் நின்றும் காப்பதுமாகிய இரண்டும் குடையின் காரியமாதலால் "வர்ஷாதபவாரண" எனப்பட்டது. ஆழ்வார் "சென்றால் குடையாம்" என்று பொதுவாகக் கூறினதை இவர் விவரித்தாராயிற்று.

"சேஷ இதீர்யதே ஜநை:" என்று பலர் பாட மோதுவர்களேனும் அது தப்பான பாடமென்றொழிக்க; ஈரிதே என்று ஸப்தமீவிபக்தியாகவே ஓதவேண்டும் "அநந்த போகிநி" என்ற விசேஷ்யபதத்தில் அந்வயிப்பது. ... ... ... ... ... (௪0)

தாஸஸ் ஸகா வாஹந மாஸநம் த்வஜோ யஸ்தே விதாநம் வ்யஜநம் த்ரயீமய:.
உபஸ்திதம் தேந புரோ கருத்மதா த்வதங்க்ரி ஸம்மர்த்த கிணாங்கசோபிநா. (௪௧)

| | | | |
|---|---|---|---|
| த்ரயீமய: | வேதமூர்த்தியான | வ்யஜநம் | விசிறியாயும் இருக்கிறானோ, |
| ய: | யாவனொரு பெரிய திருவடி | தேந | அப்படிப்பட்ட |
| தே | உனக்கு | த்வத் அங்க்ரி ஸம்மர்த்த கிண அங்க சோபிநா | உன்னுடைய திருவடி நெருக்கின தழும்பை அடையாளமாகக்கொண்டு விளங்குகின்ற |
| தாஸ: | அடியவனையும் | | |
| ஸகா | தோழனையும் | | |
| வாஹநம் | வாஹனமாயும் | | |
| ஆஸநம் | ஆசனமாயும் | கருத்மதா | பெரிய திருவடியாலே |
| த்வஜ: | கொடியாயும் | புர: உபஸ்திதம் | திருமுன்பே ஸேவிக்கப்பட்டிருக்கிற. |
| விதாநம் | மேற்கட்டியாயும் | | |

* * *—கீழ் ச்லோகங்களிற் சொல்லப்பட்ட திருவனந்தாழ்வானைப் போலவே அந்தந்த ஸமயங்களுக்கு ஸமுசிதமாகத் தொண்டு செய்வதற்காகவே பலபல உருவங்களை யெடுத்துக் கொண்டு எம்பெருமானுக்கு நித்ய கைங்கரியம் செய்துவரும் பெரிய திருவடியின் சேர்த்தியை அநுஸந்திக்கும் ச்லோகமிது.

உனக்கு தாஸனாகவும் தோழனாகவும் வாஹநமாகவும் கொடியாகவும் வெய்யிலைத் தடுக்கும் விதானமாகவும் விசிறியாகவும் ஆகிறவன் கருடன் என்றது முன்னடிகளில். த்ரயீமய:—வேதத்தில் 1. "ஸுபர்ணோஸி கருத்மாந் த்ரிவ்ருத் தே சிர:" என்று தொடங்கிக் கருடனுடைய எல்லா அவயவங்களும் வேதமயமாக ஓதப்பட்டிருப்பது காண்க.

"வேதாத்மா விஹகேச்வர:" என்று சதுச்ச்லோகியிலும் இவர் தாமே அருளிச்செய்தார்.

த்வதங்க்ரிஸம்மர்த்தகிணாங்க சோபிநா—பெரிய திருவடியின் மீது எம்பெருமான் ஏறிக் கொண்டு ஆச்ரித ரக்ஷணத்திற்காக விரைந்து செல்லும்போது அக்கருடன் எவ்வளவோ வேகமாகச் சென்றாலும் எம்பெருமானுடைய திருவுள்ளத்தால் அந்த வேகம் மட்டமென்று தோன்றி இன்னமும் அதிகமான வேகத்துடன் பதறி ஓடும்படி அடிக்கடி தன் திருவடிகளாலே அழுத்தப்படுவனும் கருடன்; ஸ்ரீகஜேந்த்ராழ்வானைக் காத்தருள்வதற்காக மடுவின் கரைக்கு ஓடிவரும்போது இப்படி நடந்தபடியை ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்திலே பட்டர் அழகாக அருளிச் செய்கிறார்—"ஹுங்காராஸ்பால நாங்க்ரி ப்ரஹதிபிரபி தம தார்க்ஷ்யமத்யக்ஷிபஸ் த்வம்" என்றார். இப்படி அடிக்கடி எம்பெருமான் திருவடிகளால் அழுத்த அதனால் ஒரு தழும்பு [காய்ப்பு] உண்டாகி அது கருடனுக்கு மிக்க சோபையைத் தருகின்றதாம். அடிமைக்கு உரிய தழும்பாகையாலே இது உத்தேச்யமாயிருக்கும். இப்படிப்பட்ட பெரிய திருவடி எதிரே வந்து நின்று ஸேவிக்கப் பெற்றிருக்கிற உன்னை எப்போது ஸேவிக்கப் பெறுவேனோ என்று நாற்பத்தாறும் ச்லோகத்தோடே கூடிப் பொருள் பெற்றதாம்.

கூரத்தாழ்வான் இந்த ச்லோகத்தைப் பெரும்பாலும் திருவுள்ளத்திற் கொண்டு ஸுந்தரபாஹுஸ்தவத்தில் "வாஹநாஸநவிதாந சாமரத்யாக்ருதி: ககபதி ஸ்த்ரயீமய:, நித்ய தாஸ்யரதிரேவ யஸ்யவை" என்ற ச்லோக மருளிச் செய்தாரெனக். "விதாநம்" என்றவிடத்தில் மேலால்

1. தைத்திரீய யஜுஸ்ஸம்ஹிதை நாலாங்காண்டம் முதல் ப்ரச்நத்தில் 42, ஆம் பஞ்சாதி.

பரந்த வெயில் காப்பான் வினதை சிறுவன் சிறகென்னும் மேலாப்பின் கீழ் வருவானை" என்ற நாச்சியார் திருமொழிப் பாசுரம் நினைக்கத்தக்கது. (சக)

**த்வதீய புக்தோஜ்ஜித சேஷ போஜிநா த்வயா நிஸ்ருஷ்டாத்ம பரேண யத் யதா**
**ப்ரியேண ஸேநாபதிநா ந்யவேதி தத் ததாநுஜாநந்தமுதார வீக்ஷணை:.** (சஉ)

| | | | |
|---|---|---|---|
| த்வதீய புக்த உஜ்ஜித சேஷபோஜிநா | உனது போனகஞ் செய்த சேஷத்தை உண்பவனும் | யதா | யாதொருபடியாக |
| த்வயா நிஸ்ருஷ்ட ஆத்மபரேண | உன்னாலே வைக்கப்பட்ட உபய விபூதி நிர்வாஹ பாரத்தையுடையவனும் | ந்யவேதி | விண்ணப்பஞ் செய்யப்பட்டதோ |
| ப்ரியேண | உனக்கு அன்பனுமான | தத் | அந்த விஷயத்தை |
| ஸேநாபதிநா | ஸேநாபதியாழ்வானாலே | ததா | அப்படியே (செய்வதென்று) |
| யத் | யாதொரு விஷயம் | உதார வீக்ஷணை: | அழகிய கடாக்ஷங்களாலே |
| | | அநுஜாநந்தம் | நியமித்தருளாநிற்கிற. |

* * *:—'பரமபதநாதனை எப்போது ஸேவிக்கப்போகிறேனோ' என்று மனோரதிக்கிற இவ்வாளவந்தார் கீழ் "விராஜமா நோஜ்வல பீதவாஸஸம்" என்கிற ச்லோகம் முதலாக அப்பெருமானை வருணிக்கத் தொடங்கி, அவயவ சோபை ஆபரண சோபை ஆயுத சோபை முதலிய எல்லாவற்றையும் முப்பத்தாறும் ச்லோகமளவும் அருளிச்செய்து, அதற்குமேல் இரண்டு ச்லோகங்களாலே பிராட்டியோடுண்டான சேர்த்தியை அநுஸந்தித்து, அதற்குமேல் நித்யஸூரிகளோடுண்டான சேர்த்தியை அநுஸந்திக்க விரும்பி, நித்யஸூரிகளில் முக்கியராகப் பரிகணிதராயுள்ள அநந்த கருட விஷ்வக்ஸேநர்களில் அநந்தனையும் கருடனையும்பற்றிப்பேசின பின் விஷ்வக்ஸேநரைப்பற்றிப் பேசுகிறாரிதில்.

விஷ்வக்ஸேநராகிறார் ஸேனைமுதலியார்; அவர்க்கு சேஷாசநர் என்றும் திருநாமமுண்டு; எம்பெருமான் போனகஞ்செய்த சேடத்தை உண்பவர் என்றே அவர்க்கு நிரூபகம். அதனை இங்கு முதலடியில் அருளிச் செய்கிறார்.

த்வயா நிஸ்ருஷ்டாத்மபரேண—எம்பெருமான் தன்னுடையதான லோக நிர்வாஹ பாரங்களையெல்லாம் ஸேனைமுதலியார் பக்கலிலே வைத்திட்டுத் தான் கவலையற்றுப் பிராட்டியோடு கண்வளர்ந்தருளுகிறான் என்று ப்ரஸித்தமிறே. ஸ்ரீவைகுண்டகத்யத்தில் எம்பெருமானாரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பட்டரும் இவ்வர்த்தத்தை அருளிச் செய்கிறபடி காண்க. ஆக, கலத்ததுண்பவரும் ஸ்ரீகார்ய துரந்தரருமான ஸேனைமுதலியார் சில சில ஸமயங்களில் வந்து ஜகந்நிர்வாஹ விஷயமாக, 'இன்னது இன்னது இப்படி யிப்படி செய்ய வேண்டியிருக்கிறது' என்று விண்ணப்பம் செய்வாராம்; அப்போது எம்பெருமான் 'ஏது? என்ன?' என்று உட்புகுந்து ஆராயாமல் அழகிய திருக்கண்ணோக்கங்களினாலேயே 'தேவரீருக்குத் திருவுள்ளமானபடி செய்வது' என்று அநுமதிபண்ணியிருப்பனும். 'இவர் சொல்லுவது யுக்தமா அயுக்தமா? ஆவச்யகமா அநாவச்யகமா?' என்று ஒன்றுஞ் சிந்தியாமல் அவர் திருவுள்ளமானபடியே செய்யத்தக்கது என்று எம்பெருமான் நிர்ப்பரனாயிருக்கும்படி அவ்வளவு அந்தரங்கராம் ஸேனைமுதலியார். ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமானுக்கு எல்லாருமே ப்ரியர்களாயிருக்கச் செய்தேயும் இவர்க்கு அஸாதாரணமாக 'ப்ரியேண' என்று விசேஷணமிட்ட ஸ்வாரஸ்யம் உணரத்தக்கது. இந்த ச்லோகத்தையே முக்கியமாகக் கொண்டு பட்டர் அடிக்கடி இனிதாக உபந்யஸிப்பராம்—"இத்தத்துவம் ஸேநாபதியாழ்வான் பிரம்பின்கீழே வளர்வது" என்று.

இதில் மூன்றுவது பாதத்தில் "ந்யவேதி தத்" என்றே பெரியோர்களின் பாடம். பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் செய்தருளின பாடமும் இதுவே. ஆனால், சில அச்சுப்பிரதிகளில் "நிவேதிதம்" என்று ப்ரதீகோபாதாநம் செய்திருப்பதாகக் காண்கிறது. ஓலை ஸ்ரீகோசங்களில் "ந்யவேதி" என்றும், "தத் ததாநுஜாநந்தம்" என்றுமே ப்ரதீகோபாதாநம் காண்கிறது. "நிவேதிதம்" என்கிற ஒரு பாடமும் முன்னமேயிருந்ததாக ஸ்ரீதேசிகபாஷ்யத்தில் விளங்காநின்றது. அப்பாடத்திலும் அநுபபத்தியில்லை. தத் என்பது தன்னடையே வருமிறே. ... ... .... ... ... (சஉ)

**ஹதாகில க்லேச மலை: ஸ்வபாவத: த்வதாநுகூல்யைகரஸை: தவோசிதை:.**
**க்ருஹீததத்தத்பரிசார ஸாதநை: நிஷேவ்யமாணம் ஸசிவை: யதோசிதம்.** (சங)

| | | | |
|---|---|---|---|
| ஸ்வபாவத: | இயற்கையாகவே | க்ருஹீத தத்தத் பரிசார ஸாதநை: | அந்தந்த கைங்கரியங்களுக்கு உபகரணங்களான குடை சாமரம் முதலியவற்றைக் கையிலேந்தியிருப்பவர்களாயுமுள்ள |
| ஹத அகில க்லேச மலை: | வருத்தங்களும் மலங்களுமெல்லாம் அற்றவர்களாயும் | | |
| த்வத் ஆநுகூல்ய ஏக ரஸை: | உனது கைங்கர்யமொன்றையே போகமாக வுடையவர்களாயும் | ஸசிவை: | மந்த்ரிகள் போன்ற நித்யஸூரிகளாலே |
| | | யதோசிதம் | தகுதியாக |
| தவ உசிதை: | உனக்கு ஏற்றவர்களாயும் | நிஷேவ்யமாணம் | ஸேவிக்கப்படாநிற்கிற. |

* * *—கீழே மூன்று ச்லோகங்களால் அநந்த கருட விஷ்வக்ஸேநர்களைப்பற்றி அருளிச் செய்தாயிற்று. அவர்களைப்போலே எப்போதும் எம்பெருமானுக்குப் பணிவிடைகள் செய்துகொண்டு போரும் மற்றும் பலபல நித்யஸூரிகளுமுண்டாகையால் அவர்களெல்லாரோடு முண்டான சேர்த்தியை அநுஸந்திப்பது இந்த ச்லோகம்.

அநாதிகாலமாக எவ்விதமான க்லேசங்களும் மலங்களும் இல்லாதவர்களும், இயற்கையாகவே உன்னுடைய திருவடிகளில் தொண்டு பூண்டிருப்பதையே போக்யமாகக் கொண்டவர்களும், ஸ்வரூபத்தாலும் குணங்களினாலும் உன்னோடு ஒத்திருப்பவர்களும், குடை சாமரம் முதலிய கைங்கர்ய ஸாதனங்களை ஆதராதிசயத்தினால் ஒருபோதும் கைவிடாமல் வஹித்துக்கொண்டேயிருப்பவர்களுமான உனது மந்த்ரிகளாலே ஸேவிக்கப் படாநின்ற வுன்னை எப்போது கண்டுகளிப்பேன்? என்று நாற்பத்தாறும் ச்லோகத்தோடே கூட்டிக்கொள்க.

ஹத அகில க்லேச மலை:—அவித்யை, அஹங்காரம், ராகம், த்வேஷம், அபிநிவேசம் என்கிற ஐந்தும் க்லேசங்களென்று சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டவை. மலமாவது பிரக்ருதி ஸம்பந்தம். க்லேசமும் மலமும் இல்லாதவர்கள் என்றுவது; க்லேசமாகிற மலம் இல்லாதவர்களென்றுவது பொருள் கொள்க. ஸம்ஸாரிகள் உபாயாநுஷ்டாநம் முதலியவற்றால் முக்திபெற்றபின் க்லேசமலங்கள் அற்று ஆநுகூல்யைகரஸர்களாக இருப்பர்களாகிலும் இங்கு ஸ்வபாவத: என்று விசேஷித்திருப்பதால் இந்த விசேஷணங்கள் மற்றையோரைத் தள்ளி நித்யஸூரிகளைச் சொல்லக் கடவன. இயற்கையாகவே இப்படி யுள்ளவர்கள் நித்யஸூரிகளே யாவர்.

இரண்டாமடியில் "த்வதாநுகூல்யைகரஸை:" என்பதே பெரியவாச்சான்பிள்ளைக்கும் தேசிகனுக்கும் பாடம். "ஸதாநுகூல்ய" என்ற பாடமும் உண்டென்பர். ஸதா—எப்போதும் என்று பிரிப்பது. விசேஷ்ய நிர்த்தேசம் நித்யஸூரிகளென்ன வேண்டுமிடத்து "ஸசிவை:" என்றது-ஸ்ரீவைகுண்டநாதனாகிற சக்ரவர்த்திக்கு நித்தியஸூரிகள் மந்த்ரிகளாக வுள்ளவர் என்ற கருத்தைக் காட்டுதற்காம். இங்கே பெரியவாச்சான்பிள்ளை அழகாக அருளிச் செய்யும் ஸ்ரீஸூக்தி:—[ஸசிவை:] வாத்ஸல்யத்தாலே அவன் முறையழியப் பரிமாற நினைத்தாலும் அவனை முறையுணர்த்தி அடிமை செய்யுமவர்கள்; நீதி வானவரிறே. ஆச்ரிதரக்ஷணத்திலே தேவரை ப்ரேரிக்குமவர்களென்னவுமாம்," என்று.

யதோசிதம் நிஷேவ்யமாணம்—அவரவர்களுடைய அதிகாரத்திற்குத் தகுதியாகவும், உன்னுடைய திருவுள்ளத்திற்குத் தகுதியாகவும், ஸமயங்களுக்குத் தகுதியாகவும் பணிசெய்கிறார்களென்கை. ... ... ... ... (சரு)

**அபூர்வ நாநா ரஸபாவ நிர்ப்பர ப்ரபத்தயா முக்த்த விதக்த்த லீலயா**
**க்ஷணாணுவத் க்ஷிப்த பராதிகாலயா ப்ரஹர்ஷயந்தம் மஹிஷீம் மஹாபுஜம் (சசு)**

| | | | |
|---|---|---|---|
| அபூர்வ நாநாரஸ பாவ நிர்ப்பர ப்ரபத்தயா | விலக்ஷணங்களான பல வகை ரஸங்களாலும் பாவங்களாலும் நெருக்குண்டு இடைவிடாது தொடர்ந்து நடப்பதாய் | முக்த்த விதக்த்த லீலயா | மிகவுமழகிய லீலையினாலே |
| | | மஹிஷீம் | பெரிய பிராட்டியாரை |
| | | ப்ரஹர்ஷயந்தம் | ஸந்தோஷப்படுத்தாநிற்கிற, |
| க்ஷண அணுவத் க்ஷிப்த பர ஆதி காலயா | ஒரு க்ஷணப்பொழுதில் ஏகதேசம்போலே(விரைவாகக்) கழிக்கப்பட்ட காலங்களை யுடையதான | மஹா புஜம் | விசாலமான புஜங்களை யுடையனாயிருக்கிற. |

* * *:—இப்படிப்பட்ட எம்பெருமான் எல்லா வியாபாரங்களிலும் பிராட்டியோடு ஸமரஸனாயிருக்கும்படியைப் பேசுவது இந்த ச்லோகம். கீழே [௩௭, ௩௮, ௩௯ ச்லோகங்களில்] பிராட்டியோடுள்ள சேர்த்தியழகுமாத்திரமே அநுஸந்திக்கப்பட்டது. இதில் அப்பிராட்டியை உகப்பிக்கும் பரிசு சொல்லுகிறதென்று வாசி காண்க.

[முக்த விதக்தலீலயா மஹிஷீம் ப்ரஹர்ஷயந்தம்.] அந்தந்த அவஸ்தைகளுக்குத் தகுதியாக அழகாயும் நிபுணமாயும் செய்யப் படுகிற லீலையினாலே பிராட்டியை மிகவும் உகப்பிக்கின்ற உன்னை எப்போது ஸேவிக்கப் போகிறேன்? அந்த லீலை இன்னமும் எப்படிப்பட்டதென்னில்; [அபூர்வநாநாரஸபாவ நிப்பரப்ரபத்தயா.] காந்தர்வ வேதத்தில் காட்டப்பட்டிருக்கின்ற வீரம் ச்ருங்காரம் முதலிய ரஸங்களும், உத்ஸாஹம், முதலிய பாவங்களும் ஒவ்வொரு க்ஷணந்தோறும் முன்பு கண்டறியாதவைபோலே புதிதுபுதிதாக விளைகின்றனவாம்: அப்படிப்பட்ட பலவகை ரஸங்களாலும் பாவங்களாலும் மேன்மேலும் தொடர்ச்சியாகச் சொல்லுகின்றதாம் எம்பெருமானது லீலை.

இன்னமும் எப்படிப்பட்டதென்னில்; [க்ஷணாணுவத் க்ஷிப்தபராதிகாலயா] பிரமனுடைய ஆயுட்பிரமாண காலத்திற்குப் 'பரம்' என்று பெயர்; அதில் பாதியளவான காலத்திற்குப் 'பரார்த்தம்' என்று பெயர்; இப்படிப்பட்ட மிகப் பெரிய பெரிய காலங்களெல்லாம் சிறிய நொடிப்பொழுதுபோல் கழிகின்றனவாம் அந்த லீலையில். "அவிதிதகதயாமா ராத்ரிரேவ வ்யரம்ஸீத்" என்று உத்தரராம சரிதநாடகத்தில் சொன்னதை ஒரு போலியாக இங்கு ஸ்மரிப்பது. எம்பெருமான் ஆச்சரியமாக லீலா ரஸங்களை அநுபவிப்பிக்கத் தொடங்கிவிட்டால் பல்கோடி நூறுபிரம் ஸம்வத்ஸரங்கள் அவலீலையாகக் கழிந்துபோம் என்றவாறு.

மஹாபுஜம் என்ற விசேஷணத்தின் தாத்பர்யத்தைப் பெரியவாச்சான்பிள்ளை விவரித்தருளுமழகு நோக்கத்தக்கது. அதாவது எம்பெருமான், கீழ்ச் சொன்ன லீலாரஸங்களால் மாத்திரம் பிராட்டியை உகப்பிக்குமவனல்லன்; "அணிமானத் தடவரைத் தோள்" என்னப்பட்ட மஹத்தான திருத்தோள்களாலும் அணைத்து உகப்பிக்குமவன்; ஸ்வரூப குணங்களிற்காட்டிலும் ரூபகுணமிறே இனியதாயிருப்பது—என்று தாத்பர்யமருளிச் செய்வர்.

இரண்டாமடியில், "ப்ரபுத்தயா" என்றே பலரும் ஓதுவர்களேனும் அப்பாடம் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்திற்கும் தேசிக பாஷ்யத்திற்கும் இணங்கியதன்று; ப்ரபத்தயா என்றே ஓதுக. ... ... ... ... ... (௪௪)

அசிந்த்ய திவ்யாத்புத நித்யயௌவந ஸ்வபாவலாவண்ய மயாம்ருதோததிம்.
ச்ரியச்ச்ரியம் பக்தஜநைக ஜீவிதம் ஸமர்த்த மாபத்ஸகை மர்த்தி கல்பகம் (௪௫)

| | | | |
|---|---|---|---|
| அசிந்த்ய திவ்ய அத்புத நித்ய யௌவந ஸ்வபாவ லாவண்ய மய அம்ருத உததிம் | சிந்தைக்கு எட்டாததாய் திவ்யமாய் ஆச்சரியமாய் நித்யமாயிருக்கிற யௌவநத்தை ஸ்வபாவமாக வுடைய லாவண்யம் நிறைந்த அமுதக்கடலாய் | பக்தஜந ஏக ஜீவிதம் | பக்தஜநங்களுக்கு நற்சீவனைப் |
| | | ஸமர்த்தம் | ஸர்வ சக்தனைப் |
| | | ஆபத்ஸகம் | ஆபத்துக்களிலே வந்து உதவுமவனைப் |
| ச்ரியஃ ச்ரியம் | திருவுக்கும் திருவாய் | அர்த்தி கல்பகம் | யாசிப்பவர்களுக்குக் கல்பவ்ருக்ஷமென்னத் தகுந்தவனையிருக்கிற. |

* * *—"விராஜமாநோஜ்வல" என்கிற முப்பத்திரண்டாம் ச்லோகம் தொடங்கி எம்பெருமானுக்கு விசேஷணங்களையே வரிசையாக அடுக்கி வருகிறார்; அந்த விசேஷண ஸங்கீர்த்தநம் இந்த ச்லோகத்தோடு முற்றுப் பெறுகின்றது. கீழ் ச்லோகங்களில் தனித்தனியே ப்ரஸ்தாவிக்கப்பட்ட திவ்யமங்கள விக்ரஹகுணம், திவ்யாத்மகுணம் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து அநுபவிக்கிறாரிதில்.

வாக்குக்கும் நெஞ்சுக்கும் விஷயமாகாதபடி அபரிச்சிந்நமான போக்யதையையுடையதாய் அப்ராக்ருதமாய் ஆச்சர்யமாய் எப்போதும் ஒருபடிப்பட்டிருக்குமதான யௌவநபருவத்தையே இயற்கையாகவுடையவனும், லாவண்ய மயமான அமுதக்கடல்போன்றவனும், * திருவுக்கும் திருவாகியசெல்வனும், 'உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்" என்றிருக்கு மடியவர்கட்கு அப்படியே ஸகலவித ஜீவநமுமாயிருப்ப

வனும், (அல்லது) பக்த ஜநங்களையே தனக்கு உயிர் நிலையாகவுடையவனும், "ஆற்ற நல்லவகை காட்டுமம்மானை" என்கிறபடியே—நித்ய ஸூரிகளநுபவிக்க உரிய போகங்களை நித்ய ஸம்ஸாரி களுக்கும் பொறுக்கப் பொறுக்க அநுபவிப்பிக்கவல்ல ஸமர்த்தனும், ஆபத் காலங்களிலே வந்து உதவுமவனும், வேண்டுவார்க்கு வேண்டினபடி கொடுத்தருள்பவனுமான உன்னை என்றைக்கு அநுபவிக்கப்போகிறேன் என்று மேல் ச்லோகத்தோடேகூடப் பொருள்படக்கடவது.

அசிந்த்ய திவ்யாத்புத நித்ய யௌவநஸ்வபாவச்சாஸௌ லாவண்யமயாம்ருதோததிச்ச என்று விசேஷணோபயபத கர்மதாரய ஸமாஸம் பண்ணுதல் நன்று. லாவண்யமயாம்ருதோ ததியை விசேஷ்யமாகக் கொண்டு, யௌவநஸ்வபாவத்வத்தை அதற்கு விசேஷணமாக்கி யுரைத்தருளினர் தூப்புலம்மான்.

லாவண்யமாவது—ஸமுதாய சோபை; நீரோட்டம் என்பர்கள். மிகவும் ம்ருதுவாயும் கண்களுக்கு ஆநந்தத்தைக் கொடுக்க வல்லதாயுமுள்ள கங்குகரையற்ற தேஜஸ்ஸை லாவண்ய மென்பர்கள். இப்படிப்பட்ட லாவண்யமயமான அமுதக்கடலாகவே எம்பெருமான் உப சரிக்கப்பட்டனன். 1. குழுமித் தேவர்குழாங்கள் கைதொழச், சோதி வெள்ளத்தி னுள்ளே எழுவதோருரு" என்ற ஆழ்வாரருளிச்செயலை இங்கு நோக்குக.

ஆக, முப்பத்திரண்டாம் ச்லோகம் முதல் இவ்வளவும் பலபல விசேஷணங்களினால் பரமபதநாதனை வருணித்தாராயிற்று. இவ்விசேஷணங்களுக்கு உரிய விசேஷ்ய பதமும் மற் றும் க்ரியா பதம் முதலியவைகளும் அடுத்த ச்லோகத்தில் உள்ளன. ... ... (சரு)

**பவந்த மேவாநுசரந் நிரந்தரம் ப்ரசாந்த நிச்சேஷ மநோரதாந்தர:**
**கதாஹ மைகாந்திகநித்ய கிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாத ஜீவித:** (சசா)

| | | | |
|---|---|---|---|
| பவந்த மேவ | உன்னையே | ஐகாந்திக நித்ய கிங்கர: | நித்ய நியத கைங்கரியத்தை யுடையனாய் |
| அஹம் | நான் | ஸநாத ஜீவித: | நாதனோடு கூடிய உயிரை யுடையனாய் |
| நிரந்தரம் | இடைவிடாமல் | கதா ப்ரஹர்ஷயிஷ்யாமி | எப்போது திருவுள்ளத்தை உகப்பிக்கப்போகிறேன். |
| அநுசரந் | பின் தொடர்ந்துகொண்டு | | |
| ப்ரசாந்த நிச்சேஷ மநோரதாந்தர: | வேறு எவ்விதமான ஆசையும் அற்றவனாய் | | |

* * *:—கீழ்ச் சொன்ன ஸ்வரூபரூபகுண விபூதிகளால் பரிபூர்ணனாய் நித்ய விபூதி யிலே குறையின்றி யெழுந்தருளியிருப்பவனைவுன்னை நித்யாநுபவம் பண்ணி, உன் திருவுள் ளத்திலிருந்த வருத்தத்தைத் தீர்த்து மகிழ்விப்பது என்றைக்கோ? என்கிறார். இடைவிடாமல் உன்னையே சூழ்ந்துகொண்டும், நீ தவிர மற்ற விஷயங்களில் நசைகளை அடியோடு ஒழித்து விட்டும், சாச்வதமான கைங்கர்யத்தைச் செய்துகொண்டும், அதனாலேயே பரம ப்ரயோஜ நத்தைப் பெற்றிருக்கும் ஸத்தையையுடையனாய் என்றைக்கு உன்னை நான் உகப்பிக்கப் போகி றேன்.! "எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன்றன்னோடுற்றோமேயாவோம் உனக்கே நாமாட் செய்வோம் மற்றை நங்காமங்கள் மாற்று" என்று ஆண்டாளருளிச்செய்ததைப் பெரும்பா லும் இந்த ச்லோகத்தால் மொழிபெயர்த்தாராயிருக்கிறது.

நிரந்தரம் அநுசரந் என்றது—"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம், நின் றால் மரவடியாம்" என்றாற்போலே இடைவிடாது அந்தந்த ஸமயங்களுக்குத் தகுதியான கைங் கரியங்களைச் செய்துகொண்டு என்றபடி. "மற்றை நங்காமங்கள் மாற்று" என்ற பாசுரமே இதில் இரண்டாமடியாகப் பரிணமித்திராநின்றது.

ஐகாந்திகநித்ய கிங்கர:—ஒரு வஸ்துவிலேயே நியதமாக இருக்குமது ஐகாந்திக மெனப் படும். ஸநாதஜீவித:—அப்படிப்பட்ட நித்திய கைங்கர்யம் செய்பவனாக என்னை ஆக்கின லொழிய என்னுடைய ஸத்தை பயன் பெறமாட்டாது என்பது கருத்து. இந்நிலத்திலும் என் உயிர் உன்னை நாதனாகப் பற்றியிருந்தாலும் உன்னால் உபேக்ஷிக்கப்பட்டிருக்கிறேனாகை யால் அநாதன் போல இருக்கிறேன்; இந்த தீநஸ்திதி உன்னுடைய ஸங்கல்பத்தினால் தவிரு வது எப்போதோ?

1. திருவாய் மொழி 5-5-10.

இந்த ச்லோகத்தில் ஒரு ஸத்ஸம்ப்ரதாயார்த்தம் சிக்ஷிதமாகிறபடியை நோக்கவேணும். எம்பெருமானைப் பெறுவது சேதநனுக்குப் புருஷார்த்தமா? அல்லது சேதநனைப்பெறுவது எம்பெருமானுக்குப் புருஷார்த்தமா? என்று கேள்வி வந்தால், அவாப்த ஸமஸ்தகாமனான எம்பெருமானுக்குப் புதிதாக ஒரு லாபம் சொல்லலாமோ? சேதந லாபம் எம்பெருமானுக்குப் புருஷார்த்தமன்று; ஈச்வரலாபமே சேதநனுக்குப் புருஷார்த்தம் என்பர் சில ஸம்ப்ரதாயஸ்தர். அங்ஙனன்றிக்கே, சேதநவஸ்துவைப் பெறுதல் எம்பெருமானுக்கே புருஷார்த்தம் என்பது இதில் ப்ரஹர்ஷயிஷ்யாமி என்ற சொற்போக்கிலே காட்டப்படுமழகு பாரீர். "உன்னை அநுபவித்து நான் எப்போது ஸந்தோஷிக்கப்போகிறேன்" என்னாமல், "எப்போது உன்னை ஸந்துஷ்டனாகச் செய்யப்போகிறேன்" என்றிறே இங்குச் சொல்லிற்று. சேதந லாபத்தால் எம்பெருமான் திருவுள்ளமிறே உகப்பது. அதனாலுண்டாகும் உகப்பேயிறே இவனுக்குள்ளது. எம்பெருமானாரும் இந்த ஸ்வாரஸ்யத்தைத் திருவுள்ளம் பற்றியே ஸ்ரீபாஷ்யஸமாப்தியில் "நச பரமபுருஷ: ஸத்யஸங்கல்ப: அத்யர்த்தப்ரியம் ஜ்ஞாநிநம் லப்த்வா கதாசித் ஆவர்த்தயிஷ்யதி" என்று அருளிச் செய்தார். "ஜ்ஞாநிநம் லப்த்வா" என்ற அழகு அறிவீரோ? "பன்னியுரைக்குங் காற்பாரதமாம்." ... ... ... ... ... (சுசு)

**திகசுசி மவிநீதம் நிர்த்தயம் மாமலஜ்ஜம் பரமபுருஷ யோஹம் யோகிவர்யாக்ரகண்யை:,**
**விதிசிவ ஸநகாத்யைர் த்யாது மத்யந்ததூரம் தவ பரிஜநபாவம் காமயே காமவ்ருத்த:. (சஎ)**

| | | | |
|---|---|---|---|
| பரமபுருஷ | புருஷோத்தமனே! | தவ பரிஜநபாவம் | உமது பரிசாரகத்வத்தை |
| காமவ்ருத்த: | மனம்போனபடி நடக்கிற | காமயே | விரும்புகின்றேனே |
| ய: அஹம் | யாவனொரு நான், | (தம்) | அப்படிப்பட்ட |
| யோகிவர்ய அக்ர கண்யை: | யோகி ச்ரேஷ்டர்களுள் சிறந்தவர்களான | அசுசிம் | அபரிசுத்தனும் |
| | | அவிநீதம் | வணக்கமற்றவனும் |
| விதி சிவ ஸநக ஆத்யை: | பிரமன் சிவன் ஸநகர் முதலானவர்களாலும் | நிர்தயம் | இரக்கமற்றவனும் |
| | | அலஜ்ஜம் | வெட்கமற்றவனுமான |
| த்யாதும் | நெஞ்சால் நினைப்பதற்கும் | மாம் | என்னை |
| அத்யந்த தூரம் | மிகவும் எட்டாததான | திக் | நிந்திக்க வேணும். |

***:—கீழ்ப் பல ச்லோகங்களினால் பரம புருஷனுடைய பெருமைகளை வருணித்துக் கொண்டே வந்து அப்படிப்பட்டவன் விஷயத்திலே நித்ய கைங்கர்யம் பண்ணப் பெறவேணுமென்று கீழ் ச்லோகத்தில் ப்ரார்த்தித்து நின்றார். அதில், "பவந்தம்" [உன்னை] என்கிற பதம் அநுஸந்திக்கும்போது அப்பரமபுருஷனுடைய எல்லையற்ற உயர்நலங்களும், அஹம் [நான்] என்கிற பதம் அநுஸந்திக்கும்போது தம்முடைய எல்லையற்ற தாழ்வுகளும் ஆளவந்தார்தமக்கு நினைவுக்கு வந்தன. வாவே, 1. "அம்மானாழிப்பிரானவன் எவ்விடத்தான்? யானார்?" என்றாற்போலே திருவுள்ளத்திலேபட்டு, 'உத்தமோத்தமனான அவன் எங்கே!' அதமாதமனான நான் எங்கே!; தேவர்களுக்கு அர்ஹமான புரோடாசத்தை நாய் விரும்புவது போலன்றோ மஹான்களுக்கு அர்ஹமான அவனுடைய கைங்கரியத்தை நாயினேன் விரும்புவது!; மதிகெட்டுப்போய் இப்படியும் விரும்பலாமோ!; ஸம்ஸார நாற்றமே அறியாத நித்யஸூரிகள் ஆசைப்படவேண்டுவதான நித்யகைங்கர்யத்தை நித்ய ஸம்ஸாரியான நான் ஆசைப்படுவதானது ராஜபோக்யமான அன்னத்திலே விஷத்தைக் கலப்பதுபோலாகுமன்றோ; ஹா ஹா! என்ன ஸாஹஸமான காரியம் செய்யத்துணிந்தோம்!—என்று தம்மைத் தாமே வெறுத்துக் கொள்ளுகிறார்.

அசுசிம், அவிநீதம், நிர்த்தயம், அலஜ்ஜம் என்கிற நான்கு விசேஷணங்களால் தம்முடைய புன்மையைப் பேசுகிறார். பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமாயிருப்பவன் நான்; நல்ல ஞானமும் நல்லவொழுக்கமும் உண்டாகும்படி ஆசார்யர்கள் பக்கலிலே சிக்ஷை பெறாதவன் நான்; அமுதத்தை விஷத்தாலே கெடுக்க நினைக்கும் கல்நெஞ்சரைப்போலே * அமுதிலுமாற்ற இனியனாய் ஆராவமுதாயிருக்கிற வுன்னை ஸ்வஸம்பந்தமாகிற விஷத்தாலே கெடுக்கப்பார்த்த கல்நெஞ்சன் நான்; ஸார்வபௌமனான மஹாராஜனைச் சாணி தட்டும் குறத்தி விரும்புமாபோலே*உயர்வறவுயர்நலமுடையவனான அயர்வறுமமரர்களதிபதியை நாம் விரும்பினோமேயென்று வெட்கப்படவுந் தெரியாதவன் நான்; இப்படிப்பட்ட

1. திருவாய்மொழி ௫—1—7.

என்னை 'சீச்சீ' என்று எல்லாரும் நிந்திக்கவேணுமென்கிறார் முதலடியில். ஏன் நிந்திக்கவேணு மென்றால், அதற்குக் காரணமருளிச் செய்கிறார் மற்ற மூன்றடிகளால்.

மேலானவர்களினும் மேற்பட்ட புருஷோத்தமனே!' யோகி ச்ரேஷ்டர்களில் முன்னே எண்ணத்தக்கவர்களான ப்ரஹ்மருத்ராதிகளென்ன, ஸநக ஸநந்தநாதிகளென்ன இவர் களாலே நெஞ்சால் நினைப்பதற்கும் எட்டாத உனது சிறந்த கைங்கர்யத்தைத் தான்தோன்றி யான நான் ஆசைப்படுகிறேனென்றோ; ஆகையாலே நான் நிந்தைக்கு உரியேன் என்றாராயிற்று.

நித்யஸூரிகளிற் காட்டிலும் உத்தமாதிகாரியான ஆளவந்தார் தாம் இப்படியருளிச் செய்தது மஹா நீசர்களான அஸ்மதாதிகளின் அநுஸந்தானத்திற்காக. "திருமாற்கு யாமார் வணக்கமார் ஏபாவம்! நன்னெஞ்சே!' நாமாமிகவுடையோம் நாழ்" [பெரிய திருவந்தாதி-10.] என்றார் நம்மாழ்வாரும். பகவத்ஸந்நிதியிலேபுகுந்தால், எம்பெருமானுகளுள்ள உத்கர்ஷங்களையும் நமக்குள்ள அபகர்ஷங்களையும் ஆராய்ந்து இப்படி அநுஸந்திக்க வேணுமென்கிற சாஸ்த்ரார்த் தம் காட்டுகிறபடி. "கர்ப்பஜந்மஜராம்ருதி க்லேச கர்மஷரோமிக:, ச்வேவ தேவ வஷட்க்ருதம் த்வாம் ச்ரியோர்வஹ மகாமயே." என்றார் பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில். நிற்க.

இந்த ச்லோகத்தில் முதலடியில் நிர்த்தயம் என்ற பாடமே தொன்றுதொட்டுப் பெரி யோர்களனுஸந்திப்பதும் ஆளவந்தார் அருளிச் செய்ததும் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கி யானித்ததுமாம். நிர்த்தயம் என்றிருப்பதைவிட நிர்ப்பயம் என்றிருந்தால் நன்றாயிருக்குமென் றெண்ணிய சிலர் அப்படியே பாடத்தைத் திருத்தி வியாக்கியானித்தனர். அவ்வளவோடு நில்லாமல், நிர்த்தயம் என்பது சிலருடைய பாடம் என்றெழுதி, அப்பாடத்தில் பெரியவாச் சான்பிள்ளை அருளிச்செய்த அர்த்தத்தைவிட வேறுவகையாக உரைத்தல் யுக்தம் என்றும் உரைத்தனர். "அம்ருதத்தை விஷத்தாலே தூஷித்தாற்போலே விலக்ஷணபோக்யமான பக வத் தத்வத்தைக் கண்ணற்று தூஷிக்கப்பார்த்த நிர்த்தயன்" என்பது பெரியவாச்சான்பிள்ளை யின் பரமபோக்யமான வியாக்கியானஸூக்தி, இதன் ஸ்வாரஸ்யத்தை அறிய கில்லாதே ரஸவி ஹீநமான வேறொரு பொருளைச் சொல்லிவைத்தது ரஸிககோஷ்டீ பஹிஷ்டம். .. (சஎ)

**அபராத ஸஹஸ்ர பாஜநம் பதிதம் பீமபவார்ணவோதரே.**
**அகதிம் சரணாகதம் ஹரே க்ருபயா கேவலமாத்ம ஸாத்குரு.** (சஅ)

| | | | |
|---|---|---|---|
| ஹரே! | ப்ரணதார்த்தி ஹரனை பெருமானே!, | அகதிம் | வேறு கதியற்றவனையும் |
| அபராத ஸஹஸ்ர பாஜநம் | பலவகைப்பட்ட அபராதங்களுக்குக் கொள்கலமாயும் | சரணாகதம் | சரணாகதனென்று பேரிட்டுக் கொண்டவனையுமிருக்கிற அடியேனை |
| பீம பவ அர்ணவ உதரே பதிதம் | பயங்கரமான ஸம்ஸாரக் கடலினுள்ளே விழுந்தவனையும் | க்ருபயா கேவலம் | உனது திருவருளொன்றையே கொண்டு |
| | | ஆத்மஸாத் குரு | திருவுள்ளம் பற்றியருள வேணும். |

* * *—பகவத் கைங்கர்யத்திற்குத் தாம் அயோக்யர் என்று அகலப் பார்த்தார் கீழ் ச்லோகத்தில். அந்த கைங்கர்யத்தில் அளவற்ற ஆசையை வைத்துவிட்டபின் எங்ஙனே பின் வாங்க முடியும்! இரும்பையும் பொன்னாக்கவல்ல சக்தி எம்பெருமானுக்கு உண்டாகையாலே நம்முடைய அயோக்யதையைத் தவிர்த்து யோக்யதையை உண்டு பண்ணி அருகே சேர்த்துக் கொள்ளும்படியான சக்தி அவனுக்கு உண்டென்றும், நிர்ஹேதுக க்ருபையினால்தான் அப் படி அவன் செய்தருளவேணுமென்றும் நிச்சயித்து, ஸ்வாமிந்!, பல்லாயிரம் பாவங்கள் நிறைந் தவனையும் கொடிதான ஸம்ஸாரக் கடலினுள் விழுந்து துளங்குபவனையும் எவ்விதமான உபாய மும் அற்றவனையும் சரணாகதனையுமிருக்கிற அடியேனை தேவரீருடைய க்ருபை யொன்றையே கொண்டு கைங்கர்யத்திற்கு ஆளாக்கிக் கொள்ளவேணுமென்று ப்ரார்த்தித்தாராயிற்று.

இதில், விசேஷணங்களை மாத்திரம் அருளிச் செய்தாரே தவிர விசேஷ்யமான தம்மை மாம் என்கிற ஒரு சொல்லாலே குறிப்பிடவில்லை; கீழ் ச்லோகத்தில் தம்மை வெறுத்துக்கொண் டாராகையால் அப்படி வெறுப்புக்கு இடமாயும் நிந்தைக்கு யோக்யமாயுமிருக்கிற தம்மை மாம் என்று சுட்டிக் காட்டிக்கொள்ள மனமில்லைபோலும்.

பகவத் ஸந்நிதிகளிலே புகும்போது இந்த ச்லோகம் அநுஸந்திக்கப் பாங்கானது. (சஅ)

**அவிவேக கநாந்த திங்முகே பஹுதா ஸந்தத து:க்க வர்ஷிணி**
**பகவந் பவதுர்த்திநே பத: ஸ்கலிதம் மா மவலோகய யாச்யுத.** (சகூ)

| | | | |
|---|---|---|---|
| பகவந் அச்யுத ! | அடியாரைக் கைவிடாத எம்பெருமானே !, | பவ துர்த்திநே | ஸம்ஸாரமாகிற துர்த்திநத்தில் |
| அவிவேக கந அந்த திங்முகே | அவிவேகமாகிற மேகங்களினால் இருண்டு கிடக்கிற திசைகளையுடையதும் | பத: | நல்வழியில் நின்றும் |
| பஹுதா | பலவிதமாக | ஸ்கலிதம் | தப்பியிருக்கிற |
| ஸந்தத து:க்க வர்ஷிணி | இடைவிடாமல் பெருகுகின்ற துக்கங்களை வர்ஷித்துக்கொண்டிருப்பதுமான | மாம் | அடியேனை |
| | | அவலோகய | கடாக்ஷித்தருள வேணும். |

உன் கடாக்ஷமே அடியேனுடைய உஜ்ஜீவனத்துக்கு ஹேதுவென்கிறார். "மேகச்சந்நே ஹ்நி துர்த்திநம்" என்ற அமரகோசத்தின்படி மப்பு மூடின தினத்திற்கு துர்த்திநமென்று பெயர். இங்கு ஸம்ஸாரத்தை துர்த்திநமாக ரூபிக்கிறார். துர்த்திநம் எப்படி யிருக்குமென்றால், மேகங்களால் மூடப்பட்டு இருள்நிறைந்து திசைகள் தோன்றப் பெறுமலிருக்கும். அஜ்ஞாநமாகிற மேகத்திரளாலே இருள் மூடி நல்வழி தீவழி தெரியப் பெறுமலிருக்குமிறே ஸம்ஸாரமும். இன்னமும் இடைவிடாது ஜலதாரையின் வர்ஷத்தை யுடையதாயிருக்கும் துர்த்திநம்; ஸம்ஸாரமும் "நண்ணுதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க, எண்ணாராத் துயர்விளைக்கு மிவையென்ன உலகியற்கை!" என்றபடி பலவகைப்பட்ட துக்கங்களை வர்ஷியாநிற்கும். ஆக இவ்வகைகளாலே துர்த்திநமென்னத்தக்க ஸம்ஸாரத்திலே வழி தப்பித் துவள்கின்ற அடியேனைக் கடாக்ஷித்தருளவேணுமென்றாராயிற்று.

அவிவேகமாவது ஆராய்ச்சியில்லாமை; தேஹத்திற் காட்டில் ஆத்மா வேறுபட்டது என்கிற ஞானமும், இது விடத்தக்கது, இது பற்றத்தக்கது என்கிற ஞானமும் முதலானவை இல்லாமை. பத: ஸ்கலிதம்="பாவியேன் பலகாலம் வழி திகைத்து அலமருகின்றேன்" என்ற ஆழ்வாருளிச்செயலை நினைக்க. ... ... ... ... (சகூ)

**நம்ருஷா பரமார்த்த மேவ மே ச்ருணு விஜ்ஞாபந மேகமக்ரத:.**
**யதி மே ந தயிஷ்யஸே தத: தயநீயஸ் தவ நாத துர்லப:** (ருய)

| | | | |
|---|---|---|---|
| நாத | எம்பெருமானே !, | மே | அடியேனுக்கு |
| ந ம்ருஷா | பொய்யன்றிக்கே | ந தயிஷ்யஸே யதி | அருள் செய்யாயாகில் |
| பரமார்த்தம் ஏவ | உண்மையாகவேயிருக்கிற | தத: | அடியேன் கைதப்பிப்போனபின்பு |
| மே ஏகம் விஜ்ஞாபநம் | அடியேனது ஒரு விண்ணப்பத்தை | தவ | உனக்கு |
| அக்ரத: | முந்துறமுன்னம் | தயநீய: | அருள் செய்யத் தகுந்தவன் |
| ச்ருணு | கேட்டருள் ; | துர்லப: | கிடைக்கமாட்டான். |

***:—"இமையோர் தலைவா! மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே" என்ற ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை இதில் முன்னடிகளாலே மொழிபெயர்த்தாராயிருக்கிறது. எனக்கு தேவரீருடைய திருவருள் தவிர வேறு புகலில்லாதாப்போலே தேவரீர்க்கும் என்னைத் தவிர்த்து வேறொருவன் தயை பண்ணத்தக்கவன் கிடைக்கமாட்டான்; கொள்வார் தேட்டமான க்ருபைக்கு என்னைப் பாத்திரமாக்காவிடில் வேறு பாத்திரம் கிடைப்பதரிது; ஆகையாலே இழக்கவேண்டா என்கிறார். அவச்யம் அடியேன்மீது அருள்புரியவேணுமென்பதை ஒரு சமத்காரமாகச் சொன்னபடி. ... ... ... ... (ருய)

**ததஹம் த்வத்ருதே ந நாதவாந் மத்ருதே த்வம் தயநீயவாந் நச.**
**விதிநிர்மித மேதந்வயம் பகவந் பாலய மாஸ்ம ஜீஹப:** (ருக)

| | | | |
|---|---|---|---|
| பகவந் | எம்பெருமானே!, | மத் ருதே | என்னைத் தவிர (வேறொருவனை) |
| தத் | ஆகையினாலே | | |
| அஹம் | அடியேன் | ந தயநீயவாந் | அருள் கொள்பவனாக உடையயல்லே; |
| த்வத் ருதே | உன்னைத் தவிர (வேறொருவனை) | விதி நிர்மிதம் | தெய்வ வசத்தாலே வாய்ந்த |
| ந நாதவாந் | நாதனாக உடையேனல்லேன்; | ஏதம் அந்வயம் | இந்த ஸம்பந்தத்தை |
| | | பாலய | காப்பாற்றிக்கொள்; |
| த்வம் ச | நீயும் | மா ஸ்ம ஜீஹப: | விடுவிக்க வேண்டா. |

* * *:—கீழ் ச்லோகத்தில் அடியேன் செய்த விண்ணப்பம் உண்மையாகையினாலே, ஸர்வசக்தனாய்ப் பரம காருணிகனான உன்னைத் தவிர்த்து வேறொரு நாதன் எனக்கில்லை; உனக்கும் என்னைத்தவிர்த்து வேறொருவன் இரங்குவதற்கு இலக்காகக் கிடைக்கமாட்டான். எண்ணிறந்த குற்றங்களைச்செய்து அளவற்ற துன்பங்களை யநுபவிப்பவனன்றோ தயைக்கு விஷயமாகக் கூடியவன்; அப்படிப்பட்டவன் என்னிற் காட்டில் வேறொருவன் எங்குமிலனாகையால் இப்படிப்பட்ட என்னை விட்டால் உனக்கு வேறொரு தயநீயன் கிடைக்கவேமாட்டானென்பது திண்ணம். நம்மிருவர்க்கும் பரஸ்பரம் இப்படிப்பட்டதொரு ஸம்பந்தமுள்ளதென்பதை அல்பஜ்ஞனான நான் உனக்கு அறிவிக்கவும்வேணுமோ? நீ தான் ஸர்வஜ்ஞனான பகவானன்றோ? விதிவசமாக வாய்த்திருக்கிற இந்த ரக்ஷ்ய ரக்ஷகபாவ ஸம்பந்தத்தை நீதானே கைவிடாது காத்துக்கொள்ளவேணும்; இதனை இழக்கவேண்டா என்று ஒரு சமத்காரமாக அருளிச் செய்கிறாராயிற்று.

விதிநிர்மிதம் என்றவிடத்து விதியாவது யாது? எம்பெருமானைக் காட்டிலும் விதியென்று வேறொரு வஸ்து உண்டோ? என்று கேள்வி பிறக்கக்கூடும்; ஏதோவொரு ஸுக்ருத விசேஷமடியாக ஒருகால் நேரும் பகவத்க்ருபையே இங்கு விதியெனப்படுவது. நம்மால் பரிஹரிக்க முடியாததை நாம் விதி யென்கிறோம்; அப்படியே இந்த ஸம்பந்தமும் "உன்றன்னோடுறவேல் நமக்கு இங்கொழிக்க வொழியாது" என்றபடி எம்பெருமானாலும் பரிஹரிக்க வொண்ணாதது என்பதை விளக்குதற்காகவே விதி யென்னும் பதம் இங்குப் பிரயோகிக்கப் பட்டதென்க.

"ஏதமந்வயம்" என்றும் "ஏததந்வயம்" என்றும் பாடபேதம். பொருள் ஒன்றே.

மா ஸ்ம ஜீஹப:—ஓஹாக்-த்யாகே' என்ற தாதுவில் ஜஹாதி என்றரூபம் ணிச்சில் ஹாபயதி என்றாகும்; அது லுங்லகாரத்தில் 'அஜீஹபத்' என்றாகும்; மா என்று முன்னே வந்தமையால் "ந மாங்யோகே" என்ற பாணிநிஸூத்ரப்படி முதலிலுள்ள அ என்ற எழுத்து லோபித்துவிட்டது. மத்யம புருஷனாகையால் ஜீஹப: என்ற ரூபம்ஸித்தித்தது, ஆகவே மாஸ்ம ஜீஹப: என்பதற்கு, 'விடுவிக்க வேண்டா, என்று பொருள் தேறும். இந்த ஸம்பந்தத்தை நான் விட நினைத்தாலும் நீ விடுவிக்க வொண்ணாது, தடுக்கவேணும் என்றபடி. மத்ருதே த்வத்ருதே என்றவிடங்களில் மத் என்பதும் த்வத் என்பதும் தனிப்பதங்கள்; பஞ்சமீவிபக்தி. ... (நக)

வபுராதிஷு யோபி கோபிவா குணதோஸாநி யதாததாவித:
ததயம் தவ பாதபத்மயோ: அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:. (நஉ)

| | | | |
|---|---|---|---|
| | (நான்) | தத் | ஆகையினாலே |
| வபு: ஆதிஷு | சரீரம் முதலியவைகளுக்குள் | அயம் அஹம் | இந்த ஆத்மவஸ்துவானது |
| | | தவ | உன்னுடைய |
| ய: அபி க: அபி வா | ஏதாவதொன்றாகவும் | | |
| குணத: | குணத்தினால் | பாதபத்மயோ: | திருவடித்தாமரைகளில் |
| யதாததாவித: | ஏதேனுமொருபடிப்பட்டவனாகவும் | அத்ய ஏவ | இப்பொழுதே |
| | | மயா | என்னால் |
| அஸாநி | இருக்கக்கடவேன்; (அவற்றில் ஒருநிர்ப்பந்தமில்லை.) | ஸமர்ப்பித: | ஸமர்ப்பிக்கப்பட்டதாயிற்று. |

* * *—உனக்கும் எனக்கும் இருக்கிற ஸம்பந்தத்தைக் காத்துக்கொள்ளவேணுமென்று கீழ்ச்லோகத்தில் விஜ்ஞாபித்த ஆளவந்தாரை நோக்கி எம்பெருமான் 'உமக்கும் நமக்கும் நெடுநாளாகவே ஒரு விவாதமுண்டு; நான் 'த்வம் மே' என்றால், நீர் 'அஹம் மே' என்பவ

ரன்றோ; அந்த விவாதம் இன்னமும் ஒழிந்தபாடில்லை; அப்படியிருக்க உமது † பொறிபுறம் பூசின பாசுரத்திற்கு நாம் என்ன காரியம் செய்யக்கூடும்' என்று திருவுள்ளமாயிருக்க, அந்த விவாதம் தமக்கு இல்லையென்பதைக்காட்ட ஆத்மஸமர்ப்பணம் பண்ணினபடியை அருளிச் செய்கிறார் இதில்.

ஆத்மாவைப் பற்றிப் பலர் பலவகையாகச் சொல்லுவர்கள்; தேஹமே ஆத்மா என்பர் சிலர்; மற்றுஞ்சிலர் இந்திரியமே ஆத்மா என்பர்; வேறு சிலர் அந்த:கரணமே ஆத்மா என்பர்; ப்ராணமே ஆத்மா என்பர் சிலர்; புத்தியே ஆத்மா என்பர் மற்றையோர்; இவை ஒன்றுமல்ல; இவற்றிற்காட்டில் அஹமர்த்தமான ஆத்மா வேறுபட்ட வஸ்து என்பதை இவர்தாம் ஸித்தித்ரயமென்னும் திவ்யக்ரந்தத்திலே நிலைநாட்டியிருந்தாலும் இங்கே அந்த விசாரம் வைத்துக்கொள்ளாமல், ஆத்மா என்பது தேஹம் முதலானவற்றுள் எதுவாக இருந்தாலுமிருக்கட்டும் என்று சரக்கறச் சொல்லுகிறார்; எதுக்காகவென்னில்; ஆத்மாவுக்கு சேஷத்வ ஸ்தாபநமொன்றே முக்கியம் என்கிற தற்கால நோக்கத்தை வெளியிடுதற்காக. "யோஹமஸ்மி ஸஸந் யஜே" என்று வேதபுருஷனும் சொல்லிவைத்தான்; "நான் எவனுகினுமாகிறேன்; தேஹமாகவோ இந்த்ரியமாகவோ மற்றும் ஏதேனுமாகவோ அஹமர்த்தமாகவோ உண்மையில் எவனாகஇருக்கிறேனோ அவனாகவேயிருந்துகொண்டு பகவானை ஆராதிக்கின்றேன்' என்பது அந்த வேதவாக்யத்தின் பொருள். அப்படியே இவரும் அருளிச்செய்கிறார்.

குணத: யதாததாவித: அஸாநி—ஆத்மா அணுவா ஸர்வவ்யாபியா? நித்தியவஸ்துவா நச்வர வஸ்துவா? ஏகரூபனா பரிணாமியா? ஜ்ஞாநியா அஜ்ஞனா? என்றிப்படி ஆத்மகுணங்களில் பலவகை விப்ரதிபத்திகளுண்டு; இதுதன்னிலும் இப்போது நிஷ்கர்ஷிக்கப் புகுகின்றிலேன் என்கிறார். எம்பெருமானே! உனது திருவுள்ளத்தால் இவ்வாத்ம வஸ்து எப்படிப்பட்ட ஸ்வரூப ஸ்வபாவங்களை யுடையதாகக் கொள்ளப்படுகிறதோ அப்படிப்பட்ட ஸ்வரூபஸ்வபாவ விசிஷ்டமாகவேயுள்ள இவ்வஸ்து உன் திருவடிகளில் அடியேனால் ஸமர்ப்பிக்கப்பட்டதாயிற்றுக்காண் என்றாராயிற்று.

மூன்றாமடியின் முதலில் தத் என்றது ஆகையினாலே யென்றபடி; ஆத்மவஸ்துவை உனக்கு ஸமர்ப்பிக்கும் விஷயத்தில் ஆத்மாவின் ஸ்வரூபஸ்வபாவங்களை நிஷ்கர்ஷித்தாகவேண்டிய அவசியமில்லாமையாலே யென்கை. இங்கு ஆத்மாவைச் சொல்லவேண்டுமிடத்து அஹம் என்றாராகையால், 'தேஹஇந்த்ரிய மந: ப்ராணாதிகளில் விலக்ஷணனாய் அஹம்புத்தி போத்யனாயுள்ளவன் ஆத்மா' என்கிற ஸித்தாந்தமும் வெளியிடப்பட்டதாயிற்று. ... (ருஉ)

**மம நாத யதஸ்தி யோஸ்ம்யஹம் ஸகலம் தத்தி தவைவ மாதவ**
**நியதஸ்வமிதி ப்ரபுத்ததீ: அதவா கிந்நு ஸமர்ப்பயாமி தே. (ருந)**

| | | | |
|---|---|---|---|
| மாதவ நாத | ச்ரியபதியானபெருமானே! | நியதஸ்வம் | எப்போதும் உரிமைப்பட்டது |
| யத் | யாதொன்று | இதி | என்று |
| மம அஸ்தி | எனக்கு உரியதாக இருக்கின்றதோ | ப்ரபுத்ததீ: | நன்றாகத் தெரிந்துகொண்ட அடியேன் |
| அஹம் | நான் | | |
| ய: அஸ்மி | எப்படிப்பட்டவனோ, | தே | உனக்கு |
| தத் ஸகலம் | அது எல்லாம் | கிம் நு | எதை |
| தவ ஏவ | உனக்கே | ஸமர்ப்பயாமி | ஸமர்ப்பிப்பேன்? |

* * *—கீழ்ச்லோகத்தில் அஹமத்யைவ மயா ஸமர்ப்பித: என்று சொன்னதைத் தாமே மறுபடியும் ஆராய்ந்தார்; 'ஐயோ! என்ன சொன்னோம்! என்ன சொன்னோம்!!' என்று நடுங்கி, அதற்கு அநுதபிக்கின்றமைதோன்ற இந்தச்லோகமருளிச்செய்கிறார். "மயா அஹம் ஸமர்ப்பித:" என்று சொன்னேனே; இப்படி சொல்வதற்கு எனக்கு என்ன அதிகாரமுள்ளது? நான் என்கிற ஒரு வஸ்துவும் என்னுடையது என்கிற ஒரு வஸ்துவும் ஸ்வதந்த்ரமாகவுண்டோ? "யானே நீ என்னுடைமையும் நீயே" என்றபடி எல்லாம் ஏற்கெனவே உன்னுடையதாகவேயிருக்கும்போது, இந்த ஆத்மவஸ்து உனக்கு இல்லாதது போலவும் இப்போதுதான் புதிதாக என்னால் ஸமர்ப்பிக்கப்படுவது போலவும் பேசிவிட்டேனே பாவியேன்; ஸமர்ப்பிப்பதற்கு

† ஹ்ருதயத்தில் விச்வாஸம் ஒன்றுமில்லாமல் மேலெழுந்தவாரியாகச் சொல்லுகிற வார்த்தை என்கை.

-னார்? ஸமர்ப்பிக்க என்னிடம் என்ன இருக்கிறது! அதிலும் உனக்கு ஸமர்ப்பிக்க என்ன இருக்கிறது?; இவ்விஷயங்களை ஆராயாமல்தானே அவிவேகியாய் 'அஹம்த்யைவ மயா ஸமர்ப்பித:' என்று பிசகாகப் பேசிவிட்டேனே! என்று அநுதாபங்காட்டி அருளிச் செய்தாராயிற்று திருவாய்மொழியில் * "எனதாவிதந்தொழிந்தேன் இனி மீள்வதென்பதுண்டே" என்று அருளிச்செய்த ஆழ்வார் உடனே ஆராய்ந்து தெளிந்து, "எனதாவியாவியும் நீ பொழிலேழு முண்ட வெந்தாய்!, எனதாவி யார்யானார் தந்த நீ கொண்டாக்கினையே" என்றருளிச் செய்ததை ஒரு புடை அடியொற்றியதாம் இந்த ச்லோகம்.

கீழ் ச்லோகத்திற்பண்ணின ஆத்ம ஸமர்ப்பணத்தைப்பற்றி இந்த ச்லோகத்தால் அநுதாபப்படுகிறாரென்று கொண்டால், அநுதாப யோக்யங்களான பாபங்களைப்போலே ஆத்ம ஸமர்ப்பணமும் ஒரு பாபந்தானே; அது செய்யக்கூடாத காரியம் என்று ஏற்பட்டுவிட்டதா? என்கிற கேள்வி பிறக்கும். இதற்கு ஸமாதானமாகப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்வது பாரீர்;—"[தே கிம் நு ஸமர்ப்பயாமி?] இத்தைபுடைய உனக்கு எத்தை ஸமர்ப்பிப்பேன்? ஸமர்ப்பணீய மேது? ஸமர்ப்பகர் ஆர்? ஸமர்ப்பணீயமாகைக்கு ஸ்வாம்யமில்லை; ஸமர்ப்பிக்கைக்கு ஸ்வாதந்த்ரியமில்லை; ஸம்ஸார பீதியால் ஸமர்ப்பிக்கையும், ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநத்தால் அநுசயிக்கையுமிரண்டும் யாவந்மோக்ஷம் அநுவர்த்திக்கக் கடவது" என்ற ஹ்ருதயங்கமமான ஸ்ரீஸூக்தியைக் காண்மின். பெரியவாச்சான்பிள்ளையின் ஆழ்ந்த அழகிய இக்கருத்தை க்ரஹிக்க மாட்டாத சிலர் தம்முடைய வியாக்கியானத்திலே சில உக்திகளைக் காடுமேடு பாயவிட்டார். ஆத்ம ஸமர்ப்பணத்தை மறுப்பதாகப் பொருள் கொண்டார். பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம் அங்ஙனில்லையாயிருக்க, எதுகொண்டு ப்ரமித்தாரோ அறியோம். ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுகையும், பண்ணினதற்காகப் பிறகு அநுதாபம் காட்டுகையும் இரண்டும் இவ்விபூதியில் மாறி மாறி நடந்தேதீரும் என்று அருளிச்செய்திருக்க, அத்ர பூர்வக்ருத ஸ்வரூப ஸமர்ப்பணாநுசயேந ததேவ ப்ரதிக்ஷிப்யத இதி பக்ஷஸ்து என்று அவர்கள் எழுதுவது ஆதாரமுடையதோ?

ஆனால், கீழ்ப்பண்ணின ஆத்ம ஸமர்ப்பணத்திற்கு இதனால் அநுதாபப்படுவதாக வியாக்கியானஞ் செய்யலாமோ? தப்பான காரியத்துக்கன்றோ அநுதபிக்க வேண்டுவது— என்று கேட்பீர்கள். கேண்மின்; கீழே முப்பத்திரண்டாவது ச்லோகம் முதல் நாற்பத்தாறும் ச்லோகமளவும் பதினைங்கு ச்லோகங்களாலே பகவானுடைய நித்யகைங்கர்யத்தைப் பரமபுருஷார்த்தமாக ப்ரார்த்தித்த இவர்தாமே அடுத்த (47) "திகசுசி மவிநீதம்" என்கிற ச்லோகத்தால், கீழ் அப்படி ப்ரார்த்தித்ததற்கு மஹத்தான அநுதாபத்தை ஆவிஷ்கரித்தாரே; அஃது என்ன வென்று ஆராய்ந்தீர்களோ? கைங்கர்ய ப்ரார்த்தனை கூடும் என்றோ கூடாது என்றோ? எப்படி நிஷ்கர்ஷிக்கிறீர்கள் கூறுமின் கூர்மதியீர்.!

1. "ஒட்டுரைத்திவ்வுல குன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும், பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ!" என்று பரஞ்சோதியான எம்பெருமானுக்கு உலகத்திலுள்ள க்ஷணபங்குரமான தாமரை, மேகம், காயாம்பூ முதலியவற்றை ஒப்பாகச் சொல்லுதல் இழிவு என்கிறாராழ்வார்; இஃது உண்மையா அன்றா? உண்மையாகில், "கொண்டல்வண்ணா—கடல்வண்ணா" என்று பலகாலும் ஆழ்வார்கள் கதறுகின்றார்களே, இது என்ன?

2. "மாசூணா வான்கோலத்தமரர்கோன் வழிப்பட்டால் மாசூணாவுனபாத மலர்ச் சோதி மழுங்காதே" என்றும், 3 "கேழ்த்தசீரான் முதலாக்கிளர் தெய்வமாய்க்கிளர்ந்து, சூழ்த்தமரர் துதித்தால் உன் தொல்புகழ் மாசூணாதே" என்றும்—பிரமன் சிவனிந்திரன் முதலான தெய்வங்கள் எம்பெருமானைத் துதிப்பதானது அவனுக்கு நிறக்கேடு என்கிறாராழ்வார்; இஃது உண்மைதானே; இவ்வாழ்வார்தாமே பெரியதிருவந்தாதியில் "இருநால்வரீரைந்தின் மேலொருவர் எட்டோடொரு நால்வர் ஓரிருவரல்லால், திருமாற்கு யாமார் வணக்கமார்?" என்று—அந்த தேவதைகள்தாம் எம்பெருமானைப் போற்றுதற்கு உரியார் என்கிறாரே, இஃது என்ன?

அத்திருவந்தாதியில்தானே "புகழ்வோம் பழிப்போம் புகழோம் பழியோம்" என்று எம்பெருமானை நாம் புகழ்வதானது பழிப்பதேயாம் என்று சொல்லிக்கொண்டே பலவாறு கப்புகழ்கின்றாரே, இஃது என்ன?

---

* இரண்டாம் பத்து 3—4.

1. திருவாய்மொழி 3—1—2. 2. ஷை 3—1—8. 3. ஷை 3—1—7

கூரத்தாழ்வான் அதிமாநுஷ ஸ்தவத்தில் "யா கம்ஸமுக்யந்ருப கீடகிபர்ஹணேத்தா ஸா நிர்ஜிதத்ரிஜகதஸ் தவ நைவ கீர்த்தி: என்று—கம்ஸன் முதலிய அரசர்களாகிற புழுக்களைத் தொலைத்தானென்று சொல்லி எம்பெருமானை எத்துவதானது மூவுலகத்தையும் வென்றிருக்கிற அவனுக்குப் புகழ்ச்சியேயன்று என்று சொல்லிவைத்து, அப்படிப்பட்ட சரித்திரங்களையே சொல்லிப் புகழ்கின்றாரே, இஃது என்ன? இவை ஒன்றுக்கொன்று அபவாத மாகுமோ? இவை யெல்லாம் பரஸ்பர விருத்தம்போல் தோற்றினாலும் உண்மையில் விருத்த மன்றே. இரண்டுபடிகளும் சொல்லித் தீரவேண்டியவை யத்தனையிறே. அதுபோலே ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுகையும் பின்பு அதற்கு அநுதபிக்கையும், ஆகிற இரண்டும் சாஸ்த்ரார்த்தம் என்றறுதியிட்டபின் வினையுங் குற்றமென்கொல்?

கீழ்ச்லோகத்திற்கு விவரணமாகப் பிறந்தது இந்த ச்லோகம் என்று அருளிச் செய்கிற தேசிகன் திருவுள்ளமும், அநுதாபபரமாக வியாக்கியானிக்கருளுகிற பெரியவாச்சான் பிள்ளை திருவுள்ளமும் பர்யாயத: ஒக்குமேயன்றி வேறுபடாது. இந்த ச்லோகத்தை அநுதாபபரமாக வுரைத்திட்டால் மஹாநர்த்தம் விளையுமென்று ஸ்தோத்ரபாஷ்யத்தில் கருதினவர்தாமே ரஹஸ்யத்ரயஸாரத்தில் பேசும்போது ஸாங்கப்ரபதநாதிகாரத்திலே— "இதுக்குமேல் மமநாத யதஸ்தி என்கிற ச்லோகத்தில் இஸ்ஸமர்ப்பணத்தைப்பற்ற அநுசயம் பண்ணிற்றும்" என்று பெரியவர்ச்சான்பிள்ளை திருவுள்ளத்தையே போரப்பொலியத் தழுவியருளினர்.

இந்த ஆளவந்தார் ஏற்கனவே சிறந்த விவேகியாகையாலே கீழ்ச்லோகம் சொல்லும் போது அவிவேகியாயிருந்து இந்தச்லோகத்தில் உட்கண் விழித்துக்கொண்டாரென்கை ஒண்ணாது என்று ஸ்தோத்ர பாஷ்யத்திலே கூறுகின்றாரே; ஜ்ஞாதாக்கள் இப்படியும் கூறலாகுமோ? க்ரமேண சாஸ்த்ரார்த்தங்களை வெளியிடவேண்டுமிடத்து இங்ஙனேயிறே சொல்லிக்கொள்வது. ப்ரபுத்ததீ: என்று ஆளவந்தார்தாமே சொல்லிவைத்த சொல்லோ? பெரியவாச்சான்பிள்ளை நுழைத்த சொல்லோ? அதற்கு இவர் தம்மாலும் வேறு பொருள் சொல்லப்போகாதிறே. இன்பமிகு மாறுயிரமருளிச்செய்த திருக்குருகைப்பிரான்பிள்ளானும் எனதாவியுள் கலந்த பாசுர வியாக்கியானத்தில்—',இப்படி எம்பெருமானோடு கலந்த கலவியாலுள்ள நிரவதிக ப்ரீதியாலே அறிவழிந்து, இவ்வாத்மா தம்முடையதன்றென்று நிரூபிக்கமாட்டாராய், அவன் தம்மோடு கலந்த இப்பெருநல்லுதவிக்குக் கைம்மாறாகத் தம்முடைய ஆத்மாவை அவனுக்கு மீளாவடிமையாகக் கொடுத்து, பின்னையும் தம்முடைய ஸ்வரூபத்தை உள்ளபடி விவேகித்து" இத்யாதி அருளிச் செய்தார். அவரையும் தூஷிக்கக் கருதுகின்றனர்போலும். "தந்த நீ கொண்டாக்கினையே" என்ற ஆழ்வாரைப் போலவே ஆளவந்தாருமருளிச் செய்திருப்பாராயின், மம நாதேத்யாதி ச்லோகம் கீழ்ச்லோகத்திற்கு விவரணம் என்று ஒருவாறு கொள்ளப் பொருந்தும்; வசநவ்யக்தி அங்ஙனில்லைகிடீர். 'அதவா' என்றதையும், 'கிம்நு ஸமர்ப்பயாமி' என்றதையும் ஊன்றி யநுஸந்திக்கில் ஸ்வாரஸ்யமுணர்வீர். ஆழ்வாருக்கு ப்ரமமும் அநுசயமும் கூடுமென்றும் ஆளவந்தார்க்கு அவை கூடா என்றும் அரும்பதவுரைகாரர் எழுதிவைத்ததும் ப்ரமஸம்ப்ரம ஸாம்ராஜ்யமே.

நம் ஆழ்வாராசார்யர்களின் ப்ரமங்கள் கர்மோபாதிகமன்றிக்கே ஜ்ஞாந விபாககார்யமாகையாலே அடிக்கழஞ்சு பெறுமென்னும் திவ்யார்த்த ஸௌரபம்* எதிவரனார் மடைப்பள்ளி வந்த மணத்திலே அந்வயிக்கப் பெற்றதில்லை போலும். ... ... ... (ருந)

அவபோதிதவாநிமாம் யதா மயி நித்யாம் பவதீயதாம் ஸ்வயம்.
க்ருபயைததநந்யபோக்யதாம் பகவந் பக்திமபி ப்ரயச்ச மே. (ருச)

| | | | |
|---|---|---|---|
| பகவந் | எம்பெருமானே! | | (அப்படியே) |
| மயி நித்யாம் | என்பக்கல் சாச்வதமாயுள்ள | ஏததநந்ய போக்யதாம் | இது தவிர வேறொன்றில் போக்யதையை உடைத்தாகாத [பரம போக்யமான] |
| இமாம் பவதீயதாம் | உனக்கே உரிமைப்பட்டிருக்கை யாகிற இந்த சேஷத்வத்தை | | |
| யதா | எப்படி | பக்திம் அபி | பக்தியையும் |
| ஸ்வயம் | நீதானே | | |
| அவபோதிதவாந் | அறிவித்தாயோ, | மே ப்ரயச்ச | அடியேனுக்குத் தந்தருளவேணும். |

• * *—உன்னுடையதான வஸ்துவை என்னுடையதுபோல் ப்ரமித்து 'மயா ஸமர்ப்பித:' என்று அடியேன் விஜ்ஞாபித்தவுடனே 'ஓய்! நீர் யாருடையதை யாருக்கு ஸமர்ப்பித்தீர்? ஆராய்ந்து பாரும்' என்று உணர்த்தி எனக்கு ஸ்வரூபஜ்ஞானத்தைத் தெளிவித்தவிது மஹோப காரம் என்று முன்னடிகளில் கொண்டாடி, மேல் பின்னடிகளால், இப்போது இவ்வருள் செய்தது போலவே பரமபக்தியையும் அடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேணும் என்று ப்ரார்த்திக்கிறார்.

[மயி நித்யாம் இமாம் பவதீயதாம் ஸ்வயம் அவபோதிதவாந்] "மம நாதயதஸ்தி" என்ற கீழ்ச்லோகத்தால் அநுஸந்திக்கப்பட்ட 'யானே நீ என்னுடைமையும் நீயே' என்கிற அர்த்தம் ஏற்கெனவே எனக்குத் தெரிந்ததே; தெரிந்திருந்தும் "அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:" என்னும்போது அதனை மறந்துகிடந்தேன்; உடனே அதனை அடியேனுக்கு ஞாபகமூட்டினையே! என்று உபகாரஸ்ம்ருதி தோற்ற அருளிச் செய்தபடி. இந்த உபகாரம் போலவே மற்றொரு உபகாரமும் செய்தருளவேணும்; அதாவது—ஸ்வயம்புருஷார்த்தமான பக்தியையும் தந்தருள வேணுமென்கிறார்.

"க்ருபயைவமநந்ய போக்யதாம்" என்றும், "க்ருபயைததநந்யபோக்யதாம்" என்றும் பாடபேதங்கள். முந்தின பாடத்தில், ஏவம்—கீழ்ச்சொன்ன அருள்மாதிரியாகவே, அநந்ய போக்யதாம்— வேறொரு வஸ்துவில் போக்யதா புத்தியை உடையவனாகாமலிருக்கும்படியை யும், பக்தியையும் எனக்குத் தந்தருள் என்றதாகிறது. பிந்தின பாடத்தில், ஏததநந்யபோக்ய தாம் என்பது பக்திக்கு விசேஷணமாகும். இது தவிர வேறொன்றும் நெஞ்சுக்கு விஷயமா காதபடியிருக்கும் போக்யதையை யுடைத்தான பக்தியை என்றபடி. ... ... (ருச)

**தவ தாஸ்ய ஸுகைக ஸங்கிநாம் பவநேஷ்வஸ்த்வபி கீட ஜந்ம மே.**
**இதராவஸதேஷு மாஸ்மபூத் அபி மே ஜந்ம சதுர்முகாத்மநா. (ருரு)**

| | | | |
|---|---|---|---|
| தவ | உன்னுடைய | அஸ்து | ஆயிடுக. |
| தாஸ்யஸுக ஏக ஸங்கிநாம் | அடிமையாகிற இன்ப மொன்றிலேயே விருப்ப முள்ள மஹான்களுடைய | இதர ஆவஸதேஷு | அடிமைச் சுவடு அறியாத மற்றையோர் வீடுகளில் |
| பவநேஷு | திருமாளிகைகளில் | சதுர்முக ஆத்மநா ஜந்ம அபி | நான்முகனைப் பிறப்பது தானும் |
| மே | அடியேனுக்கு | | |
| கீடஜந்ம அபி | புழுவாகப் பிறப்பதும் | மே மா ஸ்ம பூத் | எனக்கு வேண்டா. |

* * *—ஸ்வரூபத்தை உள்ளபடி உணர்ந்தவர்கள் எம்பெருமான் திறத்தில் சேஷத்வத் தோடுநிற்கமாட்டார்கள்; பாகவத சேஷத்வபர்யந்தம் போனால்தான் பகவச்சேஷத்வம் ரஸிக் கும். இந்த சாஸ்த்ரார்த்தம் இந்த ச்லோகத்தில் வெளியாகிறது. எம்பெருமானே! சேஷத்வ மென்பது நாட்டில் சாமான்யமாக து:க்கரூபமாகக் காணப்பட்டாலும், உகந்த விஷயத்திற்கு சேஷமாயிருக்குமிருப்பு ஸுகரூபமாகவே காண்கையாலே அந்தக் கணக்கிலே உன் விஷயத் தில் சேஷமாயிருக்குமிருப்பை ஸுகரூபமாக விரும்பி அதிலேயே ஊன்றியிருக்குமவர்களு டைய திருமாளிகைகளில் மிகத் தாழ்ந்ததொரு பிறவி கிடைத்தாலும் எனக்குப் பரமபோக் யமே; ஜாதியில் ஏற்றத் தாழ்வு உபயோகமற்றது. பாகவதசேஷத்வம் வாய்க்குமத்தனையே வேண்டுவது. உன் பக்கலில் அடிமைப்படாதவர்களுடைய வீடுகளில் நான்முகக் கடவுளா கப் பிறக்கும் பிறவி வாய்ப்பதானாலும் வேண்டேன் வேண்டேன்—என்றதாயிற்று. ... (ருரு)

**ஸக்ருத் த்வதாகார விலோகநாசயா த்ருணீக்ருதாநுத்தம புக்தி முக்திபி:**
**மஹாத்மபிர் மா மவலோக்யதாம் நய க்ஷணேபி தே யத்விரஹோதிதுஸ்ஸஹ: (ருசு)**

| | | | |
|---|---|---|---|
| ஸக்ருத் | ஒருகால் | | |
| த்வத் ஆகார விலோ கந ஆசயா | உனது திருமேனியை ஸேவிக்கவேணுமென்கிற விருப்பத்தினால் | த்ருணீக்ருத அநுத்தம புக்தி முக்திபி: | மிகவும் சிறந்த செல்வத்தை யும் மோக்ஷத்தையும் த்ருணமாக நினைத்து வெறுத்திருக்கிற |

| | | | |
|---|---|---|---|
| மஹாத்மபி: | மஹாநுபாவர்களினால் | தே | உனக்கு |
| அவலோக்யதாம் | கடாக்ஷிக்க உரியேனாயிருக்கையை | க்ஷணே அபி | ஒரு நொடிப்பொழுதும் |
| மாம் நய | அடியேனுக்களிக்கவேணும். | அதிதுஸ்ஸஹ: | மிகவும் பொறுக்கமுடியாததோ, |
| (எப்படிப்பட்ட மஹான்களின் கடாக்ஷத்தை விரும்புகிறேனென்னில் ;) | | [தை: மஹாத்மபி: மாம் அவலோக்யதாம் நய என்று கீழோடே அந்வயம்] | |
| யத் விரஹ: | எந்த மஹான்களுடைய பிரிவானது | | |

* * *—மஹா பாகவதர்களின் திருமாளிகைகளில் பிறவிபெறுவதாகிற சிறந்த பாக்கியம் வாய்க்காமற்போனாலும், அந்த மஹான்கள் அடியேனைக்கண்டால் 'இவன் நம்முடையவன்' என்று விசேஷ கடாக்ஷம் பண்ணுகைக்கு யோக்யனாம்படி அடியேனைப் பண்ணியருளவேணுமென்கிறாரிதில்.

அந்த மஹாத்மாக்களால் அடியேன் கடாக்ஷிக்கப் பெறவேணும்; எந்த மஹாத்மாக்களாலென்னில்; உன்னுடைய திருமேனியை ஒருகாலாகிலும் ஸேவிக்கப்பெற்றால் போதும் என விரும்பி, 'ஐச்வரியமும் வேண்டா, ஸ்வர்க்காநுபவாதிகளும் வேண்டா, மோக்ஷஸாம்ராஜ்யமும் வேண்டா' என்று எல்லாவற்றையும் த்ருணமாக நினைத்து உதறித் தள்ளுபவர்கள் எவரோ, எவர்களை விட்டுப் பிரிந்து ஒரு நொடிப்பொழுதும் நீ தரிக்கமாட்டாயோ, அப்படிப்பட்ட மஹாத்மாக்களின் கடாக்ஷத்திற்கு நான் இல்க்காகும்படி செய்தருளவேணுமென்றாராயிற்று.

1. "கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய், ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே" என்றாற்போலே ப்ரார்த்தியாதொழிந்தது, 2. "இந்திரலோகமாளுமச்சுவை பெறினும் வேண்டேன்" 3. "எம்மாவீட்டுத் திறமும் செப்பம்" 4. "வானாளும் மாமதி போல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம், கோனாகிவீற்றிருந்து கொண்டாடுஞ் செல்வறியேன்" 5. கம்பமதயானைக்கழுத்தகத்தின் மேலிருந்து இன்பமருஞ் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" என்று புக்திமுக்திகளெல்லாவற்றையும் வெறுத்த ஆழ்வார்களின் கடாக்ஷம் பெறுகைக்கு ஆசைப்பட்டாயிற்று. "க்ஷணேபி தே யத்விரஹோதி துஸ்ஸஹ:" என்ற நான்கா மடிக்குச்சேர, 6. "அருமாமாயத்தெனதுயிரே மனமே வாக்கே கருமமே, ஒரு மாநொடியும் பிரியான் என்னூழி முதல்வனொருவனே" என்ற ஆழ்வார் பாசுரம் அநுஸந்தேயம். (ருசு)

ந தேஹம் நப்ராணந் நச ஸுகமசேஷாபிலஷிதம்
நசாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வ விபவாத்.
பஹிர்ப்பூதம் நாத க்ஷணமபி ஸஹே யாது சததா
விநாசம் தத் ஸத்யம் மதுமதந விஜ்ஞாபநமிதம். (ருஎ)

| | | | |
|---|---|---|---|
| நாத | ஸ்வாமிந்! | ஆத்மாநம் ச ந ஸஹே | ஆத்மாவையும் ஸஹிக்கமாட்டேன்; |
| தவ சேஷத்வவிபவாத் பஹிர்ப்பூதம் | உனக்கு சேஷப்பட்டிருக்கையாகிற செல்வத்திற்குப் புறம்பான [உனக்கு சேஷப்படாத] | அந்யத் கிமபி ந ஸஹே | (சேஷத்வ சூந்யமான) வேறெதையும் ஸஹிக்கமாட்டேன்; |
| தேஹம் | உடம்பை | | |
| க்ஷணம் அபி ந ஸஹே | ஒரு க்ஷணமும் பொறுக்கமாட்டேன்; | சததா விநாசம் யாது | (சேஷத்வ சூந்யமான கீழ்ச் சொன்ன தேஹாதிகளெல்லாம்) உருமாய்ந்து போகட்டும்; |
| ப்ராணந் | (அப்படிப்பட்ட) ப்ராணனையும் | | |
| ந ஸஹே | பொறுக்கமாட்டேன்; | ஹே மதுமதந | மதுவைக் கொன்ற பெருமானே! |
| அசேஷ அபிலஷிதம் ஸுகம் ச ந ஸஹே | எல்லாரும் விரும்பக்கூடிய ஸுகத்தையும் ஸஹிக்கமாட்டேன்; | ததிதம் விஜ்ஞாபநம் ஸத்யம் | இங்ஙனே விண்ணப்பம் செய்த விது ஸத்யம். |

1. திருவாய்மொழி 6—9—1. 2. திருமாலை—2.
3. திருவாய்மொழி 2—9—1. 4. பெருமாள் திருமொழி. 4—7.
5. பெருமாள் திருமொழி 4—5. 6. திருவாய்மொழி 10—7—7.

* * *—கீழ்ச்லோகங்களில் இஷ்டப்ராப்தியை அபேக்ஷித்தார்; இதில் அநிஷ்ட நிவ்ருத்தியை அபேக்ஷிக்கிறார். இஷ்டங்கள் ஸித்திப்பது மாத்திரம் போராத, அநிஷ்டங்கள் தொலைவது மாத்திரமும் போராது; இரண்டும் உத்தேச்யமிறே. திருவாய்மொழியில் "ஏறாளுமிறையோனும்" (4–8–1.) என்கிற திருவாய்மொழியில், "உடம்பினால் குறைவிலமே" 'உயிரினால் குறைவிலமே" இத்யாதியாகப் பத்துப்பாசுரங்களாலே பரக்கப்பேசின அர்த்தத்தை இந்த ஒரு ச்லோகத்தில் அடக்கி அருளிச் செய்கிறார் என்றுணர்க.

மதுஸூதநனே! திருமுன்பே ஸத்யமாக ஒரு விண்ணப்பம்செய்கிறேன், கேட்டருள வேணும்; அஃது என்னென்னில்; சரீரமாத்யம் கலு தர்மஸாதநம் என்றபடி, தர்மாநுஷ்டாநங்களுக்கு முதல் ஸாதநமான சரீரமும், அதற்குத் தாரகங்களான ப்ராணன்களும் ப்ராணிகளெல்லாரும் மிக விரும்பும் ஸுகமும், இவையெல்லாவற்றிற்கும் ஆச்ரயமாக நிற்கும் ஆத்மாவும் மற்றும் புத்ரமித்ரகளத்ராதிகள் எதுவாகிலும் உன்னுடைய சேஷத்வத்திற்கு உபயுக்தமாகில் வேண்டுப; அதற்குப் புறம்பாகில் வேண்டா; இவையெல்லாம் உருமாய்ந்து போகட்டும்; இது கழுத்துக்குமேலே சொல்லுகிற வார்த்தையன்று; அடிவயிற்றிலிருந்து ஸத்யமாகச் சொல்லுகிற வார்த்தை; இது பொய் சொன்னதாகில், உன்னிடத்தில் மது என்னுமசுரன் பட்ட பாடு படுவேனத்தனை என்றாராயிற்று. பகவத்கைங்கர்யத்திற்கு உறுப்பல்லாதது முமுக்ஷுக்களுக்கு த்யாஜ்யம் என்கிற சாஸ்த்ரார்த்தம் இதனால் வெளியிடப்பட்டதாம்.

"கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும், அள்ளிப்பறித்திட்டவன் மார்பிலெறிந்து என்னழலைத் தீர்வேனே" என்று ஆண்டாள் ரோஷத்துடனே அருளிச் செய்ததுபோல் இவரும் ரோஷந்தோற்ற இங்ஙனே அருளிச்செய்கிறாரென்க. எவ்விதத்திலும் அழிவில்லாத ஆத்மாவை நோக்கி, யாது சததா விநாசம்—உருமாய்ந்து போகட்டும் என்று இங்கருளிச் செய்தது சேஷத்வத்திலுள்ள ஊற்றத்தைக் காட்டுமத்தனை.

"விஜ்ஞாபநம், விஜ்ஞாபிதம், என்பன பாடபேதங்கள். ... ... ... (ருஎ)

துரந்தஸ்யாநாதேரபரிஹரணீயஸ்ய மஹத:
நிஹீநாசாரோஹம் ந்ருபசுரசுபஸ்யாஸ்பதமபி.
தயாஸிந்தோ பந்தோ நிரவதிக வாத்ஸல்ய ஜலதே
தவ ஸ்மாரம்ஸ்மாரம் குணகணமிதீச்சாமி கதபீ: (ருஅ)

| | | | |
|---|---|---|---|
| தயா ஸிந்தோ | கருணைக்கடலே! | மஹத: | பெரியதுமான |
| பந்தோ | ஸகலவித பந்துவுமானவனே! | அசுபஸ்ய | பாபத்திற்கு |
| | | ஆஸ்பதம் அபி | இருப்பிடமாயிருந்தாலும் |
| நிரவதிக வாத்ஸல்ய ஜலதே | எல்லையற்ற வாத்ஸல்ய ஸமுத்ரமே!, | தவ | உன்னுடைய |
| | | குணகணம் | அளவற்ற குணங்களை |
| நிஹீந ஆசார: ந்ருபசு:—அஹம் | இழிவான நடத்தையுள்ள மானிடவுடல்பூண்ட பசுவாகிய நான், | ஸ்மாரம் ஸ்மாரம் | பலகாலும் நினைத்து |
| | | கதபீ: | அச்சங்கெட்டவனாய் |
| துரந்தஸ்ய | முடிவில்லாததும் | இதி இச்சாமி | இங்ஙனே ஆசிக்கின்றேன்; [உனது சேஷத்வத்தை ஆசைப்படுகின்றேனென்கை] |
| அநாதே: | அடியற்றதும் | | |
| அபரிஹரணீயஸ்ய | பரிஹரிக்க முடியாததும் | | |

* * *—கீழே திகசுசி மவிநீதம் (47) என்கிற ச்லோகத்தால் உம்முடைய தோஷங்களை நீர்தாமே சொல்லிக்கொண்டு கைங்கர்யப் ப்ரார்த்தனை பண்ணினதற்கு வெறுத்துக் கொண்டோமே; அப்படியிருக்க மறுபடியும் அதனை ஏன் விரும்பா நின்றீர்? என்று எம்பெருமான் கேட்க, அடியேன் பலவகைக் குற்றங்கட்குக் கொள்கலமாயிருப்பவன் என்பதில் ஐயமில்லை; இழி தொழில்களையே செய்பவனாகவும் நாற்கால் விலங்குகள்போல் விவேகமற்றவனாகவும், நெடுநாளாகத் தொடர்ந்துவந்து முடிவுமில்லாமல்பரிஹரிக்கவுங்கூடாமலிருக்கிற மஹாபாதகம் அதிபாதகம் எனப்படுகிற துஷ்க்ருத்யங்களுக்கெல்லாம் பிறப்பிடமாகவும் இராநின்றேனாகிலும் உனது திருவருள் முதலிய திருக்கல்யாண குணங்களை நினைந்து நினைந்து, இப்படிப்பட்ட திருக்குணங்களிருக்கும்போது நம்முடைய பாவங்கள் நம்மை என்ன செய்யக்கூடுமென்று அச்சம் கெட்டுக் கைங்கர்ய ப்ரார்த்தனை பண்ணுகிறேன் என்கிறார்.

நருபசு:—மநுஷ்யனாகப் பிறந்தும் வர்ணாச்ரம தர்மாநுஷ்டாந வரம்பை மீறி ஆஹார நித்ராதிகளில் நியதியின்றி மனம் போனபடி திரிகின்றேனாகையால் ம்ருகப்ராயனாக இருப்பவன் என்றபடி. ... ... ... ... (௫அ)

அநிச்சந்நப்யேவம் யதிபுநரிதீச்சந்நிவ, ரஜஸ்
தமச்சந்ந ச்சத்மஸ்துதிவசந பங்கீமரசயம்.
ததாபீத்தம்ரூபம் வசந மவலம்ப்யாபி க்ருபயா
த்வமேவைவம்பூதம் தரணிதர மே சிக்ஷய மந: (௫௯)

| | | | |
|---|---|---|---|
| ஹே தரணிதர ! | ஸர்வலோக நிர்வாஹகனை எம்பெருமானே | யதிபுந: அரசயம் ததா அபி | செய்தேனேயாகிலும் |
| ரஜஸ் தமச் சந்ந: (அஹம்) | ரஜோகுணத்தாலும் தமோகுணத்தாலும் மூடப்பட்டுள்ள அடியேன் | இத்தம்ரூபம் | இப்படிப்பட்ட [கபடமான] |
| | | வசநம் | சொல்லை |
| ஏவம் அநிச்சந் அபி | (உண்மையாக) இப்படி இச்சியாதிருந்த போதிலும் | அவலம்ப்ய அபி | ஆதாரமாகக் கொண்டாவது |
| | | க்ருபயா | திருவருளாலே |
| இச்சந் இவ | இச்சிப்பவன் போல (அபிநயித்து) | த்வம் ஏவ | நீ தானே |
| சத்மஸ்துதி வசந பங்கீம் | கபடமாக ஸ்தோத்ரஞ் சொல்லுகிற விதத்தை | ஏவம்பூதம் மே மந: சிக்ஷய | இப்படிப்பட்ட எனது மநஸ்ஸைத் திருத்தவேணும். |

***—நீர் மஹாபாபங்கள் நிறைந்தவர் என்ற விஷயம் அப்படியிருக்கட்டும்; "இச்சாமி" என்று ஒரு வார்த்தை சொன்னீரே; ‡ அதுவாகிலும் ஸஹ்ருதயமாயிருக்குமோ! என்று எம்பெருமான் கேட்க; பிரானே! உன்னை அநுபவிப்பதற்கீடான இச்சை எனக்கு உண்டென்று ரஜஸ்தமோ குணங்கள் கூடுபூரித்துக்கிடக்கிற நான் எங்ஙனே சொல்லமுடியும்? விஷயத்திற்குத் தகுதியான விருப்பம் இல்லை யென்றே சொல்லவேண்டும்; அப்படி இல்லையாயினும், "கதாஹமைகாந்திகநித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி" என்றும் "தவ பரிஜநபாவம் காமயே" என்றும் ஏதோ இச்சையுள்ளவன் போல அபிநயித்து வார்த்தை சொல்லியிருக்கிறேனே; இந்தப் பொரி புறந்தடவின வார்த்தையையாவது பற்றாசாகக் கொண்டு, விரல் நுழைக்க இடங்கிடைத்தால் தலையை நுழைக்கவல்ல நீ உனது நிர்ஹேதுக கிருபையினாலே இந்த நெஞ்சைத் திருத்திப் பணிகொண்டருளவேணு மென்றாராயிற்று.

1. "கையார் சக்கரத்தென் கருமாணிக்கமே யென்றென்று, பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமேயாடி, மெய்யே பெற்றொழிந்தேன்" என்ற ஆழ்வாரருளிச் செயலைத் திருவுள்ளம்பற்றி இந்த ச்லோகமருளிச் செய்தபடி, ஏதேனும் ஒரு வியாஜத்தை எதிர்பார்க்குமெம்பெருமான், அஸ்மதாதிகள் அஹ்ருதயமாகச் சொல்லும் சொல்லையும் கொண்டு காரியம் செய்யவல்லவன் என்கிற அர்த்தமும் இதில் ஸூசிதமாகும். ... ... (௫௯)

பிதா த்வம் மாதா த்வம் தயிததநய ஸ்த்வம் ப்ரியஸுஹ்ருத்
த்வமேவ த்வம் மித்ரம் குருரஸி கதிஸ்சாஸி ஜகதாம்.
த்வதீயஸ் த்வத்ப்ருத்யஸ் தவ பரிஜநஸ் த்வத்கதிரஹம்
ப்ரபந்ந ச்சைவம் ஸத்யஹமபி தவைவாஸ்மி ஹி பர: (௬௰)

| | | | |
|---|---|---|---|
| ஜகதாம் | உலகங்கட்கெல்லாம் | மித்ரம் த்வம் | ஸர்வரஹஸ்யங்களும் சொல்லிக் கொள்ளுதற்குப் பாங்கான மித்திரனும் நீயே |
| பிதா த்வம் | தகப்பனும் நீயே | | |
| மாதா த்வம் | பெற்ற தாயும் நீயே | | |
| தயிததநய: த்வம் | அன்பனான மகனும் நீயே | குரு: அஸி | ஆசாரியனும் நீயே |
| ப்ரியஸுஹ்ருத் த்வம் ஏவ | உயிர்த்தோழனும் நீயே | கதிச்ச அஸி | உபாயோபேயமும் நீயே; |
| | | அஹம் | அடியேனோவென்றால்; |

‡ அது—கைங்கரிய விருப்பம்.
1. திருவாய்மொழி 5—1—1.

| | | | |
|---|---|---|---|
| த்வதீயஃ | உன்னுடையவன் ; | ப்ரபந்நச்ச | ப்ரபந்நனுமாயிருக்கிறேன் ; |
| த்வத் ப்ருத்யஃ | உன்னலே பரிக்கத்தகுந்தவன் ; | ஏவம் ஸதி | ஆனபின்பு |
| | | அஹம் அபி | அடியேனும் |
| தவ பரிஜநஃ | உனக்குத் தொண்டன் ; | தவ ஏவ | உனக்கே |
| த்வத் கதிஃ | உன்னையே கதியாகக் கொண்டவன் | பரஃ அஸ்மி ஹி | பக்ஷ்யனுகை இரா நின்றேன் காண் |

* * *—நீர் அஹ்ருதயமாகச் சொன்ன சொல்லையும் ஸஹ்ருதயமாகக் கொண்டு காரியம் செய்யவேணுமென்கிற நிர்ப்பந்தம் நமக்கு என்ன? என்று எம்பெருமான் திருவுள்ளமாக, ஒழிக்கவொழியாத உறவுமுறை யுள்ளதுகாண் என்கிறுர். 1. “சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும், மேலாத்தாய் தந்தையுமவரேயினி யாவாரே” 2. “தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய், நீயாய் நீ நின்றவாறு” இத்யாதி அருளிச்செயல்களை இங்கே நினைப்பது.

ஸுஹ்ருத், மித்ரம் என்கிற பதங்களைப் பர்யாயமாக உலகில் வழங்கக் காண்கிறோமாகிலும் சிறிது அர்த்தபேதமுண்டு. எப்போதும் ஹிதத்தை விரும்புமவன் ஸுஹ்ருத்தெனப்படுவான்; ஸகல ரஹஸ்யங்களையும் சொல்லிக்கொள்ளுகதற்கு உரியவனும் ஸமானவயஸ்கனும் மித்ரமெனப்படுவான். ஆக, உலகங்கட்கெல்லாம் நீ ஸகலவித பந்துவுமாக அமைந்திருப்பதனுலும், உனக்கு நான் ஸர்வாத்மநா உரிமைப்பட்டிருப்பதனுலும் என்னை ரக்ஷித்தருளவேண்டிய நிர்ப்பந்தம் உனக்கு உண்டுகாண் என்றுராயிற்று. ... ... ... (௬௦)

ஜநித்வாஹம் வம்சே மஹதி ஜகதி க்யாதயசஸாம்
சுசீநாம் யுக்தாநாம் குணபுருஷ தத்வஸ்திதிவிதாம்.
நிஸர்க்காதேவ த்வச்சரணகமலைகாந்தமநஸாம்
அதோத: பாபாத்மா சரணத நிமஜ்ஜாமி தமஸி. (௬௧)

| | | | |
|---|---|---|---|
| சரணத ! | வழிகாட்டும் பெருமானே !, | த்வத் சரண கமல ஏகாந்த மநஸாம் | உனது திருவடித்தாமரைகளிலேயே ஊன்றின மனமுடையவர்களுமான மஹான்களுடைய |
| அஹம் | அடியேன் | | |
| ஜகதி | உலகமெங்கும் | | |
| க்யாதயசஸாம் | பரவின புகழையுடையவர்களும் | மஹதி வம்சே | சிறந்த குலத்திலே |
| சுசீநாம் | பரிசுத்தர்களும் | ஜநித்வா | பிறந்துவைத்து |
| யுக்தாநாம் | உன்னைவிட்டுப் பிரியாதவர்களும் | பாபாத்மா | பாபிஷ்டனாய்க் கொண்டு |
| | | தமஸி | இருள் மயமான மூதாவியிலே |
| குணபுருஷ தத்வ ஸ்திதி விதாம் | அசேதநதத்வமென்ன சேதந தத்வமென்ன இவற்றின் ஸ்வரூப ஸ்வபாவங்களை அறிந்தவர்களும் | அதஃ அதஃ | அடிகாணவொண்ணுத கீழெல்லையிலே |
| நிஸர்க்காத் ஏவ | இயற்கையாகவே | நிமஜ்ஜாமி | அழுந்திக்கொண்டே கிடக்கிறேன். |

* * *—நீர் சிறந்த குலத்திலே பிறந்தவரன்றோ; அஃதொன்றே போருமே நீர் கடைத்தேறுவதற்கு; என் கையை எதிர்பார்க்கவேண்டிய நிர்ப்பந்தம் உமக்கு இல்லையே என்று எம்பெருமான் திருவுள்ளமாக; பிரானே! சிறந்த வம்சத்தில் பிறந்தேனுகிலும் பாபப்ரசுரனுய் ஸம்ஸாரத்திலே அழுந்தா நின்றேன், எடுத்தருளவேணும் என்கிறுர். உலகம் நிறைந்த புகழுடையவர்களும் சரீர சுத்தியும் அந்த:கரண சுத்தியுமுள்ளவர்களும், யோகத்தில் தேர்ந்தவர்களும், தத்வஸ்திதியை உணர்ந்தவர்களும், பரிமளத்தோடே அங்குரிக்கும் திருத்துழாய் போலே உன்னுடைய திருவடித்தாமரைகளில் இயற்கையான அன்பை நிரூபகமாகவுடையவர்களுமான ஸ்ரீமந்நாதமுனிகளுடைய திருவம்சத்தில் பிறந்துவைத்து, பாபங்களிலேயே புத்தியைச் செலுத்திக்கொண்டு ஸம்ஸார ஸமுத்ரத்திலே இன்னமும் தரைகாணுமல் மூழ்கிக் கிடக்கின்றேன் என்றுராயிற்று. இப்படிப்பட்ட என்னை நீதானே நிர்ஹேதுக க்ருபையினுல் கரைமரஞ் சேர்க்கவேணுமென்பது உள்ளுறை.

1. திருவாய்மொழி 5—1—8. 2. திருவாய்மொழி 7—8—1.

யுக்தாநாம் என்பதற்கு மூன்றுவகையாகப் பொருள் கூறுவர்; ஆத்மஸாக்ஷாத்கார மாகிற யோகத்திலே ஊன்றினவர்கள் என்றும், உன்னோடு நித்யஸம்பந்தத்தை விரும்பியிருப்பவர்கள் என்றும், ஒருகாலும் உன்னைவிட்டுப் பிரியாதவர்கள் என்றும்.

குணபுருஷதத்வஸ்திதி விதாம்:—குணத்ரயாத்மகமான பிரகிருதியைக் குணமென்பர்; புருஷன்—ஆத்மா; சேதநாசேதனங்களுடைய தத்வஸ்திதியை [உண்மை நிலைமையை] உணர்ந்தவர்கள் என்றும், சேதநாசேதனங்களாகிற தத்துவங்களின் ஸ்திதியை உணர்ந்தவர்கள் என்றும் உரைக்கலாம்.

சரணத!—அவரவர்களுக்குத் தகுந்த உபாயத்தைக் கொடுத்தருள்பவனே! என்கை. (சுக)

அமர்யாத: க்ஷுத்ரச் சலமதி ரஸூயாப்ரஸவபூ:
க்ருதக்னோ துர்மாநீ ஸ்மரபரவசோ வஞ்சநபர:
ந்ருசம்ஸ: பாபிஷ்ட: கதமஹமிதோ து: க்கஜலதே:
அபாராதுத்தீர்ணஸ் தவ பரிசரேயம் சரணயோ:. (சுஉ)

| | | | |
|---|---|---|---|
| அமர்யாத: | வரம்பு மீறினவனும் | ந்ருசம்ஸ: | கொடுந்தொழில் புரியுமவனும் |
| க்ஷுத்ர: | அற்ப விஷயங்களில் சாபல்யமுள்ளவனும் | பாபிஷ்ட: | மஹாபாபியுமான |
| சலமதி: | நின்றவா நில்லா நெஞ்சினையுடையவனும் | அஹம் | அடியேன் |
| அஸூயா ப்ரஸவபூ: | பொறுமைக்குப் பிறப்பிடமானவனும் | இத: | இந்த |
| க்ருதக்ந: | நன்றி கெட்டவனும் | அபாராத் | கங்குகரையற்ற |
| துர்மாநீ | துரஹங்காரமுள்ளவனும் | து:க்கஜலதே: | துன்பக்கடலில் நின்றும் |
| ஸ்மரபரவச: | காமத்துக்கு வசப்பட்டவனும் | உத்தீர்ண: | கரை சேர்ந்தவனாய் |
| வஞ்சநபர: | பிறரை வஞ்சிப்பவனும் | தவ சரணயோ: | உனது திருவடிகளில் |
| | | கதம் பரிசரேயம் | எங்ஙனே கைங்கரியம் பண்ணப் பெறுவேன்?. |

* * *—கீழ்ச்லோகத்தில் பாபாத்மா என்று சுருக்கமாகச் சொன்னதை விவரித்துக் கொண்டு, இப்படிப்பட்ட மஹாபாபியான நான் உனது நிர்ஹேதுக கிருபையினால் கரையேறாவிடில் வேறு வழி ஏது? கைங்கர்யத்தை இழந்தே போகவேண்டுமத்தனை என்கிறார். பத்து விசேஷணங்களால் தமது தாழ்வுகளை விஸ்தாரமாகச் சொல்லிக்கொள்ளுகிறார். இப்படிப்பட்ட ச்லோகங்களை மஹாபாபிகளான நாமெல்லோரும் அநுஸந்தித்து உஜ்ஜீவிப்போமாக. (சுஉ)

ரகுவர யதபூஸ்த்வம் தாத்ருசோ வாயஸஸ்ய
ப்ரணத இதி தயாளுர் யச்ச சைத்யஸ்ய க்ருஷ்ண
ப்ரதிபவ மபராத்துர் முக்த ஸாயுஜ்யதோபூ:
வத கிமபதமாகஸ் தஸ்ய தேஸ்தி க்ஷமாயா:. (சுங)

| | | | |
|---|---|---|---|
| ஹே ரகுவர! | ரகுவம்சத்தில் ஸ்ரீராமனாக அவதரித்தவனே | ப்ரதிபவம் | பிறவிதோறும் |
| த்வம் | நீ | அபராத்து: | அபராதம் பண்ணின |
| தாத்ருச: வாயஸஸ்ய | அப்படிப்பட்ட [மஹாபாபியான] காகாஸுரன் விஷயத்திலே | சைத்யஸ்ய | சிசுபாலனுக்கு |
| | | ஸாயுஜ்யத: அபூ: யத் | ஸாயுஜ்யமளித்தவனாகவும் ஆனாயிறே; |
| ப்ரணத: இதி | 'இக்காகம் நம்மை வணங்கிற்று' என்பதே கொண்டு | தஸ்ய தே | அப்படியெல்லாம் செய்தவனான உன்னுடைய |
| | | க்ஷமாயா: | பொறுமைக்கு |
| | | அபதம் | இலக்காகாத |
| தயாளு: யத் அபூ: | தயை பண்ணினாயிறே; | ஆக: | குற்றம் |
| முக்த! க்ருஷ்ண | குற்றமறியாத கண்ணபிரானே! | கிம் அஸ்தி | என்ன இருக்கிறது? |
| | | வத | அருளிச்செய்யவேணும். |

* * *—கீழே உம்முடைய பாபங்களை நீர் தாமே சொல்லிக்கொண்டீர்; இவ்வளவு பாவங்கள் நிறைந்திருக்கின்ற வும்மை எங்ஙனே அநுக்ரஹிக்க முடியும்? என்று எம்பெருமான்

திருவுள்ளமாக, காகாஸுரனுடைய அபராதத்தினும் சிசுபாலனுடைய அபராதத்தினும் மிக்க அபராதம் உலகிலுண்டோ? அவற்றைப் பொறுத்தருளின வுனக்குப் பொறுக்க முடியாத துண்டோ வென்கிறார்.

வநவாஸ காலத்தில் சித்ரகூட மலைச்சாரலிலே இராமபிரானும் பிராட்டியும் ஏகாந்தமாக இருக்கிற ஸமயத்தில் இந்திரன் மகனை ஜயந்தன் பிராட்டியினழகைக்கண்டு மோஹித்து அவளைத் தான் ஸ்பர்சிக்க வேண்டுமென்னும் தீயகருத்தினனாய்த் தேவ வேஷத்தை மறைத்துக் காகவேஷத்தைப் பூண்டுகொண்டு வந்து, பிராட்டியின் மடியிலே பெருமாள் பள்ளிகொண்டருளுகையில் தாயென்றறியாதே பிராட்டியின் திருமார்பினில் குத்த, அவ்வளவிலே பெருமாள் உணர்ந்தருளி அதிக கோபங்கொண்டு ஒரு தர்ப்பத்தையெடுத்து அதில் ப்ரஹ்மாஸ்த்ரத்தைப் பிரயோகித்து அதனை அந்தக் காகத்தின்மேல் மந்தகதியாகச் செலுத்த, அக்காகம் அந்த அஸ்த்ரத்துக்குத் தப்பி வழிதேடிப் பலவிடங்களிலும் ஓடிச்சென்று சேர்ந்தவிடத்தும் ஒருவரும் ஏற்றுக் கொள்ளாமையாலே மீண்டும் பெருமாளையே சரணமடைய, அப்பெருமான் அருள் கொண்டு அக்காகத்துக்கு உயிரைக்கொடுத்து அந்த அஸ்த்ரம் வீண்படாமல் காகத்தின் ஒரு கண்ணை அறுத்தவளவோடு விடும்படி செய்தருளினனென்ற வரலாற்றில் காகாபராதத்தை க்ஷமித்தருளினமை விளங்கும். தலையறுக்காமல் உயிரோடுவிட்டது க்ஷமாகார்யமிறே.

சிசுபாலன் பிறந்தபொழுது நான்கு கைகளையும் மூன்று கண்களையுமுடையனாயிருந்தான்; அப்பொழுது அனைவரும் இது என்னவென்று வியக்கும்போது, ஆகாயவாணி "யார் இவனைத் தொடுகையில் இவனது கைகளிரண்டும் மூன்றாம் விழியும் மறையுமோ, அவனால் இவனுக்கு மரணம்" என்று கூறிற்று. அவ்வாறே பலரும் தொடுகையில் மறைபடாத கைகளும் கண்ணும் கண்ணபிரான் தொட்டவளவிலே மறைபட்டன; அதனால் 'இவனைக் கொல்பவன் கண்ணனே' என்றறிந்து இவன் தாய் 'யாது செய்யினும் என் மகனைக் கொல்லலாகாது' என்று கண்ணனை வேண்ட, அந்த அத்தையின் நன்மொழிக்கு ஒருசார் இணங்கிய கண்ணபிரான் 'இவன் எனக்கு நூறு பிழை செய்யுமளவும் இவன் பிழையை நான் பொறுப்பேன்' என்று கூறியருளினன். பின்பு சிசுபாலன், தனக்குக் கண்ணன் சத்துருவென்பதை இளமையிலேயே அறிந்து அதனாலும் பூர்வஜந்ம வாஸனையாலும் வளர்ந்த மிக்க பகைமையைப் பாராட்டி, எப்பொழுதும் அப்பெருமானுடைய திவ்யகுணங்களையும் திவ்யசேஷ்டிதங்களையும் நிந்திப்பதே தொழிலாக இருந்தான். இவனுக்கு மணஞ்செய்து கொடுப்பதென்று நிச்சயித்திருந்த ருக்மிணியைக் கண்ணன் வலியக் கவர்ந்து மணஞ்செய்து கொண்டது முதல் இவன் கண்ணனிடத்து அளவுகடந்த வைரங்கொண்டனன். பின்பு இந்த்ரப்ரஸ்த நகரத்தில் நடந்த ராஜஸூய யாகத்தில் தர்மபுத்திரனால் கண்ணபிரானுக்கு அக்ரபூஜை செய்யப்பட்டதைக் கண்டு அளவிறந்த வசைச்சொற்களைப்பிதற்றி அதுபற்றிக் கண்ணனது சக்ராயுதத்தால் தலை துணிக்கப்பட்டு இறந்து தேஜோமயமான திவ்ய சரீரம் பெற்று எம்பெருமானது திருவடியை அடைந்தனன் என்பது சிசுபால வ்ருத்தாந்தம். இவ்வளவு மஹாபராதியான இவனுக்கும் பரம ஸாம்ய ரூபமான ஸாயுஜ்யத்தைக் கொடுத்தது க்ஷமாகார்யமிறே.

முதலடியில் ரகுவர! என்று ஸம்போதநமாயிருப்பது போலவே இரண்டாமடியின் முடிவிலும் க்ருஷ்ண! என்று ஸம்போதநமாகவே யிருக்கலாமென்பது பலரது கொள்கை. க்ருஷ்ண: என்று ப்ரதமாந்தமாக உரைப்பாருமுளர். க்ருஷ்ணனாகி என்றபடி.

தாத்ருச: என்பது 'தாத்ருக்' சப்தத்தின்மேல் ஷஷ்டீவிபக்தி. "யஸ்ய சைத்யஸ்ய" என்ற பாடம் அசுத்தம். ப்ரதிபவம் = இவ்வண்டத்திற்கு உட்பட்ட வைகுண்டலோகமென்று பெயருள்ள பகவல் லோக விசேஷத்தில் திருவாசல் காக்கும் கைங்கரியத்திலே யிருந்த இருவர் ஒரு மஹர்ஷியின் சாபத்திற்குப் பாத்திரமாகி இந்தப் பூமியில் பகவத் விரோதிகளாக மூன்று பிறவி பிறந்தார்களென்றும் மூன்றாவது பிறவியின் இறுதியில் அவர்களுக்கு எம்பெருமான் மோக்ஷமளித்தனனென்றும் புராணங்கூறும். சிசுபாலன் அவ்விருவர்களுள் ஒருவனே. இந்த ஜந்மம் அவனுக்கு மூன்றாவது. காகாஸுரன் ஒரு பிறவியில் ஒரு தடவை அபசாரப்பட்டான்; இவனோ மூன்று பிறவிகளிலும் இடைவிடாது அபராதம் செய்தவன்; இப்படிப் பட்டவனுக்கும் முக்தியளித்தது உனது அளவற்ற க்ஷமாகுணத்தை ஆவிஷ்கரிக்கின்றதென்றபடி. ஸாயுஜ்யமாவது பரமஸாம்யரூபமான மோக்ஷம். "கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளேவையும், சேட்பால் பழம்பகைவன் சிசுபாலன், திருவடி தாட்பாலடைந்ததன்மை" என்ற திருவாய்மொழி [7—5—3] காண்க. ... ... ... ... (கூங)

**நநு ப்ரபந்நஸ் ஸக்ருதேவ நாத தவாஹமஸ்மீதிச யாசமாந:**
**தவாநுகம்ப்ய: ஸ்மரத: ப்ரதிஜ்ஞாம் மதேக வர்ஜம் கிமிதம் வ்ரதம் தே.** (௬௪)

| | | | |
|---|---|---|---|
| நநு நாத! | ஸ்வாமிந்!, | ப்ரதிஜ்ஞாம் ஸ்மரத: தவ | (அன்று நீ கடற்கரையில் விபீஷணாழ்வானுக்குப் பண்ணின) ப்ரதிஜ்ஞையைத் திருவுள்ளத்திலே கொண்டிருக்கிற உனக்கு |
| அஹம் ஸக்ருத் ஏவ ப்ரபந்ந: இதி | ‘நான் ஒருகால் ப்ரபத்தி பண்ணினவன்’ என்றும் | அநுகம்ப்ய: | அருள்புரிய உரியேன், |
| அஹம் தவ அஸ்மி இதி ச | ‘நான் உனக்கே உரிமைப்பட்டிருக்கிறேன்’ என்றும் (சொல்லிக்கொண்டு) | தே இதம் வ்ரதம் | உனது இந்த விரதமானது |
| யாசமாந: அஹம் | (கைங்கர்ய புருஷார்த்தத்தைப்) ப்ரார்த்திக்கின்ற அடியேன் | மத் ஏக வர்ஜம் கிம் | என்னொருவனைத் தவிர்த்தோ? |

* * *—காகாஸுர சிசுபால ப்ரப்ருதிகள் திறத்திலே பொறுமையைச் செலுத்திக் காரியஞ் செய்தாற்போலே அடியேன் திறத்திலும் செய்தருளவேணுமென்ற ஆளவந்தாரை நோக்கி எம்பெருமான் ‘நீர் இப்படி சொல்லலாமோ? ஸ்வதந்த்ரரான நாம் சிலர் திறத்தில் ஒன்றைச் செய்தால் அதுவே அனைவர்க்கும் பொதுவாக ஆய்விடுமோ? அது என் இஷ்டத்தைப் பொறுத்ததன்றோ’ என்றருளிச் செய்ய, அது கிடக்கட்டும்; விபீஷண சரணாகதி ப்ரகரணத்திலே கடற்கரையிலே ஸர்வ ஸாதாரணமாக தேவரீர் பண்ணின ப்ரதிஜ்ஞை பொய்யோ? அதனை மறந்துவிட்டதோ? என்னொருவனை மாத்திரம் விலக்கியே அந்த “ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே—அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம” என்ற பிரதிஜ்ஞை செய்தருளிற்றோ? என்கிறார்.

அன்று தேவரீர் செய்தருளின பிரதிஜ்ஞையை ஸ்மரிக்கப்பெற்றால் அடியேனை அநுக்ரஹித்தே தீரவேண்டியதாகும்; ஏனென்றால், தேவரீர் சொல்லியிருப்பதாவது—‘ஒருகாலே சரணம் அடைபவனுக்கும் உனக்கே நாமாட்செய்வோமென்று ப்ரார்த்திப்பவனுக்கும் அபயமளிக்கிறேன்; இது எனது கடமை’ என்று பிரதிஜ்ஞை செய்திருக்கிறது. அப்படியே நான் செய்து தலைக்கட்டியாயிற்று; “த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே” என்று ஸக்ருத்ப்ரபதநம் பண்ணினேன்; “கதாஹமைகாந்திகநித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி” என்று* தவாஸ்மீதியாசநமும் பண்ணினேன்; இரண்டுமான பின்பு இனி தேவரீருடைய “அபயம் ததாமி” என்ற பிரதிஜ்ஞை பலிக்கவேண்டியதேயன்றோ. “கோப்ராஹ்மணேப்யச் சுபமஸ்து நித்யம் கோபாலராமன் பசு நீங்கலாக” என்றாற்போலே, ஆளவந்தார் தவிர மற்ற பேர்கட்குத்தான் அபயப்ரதாந ஸங்கல்பம் பலிக்கவேண்டியதென்று திருவுள்ளம்பற்றியிருக்கிறதோ! என்று சமத்காரமாகக் கேட்கிறார். ... ... ... .... ... ... (௬௪)

**அக்ருத்ரிமத்வ ச்சரணாரவிந்த ப்ரேம ப்ரகர்ஷாவதிமாத்மவந்தம்.**
**பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத மத்வ்ருத்த மசிந்தயித்வா.** (௬௫)

| | | | |
|---|---|---|---|
| மத் வ்ருத்தம் | எனது நடவடிக்கையை | ஆத்மவந்தம் | ஆத்ம ஸ்வரூபத்தை உள்ளபடி உணர்ந்தவரும் |
| அசிந்தயித்வா | கணிசியாமல், | பிதாமஹம் | எனக்குப் பாட்டனருமாகிய |
| அக்ருத்ரிம த்வத் சரணாரவிந்த ப்ரேம ப்ரகர்ஷ அவதிம் | உனது திருவடித்தாமரையில் உண்மையாகவுண்டான பரமபக்திக்கு எல்லை நிலமாயிருப்பவரும் | நாதமுநிம் | ஸ்ரீமந்நாதமுனிகளை |
| | | விலோக்ய | கடாக்ஷித்து |
| | | ப்ரஸீத | (அடியேனை) அநுக்ரஹித்தருளாய். |

* * *—எம்பெருமான் தம்மை அநுக்ரஹித்தருளவேணுமென்பதற்கு ஒவ்வொரு ச்லோகத்தில் ஒவ்வொரு ஹேதுவையருளிச் செய்தார் கீழ்; அந்த ஹேதுக்களெல்லாம் உபயோகமற்றவை என்னும்படியாக உத்தமோத்தமமான ஒரு ஹேது நினைவுக்கு வந்தது; ஸ்ரீமந்நாதமுனிகளுக்கும் தமக்கும் ஏற்பட்டிருக்கிற தேஹஸம்பந்தமும் எம்பெருமான் தம்மை விஷயீகரிப்பதற்கு முக்கியமான ஹேதுவாதலால் அதனை இந்த ச்லோகத்தால் விண்ணப்பம் செய்கிறார்!

இந்த ஸ்தோத்ராரம்பத்தில் “தஸ்மை நமோ மதுஜிதங்க்ரி ஸரோஜதத்வஜ்ஞாநாநுராக மஹிமாதிசயாந்தஸீம்நே—நாதாய நாதமுநயே” என்று அருளிச் செய்ததை இதில் முன்னடி

களால் அநுவதிக்கிறார். கபடமற்றதும் அளவற்றதுமான பகவத்பக்தி நிறைந்தவர் ஸ்ரீமந்நாதமுநிகள் என்றபடி. ஆத்மவந்தம் என்பதற்கு ஜிதேந்த்ரியர் என்றும், ஸத்தை பெற்றவர் என்றும் பொருள் கொள்வர். அப்படிப்பட்ட மஹான் அடியேனுக்குப் பாட்டனாராகவும் வாய்த்தார் என்கிறார் பிதாமஹம் என்று. நாதமுநிகளின் திருக்குமாரர் ஈச்வரபட்டாழ்வார்; அவருடைய திருக்குமாரர் ஆளவந்தார் என்றிறே பரமபரை. இந்த பிதாமஹத்வம் வித்யையாலும் ஜந்மத்தாலும் என்றுணர்க; இரண்டுவகையான ஸம்பந்தமும் அமைந்திருக்கையாலே.

அப்படிப்பட்ட நாதமுநிகளைக் கடாக்ஷித்து என்மீது இரங்கியருளவேணும் என்றது—அவருடைய ஸம்பந்தம் பெற்றிருக்கிற இவன் அந்த ஸம்பந்தமே காரணமாக நம்மால் அநுக்ரஹிக்கத்தக்கவன் என்று திருவுள்ளம்பற்றவேணும் என்றபடி. அநுக்ரஹிப்பதற்கு அந்த ஸம்பந்தம் பற்றாசுஆகிறாப்போலே நிக்ரஹிப்பதற்கு என்னுடைய பாவங்கள் காரணமாகக் கூடியவையாயினும் இவற்றைக் கணிசியாமல் அந்த மஹத்ஸம்பந்த மொன்றையே நோக்கியருள வேணுமென்கிறார் மத்வ்ருத்த மசிந்தயித்வா என்று.

இவர்தாம் தம்மை அநுக்ரஹித்தருள வேணுமென்பதற்கு ஹேதுவாகக் கீழ் ச்லோகங்களிற் சொன்னவற்றுக் கெல்லாம் எம்பெருமான் ஒவ்வொரு கண்ணழிவு சொல்லிவிடக்கூடுமாயினும் இப்பெரிய விஷயத்திற்குச் சொல்லலாவதொரு மறுமாற்றம் ஈச்வரன்றனக்குமில்லாமையாலே 'அப்படியே அநுக்ரஹிததோம்' என்று சோதிவாய் திறந்து அருளிச்செய்யவே, இவரும் மநோரதம் தலைக்கட்டப்பெற்று ஸ்தோத்ரத்தையும் தலைக்கட்டியருளினாராயிற்று. (சுரு)

"யத்பதாம்போருஹத்யாநவித்வஸ்தாசேஷ கல்மஷ:!
வஸ்துதாமுபயாதோஹம் யாமுநேயம் நமாமி தம்."

ஆளவந்தார் திருவடிகளே சரணம்.

பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
'ரத்நப்ரபா' என்னும்
ஸ்தோத்ரரத்ந வியாக்கியானம்
முற்றுப்பெற்றது
ஸ்ரீரஸ்து.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

CONNEMARA PUBLIC LIBRARY
7 MAR 194
MADRAS



ஆளவந்தார் திருவடிகளே சரணம்.

ஆளவந்தார் அருளிச்செய்த

# சதுச்ச்லோகீ

ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர்

இயற்றிய

## வியாக்கியானத்தின் அவதாரிகை

ஸகல சாஸ்த்ர ப்ரவீணரான ஆளவந்தார் ஸ்வாசார்யரான மணக்கால்நம்பியின் திருவருளாலே உபயவேதாந்த ஸாரார்த்தங்களையெல்லாம் விசததமமாக உணர்ந்தருளி அந்த அர்த்தவிசேஷங்களை ம்ருதுப்ரஜ்ஞர்களான நம்போன்றவர்களுக்கும் அதிஸரள ப்ரக்ரியையிலே உணர்த்தியருளத் திருவுள்ளம்பற்றி ஸ்தோத்ரரத்நமென்றும் சதுச்ச்லோகி யென்றும் இரண்டு ஸ்தோத்ரங்களை யருளிச்செய்தார். அதி கஹந சாஸ்த்ரார்த்தங்களை ம்ருதுபாகமான ஸ்தோத்ரங்களிலே அமைத்து அருளிச்செய்வதென்கிற ஸரணிக்கு இவரே ப்ரதமப்ரதர்சகராயிருப்பர். இவரைப் பின்பற்றியே ஆழ்வான், பட்டர், தேசிகன் முதலானோர் இந்த ரீதியிலே ஸ்தோத்ரங்கள் அருளிச்செய்தார்கள்.

இவர்தாம் ஸ்தோத்ரரத்நம் அருளிச்செய்து தலைக்கட்டின வனந்தரம் இந்த ஸ்தோத்ரத்தை யருளிச்செய்தாரென்று பெரியார் பணிக்கை. ஆழ்வானும் ஸ்ரீ வைகுண்டஸ்தவாதிகள் நான்கும் அருளிச்செய்தபின்னரே ஸ்ரீஸ்தவமருளிச்செய்தார். பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவமருளிச்செய்தபின்பே ஸ்ரீகுணரத்நகோசம் அருளிச்செய்தார். ஆசார்யவந்தநம் முதலிய மங்களாசரணங்கள் ஸ்தோத்ரரத்நத்தின் உபக்ரமத்தில் காண்கையாலும் அதுவே முதல் ஸ்தோத்ரமாக அறியிடப்பெறும். ஆச்ரயணவேளையிலே பிராட்டியை முன்னம் பணிந்து பின்னை எம்பெருமானைப் பணிகிறோமாலும் ஸ்தோத்ரப்ரக்ரியையிலே இந்த க்ரமவிவக்ஷை ஆசார்யர்களுக்கு இருந்ததில்லையென்பர்.

இந்த ஸ்தோத்ரத்தின் விசேஷார்த்தங்களை ஸர்வஜ்ஞ ஸார்வபௌமரான ஆச்சான்பிள்ளையும், ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரான தேசிகனும் பரக்க அருளிச்செய்து வைத்திருக்கையாலே எம்போன்ற மிதமதிகளுக்கு உபயுக்தமாம்படி ஸங்க்ஷிப்தவ்யாக்யானம் இயற்றப்படுகின்றது.

அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீ:

# சதுச்ச்லோகி—முதல் ச்லோகம்.

LIBRARY
7 MAR 1943

காந்தஸ் தே புருஷோத்தம: பணிபதிச் சய்யாஸநம் வாஹநம்
வேதாத்மா விஹகேச்வரோ யவநிகா மாயா ஜகந்மோஹிநீ.
ப்ரஹ்மேசாதிஸுரவ்ரஜஸ் ஸதயிதஸ் த்வத்தாஸ தாஸீ கண:
ஸ்ரீரித்யேவ ச நாம தே பகவதி ப்ரூம: கதம் த்வாம் வயம். (க)

பதவுரை.

| | | | |
|---|---|---|---|
| புருஷோத்தம: | புருஷச்ரேஷ்டரான பெருமாள் | ஸதயித:ப்ரஹ்மேசாதிஸுர வ்ரஜ: த்வத் தாஸ தாஸீகண: | ப்ரஹ்மருத்ராதி தேவர்களின் பத்நிகள் உமக்கு தாஸீவர்க்கமாயும் அந்த தேவர்கள் தாஸவர்க்கமாகவுமுள்ளார்கள் ; |
| தே காந்த: | உமக்கு பர்த்தா. | | |
| பணிபதி: | ஆதிசேஷன் | | |
| சய்யா | படுக்கையாகவும் | | |
| ஆஸநம் | ஆஸனமாகவுமிருக்கிறான் ; | தே நாம ச | உம்முடைய திருநாமமோவென்னில் |
| வேதாத்மா | வேதஸ்வரூபியான | | |
| விஹகேச்வர: | பக்ஷிராஜன் | ஸ்ரீ: இத்யேவ | ஸ்ரீ என்றே உள்ளது; |
| வாஹநம் | வாகனமாயிருக்கிறான்; | | |
| ஜகந்மோஹிநீ | ஜகத்துக்களை மோகிப்பிக்க வல்ல | த்வாம் | இவ்வளவு அதிசயம் பொருந்திய வும்மை |
| மாயா | மூலப்ரக்ருதியானது | வயம் | அடியோம் |
| யவநிகா | திருத்திரையாகவுள்ளது ; | கதம் ப்ரூம: | எங்ஙனே பேசுவோம் ? |

* * * எம்பெருமான் தானொருவனே ஜகதேக சேஷியாயிருக்கச் செய்தேயும் தன்னுடைய நிரங்குசஸ்வாதந்த்ரியத்தாலும் ப்ரீத்யதிசயத்தாலும் பிராட்டிதன்னையும் உபயவிபூதி சேஷி ஸ்தானத்திலே நிறுத்தியிருக்கையாலே அதுதன்னைத் திருவுள்ளத்திலே கொண்டு ஸ்துதிக்கிறார். பிராட்டி உபயவிபூதிக்கும் சேஷியாயிருக்கிறபடியை மூன்று பாதங்களாலேயருளிச்செய்கிறார். எம்பெருமானுக்கே அஸாதாரணமாயிருக்கிற இந்த அதிசயம் பிராட்டிக்குக் கூடினபடி எங்ஙனே! என்று ஒருவரும் சங்கிக்கவொண்ணாமைக்காக முந்துறமுன்னம் காந்தஸ் தே புருஷோத்தம: என்கிறார். பர்த்தாவுக்கு அதீனமான வஸ்துக்களிலெல்லாம் பார்யைக்கும் ஆதிபத்யம் காண்கிற லௌகிக ப்ரக்ரியையை நினைப்பது. புருஷோத்தமனைக் கைப்பிடித்த பெருமையாலே இந்த அதிசயமெல்லாம் உமக்குக் கூடிற்று என்று முதலிலே காட்டினாராய்த்து.

*சென்றால் குடையாமிருந்தால் சிங்காசனமாய்—திருமாற்கரவு* என்கிறபடியே எம்பெருமான்திறத்தில ஸகலவித கிஞ்சித்காரங்களையும் செய்துபோருகிற திருவனந்தாழ்வான் * தயாஸஹாஸீந மநந்தபோகிநி* என்று சொல்லவேண்டும்படி யிருக்கிற பிராட்டி திறத்திலும் கிஞ்சித்கரித்தானாகக் குறையில்லையிறே. எம்பெருமானைச் சுமந்து திரிகின்ற பெரியதிருவடி பிராட்டியையும் சுமந்தானாகக் குறையில்லையிறே.

[ஜகந்மோஹிநீ மாயா யவநிகா] இருவருமான சேர்த்தியிலே திருத்திரை வளைப்பதுண்டே; * பகவத்ஸ்வரூப திரோதாநகரீம் * என்று கத்யத்திலருளிச்செய்தபடியே ஜகன்மோஹன மூலகந்தமாய், * மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத் * என்கிறபடியே ஆச்சர்யசக்தி யோகத்தாலே மாயாசப்தவாச்யமாயிருக்கின்ற ப்ரக்ருதியானது உமக்கு அந்தத் திரையாகவிருக்கின்றது. விசித்ரநாநாவேஷபரிக்ரஹம் பண்ணுகிறவர்கள் திரைக்குள்ளேயிருந்து செய்வது லோகத்ருஷ்டம். இங்கு அதுவே விவக்ஷிதம். திவ்ய தம்பதிகளுக்கு இந்த ப்ரக்ருதி மண்டலம் போகஸ்தானமென்று காட்டுகை பரமதாத்பர்யம். [மோஹிநீ, மோஹநீ] என்று இரண்டுவித ரூபமும் சாஸ்த்ரஸித்தம்.

[ப்ரஹ்மேசாதி. இத்யாதி] ஸரஸ்வதீ பார்வதீ ப்ரப்ருதிகள் தாஸீவர்க்கமாயும் ப்ரஹ்மருத்ரப்ரப்ருதிகள் தாஸவர்க்கமாயுமிருக்கும்படியை விசிஷ்ட நிர்தேசத்தாலே அருளிச்செய்தாராய்த்து. கேவலஸுரவ்ரஜம் தாஸீகணமல்லாவிடினும் தயிதாவிசிஷ்டமான ஸுரவ்

ரஜம் தாத்ருசமாகக் குறையில்லை. [ஸ்ரீரித்யேவச நாம தே]கிம் பஹுனா? ஸ்ரீ என்கிற சொல்லுக்கு ஜகத்தில் எவ்வளவு பெருமை என்று சொல்லவும் வேணுமோ? அந்தச்சொல் உமக்குத் திருநாமமாயிருக்கின்றதென்றால், இதற்குமேற்படச் சொல்லலாவதுண்டோ? ... (க)

**யஸ்யாஸ் தே மஹிமாநமாத்மந இவ த்வத்வல்லபோபி ப்ரபு:**
**நாலம் மாதுமியத்தயா நிரவதிம் நித்யாநுகூலம் ஸ்வத:**
**தாம் த்வாம் தாஸ இதி ப்ரபந்ந இதி ச ஸ்தோஷ்யாம்யஹம் நிர்ப்பய:**
**லோகைகேச்வரி லோகநாததயிதே தாந்தே தயாம் தே விதந். (உ)**

| | | | |
|---|---|---|---|
| லோகைகேச்வரி | உலகுக்கெல்லாம் தலைவியே! | தாம் த்வாம் | அப்படிப்பட்ட உம்மை |
| லோகநாத தயிதே | ஸர்வேச்வரனுடைய ப்ராணவல்லபையே! | அஹம் | அடியேன் |
| யஸ்யா: தே | யாவரொரு உம்முடைய | நிர்ப்பய: | பயமற்றவனாய் |
| நிரவதிம் | எல்லையில்லாததும் | ஸ்தோஷ்யாமி | ஸ்துதிக்கப்போகின்றேன்; |
| ஸ்வத: | ஸ்வபாவமாகவே | | |
| நித்யாநுகூலம் | ஸர்வதாப்ரியமாயிருப்பதுமான | தாந்தே [மயி] தே தயாம் விதந் ஸந் | க்ருபணனான என் விஷயத்தில் உமக்கு தயையிருப்பதை யறிந்தவனாய்க் கொண்டு |
| மஹிமாநம் | மஹிமையை | | |
| இயத்தயா மாதும் | இவ்வளவென்று பரிச்சேதிப்பதற்கு | | |
| ப்ரபு: | ஸர்வசக்தரான | தாஸ: இதி | தாஸனென்கிற காரணத்தாலும் |
| த்வத்வல்லபோபி | உம்முடைய பர்த்தாவும் | | |
| ஆத்மந: மஹிமாநம் மாதுமிவ நாலம் | தம்முடைய பெருமையைப் பரிச்சேதிக்க அஸமர்த்தராயிருப்பது போலவே அஸமர்த்தராயிருக்கின்றாரோ | ப்ரபந்ந: இதி ச | ப்ரபந்நனென்கிற காரணத்தாலும் |

[ஸ்தோஷ்யாமீத்யந்வய:]

* தேவி த்வந்மஹிமாவதிர் ந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே * என்கிற ஆழ்வான் ஸ்ரீஸூக்தியை இவ்விடத்தில் பூர்வார்த்தத்திற்குச்சேர அநுஸந்திப்பது. பெரிய பிராட்டியாரே! உம்முடைய பெருமையை ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனான எம்பெருமானும் கூட பரிச்சேதித்து அறியகில்லானென்னும்போது அடியேன் எவ்வளவிலேன்? ஸ்தோத்ரமென்று வாய்திறக்கவும் யோக்யதை இல்லை. ஆனாலும் ஆச்ரிதபக்ஷபாதம் உமக்குக் குறைவற்றதென்பதை அடியேனறிவேன். அடியேனும் ஆச்ரிதர்களில் ஒருவனாயிருக்கிறேன். ஆதலால் நிர்ப்பயனாய் ஸ்துதிக்கப்புகுகின்றேனென்றாராயிற்று.

* ஆத்மந இவ * என்றவிடத்தில் * தனக்கும் தன்தன்மையறிவரியானை * தாம் தம் பெருமை யறியார் * இத்யாதிகள் அநுஸந்தேயம்.

"தாந்தே" என்பதை ஸப்தம்யந்தமாகவும் ஸம்புத்த்யந்தமாகவும் கொள்ளலாம். "தாந்த: க்லேசாஸஹிஷ்ணுஸ் ஸ்யாத்" என்று கோசம் காண்கையால் தீனனான அடியேன் விஷயத்தில் என்கை. ஸம்புத்தியாமிடத்தில், துவண்ட வடிவையுடையவளே! என்கை.

பிராட்டியின் பெருமை ஸ்வதோநித்யாநுகூலமாயிருக்கையாவது * எப்பொழுதும் நாள்திங்களாண்டூழியூழிதொறும் அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதமே * என்னுமாபோலே அபூர்வவத் நித்யபோக்யமாயிருக்கை. நிலாத்தென்றல் சந்தனம் முதலிய வஸ்துக்கள் போல் ஸர்வதா ஸ்ப்ருஹணீயமாயிருக்கை. ... (உ)

**ஈஷத் த்வத்கருணாநிரீக்ஷணஸுதா ஸந்துக்ஷணாத் ரக்ஷ்யதே**
**நஷ்டம் ப்ராக் ததலாபதஸ் த்ரிபுவநம ஸம்ப்ரத்யநந்தோதயம்**
**ச்ரேயோ ஹ்யரவிந்த லோசநமந: காந்தாப்ரஸாதாத்ருதே**
**ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்வஸு ந்ருணாம் ஸம்பாவ்யதே கர்ஹிசித். (ங)**

| | |
|---|---|
| ஈஷத் த்வத்கருணா நிரீக்ஷண ஸுதா ஸந்துக்ஷணாத் | ஸ்வல்பம் உம்முடைய கருணாகடாக்ஷமாகிற அமுதப் பெருக்கினால் |
| த்ரிபுவநம் | த்ரிலோகமும் |
| ரக்ஷ்யதே | ரக்ஷிக்கப்படுகிறது; |
| [எங்ஙனே யென்னில்] | |
| ப்ராக் | முன்பு |
| தத் அலாபத: | அந்த கருணாகடாக்ஷம் பெருமையினாலே |
| நஷ்டம் | நசித்துக்கிடந்தவது |
| ஸம்ப்ரதி | கடாக்ஷம் பெற்றவிப்போது |
| அநந்த உதயம் | அபாரமான அப்யுதயம் பெற்றதாக |

[ரக்ஷ்யதே இத்யந்வய:]

| | |
|---|---|
| ந்ருணாம் | மனிதர்களுக்கு |
| ஸம்ஸ்ருதி அக்ஷர வைஷ்ணவ அத்வஸு ச்ரேய: | இஹலோகபோக, கைவல்யபோக, பரமபதபோகங்களில் நன்மையானது |
| அரவிந்தலோசநமந: காந்தா ப்ரஸாதாத் ருதே | புண்டரீகாக்ஷனை பகவானுடைய திருவுள்ள முகந்த திவ்ய நாயகியான பிராட்டியின் அநுக்ரகத்தாலல்லது |
| [வேறொன்றாலும்] | |
| கர்ஹிசித் | ஒருபோதும் |
| ந ஸம்பாவ்யதே ஹி | ஸம்பவிக்கமாட்டாதிறே. |

கீழே "ஸ்தோஷ்யாமி" என்று ப்ரதிஜ்ஞை பண்ணினபடியே ஸ்துதிக்க உபக்ரமிக்கிறார். த்ரைலோக்யத்தினுடைய ஸமுல்லாஸத்திற்குப் பிராட்டியின் கடாக்ஷவீக்ஷணமே ஹேது வென்னுமிடத்தை அந்வய வ்யதிரேகங்களாலே தர்சிப்பிக்கிறார் பூர்வார்த்தத்தில். இவளுடைய கருணாநிரீக்ஷண ஸுதாஸந்துக்ஷணமில்லாதவளவில் த்ரிலோகமும் நஷ்டமாய்க் கிடக்கும்; அது உண்டானவளவில் சததாகமாகப் பணைத்து அப்யுதயசாலியாகும் என்கிறார்.

[ச்ரேயோ நஹி இத்யாதி] பூர்வார்த்தத்தில் "த்வத்கருணா" என்று முன்னிலையாக அருளிச்செய்திருக்கையாலே இங்கும் "த்வத் ப்ரஸாதாத்ருதே" என்றே [மத்யம புருஷனாக] அருளிச்செய்ய ப்ராப்தம். அங்ஙனன்றிக்கே ப்ரதம புருஷனாக அருளிச்செய்தது பொருந்துமோ வென்னில்; பொருந்தும்; உத்தரார்த்தம் பிராட்டியை நோக்கி யருளிச்செய்வதன்று. திருவுள்ளத்தை நோக்கி யருளிச்செய்வது, அல்லது உலகத்தை நோக்கி அருளிச்செய்வதென்று கொள்ளவேணும். ஒரே ச்லோகத்தில் இங்ஙனே ரீதிபேதம் பண்ணக்கூடுமோவென்னில். இதில் அநௌசித்யமொன்று மில்லாமையாலே கூடும். அருளிச்செயல்களிலும் இங்ஙனே பல வருவதுண்டு. பெரியாழ்வார் திருமொழியில் *வருக வருக வருகவிங்கே* என்கிற பாசுரத்தைக் கொள்வது. இதில் முந்துற இரண்டடி யசோதை கண்ணபிரானை நோக்கிச் சொன்னது. பின்னை அரையடி ஒரு கோபியைப் பார்த்துச் சொன்னது. மீண்டும் ஒன்றரையடி கண்ணனையே நோக்கிச் சொன்னது. இங்ஙனே பலவுள்ளன.

[ஸம்ஸ்ருதீத்யாதி.] த்ரிவர்க்காந்தர்ப் பூதமான ஸகலவிஷைச்வர்யமும் ஸம்ஸ்ருதிசப்த விவக்ஷிதம். அக்ஷரசப்தம் ப்ரத்யகாத்மாநுபவபரம். வைஷ்ணவாத்வசப்தம் அர்ச்சிராதிகதி விசேஷ வாசகமாய்க்கொண்டு தத்த்வாரா ப்ராப்தவ்யமான பகவதநுபவத்தில் லாக்ஷணிகம். ஐச்வர்ய கைவல்ய பகவல்லாபங்களில் எது வேணுமானாலும் பிராட்டியின் அநுக்ரஹமுண்டானாலன்றிக் கிடைப்பதரிது என்றாராயிற்று. இப்படி யருளிச்செய்ததுகொண்டு எம்பெருமானுக்குப்போலவே பிராட்டிக்கும் ஸ்வதந்த்ராதாத்ருத்வமுண்டென்று சிலர் நினைத்துவிடுவார்களோவென்று அஞ்சி இவ்விடத்து பாஷ்யத்தில் ஸ்வாமி தேசிகன் அர்த்தவிசேஷங்களை அத்யத்புதமாக சிக்ஷித்தருள்கிறார். அதில் ஒரு காரிகை அத்யந்தம் ஸாரமானது. பலப்ரதானம் பண்ணுமவன் எம்பெருமானே; பிராட்டி செய்தருளும் கார்யம் ஏதென்னில்; அந்த எம்பெருமான் நிக்ரஹோந்முகனாயிருக்கும் காலத்தில் நிக்ரஹேச்சையைத் தவிர்க்கப்பார்ப்பதும் அநுக்ரஹோந்முகனாயிருக்கிற காலத்தில் அதனை இன்னும் அநுவ்ருத்தி செய்விக்கப்பார்ப்பதும் ஆகிய இவையே பிராட்டிசெய்யும் செயல்—என்பது அந்த காரிகையின் கருத்து. சாஸ்த்ரார்த்த மருமங்களை இங்ஙனே நிஷ்கர்ஷித்தருளிச்செய்யும் நம் தேசிகனுடைய திவ்யஸூக்திகளே நமக்குத் தஞ்சம். ... (௩)

**சாந்தாநந்தமஹாவிபூதி பரமம் யத் ப்ரஹ்ம ரூபம் ஹரே:**
**மூர்த்தம் ப்ரஹ்ம ததோபி தத்ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம்,**
**யாந்யந்யாநி யதாஸுகம் விஹரதோ ரூபாணி ஸர்வாணி தாநி**
**ஆஹுஸ் ஸ்வைரநுரூபரூபவிபவைர் காடோபகூடாநி தே.** (௪)

| | |
|---|---|
| சாந்த | எவ்விதமான அவத்யஸ்பர்சமுமில்லாததும் |
| அநந்த | அபரிச்சிந்நமும் |
| மஹாவிபூதி | பெரிய உபயவிபூதிகளையுடையதும் |
| பரமம் | ஸர்வோத்க்ருஷ்டமும் |
| ப்ரஹ்ம | ப்ரஹ்மபத வாச்யமுமான |
| ஹரேஃ யத் ரூபம் | எம்பெருமானுடைய ஸ்வரூபம் யாதொன்றுண்டோ |
| ததோபி | அந்தஸ்வரூபத்திற் காட்டிலும் |
| தத்ப்ரியதரம் | அப்பெருமானுக்கு அத்யந்த ப்ரியமாயும் |
| அத்யத்புதம் | அத்யாச்சர்யமாயும் |
| மூர்த்தம் ப்ரஹ்ம | மூர்த்திமத்தான ப்ரஹ்மமென்று சொல்லப்படுவதாயுமிருக்கிற |

| | |
|---|---|
| யத் ரூபம் | (எம்பெருமானுடைய) திவ்யமங்கள விக்ரஹம் யாதொன்றுண்டோ |
| யதாஸுகம் | திருவுள்ளத்திற்கின்பமாக |
| விஹரதஃ | லீலாரஸங்களையநுபவிக்கிற |
| தஸ்ய ஹரேஃ | அந்த எம்பெருமானுடைய |
| அந்யாநி யாநி ரூபாணி | உச்சாவசங்களான விபவாவதாரத் திருமேனிகள் யாவையோ |
| தாநி ஸர்வாணி ரூபாணி | ஆகிய எல்லாத் திருவுருவங்களையும் |
| தே | உம்முடைய |
| ஸ்வைஃ | அஸாதாரணங்களாயுள்ள |
| அநுரூபரூப விபவைஃ | அநுகுணரூப விசேஷங்களாலே |
| காடோபகூடாநி | நிரந்தரஸம்ச்லிஷ்டங்களாக |
| ஆஹுஃ | சொல்லுகின்றார்கள். |

* எம்பெருமானுடைய திருவுருவங்கள் தோறும் பிராட்டியும் அவிச்சேதேந ஸம்ச்லேஷமுடையளாயிராநின்றாளென்கிறது இந்த ச்லோகம். எம்பெருமானுக்கு உபாயத்வம் உபேயத்வம் என்று இரண்டு ஆகாரங்கள் உள்ளன; அவன் உபாயமாமிடத்தில் புருஷகாரக்ருத்யம் பண்ணி சேதநர்களைத் திருவுள்ளம் பற்றும்படி செய்வதற்காக ஒரு க்ஷணமும் அகலமாட்டாள்; அவன் உபேயமாமிடத்தில் போக்யதாதிசயத்திற்காக அந்த நிலைமையிலும் அகலமாட்டாள். ஆக, ஸர்வதேசஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் எம்பெருமானை இறையும் அகலகில்லாள் பிராட்டி என்றதாயிற்று. முதல் பாதமானது எம்பெருமானுடைய திவ்யாத்மஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. இரண்டாம்பாதம் பரவாஸுதேவாக்ய மங்கள விக்ரஹத்தைச்சொல்லுகிறது. மூன்றாம்பாதம் வ்யூஹவிபவாத்யவதாரத்திருமேனிகளைச்சொல்லுகிறது. * "அநந்யா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா" * என்று பெருமாளும், "அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா"* என்று பிராட்டியும் பேசும்படியாய் திவ்யதம்பதிகளுக்கு வாய்த்திருக்கின்ற அவிநாபாவத்தைச் சொன்னபடி.

சாந்தத்வமாவது அகிலஹேயப்ரத்யநீகத்வம். அநந்தத்வமாவது-த்ரிவித பரிச்சேதராஹித்யம் [தேசகாலவஸ்து பரிச்சேதமில்லாமை]; தேசபரிச்சேதமில்லாமையாவது ஸகல தேசங்களிலும் வ்யாபித்திருக்கை. கால பரிச்சேதமில்லாமையாவது ஸர்வ காலத்திலுமிருக்கை. வஸ்து பரிச்சேதமில்லாமையாவது ஸகல வஸ்துக்களும் தானென்னலாயிருக்கை. மஹா விபூதியென்று உபயவிபூத்யாதிபத்யம் சொன்னபடி.

ஹரியினுடைய ஸ்வரூபமென்றால் ஹரியைக் காட்டிலும் வேறான ஸ்வரூபம தனியே ஒன்று இருப்பதாகத் தோன்றுமே; உண்மை அப்படியில்லையே; என்றும் சிலர்க்கு சங்கையுண்டாகும். "சிலாபுத்ரகஸ்ய சரீரம்" என்றும் "மம ஆத்மா" என்றும் சொல்லுகிற விடங்களிற் போல, ஹரே: என்ற ஷஷ்டியும் அபேதார்த்தே வந்ததென்று உணரவேணும். ஹரியினுடைய ஸ்வரூப மென்றது ஹர்யாத்மகமான ஸ்வரூபமென்றபடியேயாம்.

இரண்டாவது பாதத்தில் "தத்ப்ரியதரம்" என்பதை ஸமஸ்த பதமாகவும் வ்யஸ்தபதமாகவும் கொள்வர்கள். "யத்ப்ரியதரம்" என்பது தவறான பாடம்.

* கொண்டல் வண்ணன் சுடர் முடியன் நான்கு தோளன் குனிசார்ங்கன், ஒண் சங்கதைவாளாழியானொருவன் இத்யாதிகளாலே வர்ணிக்கப்படுகிற திவ்ய மங்களவிக்ரஹம் "மூர்த்தம் ப்ரஹ்ம" என்னப்பட்டது.

"கோல மேனி காண வாராய்" என்று விடாய்த்தவர்களுக்கு இந்தத்திருமேனியே தாபஹரமாயிருக்கையாலே அடியார்கள் உகந்தது—என்கிற காரணத்தினால் எம்பெருமானுக்கும் இதுவே ப்ரியதமமாயிருக்குமென்பதை "ததோபி தத்ப்ரியதரம்" என்பதனால் தெரிவித்தருளினாயிற்று.

த்ருதியபாதத்தில் "யதாஸுகம் விஹரதோ ரூபாணி" என்பதனால் அவதாரத் திருமேனிகள் லீலாரஸமநுபவிக்கவே பரிக்ருஹீதங்கள் என்று தெரிவிக்கப்பட்டது. "மன்பல்லுயிர்களுமாகிப் பல பல மாயமயக்குக்களால் இன்புறுமிவ்விளையாட்டுடையான்" என்றாராழ்வாரும்.

[காடோபகூடானி] பூவில் மணம் போலவும், ரத்னத்தில் ஒளிபோலவும் ஏகதத்வமாயிருக்கும்படி சொல்லிற்றுயிற்று. ப்ரஹ்மசர்யாச்ரமமாகக்கொண்ட வாமனுவதாரத்திலும் கூட பிராட்டியை க்ருஷ்ணாஜிநத்தாலே மறைத்திட்டுப் போந்தானென்றன புராணங்கள்.

இங்ஙனே நித்யஸம்ச்லிஷ்ட திவ்ய தம்பதிகளின் திருவடி நிழலிலே யொதுங்கி வாழ்வோமாக.

ஆளவந்தார் திருவடிகளே சரணம்

பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம்

**அண்ணங்கராசார்யர் இயற்றிய**

சதுச்ச்லோகீ வியாக்கியானம்

முற்றிற்று.

ஸ்ரீரஸ்து.

# கூரத்தாழ்வான் அருளிச்செய்த

## பஞ்சஸ்தவத்தினுள்

### ஐந்தாவது ஸ்தவமாகிய

# ஸ்ரீ ஸ் த வ ம்.

### பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்

### அண்ணங்கராசாரியர் இயற்றிய

### தத்வார்த்தசிந்தாமணி வியாக்கியானம்

முதல் ச்லோகம்

**ஸ்வஸ்தி ஸ்ரீர்திசதாதசேஷஜகதாம் ஸர்க்கோபஸர்க்கஸ்திதீ:**
**ஸ்வர்க்கம் துர்க்கதிமாபவர்க்கிக பதம் ஸர்வஞ்ச குர்வந் ஹரி:**
**யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தேகிலம்**
**க்ரீடேயம் கலு நாந்யதாஸ்ய ரஸதா ஸ்யாதைகரஸ்யாத் தயா.** (க)

| | |
|---|---|
| அசேஷ ஜகதாம் | எல்லா வுலகங்களுக்கும் |
| ஸர்க்க உபஸர்க்க ஸ்திதீ: | ஸ்ருஷ்டி ஸம்ஹார ரக்ஷணங்களையும் |
| ஸ்வர்க்கம் | ஸ்வர்க்கத்தையும் |
| துர்க்கதிம் | நரகத்தையும் |
| ஆபவர்க்கிக பதம் | மோக்ஷஸ்தானத்தையும் |
| ஸர்வம் ச | மற்றுமுள்ள எல்லாவற்றையும் |
| குர்வந் | உண்டுபண்ணா நிற்கிற |
| ஹரி: | எம்பெருமான் |
| யஸ்யா: | யாவளொரு பிராட்டியினுடைய |
| முகம் | முகத்தை |
| வீக்ஷ்ய | நோக்கிக்கொண்டு |
| தத் இங்கித பராதீந: | அந்த முகத்தின் (புருவ நெறிப்பு முதலிய) குறிப்புகளைப் பின் சென்றவனாய் |
| அகிலம் | ஸ்ருஷ்டி முதலாகக் கீழ்ச் சொன்னதையெல்லாம் |

| | |
|---|---|
| விதத்தே | உண்டுபண்ணுகிறானே, |
| அந்யதா | அப்படி அவளுடைய முகக் குறிப்பைப் பின்செல்லாவிடில் |
| அஸ்ய | இந்த எம்பெருமானுக்கு |
| தயா | அப்பிராட்டியோடு |
| ஐகரஸ்யாத் | ஒரு நீராக ஒருமித்திருக்க வேண்டிய காரணத்தினால் |
| இயம் க்ரீடா | (ஸ்ருஷ்டி முதலான) இந்த விளையாட்டானது |
| அஸ்ய | இந்த எம்பெருமானுக்கு |
| ரஸதா | ஆனந்தத்தை விளைவிப்பதாக |
| ந ஸ்யாத் கலு | ஆகமாட்டாதன்றோ; |
| (ஸா) ஸ்ரீ: | அந்தப் பெரிய பிராட்டியார் |
| ஸ்வஸ்தி | நன்மையை |
| திசதாத் | அளிக்கக்கடவள். |

எம்பெருமான் ஸகல லோகங்களுக்கும் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைப் பண்ணும் போதும், அவரவர்களுடைய கர்மாநுகுணமான புருஷார்த்தங்களை யளிக்கும்போதும் யாவளொரு பிராட்டியின் முகக்குறிப்பை நோக்கி அதற்கிணங்கக் காரியம் செய்கிறானே; எந்தப் பிராட்டியின் முகக் குறிப்பை எம்பெருமான் பின் செல்லாவிடில் அவளோடு ஏகரஸனாயிருக்க

வேண்டிய தனக்குத் தன் விளையாட்டுகள் ஆநந்தத்தைக் கொடாமல் வீணாய் விடுமோ; அப்பிராட்டி நமக்கு நன்மையைத் தந்தருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறதாய்த்து.

எம்பெருமான் எல்லா வுலகங்களையும் படைத்தளித் தழிக்கும்போதும் அவரவர்கள் கரும பலன்களை அநுபவிக்கும்பொருட்டு ஸ்வர்க்க நரகாத்யநுபவ ஸ்தானங்களையும் எல்லையில்லா இன்ப வீடாகிய பரமபதத்தையும் மற்றுமுள்ள போக்ய போகோபகரண போக ஸ்தானங்களான ஸகல பதார்த்தங்களையும் அவரவர்களுக்கு அளித்தருளும்போதும் பிராட்டியின் முகக் குறிப்பைப் பின் சென்று அவளுடைய நோக்கத்திற் கிணங்க எல்லாவற்றையு மளிக்கின்றானென்றவிது எம்பெருமானுடைய பரம ரஸிக்யத்தைத் தெரிவித்தபடி.

ஸ்வஸ்தி திசதாத் என்று இவர் அபேக்ஷிக்கிற நன்மையாவது—பிராட்டியை நன்றாக ஸ்துதிப்பதற்கு அநுகூலமான வாக்ஸம்ருத்தி, பக்தி ஸம்ருத்தி இத்யாதிகளே யென்பது மேல் ச்லோகத்தில் விசதமாம். (௧)

**ஹே ஸ்ரீர்தேவி! ஸமஸ்தலோகஜநநீம் த்வாம் ஸ்தோதுமீஹாமஹே**
**யுக்தாம் பாவய பாரதீம் ப்ரகுணய ப்ரேமப்ரதாநாம் தியம்**
**பக்திம் பந்தய நந்தயாச்ரிதமிமம் தாஸம ஜநம் தாவகம்**
**லக்ஷ்யம் லக்ஷ்மி! கடாக்ஷவீசிவிஸ்ருதேஸ் தே ஸ்யாம சாமீ வயம். (௨)**

| | | | |
|---|---|---|---|
| ஹே ஸ்ரீர் தேவி! | பெரிய பிராட்டியாரே! | | (பரம பக்தியளவாக வளரச் செய்ய வேணுமென்கை.) |
| ஸமஸ்தலோக ஜநநீம் த்வாம் | எல்லாவுயிர்கட்கும் தாயாகிய உம்மை | | |
| வயம் | அடியோம் | ஆச்ரிதம் | (உம்மை) அடைந்திருக்கின்ற |
| ஸ்தோதும் ஈஹாமஹே | ஸ்துதிக்க விரும்புகிறோம்; | இமம் ஜநம் | இந்த ஜநத்தை (அடியேனை) |
| யுக்தாம் | (உம்மை ஸ்துதிப்பதற்குத்) தகுதியான | தாவகம் தாஸம் | உம்முடைய ஏவற் சேவகனாக (அடிமை கொண்டு) |
| பாரதீம் | வாக்கை | நந்தய | ஆநந்தப்படுத்தவேணும்; |
| பாவய | (எமக்கு நீர்) அருளவேணும்; | ஹே லக்ஷ்மி! | லக்ஷ்மியே! |
| ப்ரேம ப்ரதாநாம் | அன்பு மிகுந்த | அமீ வயம் ச | இந்த அடியோங்களும் |
| தியம் | புத்தியை | தே | உம்முடைய |
| ப்ரகுணய | வளரச் செய்யவேணும்; | கடாக்ஷ வீசி விஸ்ருதேஃ | கடாக்ஷவீக்ஷணங்களாகிற அலைகளின் பரவுதலுக்கு |
| பக்திம் | பக்தியை | | |
| பந்தய | நல்லதாகச் செய்யவேணும். | லக்ஷ்யம் ஸ்யாம | இலக்காகக் கடவோம். |

கீழ் "ஸ்வஸ்தி ஸ்ரீர் திசதாத்" என்று ப்ரார்த்தித்த ஆழ்வானை நோக்கிப் பெரியபிராட்டியார் 'ஆழ்வான்! நான் உமக்கு ச்ரேயஸ்ஸை அளிக்கவேண்டு மென்பதாகக் கேட்டுக்கொண்டீர்; நல்லது; என்ன ச்ரேயஸ்ஸு வேணும்? ஐச்வர்யம் வேணுமோ? ஸந்தானம் வேணுமோ? வேண்டியதைக் கேளும்; தருகிறேன்' என்ன;

ஆழ்வான்—'அந்த க்ஷுத்ர புருஷார்த்தங்களை விரும்ப வந்தேனல்லேன்; உம்மை வாயாரத் துதிக்க வேணுமென்று விரும்பி வந்தேன்.

பிராட்டி—'ஆகில் என்னிடத்தில் நீர் ப்ரார்த்தித்துப் பெறவேண்டியது என்ன இருக்கிறது? நீர் பெரிய பண்டிதர்; மஹா கவி; இஷ்டப்படி ஸ்தோத்திரம் பண்ணும்; இதில் நானளிக்க வேண்டிய ஸ்வஸ்தி என்ன இருக்கிறது?'

ஆழ்வான்—'இங்ஙன மருளிச் செய்யலாகாது; உம்மைப் பாங்காக ஸ்துதிப்பதற்கு உரிய ஸரஸ்வதீஸம்ருத்தியை யருளவேணும்.'

பிராட்டி—'அந்தத் திருநாவீறு உமக்கு முன்னமே வாய்த்திருக்கிறது. வேறு தேவையுண்டாகில் கேளும்.'

ஆழ்வான்—'வாயால் ஏதோ சில சப்தங்களைச் சொல்லுகிறேனே யொழிய அன்பு மிகுந்து கனிந்த புத்தி எனக்கில்லை. அப்படிப்பட்ட புத்தியை அருளவேணும்.'

பிராட்டி—'என்னை ஸ்துதிக்க வேணுமென்று நீர் விரும்பினபோதே அப்படிப்பட்ட புத்தி உமக்கு உண்டாய்விட்டது. அன்பு மிகாமலும் நெஞ்சு கனியாமலுமிருந்தால் என்னைத்

துதிக்க நீர் முயலமாட்டீர். ஆன பின்பு அப்படிப்பட்ட புத்தி உமக்குக் கைகூடியேயிருக்கிறது. வேறு தேவை யுண்டாகில் கேளும்.'

ஆழ்வான்—'உம்முடைய பேரருளால் ஏதோ சிறிது பக்தி கிடைத்திருக்கிறது; அது பரபக்தியாகவும் பரஜ்ஞானமாகவும் பரம பக்தியாகவும் முதிரும்படி அருள்புரிய வேணும்.'

பிராட்டி—'அதை நீர் விரும்ப வேண்டா; ஆழ்வார்க்குப்போல் காலக்ரமத்தில் படிப்படியாக அந்த பக்தி உமக்குப் பரிணமிக்கும்; க்ரமமாகத் தன்னடையே விளையப்போவதை அபேக்ஷிப்பதேன்?'

ஆழ்வான்— 'அம்மா! எப்போது அந்த பக்தி முதிரப்போகிறதென்று நான் எதிர்பார்த்திருக்கவும் அதுவரை தரித்திருக்கவும் சக்தனல்லேன். உம்மை வந்து பணிந்த என்னை இப்போதே அந்தரங்ககிங்கரனாக்கிப் பணிகொண்டு மகிழ்விக்க வேணும்; அதற்குறுப்பாக உம்முடைய குளிர்ந்த கடாக்ஷங்கள் அடியேன்மீது ப்ரஸரிக்க வேணும். இவ்வளவே அடியேன் விரும்புவது' என்கிறார்.

[இமம் ஜநம்] 'அஹம்' என்று உத்தம புருஷனைச் சொல்லவேண்டுமிடத்து 'அயம்ஜந:' என்று ப்ரதம புருஷனைச் சொல்லுதல் ஒருவகைக் கவி மர்யாதையாம். நைச்யாநுஸந்தான வகையிலே இது ஒரு காஷ்டை. நான் என்னாமல் அடியேன் என்பதற்கு மேற்பட்டசொல் இது.

[கடாக்ஷவீசிவிஸ்ருதே:] க்ருபாஸாகரமான திருக்கண்களிலிருந்து கடாக்ஷமாகிற அலை வரிசைகள் பரவப்புக்கால் அத்திவலைகள் விழுமிடம் அடியேனை வேணுமென்கை.

[அமீ] கடாக்ஷம் பெறாமல் துவண்டு கிடக்கிற நிலைமையை *ஏஹி பச்ய சரீராணி படியே தம் உடம்பைத் தொட்டுக் காட்டுகிறபடி. (௨)

ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி கவயோ யத்யந்யதீயாந் குணாந்
அந்யத்ர த்வஸதோதிரோப்ய பணிதிஸ் ஸா தர்ஹி வந்த்யா த்வயி!
ஸம்யக்ஸத்யகுணாபிவர்ணநமதோ ப்ருயு: கதம் தாத்ருசீ
வாக் வாசஸ்பதிநாபி சக்யரசநா த்வத் ஸத்குணார்ணோநிதௌ (௩)

| | |
|---|---|
| ஹே ஸ்ரீர்தேவி! | பிராட்டியே! |
| கவய: | பண்டிதர்கள் |
| கிம் நாம | எதை |
| ஸ்தோத்ரம் ஆமநந்தி | ஸ்தோத்திரமாகச் சொல்லுகிறார்கள் |
| (ஸ்தோத்ர சப்தார்த்தத்தை என்னவென்று நிஷ்கர்ஷிக்கிறார்கள்?) | |
| அஸத: | (ஸ்துதிக்கத்தக்கவனிடத்தில்) இல்லாதவைகளாயும் |
| அந்யதீயாந் | வேறிடத்திலுள்ளவையாயுமிருக்கிற |
| குணாந் | குணங்களை |
| அந்யத்ர | வேறொருவரிடத்தில் (ஸ்துதிக்கத்தக்கவனிடத்தில்) |
| அதிரோப்ய | ஏறிட்டு |
| பணிதி: | சொல்வதானது |
| ஸ்தோத்ரம் யதி து | ஸ்தோத்ர சப்தார்த்தமானால் |
| தர்ஹி | அந்த பக்ஷத்தில் |
| (இல்லாத குணங்களை இருப்பதாக ஏறிட்டுப் புகழ்வது ஸ்தோத்ரம் என்னும் பக்ஷத்தில்) | |
| ஸா பணிதி: | அச்சொல்லானது |

| | |
|---|---|
| த்வயி | உம் விஷயத்தில் |
| வந்த்யா | வ்யர்த்தமாம். |
| (அப்படிப்பட்ட ஸ்தோத்ரம் உம்மளவில் பண்ணமுடியாது) | |
| அதோ | அதவா (அல்லது), |
| ஸம்யக் ஸத்யகுணாபி வர்ணநம் ஸ்தோத்ரம் ப்ருயு: யதி | உள்ள குணங்களை உள்ளபடி வர்ணிப்பதை ஸ்தோத்ர சப்தார்த்தமாகச் சொல்லுவார்களாகில், |
| த்வத் ஸத்குண அர்ணோநிதௌ | உம்முடைய கல்யாண குணங்களாகிற கடலில் |
| (கடல்போல் அபாரமாயுள்ள உமது கல்யாண குணங்களைப்பற்றி) | |
| தாத்ருசீ வாக் | அப்படிப்பட்ட சொல்லானது |
| (உள்ளதை உள்ளபடி சொல்வதானது) | |
| வாசஸ்பதிநா அபி | வாக்குக்கு வல்லபனான ப்ருஹஸ்பதியாலும் |
| சக்யரசநா கதம் | ஸாத்யமான சேர்க்கையையுடையதாக எப்படியாகும்? |

உம்முடைய குணங்களை உள்ளபடி வர்ணிக்கிற வாக்கானது ப்ருஹஸ்பதியாலும் கவனம் பண்ண முடியாதபோது, என்னால் முடியுமென்பதற்கு ப்ரஸக்தி ஏது? என்றபடி.

ஸம்போதநம் கீழ் ச்லோகத்திலிருந்து வருவித்துக் கொள்வது. பிராட்டியை நோக்கி 'உம்மை நான் ஸ்துதிக்க விரும்புவதே அஸம்பத்தமான விஷயம்.' என்பதை ஒரு சமத்காரமாக அருளிச் செய்கிறாரில். "த்வாம் ஸ்தோது மீஹாமஹே" என்று கீழ்ச் சொன்னேனே;

உம்மை ஸ்துதிப்பதென்பது ஸம்பாவிதமான விஷயந்தானா? என்று ஆராயுமளவில் அது ஸர்வாத்மநா அஸம்பாவிதமாகத் தோன்றுகிறதென்று உபபாதிக்கிறார்.

லோகத்தில் ஒருவனை ஒருவன் ஸ்தோத்ரம் பண்ணுகிறானே, அந்த ஸ்தோத்ரமானது என்ன? என்று விமர்சிப்போம். விமர்சித்தால் ஸ்தோத்ரசப்தார்த்தம் இரண்டு வகையாகத் தேறும். ஒருவனிடத்தில் இல்லாத குணங்களை வேறிடத்திலிருந்து கொணர்ந்து ஏறிட்டுப் புகழ்வதை ஸ்தோத்ர சப்தார்த்தமாகக் கூறுகிற பக்ஷம் ஒன்றுண்டு. (ஒரு யாசகன் ஒரு மொட்டைத் தலையனைப் புகழ வேண்டி 'குழலழகரே, குழலழகரே' என்று கூறுவதாம்.) இப்படிப்பட்ட ஸ்தோத்திரத்துக்குப் பிராட்டியிடத்தில் ப்ரஸக்தியில்லை. இவளிடத்தில் குணமில்லாமையும் வேறிடத்திலிருந்து குணங்களைக் கொணர்ந்து இவளிடத்தில் ஏறிடுகையும் அதிதராம் அஸம்பாவிதமாகையாலே. இனி மற்றொரு வகையாகவும் ஸ்தோத்ர சப்தார்த்தத்தை நிர்வஹிப்பதுண்டு. அதாவது, ஒருவனிடத்திலுள்ள குணங்களை உள்ளபடி சொல்லிப் புகழ்வதாம். அப்படிப்பட்ட ஸ்தோத்ரமும் பிராட்டியிடத்தில் அஸாத்யம். பிராட்டியின் குணகணங்கள் ஒரு கடல் போன்றிருத்தலால் அவற்றில் ஏகதேசமும் ப்ருஹஸ்பதியாலும் வருணிக்க அரிது என்று ஸித்தமான பின்பு மற்றையோரால் அந்த குணங்களை ஒன்றும் விடாமல் உள்ளபடி வருணிக்க முடியாதென்னுமிடம் கிம்புநர்ந்யாயஸித்தமாகையாலே. ஆகவே இரண்டு வகையான ஸ்தோத்ரங்களில் ஒன்றுக்கும் பிராட்டி பக்கல் அவகாசமில்லையென்று சொல்லுகிற இம்முகத்தால் 'அஸாத்யமான ஸ்ரீஸ்தவத்தில் நான் இறங்குவது அதி ஸாஹஸம்; அதிசாபலக்ருத்யம்' என்று நைச்யாநுஸந்தானம் செய்துகொண்டாராய்த்து. ... (௩)

யே வாசாம் மநஸாம்ச துர்க்ரஹதயா க்யாதா குணாஸ் தாவகா:
தாநேவ ப்ரதி ஸாம்புஜிஹ்வமுதிதா ஹை மாமிகா பாரதீ!
ஹாஸ்யம் தத்து ந மந்மஹே நஹி சகோர்யேகாகிலாம் சந்த்ரிகாம்
நாலம் பாதுமிதி ப்ரக்ருஹ்ய ரஸநாமாஸீத ஸத்யாம் த்ருஷி. (௪)

| | |
|---|---|
| ஹே ஸ்ரீர் தேவி | பிராட்டி! |
| தாவகா: | உம்முடையவையான |
| யே குணா: | எந்த குணங்கள் |
| வாசாம் மநஸாம் ச துர்க்ரஹதயா க்யாதா: | வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் எட்டாதவைகளாக ப்ரஸித்தி பெற்றிருக்கின்றனவோ |
| தாந் ப்ரத்யேவ | அந்த குணங்களைக் குறித்தே, |
| மாமிகா பாரதீ | எனது வாக்கானது |
| ஸாம்புஜிஹ்வம் (யதா ததா) உதிதா | ரஸமூறின நாக்கோடு கூடிக் கிளர்ந்தது. (ப்ரவர்த்தித்து விட்டது) |
| ஹை | (மகிழ்ச்சிக் குறிப்பு) |
| தத் து | அப்படி வாக்கு ப்ரவர்த்தித்ததை |
| ஹாஸ்யம் | பரிஹஸிக்கக்கூடியதாக |
| ந மந்மஹே | [அடியோம்] நினைக்கின்றிலோம் |

[ஏனென்றால்]

| | |
|---|---|
| சகோரீ | சகோர பக்ஷியின் பேடையானது |
| அகிலாம் சந்த்ரிகாம் ஏகா [அஹம்] பாதும் அலம் நாஸ்மி இதி | நிலா முழுவதையும் நானொருத்தியே உட்கொள்ளவல்லேனல்லேன் என்று நினைத்து, |
| த்ருஷி ஸத்யாம் | தாஹமுள்ளவளவில் |
| ரஸநாம் | [தன்னுடைய விடாய் பொருந்திய] நாக்கை |
| ப்ரக்ருஹ்ய | மடக்கிக்கொண்டு [உள்ளே அடக்கிக்கொண்டு] |
| நாஸீத ஹி | வெறுமனிருக்க மாட்டாதன்றோ. |

[அதுபோல் அடியேனும் வெறுமனிருக்க மாட்டேனென்கை]

வாய்கொண்டு சொல்வதற்கும் நெஞ்சால் நினைப்பதற்கும் முடியாதவை யென்று ப்ரஸித்தி பெற்றுள்ள உம்முடைய குணங்களைப் புகழ்வதற்கெனறே என்னுடைய நாவில் ஜலமூறுகின்றது. வாக்கு வெளிக்கிளம்புகின்றது. ஆனால் அசக்யமான விஷயத்தில் முயற்சி செய்கிறவிது பரிஹாஸ்யமென்று சிலர் நினைக்கக்கூடும். நான் இதைப் பரிஹாஸாஸ்பதமாக நினைக்கமாட்டேன். ஏனென்றால், நிலாவைப் பருகி ஜீவிக்கவேண்டிய சகோர பக்ஷியானது இந்த நிலா முழுவதையும் நம்மொருவரால் பருக முடியாதென்று நினைத்துத் தன் தாஹத்தைத் தீர்த்துக் கொளவதற்காக அந்த நிலாவில் வேண்டிய அளவைப் பருகாமல் நாக்கைச் சுருக்கிக் கொண்டு நிற்கமாட்டாது. அதுபோல் நானும் உமது கல்யாண குணங்களை முழுவதும்

வர்ணித்தநுபவிக்க முடியாதென்று கை வாங்கி நிற்கமாட்டேன். என்னால் கூடுமானவளவும் வர்ணிக்க முயல்வது உசிதமே யொழிய, பரிஹாஸாஸ்பதமாக மாட்டாதென்கை. இதனால் உள்ள அம்சங்களில் யாவச்சக்யம் வர்ணிப்பதும் ஸ்தோத்ரமாகுமென்றதாய்த்து. (௪)

க்ஷோதீயாநபி துஷ்டபுத்திரபி நிஸ்ஸ்நேஹோப்யநீஹோபி தே,
கீர்த்திம் தேவி லிஹந்நஹம் நச பிபேம்யஜ்ஞோ ந ஜிஹ்ரேமி ச!
துஷ்யேத் ஸா து ந தாவதா ந ஹி சுநா லீடாபி பாகீரதீ
துஷ்யேச் ச்வாபி நலஜ்ஜதே நச பிபேத்யார்த்திஸ் து சாம்யேச் சுந:. (௫)

| | | | |
|---|---|---|---|
| ஹே தேவி ! | பிராட்டியே ! | தாவதா | அவ்வளவால் [அல்பனான என் வாக்கில் நுழைந்து புறப்பட்ட மாத்திரத்தால்] |
| அஜ்ஞ: அஹம் | ஒன்று மறியாத அடியேன் | ந துஷ்யேத் | கெட்டுப்போய்விடாது; [எப்படிப் போலவென்றால்] |
| க்ஷோதீயாநபி | மிகவும் நீசனாயினும் | பாகீரதீ | [ஸ்தவ: பரிசுத்தமான] கங்கா தீர்த்தமானது |
| துஷ்ட புத்திரபி | கெட்ட புத்தியை யுடையேனாயினும் | சுநா | நாயினால் |
| நிஸ்ஸ்நேஹோபி | அன்பு இல்லாதவனாயினும் | லீடா அபி | நக்கப்பட்டாலும் |
| அநீஹோபி | ஒருவிதமான நல்ல முயற்சியில்லாதவனாயினும் | நஹி துஷ்யேத் | கெட்டுப்போய்விடாதன்றோ. |
| தே கீர்த்திம் | உம்முடைய கீர்த்தியை | ச்வா அபி | [கங்கா தீர்த்தத்தை நக்கின அந்த] நாயும் |
| லிஹந் | [ஸ்தோத்ர முகத்தாலே] வாய்கொண்டு அநுபவியாநின்றவனாய் | ந லஜ்ஜதே | வெட்கப்படுகிறதில்லை; |
| ந ச பிபேமி | அஞ்சுவதுமில்லை. | ந பிபேதி ச | பயப்படுவதுமில்லை. |
| ந ஜிஹ்ரேமி ச | வெட்கப்படுவதுமில்லை. | சுந: | [அந்த] நாயினுடைய |
| ஸா கீர்த்திஸ் து | [என்னால் வர்ணிக்கப்படுகிற] அந்த கீர்த்தியோவென்றால் | ஆர்த்திஸ் து | தாஹமோ வென்றால் |
| | | சாம்யேத் | [கங்கா தீர்த்த பானத்தினால்] தணிந்துவிடும். |

அதிக்ஷுத்ரனான ஒரு மநுஷ்யன் ஸர்வோத்க்ருஷ்டனான ஒருவனை ஸ்தோத்ரம் பண்ணப்புகுவது லஜ்ஜா பயங்களுக்கு ஆஸ்பதமாக லோகத்தில் காணப்படாநின்றது. அன்றியும் தேவர்களுக்கு சேஷமான புரோடாசத்தை நாய் ஸ்பர்சித்தால் அந்த புரோடாசம் துஷ்டமாகுமாப்போலே உத்தம புருஷர்களை நீச ஜநம் ஸ்தோத்ர முகத்தாலே வாய்கொண்டு ஸ்பர்சித்தால் அந்த உத்தம புருஷர்களுக்குக் கெடுதி விளையக்கூடுமன்றோ? ஆனபின்பு, அதிக்ஷுத்ரரான நீர் ஸர்வோத்க்ருஷ்டையான பிராட்டியை லஜ்ஜா பயங்களின்றிக்கே ஸ்துதிக்கப் புகுந்து இதனால் அப்பிராட்டிக்குப் பொல்லாங்கு விளைக்க நினைத்து விட்டீரே! இது உமக்குத் தகுமோ? தகாதுகாணும்; ஆகையால் இனியாவது லஜ்ஜா பயங்களை மேற்கொண்டு ஸ்தோத்ரத்தினின்றும் பிற்காலித்தீராகில் இரண்டு தலையும் நிரவத்யமாகும் என்று—ஆழ்வானை நோக்கிச் சிலர் சொல்லுவதாகக்கொண்டு இந்த ச்லோகம் ப்ரவ்ருத்தமாகிறது.

நான் லஜ்ஜைப்படவும் பயப்படவும் காரணமில்லை; என்னுடைய ஸ்தோத்ரத்தால் பிராட்டிக்கு அவத்யலேசமுமுண்டாகாதென்று ஸதருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார். நான் அதிக்ஷுத்ரனாய், துஷ்ட புத்தியை யுடையவனாய், ஈரநெஞ்சு இல்லாதவனாய், 'கள்ளத்தேன் நானும் தொண்டாய்த் தொண்டுக்கே கோலம்பூண்டு' என்றபடி கபடமாகவாகிலும் சில கைங்கர்ய வேஷங்களைப் பூணலாமே; அப்படிப்பட்ட சேஷ்டிதமுமில்லாதவனாய் இவ்வகைகளாலே அத்யந்தகர்ஹணீயனாயிருந்தேனாகிலும், பிராட்டீ! உம்முடைய திருக்கல்யாண குணங்களை நிர்ப்பயனாகவும் நிர்லஜ்ஜனாகவும் ஸ்துதிக்க இழிந்துவிட்டேன். இப்படி ஸர்வாத்மநா அநர்ஹனாகிய அடியேன் உம்முடைய கீர்த்தியைப் புகழ இழிந்துவிட்டவளவால் அந்த கீர்த்திக்கு ஒரு அவத்யமும் விளையாது. இது எப்படிப் போலவென்னில்; நாய் என்பது ஒரு நிக்ருஷ்டமான ஜந்து: அது தன் விடாயின மிகுதியினால் கங்கா தீர்த்தத்தைப் பருகுகின்றது. அப்படியாகும்போது "ஐயோ! பரம புண்ய தீர்த்தத்தை நாம் ஸ்பர்சிக்கலாமோ!" என்று அது அஞ்சுவதுமில்லை, வெட்கப்படுவதுமில்லை; அந்த நாயினுடைய விடாயோ தீர்ந்து,

PUBLIC LIB

விடுகிறது. அன்றியும், அந்த தீர்த்தமும் சுநகஸ்பர்சத்தால் கெடுவதுமில்லையன்றோ? அது போலவாமென்கிறார்.

இதனால் குணகணங்கள் கங்காப்ரவாஹம் போல் அபரிமேயமாயும் ஸ்வதச்சுத்த மாயுமுள்ளவை என்பது விளங்குவதுடன் ஆழ்வானுடைய எல்லை கடந்த நைச்யாநுஸந்தான மும் நன்கு விளங்கும்.

[லிஹந்] பிராட்டியின் கீர்த்தியை கங்கையாகவும் தம்மை சுநகமாகவும் அநுஸந்தித் தமைக்குச் சேர(லிஹந்) என்கிறார். லிஹதாதுவுக்கு 'நக்குதல்' என்று பொருளாயினும், இங்கு, வாய்கொண்டு வருணிப்பதில் நோக்கு. ... ... (ரு)

ஐச்வர்யம் மஹதேவவால்பமதவா த்ருச்யேத பும்ஸாம் ஹி யத்
தல்லக்ஷ்ம்யாஸ் ஸமுதீக்ஷணத் தவ யதஸ் ஸார்வத்ரிகம் வர்த்ததே!
தேநைதேந ந விஸ்மயேமஹி, ஜகந்நாதோபி நாராயண:
தந்யம் மந்யத ஈக்ஷணத் தவ யத: ஸ்வாத்மாந மாத்மேச்வர:. (சு)

| | | | |
|---|---|---|---|
| [ஹே தேவி!] | பிராட்டியே! | [கடாக்ஷ விஷயத்திலே என்றபடி.] | |
| பும்ஸாம் | மநுஷ்யர்களுக்கு | ந விஸ்மயேமஹி | ஆச்சர்யப்படமாட்டோம்; |
| ஸார்வத்ரிகம் | [இவ்வுலகம் மேலுலகம் முத லிய] எல்லா விடங்களிலு முண்டாகக் கடவதான | யத: | ஏனென்றால் |
| | | ஜகந்நாத: | உலகங்கட்கெல்லாம் தலைவ னையும் |
| யத் ஐச்வர்யம் | யாதொரு விபவமானது | ஆத்மேச்வர: | தனக்குத் தானே ஈசனையு முள்ள |
| மஹதேவ வா | பெரிதாகவோ | | |
| அதவா அல்பம் | அல்லது ஸ்வல்பமாகவோ | நாராயணோபி | ஸ்ரீமந் நாராயணனும்கூட |
| த்ருச்யேத | காணப்படுமோ | தவ | உம்முடைய |
| தத் | அந்த விபவமானது | ஈக்ஷணத் | கடாக்ஷம் பெறுவதனால் |
| லக்ஷ்ம்யா: தவ | லக்ஷ்மியாகிற உம்முடைய | ஸ்வாத்மாநம் | தன்னை |
| யத: ஸமுதீக்ஷணத் | யாதொரு கடாக்ஷ விசேஷத் தாலே | தந்யம் | க்ருதார்த்தனாக |
| | | மந்யதே | நினைக்கிறானிறே; |
| வர்த்ததே | விளைகின்றதோ | [ஆகையால் ஆச்சர்யப்படக் காரணமில்லை யென்கை.] | |
| தேநைதேந | அந்த இந்த கடாக்ஷத்தினால் | | |

ஆக இவ்வளவும் கீழ் ஐந்து ச்லோகங்களும் ஸ்தோத்ரோபோத்காதமாய் இனிமேல் ஸ்தோத்ராரம்பமாய்ச் செல்லுகிறது.

ஐச்வர்யமானது ஐஹிகமும் ஆமுஷ்மிகமுமாய் இரண்டு படிப்பட்டிருக்கும் இஹலோ கத்தில் தநதாந்யஸம்பத்ஸம்ருத்தராயிருக்குமிருப்பு ஐஹிகைச்வர்யமாம். ஸ்வர்க்காதி பரம பதாந்தமான உபரிதந லோகங்களில் வீறுபெற்றிருக்குமிருப்பு ஆமுஷ்மிகைச்வர்யமாம். இவ் விருவகைப்பட்ட ஐச்வர்யமும் பின்னையும் இருவகைப்படும். இஹலோகத்தில் க்ராமாதிகாரி யாயிருக்குமிருப்பு லகுவான ஐச்வர்யமாம். சக்ரவர்த்தியா யிருக்குமிருப்பு குருவான ஐச் வர்யமாம். ஊர்த்வலோகங்களில் இந்திரனாயிருக்குமிருப்பு லகுவான ஐச்வர்யமாம். 'சென் றால் குடையாம்' இத்யாதிப்படி யிருக்குமிருப்பு குருவான ஐச்வர்யமாம். இப்படிப்பட்ட ஸகல ஐச்வர்யங்களும், மஹாலக்ஷ்மியே! உம்முடைய கடாக்ஷத்தின் பயனாக விளைகின்றன என்கிற இவ்விஷயத்தைக் கேள்விப்பட்டுப் பலர் ஆச்சர்யப்படுவார்கள். ஆனால் நான் இவ் விஷயத்தில் ஸ்வல்பமும் ஆச்சர்யப்படுவேனல்லேன். ஏனென்றால் ச்ருதிகளாலே நிஸ்ஸமா ப்யதிகனாக ஓதப்பட்டுள்ள ஸாக்ஷாத் ஸர்வேச்வரனும் 'நாம் லக்ஷ்மீ கடாக்ஷத்திற்குப் பாத்ர மாகப் பெற்றபடியால்தான் தன்யரானோம்' என்று நினைப்பிடா நிற்கையாலே, ஒன்றான ஸர்வேச்வரனையே தந்யனாக்கவல்ல உம்முடைய கடாக்ஷம் இவ்வருகுள்ள சேதநவர்க்கங் களுக்கு ஐச்வர்ய ஹேதுவாகிறவிது ஆச்சர்யபதமன்றிறே. இதனால் லக்ஷ்மீ கடாக்ஷம் எம் பெருமான் தனக்கும் ப்ரார்த்தநீய மென்றதாயத்து. ... ... (சு)

ஐச்வர்யம் யதசேஷபும்ஸி யதிதம் ஸௌந்தர்யலாவண்யயோ:,
ரூபம் யச்ச ஹி மங்களம் கிமபி யல்லோகே ஸதித்யுச்யதே!
தத் ஸர்வம் த்வததீநமேவ யதத: ஸ்ரீரித்யபேதேந வா,
யத்வா ஸ்ரீமதிதீத்ருசேந வசஸா தேவி ப்ரதாமச்நுதே. (எ)

| | |
|---|---|
| ஹே தேவி ! | பிராட்டி ! |
| அசேஷபும்ஸி | ஸமஸ்தசேதனர்களிடத்திலும் |
| யத் ஐச்வர்யம் [அஸ்தி] | யாதொரு ஐச்வர்யமுள்ளதோ, |
| ஸௌந்தர்ய லாவண்யயோ: யதிதம் ரூபம் | அவயவ சோபையாகிற ஸௌந்தர்ய மென்ன, ஸமுதாய சோபையாகிற லாவண்ய மென்ன, இவற்றின் உருவம் யாதொன்றுளதோ |
| லோகே | லோகத்தில் |
| யச்ச ஹி மங்களம் | மங்களகர மென்று பேர் பெற்றது யாதொன்று உண்டோ, |
| யத் கிமபி ஸத் இதி உச்யதே | யாதொன்று ‘நல்லது’ என்று சொல்லப்படுகிறதோ |

| | |
|---|---|
| தத் ஸர்வம் | அந்த ஐச்வர்யம் முதலியவை யெல்லாம் |
| யத் | யாதொரு காரணத்தால் |
| த்வத் அதீநமேவ | உம் ஆணைக்கு அடங்கியதாகவே யிருக்கிறதோ |
| அத: | இக்காரணத்தினால் |
| [தத் ஸர்வம்] | அதெல்லாம் |
| ஸ்ரீ: இதி அபேதேந வா | ஸ்ரீ யென்று அபேதமாகவோ [அதாவது, ஸ்ரீ யென்னும் சொல்லாலேயோ] |
| யத்வா | அல்லது |
| ஸ்ரீமத் இதி ஸத்ருசேந வசஸா | ஸ்ரீயை யுடையது என்கிற சொல்லாலேயோ |
| ப்ரதாம் | ப்ரஸித்தியை |
| அச்நுதே | அடைகின்றது. |

உலகத்தில் அவ்வோ வஸ்துக்கள் மேன்மை பெற்றிருப்பதும் அழகு பெற்றிருப்பதும் எல்லாம் லக்ஷ்மீ ஸம்பந்த நிபந்தன மென்கிறார். ஐச்வர்யமாவது— ‘ஈச்வரஸ்ய பாவ:’ என்றும் ஒன்றுக்குக் கடவனாயிருக்கை. இப்படிப்பட்ட ஐச்வர்யம் எறும்பு முதல் பிரமனளவாக அனைவரிடத்திலுமுண்டு. சிற்றெறும்புக்கு மேற்பட்டது மக்ஷிகை, மக்ஷிகைக்கு மேற்பட்டது மதுகரம், என்றிப்படி ஒன்றுக்கொன்று மேற்பட்ட உயிர்கள் உண்டாகையாலே ஒவ்வொரு ஆத்மாவுக்கும் ஒவ்வொரு வகையான ஐச்வர்ய முண்டிறே. [ஸௌந்தர்ய லாவண்யயோ:] சில வஸ்துக்கள் அவயவந்தோறும் அழகுடையதாயிருக்கும்; சில வஸ்துக்கள் ப்ரத்யேகாவயவ சோபையற்றிருந்தாலும் அவயவஸமுதாயத்திலே ஒரு விலக்ஷணமான சோபையை யுடைத்தாயிருக்கும். ஆக இப்படி சில வஸ்துக்கள் ஸௌந்தர்யசாலிகளாயும் சில வஸ்துக்கள் லாவண்ய சாலிகளாயும் இருப்பதும். [யச்ச ஹி மங்களம்] மஞ்சள், புஷ்பம், தீபமுதலிய சில வஸ்துக்கள் மங்களகரங்களாக ப்ரஸித்தி பெற்றிருக்கும்; இதுவும். [யத்கிமபி ஸதித்யுச்யதே] அழகிய வஸ்துக்களாயும் மங்கள வஸ்துக்களாயும இல்லாதொழிந்தாலும் சில வஸ்துக்கள் ‘நல்ல பொருள்கள்’ என்று சொல்லப்பட நிற்கும். திருமண்கதிர் முதலானவை. ஆகவிப்படி அவ்வோ வஸ்துக்கள் சீர்மை பெற்றிருப்பதெல்லாம் லக்ஷ்மீ ஸம்பந்த நிபந்தனமானபடியால் தான் சில வஸ்துக்கள் ஸாக்ஷாத் லக்ஷ்மீ வாசக சப்தத்தாலும் சில வஸ்துக்கள் லக்ஷ்மீ விசிஷ்ட வாசக சப்தத்தாலும் வ்யவஹரிக்கப்படுகின்றன. திருவிளக்கு, திருமாளிகை, திருமலை, திருமேனி முதலிய வ்யவஹாரங்கள் “ஸ்ரீரிதி அபேதேந ப்ரதாம் அச்நுதே” என்பதற்கு உதாஹரணமாகவும், ஸ்ரீமதநந்தஸரஸ், ஸ்ரீமத்வநாத்ரிஇத்யாதிவ்யவஹாரங்கள் ஸ்ரீமதிதீத்ருசேந வசஸா ப்ரதாம் அச்நுதே என்பதற்கு உதாஹரணமாகவும் கொள்ளத்தகும். (எ)

**தேவி த்வந்மஹிமாவதிர் ந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே,**
**யத்யப்யேவ மதாபி நைவ யுவயோஸ் ஸர்வஜ்ஞதா ஹீயதே!**
**யந்நாஸ்த்யேவ தத்ஜ்ஞதாமநுகுணாம் ஸர்வஜ்ஞதாயா விது:**
**வ்யோமாம்போஜ மிதந்தயா கில விதந் ப்ராந்தோய மித்யுச்யதே.** (அ)

| | |
|---|---|
| ஹே தேவி ! | பிராட்டி ! |
| த்வந்மஹிம அவதி: | உமது பெருமையின் எல்லையானது |
| ஹரிணாபி | எம்பெருமானாலும், |
| யத்யபி நஜ்ஞாயதே | அறியப்படுகிறதில்லை, |
| த்வயாபி | உம்மாலும் |
| நஜ்ஞாயதே | அறியப்படுகிறதில்லை. |

| | |
|---|---|
| ஏவமதாபி | இப்படி ஒருவராலு மறியப்படாதிருந்தபோதிலும் |
| யுவயோ: | உங்களிருவர்களுடைய |
| ஸர்வஜ்ஞதா | ஸர்வஜ்ஞத்வ மென்பதானது |
| நைவ ஹீயதே | குறைவுபடுகிறதேயில்லை. [ஏனென்றால்] |
| யத் | யாதொரு வஸ்துவானது |

| | | | |
|---|---|---|---|
| நாஸ்தி ஏவ | [உலகில்] அடியோடு கிடையாதோ, | வ்யோமாம்போஜம் | ஆகாயத்தாமரையை |
| தத்ஜ்ஞதாம் | அந்த அஸத் வஸ்துவை யறிந்து கொள்ளாமலிருப்பதை | இதந்தயா விதந் | உள்ளதாக [இது ஆகாசத்தாமரைப்பூ என்று] அறிகிறவன் |
| ஸர்வஜ்ஞதாயா: அநுகுணம் | ஸர்வஜ்ஞத்வத்திற்கு ஒத்ததாக | 'அயம் ப்ராந்த:' இதி உச்யதே கில | 'இவன் பைத்தியக்காரன்' என்று [உலகத்தாரால்] சொல்லப்படுகிறானன்றோ! |
| விது: | [விவேகிகள்] அறிகின்றார்கள்; | | |

பிராட்டியே! உம்முடைய வைபவமானது உம்மாலும் உம்முடைய பர்த்தாவான எம்பெருமானாலும் இவ்வளவென்று பரிச்சேதித்து அறியப்படுகிறதில்லை; ஆனால் இது கொண்டு உங்களுடைய ஸர்வஜ்ஞத்வத்துக்குக் கொத்தை சொல்லமுடியாது. ஸர்வ பதார்த்தத்துக்குள்ளே உம்முடைய மஹிமாவதியும் சேர்ந்திருக்க, அதனை நீங்கள் அறியவில்லை யென்றால் ஸர்வ பதார்த்தத்தில் ஏகதேசத்தை அறியவில்லை யென்று ஏற்படுகிறபடியால் ஸர்வஜ்ஞத்வத்துக்கு என் பங்கம் வராதென்னில்;

உலகத்திலுள்ள பதார்த்தங்களில் ஒன்றை யறியாதொழிந்தால் அது ஸர்வஜ்ஞத்வபஞ்ஜகமாகுமேயன்றி அடியோடு இல்லாத பதார்த்தங்களை அறியாதொழிவது ஸர்வஜ்ஞத்வத்திற்கு ஹாநிகரமாகாது. இல்லாத வஸ்துக்களை இல்லாதவையாகவே அறிந்துகொள்வது ஸர்வஜ்ஞத்வத்திற்குப் பொருந்தியதேயாம். இல்லாத வஸ்துக்களையும் தெரிந்துகொண்டால்தான் ஸர்வஜ்ஞத்வம் ஸங்கதமாகுமென்று கொள்வார் அறிவிலிகளேயாவர். மலடிமகன், முயற்கொம்பு, கானல்நீர், ஆகாசமலர் இவைபோன்ற இல்லாத வஸ்துக்களை ஒருவன் உள்ளனவாக நினைத்துக்கொண்டு வ்யவஹரித்தால் அவன் ப்ராந்தர்களில் அக்ரேஸரனாக எண்ணப்படுவானேயன்றி, 'இவன் இல்லாத வஸ்துக்களையும் தெரிந்துகொண்டிருப்பதனால் விசேஷஜ்ஞாதா என்று ஒருவராலும் புகழப்படான்.

அதுபோல, பிராட்டி! உம்முடைய மஹிமைக்கு அவதியென்பது உலகில் ஸத்தாகக் காணப்படுகின்ற வஸ்துக்களைப்போல் வஸ்துத: உள்ளதானால் அதனை நீங்கள் அறியாதது உங்களுக்கு ஸர்வஜ்ஞத்வபஞ்ஜகமாகும். வாஸ்தவத்தில் உம்முடைய மஹிமைக்கு எல்லையில்லாமையால் த்வந்மஹிமாவதி: என்கிற பதார்த்தம் முயற்கொம்பு முதலானவை போல அஸத்து. அப்படி அஸத்தான பதார்த்தத்தை நீங்கள் தெரிந்துகொள்ளாமையாவது உள்ளதாக அறியாமை. இது யதார்த்தஜ்ஞாநபர்யாயமான அஜ்ஞாநமே யொழிய ஸர்வஜ்ஞத்வபஞ்ஜகமான அஜ்ஞாநமன்று. இது அடிக்கழஞ்சுபெறும். இந்த அஜ்ஞாநத்தையும் நீங்கள் பாதகமாகக் கொண்டு இதனைப் போக்கிக்கொள்ள நினைத்தீர்களாகில்—[அதாவது—பிராட்டியின் மஹிமைக்கு அவதி யுண்டென்று நினைத்தீர்களாகில்] உங்களுடைய ஸர்வஜ்ஞத்வம் குலைந்து ப்ராந்தசிகாமணிகள் என்கிற பட்டமே பலிக்கும்கிடீர் என்றதாயிற்று.

ஆக இந்த ச்லோகத்திற்கு ப்ரதாநப்ரமேயம் பிராட்டி எல்லையில்லாத மஹிமையுடையவள் என்னுமத்தனையாய்த்து. ... ... ... (அ)

**லோகே வநஸ்பதிப்ருஹஸ்பதிதாரதம்யம் யஸ்யா: ப்ரஸாத பரிணம முதாஹரந்தி!**
**ஸா பாரதீ பகவதீ து யதீயதாஸீ தாம் தேவதேவமஹிஷீம் ச்ரியமாச்ரயாம:!! (கூ)**

| | | | |
|---|---|---|---|
| லோகே | உலகத்தில் | உதாஹரந்தி | [ஜ்ஞானிகள்] சொல்லுகிறார்களோ |
| வநஸ்பதி ப்ருஹஸ்பதி தாரதம்யம் | ஒருவன் மரம்போல் ஜடனாகப் பிறப்பதும் ஒருவன் ப்ருஹஸ்பதிபோல் மஹாவித்வானாகப் பிறப்பதுமான ஏற்றத் தாழ்வை | பகவதீ | பூஜ்யையான |
| | | ஸா பாரதீ | அந்த ஸரஸ்வதியானவள் |
| | | யதீயதாஸீ | யாவளொரு பிராட்டியின் அடியவர்களுக்கு அடியவளாயிருக்கிறாளோ; |
| யஸ்யா: | யாவளொரு ஸரஸ்வதியினுடைய | தேவதேவ மஹிஷீம் | தேவதேவபிரானுடைய தேவியான |
| ப்ரஸாத பரிணமம் | அநுக்ரஹத்தின் பரிபாக பலமாக | தாம் ச்ரியம் | அந்தப் பிராட்டியை |
| | | ஆச்ரயாம: | ஆச்ரயிக்கிறோம். |

லக்ஷ்மீகடாக்ஷம் பெற்றவர்கள் பக்கல் வாக்தேவியான ஸரஸ்வதியும் தாஸாநுதாஸியாகக் காத்திருப்பள் என்கிறார்.

'கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கு மவையல்ல நல்ல மரங்கள்—சவை நடுவே நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்' என்றபடி மரமென்று இகழலாம்படி சிலர் மூடாத்மாக்களாயிருப்பதும், தேவகுருவான ஸாக்ஷாத் ப்ருஹஸ்பதியின் அபராவதாரமென்று புகழலாம்படி சிலர் மஹாஜ்ஞாதாக்களாயிருப்பதும் ஸரஸ்வதீ கடாக்ஷத்தினுடைய அந்வயவ்யதிரேகப்ரயுக்தமாக நிகழ்கின்றதென்பது அனைவருமறிந்த விஷயம். அப்படிப்பட்ட வைபவமுடைய ஸரஸ்வதியும் லக்ஷ்மீகடாக்ஷம் பெற்றவர்களின் க்ருஹத்வாரத்திலே துவண்டு, அவர்களுக்கு ஏவல் தொழில் செய்யும் பரிசாரிகையாயிருப்பதால் அதற்கேற்ற பெருமை வாய்ந்த பிராட்டியை சரணம் புகுவோமென்கிறார்.

கீழ் இரண்டாம் ச்லோகத்தில் "யுக்தாம் பாவய பாரதீம்" என்று பிராட்டி பக்கல் வாக்ஸம்ருத்தியை ப்ரார்த்தித்த ஆழ்வானை நோக்கிச் சிலர், 'வாக்ஸம்ருத்தியைப் பிராட்டி பக்கல் ப்ரார்த்திப்பதால் என்ன பயன்? ஸரஸ்வதீதேவியன்றோ அதனை அளிக்க வல்லவள்; ஆனபின்பு அந்த ஸரஸ்வதியைக் குறித்து ஸ்தோத்ரம் பண்ணுவதே தகுதி' என்று சொல்ல, அவர்களுக்கு மறுப்பாக அருளிச்செய்தது இந்த ச்லோகம் என்னலாம். நீங்கள் வாக்தேவதை யென்று கொண்டாடுகிற அந்த ஸரஸ்வதியும் ததீயதாஸியான பின்பு, நான் அந்த பிராட்டியை விட்டு ஸரஸ்வதியைப் பற்றுதல் தகுதியல்லவென்று ஸூசிப்பித்தபடி.

[யதீயதாஸீ] யஸ்யா: இமே யதீயா:; யதீயாநாம் தாஸீ—என்றாகக் கடவது. இந்த வ்யுத்பத்தியால் ஸரஸ்வதியானவள் பிராட்டியின் அடியவர்களுக்கு அடியவள் என்னுமர்த்தம் விளங்கும். .. ... ... ... ... (கூ)

**யஸ்யா: கடாக்ஷம்ருதுவீக்ஷண தீக்ஷணேந ஸத்யஸ் ஸமுல்லஸிதபல்லவ முல்லலாஸ!**
**விச்வம் விபர்யயஸமுத்தவிபர்யயம் ப்ராக் தாம் தேவதேவமஹிஷீம் ச்ரியமாச்ரயாம:** (கய)

| | | | |
|---|---|---|---|
| ப்ராக் | முன்னே [ப்ரளய காலத்தில்] | ஸத்ய: | அந்த ஸங்கல்ப முண்டான க்ஷணத்திலேயே |
| விபர்யய ஸமுத்த விபர்யயம் | லக்ஷ்மீ கடாக்ஷம் பெருமையாலே வாட்டமடைந்திருந்த | ஸமுல்லஸித பல்லவம் உல்லலாஸ | கொழுந்து விட்டுக்கிளர்ந்து விளங்கிற்றோ |
| விச்வம் | ஜகத்தானது | | |
| யஸ்யா: | யாவளொரு பிராட்டியினுடைய | தேவதேவ மஹிஷீம் | தேவதேவ பிரானுடைய திவ்ய மஹிஷியான |
| கடாக்ஷ ம்ருது வீக்ஷண தீக்ஷணேந | 'கடைக்கண்ணாலே மெல்ல நோக்கவேணு' மென்கிற ஸங்கல்பத்தாலே | தாம் ச்ரியம் | அந்தப் பிராட்டியை |
| | | ஆச்ரயாம: | அடிபணிகிறோம். |

ப்ரளய காலத்தில் ஸகலாத்மவர்க்கமும் கரணகளேபரவிதுரமாய் இறகொடிந்த பறவை போல் ஒரு ப்ரவ்ருத்திக்கும் யோக்யமன்றியே துவண்டு அஸத்கல்பமாய்க்கிடக்கையில் 'இவ்வாத்மவர்க்கமடைய ப்ரவ்ருத்திக்ஷமமாக வேணும்' என்று திருவுள்ளம் பற்றா நின்ற யாவளொரு பிராட்டி அவ்வாத்மவர்க்கத்தை நோக்கிக் குளிரக் கடாக்ஷிக்க முயன்றவளவில் தானே, அனைத்தும் துவட்சி நீங்கித் தளிரும் முறியுமாய்ப் பசுகுபசுகென்று விளங்கி யோங்குமோ, அந்தப் பிராட்டியை சரணமடைகிறேனென்கிறார். அதுபோலே அஸத்கல்பனாய்க் கிடக்கிற அடியேனையும் குளிர நோக்கி ஸத்கோஷ்டியிலே அந்வயிப்பிக்க வேணுமென்னும் ப்ரார்த்தனை இதில் உள்ளுறை.

துர்வாஸச் சாபத்தாலே நிச்ஸ்ரீகமாம்படி புவநத்ரயத்தையும் பரித்யஜித்துப் பயோநிதியிலே பிராட்டி எழுந்தருளினபோது தத்கடாக்ஷ அபாவத்தாலே "அஸந்நேவ" என்னும்படி நஷ்டமான த்ரிபுவநம் பின்பு 'செழுங்கடலமுதினிற் பிறந்தவவளும்' என்னும்படி அமுதில் வரும் பெண்ணமுதாயவதரித்து ஸ்நாதையாய் மஹார்ஹ வஸநையாய் சித்ரமால்யாநுலேபநையாய்க் கொண்டு * திகழ்கின்ற திருமார்பில் சேர்ந்து 'அகலகில்லேனிறையும்' என்று ஸம்ச்லேஷித்தவநந்தரம் தன்னுடைய காருண்ய சீதல கடாக்ஷ ஸுதாவர்ஷத்தாலே வழிய வார்க்க, அநந்தரம் அத்தாலே ஸத்தைபெற்று ஸம்ருத்தமான படியை இச் ச்லோகத்திலே அருளிச்செய்கிறார்.' என்ற ஆச்சான் பிள்ளை [சதுச்ச்லோகீ] வ்யாக்யானத்தின்படி இந்த

ச்லோகத்திற்கும் அதுவே கருத்தாகவுமாம். இப்போது 'ப்ராக்' என்பதற்கு துர்வாஸச் சாபத்தாலே ஜகத்தடைய நிச்ஸ்ரீகமான வன்று என்று பொருளாய்த்து. இவ்வர்த்தம் சதுச்ச்லோகீ பாஷ்யகாரரான வேதாந்ததேசிகனுக்கும் அபிமதமாயிருக்கும். ... (௧௦)

**யஸ்யா: கடாக்ஷவீக்ஷாக்ஷணலக்ஷம் லக்ஷிதா மஹேசாஸ் ஸ்யு:**
**ஸ்ரீரங்கராஜமஹிஷீ ஸா மாமபி வீக்ஷதாம் லக்ஷ்மீ:** (௧௧)

| | | | |
|---|---|---|---|
| யஸ்யா: | யாவளொரு பிராட்டியினுடைய | மஹேசா: ஸ்யு: | பெருஞ் செல்வம் விஞ்சியவர்களாக ஆவர்களோ |
| கடாக்ஷ வீக்ஷாக்ஷண லக்ஷம் லக்ஷிதா: | கடைக்கண் நோக்கத்திற்கு ஒரு நொடிப்பொழுதாகிலும் இலக்காகப் பெற்றவர்கள் | ஸ்ரீரங்கராஜ மஹிஷீ | ஸ்ரீரங்க நாச்சியாராகிய |
| | | ஸா லக்ஷ்மீ: | அந்தப் பிராட்டி |
| | | மாமபி | அடியேனையும் |
| | | வீக்ஷதாம் | கடாக்ஷித்தருள்க, |

யாவளொரு பிராட்டியின் கடாக்ஷவீக்ஷணத்திற்கு க்ஷணகாலம் பாத்ரமானவர்கள் தங்யராவர்களோ, அப்படிப்பட்ட மஹா மஹிமசாலினியான பெரிய பிராட்டியார் அடியேனையும் கடாக்ஷித்தருளி தங்யனுக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறபடி.

'க்ஷணலக்ஷ்யம்' என்றும் பாடமுண்டு, பொருள் ஒன்றே. [மஹேசா: ஸ்யு:] இங்குச் சொல்லுகிற மஹேசத்வம் ஐஹிகமாயும் க்ஷுத்ரமாயுமுள்ள ஐச்வர்யமல்ல. அதுவாகில் அத்தகைய ஐச்வர்ய ஸித்திக்காக, ஆழ்வான் லக்ஷ்மீ கடாக்ஷத்தை விரும்புகின்றுரென்ன வேண்டி வரும். குபேர விபவத்தினும் விஞ்சிக்கிடந்த நிரவதிக ஸம்பத்துக்களை த்ருணவத்கரித்து, 'பொன்வட்டில்தனையெறிந்த புகழுடையோன் வாழியே' என்று வாழ்த்துகைக்கீடான பரம விரக்திபெற்று உஞ்சவ்ருத்தியாலே காலக்ஷேபம் நடத்திக்கொண்டு போந்த ஆழ்வானுக்கு இந்த க்ஷுத்ரமான ஐச்வர்யத்தில் கனவிலும் நினைவிருக்க ப்ரஸக்தி யில்லையே. ஆனபின்பு இங்குத்தை மஹேசசப்தம் ஸ்வரூபாநுரூபஸம்பத்ஸம்ருத்தியை யுடையவர்களையே சொல்லக் கடவது. அதாகிறது கைங்கர்ய ஸம்பத்து. *மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்து *காரங்கொளக் கலங்கின கானமர் வேழத்தை "ஸ து நாகவர: ஸ்ரீமாந்" என்றதும; ராவணபவநத்திலே திரஸ்க்ருதனாய்ப் புகலிடம் தேடித் தரையிலே கால பாவமாட்டாதே ஸ்ரீராமவிஷயீகாரம் பெறுவதாக ஆகாசத்திலே வந்து நின்ற ஸ்ரீவிபீஷணுழ்வானை "அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்" என்றதும் * குவலயத்துங்கக்கரியும் பரியுமிராச்சியமுமெல்லாம் துறந்து கானகமே மிக விரும்பிப் போந்த இளைய பெருமாளை "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்றதும் கைங்கர்ய ஸம்பத்தைக் கணிசித்திறே. இந்த கைங்கர்ய ஸம்பத்து இஹலோகத்தில் அர்ச்சாவதாரத்தில் கிடைக்க வேணுமானாலும் பரமபதத்தில் கிடைக்க வேணுமானாலும் லக்ஷ்மீ கடாக்ஷத்தாலன்றிக் கிடைப்பது அருமை என்னுமிடம் 'பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின்கோயில் சீய்த்து' 'பூவளரும் திருமகளாலருள் பெற்றுப் பொன்னுலகில் பொலிவர்தாமே' இத்யாதி அருளிச் செயல்களாலும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளாலும் விசதம். பிராட்டிபக்கல் கடாக்ஷம் பெறாதே அவனைப் பெறநினைப்பார் பெறும் பேற்றுக்கு சூர்ப்பணகையை ப்ரதமநிதர்சநமாக நம்மாசார்யர்கள் காட்டிப் போருவர்கள். [ஸா மாமபி வீக்ஷதாம் லக்ஷ்மீ:] அடியேனையும் குளிரக் கடாக்ஷித்தருளி, அந்த கைங்கர்ய ஸம்பத்தை அடியேனும் பெற்றேனும்படி அருள் புரிய வேணுமென்கை. (௧௧)

ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய
ஸ்ரீஸ்தவ வியாக்கியானம்
முற்றிற்று.

# மணவாள மாமுனிகளின்

# வைபவச் சுருக்கம்

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் பல ஆசிரியர்கள் விளங்கினாலும் மூவர் முக்கியமாகக் கொள்ளப்பட்டுள்ளார்கள். நம்மாழ்வாரும் நம் இராமானுசனும் நம் மணவாளமாமுனிகளு மாவர். ஆனதுபற்றியே 'ஆழ்வார் திருவடிகளே சரணம்; எம்பெருமானார் திருவடிகளே சரணம்: ஜீயர் திருவடிகளே சரணம்' என்று ஸ்ரீ வைஷ்ணவவுலகம் நிச்சலும் அநுஸந்தானம் செய்துவருகின்றது. முதன்மையான ஆசாரியர் நம்மாழ்வாரேன்றும், இடையாசிரியர் எம்பெருமானார் [ஸ்ரீராமாநுஜர்] என்றும், கடையாசிரியர் மணவாள மாமுனிகள் என்றும் கொள்க.

ஸகல வேதங்களுக்கும் ஸாரம் திருவஷ்டாக்ஷர மந்திரமென்றும் அதனுள்ளும் ஸாரமானது ப்ரணவமென்றும் வைதிகரது கொள்கை. ஓம் என்பதே ப்ரணவமென்பது. அதனைப் பிரித்தால் அகாரமும் உகாரமும் மகாரமுமாகப் பிரியும். அகாரத்தினால் ஆழ்வாரும், உகாரத்தினால் உடையவரும், மகாரத்தினால் மணவாள மாமுனிகளும் உள்ளுறை பொருளாகத் தெரிவிக்கப்படுகின்றார்களென்பர். இம்மூன்று ஆசிரியர்களையும் மனனம் செய்தால் ஸகல வேதங்களையும் ஓதியுணர்ந்த கணக்காமென்பதில் இறையும் ஐயமில்லை.

இவர்களுள் நம்மாழ்வாருடைய பெருமையிற் காட்டிலும் ஸ்ரீராமாநுஜருடைய பெருமை மிக்கது. இவ்விருவர் பெருமையினும் மணவாளமாமுனிகளின் மேன்மை ஒப்புயர் வற்றது. ஆசார்ய பதவியை அலங்கரிப்பதற்கேற்ற நற்குணங்களனைத்தும் மாமுனிகள்திறத்து மாத்திரமே குடிகொண்டிருந்தன வென்றால் இஃது இறையும் அதிசயோக்தியாகாது.

இப் பேராசிரியரின் சரிதை அமுதக் கடல் போன்று அளவுகடந்திருந்தாலும் அதினின்று சில திவலைகள் மாத்திரமே ஈண்டு அனுபவிக்கப்படுகின்றன. இது பக்தர்களுக்கு நித்யாநுஸந்தானமாகத் தகும்.

இவர் திருவவதரித்தது ஆழ்வார் திருநகரியில். இவரது திருத்தந்தையாரின் திருநாமம் திருநாவீறுடைய பிரான்தாஸரண்ணர். கலியுகாதி நாலாயிரத்து நானூற்றெழுபத்திரண்டாவதான ஸாதாரண வருடத்தில் ஐப்பசித் திங்களில் திருமூல நன்னாளில் ஆதிசேஷனுடைய அம்சமாகவும் ஸ்ரீ ராமாநுஜருடைய அபராவதாரமாகவும் தோன்றினர்.

இங்ஙனே உலகுக்கெல்லாம் ஒருயிராகத் தோன்றிய திவ்யமூர்த்திக்கு ஸ்ரீ ரங்கநாதனுடைய திரு நாமத்தைச் சாத்த விரும்பிய பெரியார், 'அழகிய மணவாளன்' எனப் பெயரிட்டனர். அழகிய மணவாள நாயனார் எனச் சிறப்புத் திருநாமமாக வழங்கி வந்தது. சுக்கிலபக்ஷத்துச் சந்திரன்போல் கலைகள் நிரம்பி வளர்ந்து வருகின்றார். உபநயநம் முதலிய வர்ணோசித ஸம்ஸ்காரங்களும் அடைவே நடைபெற்றன. இராமபிரானும் கண்ணபிரானும் இயற்கையில் ஸர்வஜ்ஞர்களாயிருந்தும் லோக மரியாதைக்கிணங்க வஸிஷ்ட விச்வாமித்ர ஸாந்தீபநிகளிடத்திலே கலைகள் பயின்றவாறுக இவ்வாசிரியரும் உலக நடைக்கிணங்க நல்லாசிரியர் பக்கலிலே வேதங்களையும் வேதாங்கங்களையும் மற்றும் ஸகல சாஸ்த்ரங்களையும் ஓதியுணர்ந்து,

"சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லாவறநெறி யாவுந் தெரிந்தவன்"

என்னும்படி விளங்கினார். உசித காலத்தில் இல்லற வாழ்க்கையையும் ஏற்று,

"இருமுப்பொழுதேத்தி யெல்லை யில்லாத் தொன்னறிக்கண் நிலை நின்ற தொண்டர்"
என்னும்படியே விசிஷ்டபரமைகாந்தியாக விளங்கிவந்தார்.

ஸ்ரீவைஷ்ணவ பரமாசார்ய பரம்பரையில் பிள்ளைலோகாசார்யர் என்பவர் ஒரு பேராசிரியர். இவரே பரம கருணையோடு ரஹஸ்யப் பொருள்களை முதன் முதலாகப் பதினெட்டு நூல்கள் மூலமாய் வெளியிட்டருளின பெருவள்ளல். அவருடைய திருவடிகளில் நெடுநாள் பணிந்திருந்து அரும்பெரும் பொருள்களை நன்குணர்ந்தவரும் ஆழ்வார்களின் ஈரச் சொற்களிலே ஈடுபாடு காரணமாகத் திருவாய்மொழிப் பிள்ளையென்று சிறப்புத் திருநாமம் பெற்றவருமான திருமலையாழ்வாரென்கிற ஆசாரியரை யடிபணிந்து ஸத்ஸம்பிரதாயார்த்த நிதிகளைப் பெற்றார் இவ்வாசிரியர்.

அக்காலத்தில், திவ்யப் பிரபந்தங்களின் சீரிய பொருள்களை யெடுத்துரைப்பார் மிகச் சிலரேயிருந்ததனால் இவ்வாசிரியர் தமிழ்வேத ரஹஸ்யப் பொருள்களின் பிரவசனத்தில் தலைமை பெற்று விளங்கவேணுமென்று ஆசைகொண்ட இவரது ஆசாரியர் [திருவாய்மொழிப் பிள்ளை] இவரை அக்கைங்கரியத்திலே திடமாக ஊன்ற வைத்தார். ஸம்ஸ்க்ருத வேத வேதாங்கங்களில் ஆழ்ந்து அவற்றின் உண்மைப் பொருள்களை உள்ளபடி யுணர்ந்தவர்களே தமிழ் வேதத்தை நன்கு நிர்வஹிக்க வல்லவர்களாதலால் இப்பேராசிரியர்க்கு இக்கைங்கரியம் கிடைத்தது மிகப்பொருத்தமாயிற்று.

முற்காலத்தில் ஆசாரியர்களனைவரும் தரிசன நிர்வாஹம் செய்துகொண்டு வீறுபெற்று எழுந்தருளியிருந்தவிடம் திருவரங்கம் பெரிய கோயிலேயாதலால் அந்தத் திருப்பதியில் வாழ்ந்து கொண்டு தர்சன ஸ்தாபனம் செய்தருளுமாறு தம் ஆசாரியரால் நியமிக்கப் பெற்ற இவ்வாசிரியர் நாளடைவில் திருவரங்கந் திருப்பதியிலே வந்து சேர்ந்து, அங்கு ஸ்ரீரங்கநாதனாலும் ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் வெகுமானிக்கப் பெற்று அவ்விடத்தில் அடிபணிந்த சிஷ்யர்களுக்கு அரிய பெரிய அர்த்தங்களை அருளிச்செய்துகொண்டு வாழ்ந்து வந்தார். இல்லற வாழ்க்கையில் வெறுப்புற்றுத் துறவறம் பூண்டு 'மணவாள மாமுனிகள்' என்கிற திருநாமத்துடன் விளங்கி நின்றார். இப்படி இவர் உத்தமாச்ரமத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னமே, வானமாமலையிலே மஹாஜ்ஞாந நிதியாக எழுந்தருளியிருந்த அழகிய வரதர் என்பவர் பரம விரக்தியினாலே ஆச்ரமஸ்வீகாரஞ்செய்து ஸ்ரீராமாநுஜ ஜீயரென்று திருநாமம் பெற்றிருந்தவர் இவ்வாசிரியர் திருவடிகளில் ஆச்ரயித்திருந்தார். அவரே தலைவரான சிஷ்யர். பிறகு கோயிலண்ணன், பிரதிவாதிபயங்கரமண்ணன், எறும்பியப்பா முதலான பலபல மஹான்கள் சிஷ்யர்களாகப் பணிந்து இவரது பெருமைகளை வடமொழி தென்மொழி நூல்களினால் வெளியிட்டு உய்ந்து போந்தார்கள்.

அத்தகைய சிஷ்ய வர்க்கங்களில் எண்மர் தலைமை பெற்று அஷ்டதிக் கஜங்களென்கிற சிறப்புப் பெயரும் பெற்று உலகம் போற்ற நின்றார்கள். அவர்களது திருநாமம்—1. வானமாமலை ஜீயர். 2. பட்டர்பிரான் ஜீயர். 3. திருவேங்கடராமாநுஜ ஜீயர். 4. கோயிலண்ணன். 5. பிரதிவாதிபயங்கரமண்ணன். 6. எறும்பியப்பா. 7. அப்பிள்ளை. 8. அப்பிள்ளார்.

இவர்களுள் 'எறும்பியப்பா' என்பவர் வந்து ஆச்ரயித்த விதம் வெகு விசித்திரமானது. சோளஸிம்ஹபுரமென்று பிரசித்தமான திருக்கடிகைக்கு அருகிலுள்ள எறும்பி யென்னும் அக்ரஹாரத்திலே தோன்றி தேவராஜாசார்யரென்று திருநாமம் பூண்டிருந்த இவர் மஹாவித்வான். இவர் ஒருகால் ஸ்ரீரங்கத்திற்கு வந்து அங்கே தம் உறவினரான அண்ணனது திருமாளிகையில் தங்கியிருக்கையில் அவரோடு கூட மணவாளமாமுனிகளின் காலக்ஷேப கோஷ்டியிலும் அந்வயிக்கப் பாக்கியம் பெற்றார். அப்போது மாமுனிகளின் ஸர்வதோமுகமான ப்ரஜ்ஞாவிசேஷத்தைக் கண்டு களித்தும், அவரது திருவடிகளில் ஆச்ரயிக்க பாக்யபரிபாகம் விளையாமலே அங்கு தீர்த்த ப்ரஸாதங்களும் பெறாமலே தம்மூருக்குத் திரும்பிவிட்டார், தம் திருமாளிகையிலுள்ள பெருமாளுக்குத திருவாராதனம் கண்டருளப் பண்ணப் புகுந்து கோவிலாழ்வார் திருக்காப்பை நீக்கப் பார்க்கையில் திருக்காப்பு திறக்கப் பெற்றதில்லை. பலவுபாயங்கள் செய்து பார்த்தும் ஒருபடியாலும் திறக்கப்போகாமையாலே மிக வருந்தி அமுது செய்யாமலே, 'இது என்ன அபசாரபலனோ!' என்று மனம் நொந்து மூர்ச்சித்துக் கிடந்தார்.

அன்றிராக்கனவில் அவருடைய ஆராதனப்பெருமாளான சக்ரவர்த்தி திருமகன் எதிரே வந்து தோன்றி 'நமக்கு ஆருயிராய் உலகுக்கு ஓருயிரான மணவாளமாமுனிகளின்

திருவடிகளிலே பணியாமல் மீண்டு வந்திராதலால் உமக்கு நாம் கதவு திறந்திலோம்; ஆதி சேஷன் தானே மாமுனிகளாக வந்து அவதரித்தமை அறிவீராக. அவரது திருவடிகளிற் சென்று ஆச்ரயித்துத் தூய்மை பெற்று வந்தாலன்றி உமது கையில் நாம் திருவாராதனம் கொள்வதில்லை; என்று சொல்லி மறைய, அப்பாவும் துயிலெழுந்து மிக வியந்து இவ்வதி சயத்தை அன்பர்களுக்கு அறிவித்து அப்போதே புறப்பட்டுத் திருவரங்கம் சென்று சேர்ந்து மாமுனிகளின் திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்து இச்செய்தியை விண்ணப்பம் செய்து அபராதக்ஷாமணம் செய்துகொண்டு 'இனி அடியேனுக்கு இத்திருவடி நிழலொழியப் புகலிடம் வேறொன்றில்லை; நெறி காட்டி நீக்கப்பாராதே அடியேனை அத்தாணிச் சேவகத் திற்கு ஆட்படுத்திக் கொண்டருளவேணும்' என்று மிகவும் ப்ரார்த்தித்து மாமுனிகளின் பரி பூர்ண அநுக்ரஹத்தைப் பெற்று அன்று தொடங்கி ஸகலார்த்தங்களும் சிக்ஷிக்கப் பெற்றுக் கிருதார்த்தரானார். இவர் பரமபக்தி தலையெடுத்து மாமுனிகள் விஷயமான காவ்யம் நாடகம் சம்பூஸ்தோத்ரங்கள் பலவும் பணித்தார். இவர் தம்முடைய இல்லத்தில் பரம்பரையாக ஆரா திக்கப்பட்டு வந்த சக்ரவர்த்தி திருமகன் ஸ்தானத்தில் மணவாளமாமுனிகளையே எழுந் தருளப் பண்ணி ஆராதித்து வந்தார்.

மாமுனிகளுக்கு அமைந்துள்ள பெருமைகளில் தலையான பெருமை யொன்று கேண்மின். இமவந்தந்தொடங்கி யிருங்கடலளவுமுள்ள எல்லாத் தலங்களிலும்,

"ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்,
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்"

என்கிற இவ்வாசிரியரது திவ்விய தனியனே திவ்யப்பிரபந்தங்களின் அநுஸந்தானங்களில் நியதிபெற்று விளங்குகின்றது. "மணவாள மாமுனியே இன்னமொரு நூற்றாண்டிரும்" என்று முடிக்கப்படுகிறது. காருள்ளளவும் கடல்நீருள்ளளவும் வேதமுள்ளளவும் வேத கீதையுள்ளளவும் இங்ஙனே நடந்து வருமென்பதில் ஐயமில்லை. இது ஸ்ரீரங்கநாதனுடைய திருவாணையினலமைந்தது. அப்பெருமான் மாமுனிகளிடத்தே திருவாய்மொழிப் பொருள் கேட்க விரும்பி ஒரு நாள் இவர்க்கு அருளப்பாடிட்டு 'ஜீயரே! நாளை முதலாக நம்முடைய பெரிய திருமண்டபத்திலே யிருந்து நம்மாழ்வாருடைய திருவாய்மொழியை ஈடு முப்பத்தாறா யிரம் முதலான வியாக்கியானங்களுடனே பிரவசனம் செய்து போரீர்" என்று நியமிக்க, மாமுனிகள் மஹா ப்ரஸாதமென்று உகந்து அப்படியே மறுநாள் தொடங்கி 'கங்கா ப்ரவா ஹமோ? அல்லது கங்கையிற் புனிதமாய காவிரிப் பெருக்கோ?' என்னலாம்படியாக மிக அற் புதமாய் 'விசதவாக்சிகாமணி' என்கிற தமது விருது நிறம் பெறவும் ஸர்வஜ்ஞ ஸார்வபௌமர் என்கிற பட்டம் பொலியவும் பிரவசனம் செய்து வந்தார். அப்போது பெருமாளும் நாச்சியா ருடனே கூடச் சீரிய சிங்காசனத்தமர்ந்து பேரோலக்கமாகவிருந்து ஒரு ஸம்வத்ஸரமளவும் திருச்செவி சாத்தும்படியாயிற்று. காலக்ஷேபம் முடிவுபெறும் நாளில் அழகிய மணவாளன் நாலைந்து பிராயம் வாய்ந்த அர்ச்சக குமாரனை கோலம்பூண்டு கனவேகமாகக் கோஷ்டியி டையிலே வந்து, அவரவர்கள் விலக்கினதையும் லக்ஷியம் பண்ணுமே புகுந்து, கைகூப்பி நின்று "ஸ்ரீசைலேச தயாபாத்ர" மென்று தொடங்கி முப்பத்திரண்டெழுத்துத் திருமந்திரமாகிய தனியனென்னும் ச்லோகத்தை விண்ணப்பஞ் செய்து மறைய, இவ்வதிசயத்தை நோக்கி அனைவரும் வியந்தனர். இத் தனியனை சிஷ்யவர்க்கங்கள் பட்டோலை கொண்டு மஞ்சட்காப்பு சாத்தி ஸ்ரீரங்கநாதன் திருவடிவாரத்திலே ஸமர்ப்பித்தெடுத்துத் தட்டிலே வைத்துச் சிறப் பாகக் கொண்டாடினார்கள். வடமொழி வேதத்திற்கு ப்ரணவம்போலத் தமிழ் வேதாநு ஸந்தானத்திற்கு இத்தனியனே முதலும் முடிவுமாகக் கடவதென்று பெருமாளுடைய நியமன மும் பாங்காக வாய்த்தது. பின்பு சிஷ்யர்களால் பணிக்கப்பட்ட வாழித் திருநாமமும் அரங் கேசனாணையின்படி அநுஸந்தான நியமத்திற் சேர்ந்ததாயிற்று.

மாமுனிகளருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகளின் பெருமையும் தூய்மையும் வாய்கொண்டு வருணிக்கமுடியாதது. உலகில் ஸ்ரீஸூக்திகளருளிச் செய்தவர்கள் பலபல ஆசாரியர்களு முண்டு. எனினும் மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகளின் மாதுர்யமும் காம்பீர்யமும் அர்த்த புஷ்டியும் ரஸபுஷ்டியும் மிக வியக்கத்தக்கது. ஏற்கெனவே அவதரித்துள்ள பூர்வா சார்ய திவ்ய ஸூக்திகளை ப்ரவசனம் செய்தருள்வதிலேயே மிகுந்த குதூஹலங் கொண்ட மாமுனிகள் சுதந்திரமாகச் சில நூல்களை யிட்டருளத் திருவுள்ளமுடையரல்லரே யானும் இவ்வுலகின் பாக்ய பரிபாகத்தினால் சிஷ்யர்களின் வேண்டுகோளுக்கிணங்கியும் எம்பெரு

மானது நியமனத்தைச் சிரமேற் கொண்டும் தேனே பாலே கன்னலே யமுதேயான திவ்ய க்ரந்தங்களையும் அருளிச் செய்யும்படியாயிற்று.

பிள்ளையுலகாசிரியர் அருளிச்செய்த பதினெட்டு ரஹஸ்யங்களுள் ஸ்ரீவசநபூஷணம், தத்வத்ரயம், முமுக்ஷுப்படி என்கிற மூன்று ரஹஸ்யங்கள் மிகச் சிறந்தவையும் பிரதானங்களுமாகையாலே அம் மூன்றுக்கும் வியாக்கியான மிட்டருளினர். அவரது திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள்நாயனர் அருளிச்செய்த ஆசார்யஹ்ருதய மென்னும் ரஹஸ்யரத்னத்திற்கு வியாக்கியான மிட்டருளினர். பெரியாழ்வார் திருமொழிக்குப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்திருந்த வியாக்கியானம் கரையானுக்கு இரையாகி லோபித்திருந்ததனால் அதைத் தாமருளிச்செய்தார். இராமாநுசநூற்றந்தாதிக்கும், அருளாளப்பெருமாளெம்பெருமானருளிச்செய்த ஞானஸார ப்ரமேய ஸாரங்களுக்கும் உரையிட்டருளினர். கீதைக்குத் தாத்பர்ய தீபமெனவொரு வியாக்கியான மியற்றியருளினர். ப்ரமாணத்திரட்டுகள், திருவாராதனப்ரயோகம் யதிராஜ விம்சதி, தேவராஜமங்களம், திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்திப்பிரபந்தம், முதலியனவுமருளிச் செய்தார்.

வியாக்கியான மருளிச்செய்வதில் இவருடைய திறமை ஒப்புயர்வற்றது. ஸூத்ரம் போன்ற ஸ்ரீலோகாசார்ய திவ்யஸூக்திகளுக்கு அவதாரிகையிடுகிற அழகும் மூலத்திற்கு அர்த்தமருளிச் செய்கிற வைகரியும் ஆங்காங்கு அர்த்தங்களைப் பிண்டீகரித்து நிகமித்தருளுகிற சைலியும் மதாந்தரங்களைக் கண்டித்தெழுதினலும்கூட ஒருவருடைய மனமும் நோகாதபடிக்கும் வீணை தூஷண பரிஹாஸங்கள் சிறிதும் புகாதபடிக்கும், எந்த இடத்தை யெடுத்தாலும் சாஸ்த்ரார்த்தமே கைகொள்கனியாம் படிக்கும் 'ஸகல சாஸ்த்ர ஸாகர பாரங்கதர் இவரொருவரே' என்று திண்ணமாக எண்ணும்படிக்கும், மயங்கவைத்தல் முதலிய குற்றங்களுக்குச் சிறிது மிடமில்லாதபடிக்கும் ஸ்ரீஸூக்திகளருளிச் செய்தவர் மாமுனிகளொருவரே.

உண்மையில், இவ்வாசிரியருடைய ஸ்ரீஸூக்திகளை ஸேவித்தபின்பு இன்னொருவரது வாக்கில் வாயை வைத்தால் சுவைக்கேடு தோன்றியே தீரும். பல சொல்லியென்? மற்றையோருடைய நூல்களைக் காணும்போது அவரவர்களது ஞானத்தை அளவிட்டு அறியும்படியாகவுள்ளது. மாமுனிகளின் வியாக்கியானங்களை ஸேவிக்குமளவில் மாருதியை நோக்கி இராமபிரானருளிய வாசகமே நினைவுக்கு வருகின்றது;

"இல்லாத வுலகத் தெங்கும் ஈங்கிவனிசைகள் கூரக்  
கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி  
சொல்லாலே தோன்றிற்றன்றே! ஆர்கொல் இச்சொல்லில் வல்லான்?  
வில்லார் தோளிளையவீர! விரிஞ்சனே விடைவலானே"

என்று இராகவன் வியந்து கூறினதாகக் கம்பர் கூறியுள்ளாரன்றோ? அஃது உண்மையில் மணவாளமாமுனிகள் விஷயத்திலேதான் பொருந்தக் காணலாகும்.

நம்மாழ்வார் தம்முடைய பெருமையைத் திருவாய்மொழியில் "துவளில் மாமணி மாடம்" "உண்ணுஞ் சோறு பருகுநீர்" முதலான பதிகங்களில் தாமே வெளியிட்டுக் கொண்டவாறுபோல, மாமுனிகள் தாமும் ஆர்த்திப்பிரபந்தத்தில் ஒரு பாசுரத்தினல் தமது பெருமையைத்தாமே அருளிச் செய்யும்படியாயிற்று நம்போல்வார் நிச்சலும் அநுசந்தித்து உய்வதற்காக. அந்தப் பாசுரம் கேண்மின்;—

தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப் பெற்றோம்  
தேவனுறை திருப்பதியே யிருப்பாகப் பெற்றோம்  
மன்னியசீர் மாறன் கலையுணவாகப்பெற்றோம்  
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்  
முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்  
முழுது நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்  
பின்னையொன்று தனில்நெஞ்சு போராமற் பெற்றோம்  
பிறர்மினுக்கம் பொறுமையிலாப் பெருமையும் பெற்றோமே'

இச் செய்யுளமுதத்தையே அன்பர்கள் நிச்சலும் பருகிக் களிப்பாராக.

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீரஸ்து.
பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

—o—

43204
ஓ3:41'7ocH70,T
3114

விசதவாக் சிகாமணிகளான

**மணவாளமாமுனிகள் அருளிச்செய்த**

# ஸ்ரீ தேவராஜ மங்களம்

## [பெருமாள் கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையுடன் கூடியது]

தனியன்

யச் சக்ரே தேவராஜஸ்ய மங்களாசாஸநம் முதா,
தம் வந்தே ரம்யஜாமாத்ருமுநிம் வசதவாக்வரம்.

(கருத்து.) ஸ்ரீதேவராஜ மங்களாசாஸந க்ரந்தத்தைத் திருவுள்ள முகந்து அருளிச் செய்தருளின விசதவாக் சிகாமணிகளென்று புகழ்பெற்ற மணவாள மாமுனிகளை வணங்குகின்றேனென்கை.

திவ்யதேச யாத்திரையடைவிலே மாமுனிகள் கச்சிநகர்க்கு எழுந்தருளிச் சில காலம் திருவெஃகாவில் எழுந்தருளியிருந்து ஸ்ரீ பாஷ்யப்ரவசநம் செய்தருளா நிற்கும்போது, சிஷ்ய வர்க்கங்களின் ப்ரார்த்தனைக்கிரங்கிப் பேரருளாளப்பெருமாள் விஷயமாக ம்ருதுமதுரமான இந்த ஸ்துதிரத்நத்தை அருளிச் செய்தருளினரென்று ப்ரஸித்தமாயிருக்கும். இதிற் சில ச்லோகங்கள் யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்திலும் உபாத்தம். இந்தத் தனியன் அப்பிள்ளை யருளிச் செய்ததாக ஏடுகளிற் காண்கிறது.

---

க்ரந்தாரம்பம்.

மங்களம் வேதஸோ வேதிமேதிநீக்ருஹமேதிநே.
வரதாய தயாதாம்நே தீரோதாராய மங்களம்.

* * * தேவப்பெருமாள் நான்முகன் செய்த அச்வமேத யாகத்தில் உத்தரவேதியில் திருவவதரித்தருளினரென்று புராணங் கூறும். அதற்கிணங்க வேதஸோ வேதிமேதிநீ க்ருஹமேதிநே என்றார். வேதஸ:—பிரமனுடைய, வேதிமேதிநீ—உத்தர வேதிஸ்தலத்தை, க்ருஹமேதிநே—இருப்பிடமாகக் கொண்டவரான என்றபடி. க்ருஹமேதிநே என்பது பெருந்தேவி மணவாளன் என்பதையும் தோற்றுவிக்கும். "கமலாக்ருஹமேதிநம்" என்றார் தேசிகன். பேரருளாளன் என்கிற திருநாமத்தை தயாதாம்நே என்பதனால் காட்டியருளினர். அருளுக்கு இருப்பிடமான என்றபடி. தீரோதாராய—தைர்யமும் ஔதார்யமும் உடையவரென்கை. (க)

வாஜிமேதே வபாஹோமே தாதுருத்தரவேதித:,
உதிதாய ஹுதாதக்நேருதாராங்காய மங்களம்.

பிரமனுடைய அயமேத வேள்வியில் வபையையெடுத்து ஹோமம் பண்ணினவுடனே உத்தரவேதியில் நின்றும் ஹோமகுண்டத்திலிருந்து உதித்தருளினவரும் அழகிய திருமேனியை யுடையவருமான பேரருளாளப் பெருமாளுக்குப் பல்லாண்டு. (உ)

யஜமாநம் விதிம் வீக்ஷ்ய ஸ்மயமாநமுகச்ரியே,
தயமாநத்ருசே தஸ்மை தேவராஜாய மங்களம்.

தம்மை ஸாக்ஷாத்கரிக்கும் பொருட்டு வேள்விசெய்த பிரமனை நோக்கிப் புன்முறுவல் செய்துகொண்டு அருள் நோக்கம் தந்தருளின தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு. (ந)

**வாரிதச்யாமவபுஷே விராஜத்பீதவாஸஸே,**
**வாரணசலவாஸாய வாரிஜாக்ஷாய மங்களம்.**

* கருமுகில் போல்வதோர் மேனியையுடையவரும், பீதகவாடை திகழும் திருவரையை யுடையவரும், திருவத்திமாமலையைத் தன்னிடமாகக் கொண்டவரும் செந்தாமரைக் கண்ணரு மான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு. (ச)

**அத்யாபி ஸர்வபூதாநாம் அபீஷ்டபலதாயிநே,**
**ப்ரணதார்த்திஹராயாஸ்து ப்ரபவே மம மங்களம்**

நான்முகனுக்கு அபேக்ஷித ஸம்விதானம் செய்தருளினது போலவே இன்றைக்கும் ஸகலப்ராணிவர்க்கங்களுக்கும் அபேக்ஷிதங்களான பலன்களை அருள் செய்பவரும், ஆச்ரிதர் களின் அநிஷ்ட நிவ்ருத்திகளையும் செய்தருள்பவரும் எனக்குத் தலைவருமான தேவப்பெருமா ளுக்குப் பல்லாண்டு. (ரு)

**திவ்யாவயவஸௌந்தர்யதிவ்யாபரணஹேதயே,**
**தந்தாவளகிரீசாய தேவராஜாய மங்களம்.**

திவ்யமான அவயவ ஸௌந்தர்யத்தை யுடையவரும் திவ்யமான ஆயுதாபரணங்களை யுடையவரும் ஸ்ரீஹஸ்திகிரி நாதருமான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு.—தந்தாவள மென்று யானைக்குப் பெயர். பூர்வார்த்தத்தை விசேஷணோபயபத கர்மதாரயனுகக் கொள்க. (சு)

**புருஷாய புராணாய புண்யகோடிநிவாஸிநே,**
**புஷ்பிதோதாரகல்பத்ருகமநீயாய மங்களம்.**

அநாதி ஸித்தபுருஷரும். புண்யகோடி விமானத்தில் எழுந்தருளியிருப்பவரும், பூத்து அழகிய கல்பவ்ருக்ஷம்போல் ஸ்ப்ருஹணீயருமான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு.— ஒவ்வொரு திவ்ய தேசத்திலே விமாநத்திற்கு ஒவ்வொரு திருநாமமுண்டு. ஸ்ரீஹஸ்திகிரியி லுள்ளது புண்யகோடி விமாநமென்பதாம். வடமொழியில் த்ரும: என்பது போலவே த்ரு: என்பதும் வ்ருக்ஷவாசகம். கமநீய:—விரும்பத்தக்கவர். (எ

**காஞ்சநாசலச்ருங்காக்ரகாளமேகாநுஸாரிணே,**
**ஸுபர்ணம்ஸாவதம்ஸாய ஸுரராஜாய மங்களம்.**

* காய்சினப்பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல் * என்கிற திரு வாய்மொழிப் பாசுரத்தை யுட்கொண்டு அருளிச்செய்தது இந்த ச்லோகம். பொன்மயமான தொரு மலையினுச்சியிலே காளமேகம் திகழ்வதுபோல் பெரிய திருவடியின் திருத்தோளுக்கு அலங்காரமாகின்ற தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு. * அத்தியூரான் புள்ளையூர்வான்* என்று பூதத்தாழ்வார் அருளிச் செய்தபடி தேவப்பெருமாளுக்குப் பெரியதிருவடி ஸேவை * வையத்தெவரும் வணங்கவிருப்பதால் மற்ற வாஹநங்களைவிட்டுப் பெரியதிருவடி வாஹநத் தைப்பற்றி இதில் அருளிச்செய்யலாயிற்று. ஸுபர்ண:—கருடன். (அ)

**போகாபவர்க்கயோரேகம் வாஞ்சத்ப்யோ தததே த்வயம்,**
**ஸ்ரீமத்வரதராஜாய மஹோதாராய மங்களம்.**

* இருள்தருமா ஞாலமாகிய இவ்வுலகத்தில்போகமென்றும் * நலமந்த மில்லதோர் நாடாகிய நித்யவிபூதியில் போகமென்றும் போகம் இருவகைப்படும். ஐஹிகத்தை விரும்புவார் சிலர்; ஆமுஷ்மிகத்தை விரும்புவார் சிலர். இங்ஙனே ஒரொன்றை விரும்பினுலுங்கூட, தம் முடைய ஔதார்ய விசேஷத்தாலே * அவன் நாடு நகரமும் நன்குடன் காண நலனிடை யூர்தி பண்ணி, வீடும் பெறுத்தித் தன் மூவுலகுக்குத் தருமொரு நாயகமே * என்னுங் கணக்கிலே இரண்டையுமளித்தருள்பவர் பேரருளாளப் பெருமாளென்கிறது. (கூ

**மதங்கஜாத்ரிதுங்காக்ரச்ருங்கச்ருங்காரவர்ஷ்மணே,**
**மஹாக்ருபாய மத்ரக்ஷாதீக்ஷிதாயாஸ்து மங்களம்.**

ஸ்ரீஹஸ்திகிரியின் மிகவுயர்ந்த உச்சிக்கு அலங்காரமான திருமேனியையுடையவரும் என்போல்வாரைக் காத்தருள்வதில் தீக்ஷைகொண்டவருமான பேரருளாளப் பெருமாளுக்குப் பல்லாண்டு. * ச்ருங்காரோ கஜபூஷணம் * என்று மேதிநீகோசம். யானையினுடைய பூஷணம்

போலவே பூஷண ஸாமாந்யத்தையும் இச்சொல் சொல்லும். ஹஸ்திகிரியாதலால் கஜபூஷண மென்னும் பொருளேயே இங்குக் கொள்ளவுமாம். வர்ஷ்ம—மேனி. (கo)

**ஸ்ரீகாஞ்சீபூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே,**
**அதீதார்ச்சாவ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம்.**

அர்ச்சாவதார ஸமாதியைக்கடந்து திருக்கச்சிநம்பிகளோடு பரமப்ரீதியுடன் வார்த்தை யாடி யருளின தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு. தேவப்பெருமாள் திருக்கச்சி நம்பிகள் மூலமாக உடையவர்க்கு ஆறு வார்த்தை யருளிச் செய்தது ப்ரஸித்தம். அவ்வளவு மாத்திரமே யன்று; நம்பிகளோடு அநவரதமும் வார்த்தையாடினதுண்டு என்கிறது ஸர்வாபிபாஷிணே என்பதனால். அதீத என்பது கர்த்தரிக்தமாகவுள்ளதுபோலவே கர்மணிக்தமாகவுமுண்டாதலால் அதிலங்கிதமென்கிற பொருளிலே இங்கு ப்ரயுக்தம். அர்ச்சாவ்யவஸ்தையாவது—அர்ச்சாவதாரத்தில் யாரோடும் பேசுவதில்லையென்று கொண்ட நியமம். (கக)

**அஸ்து ஸ்ரீஸ்தநகஸ்தூரீ வாஸநாவாஸிதோரஸே,**
**ஸ்ரீஹஸ்திகிரிநாதாய தேவராஜாய மங்களம்.**

* கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒருநாள் தங்குமேல் என்னாவி தங்குமென்றுரையீரே * என்று ஆண்டாளைப் போலே பாரிக்கவேண்டாமல் பெரிய பிராட்டியார் அநவரதமும் திருமார்போடே அணைந்திருக்கையாலே அவளுடைய திருமுலைத் தடத்தில் சாத்தின கஸ்தூரிக்காப்பின் நறுமணம் கமழாநின்ற திருமார்பையுடையவரான ஸ்ரீஹஸ்திகிரி நாதர்க்குப் பல்லாண்டு. (கஉ)

**மங்களாசாஸநபரை: மதாசார்யபுரோகமை:**
**ஸர்வைச் ச பூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம்.**

பல்லாண்டு பாடுவதையே தொழிலாகக் கொண்ட, அஸ்மதாசார்யர் முதலான ஸகல பூர்வாசார்யர்களாலும் போற்றப்பெற்ற பெருமானுக்குப் பல்லாண்டு. முன்னோர்களுடைய முறைமையைப் பின்பற்றியே அடியேனும் இந்த ஸ்துதியினால் பல்லாண்டு பாடினேனென்று அருளிச்செய்து தலைக்கட்டினாராயிற்று. (கங)

ஜீயர் திருவடிகளே சரணம்.

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

**தேவராஜ மங்களத்தின்**

உரை முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீ மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

# யதிராஜ விம்சதியின்

# உரை அவதாரிகை.

ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் அழகிய மணவாள நாயனார் என்கிற திருநாமத்தோடே விளங்கித் திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளிலே வாழ்கிற நாளிலே ஒருநாள் அவ்வாசிரியர் எம்பெருமானாருடைய குணாநுபவம் பண்ணிக்கொண்டிருக்கையில் *மாறனடிபணிந்துய்ந்த விராமானுசன்* என்றும் உறுபெருஞ் செல்வமும் தந்தையுந்தாயும் உயர்குருவும் வெறிதரு பூமகள் நாதனும் மாறன் விளங்கியசீர் நெறிதருஞ் செந்தமிழாரணமே யென்றிந்நீணிலத்தோர் அறிதரநின்ற விராமாநுசன் *என்றும்* பண்டருமாறன் பசுந்தமிழானந்தம் பாய் மதமாய் விண்டிடவெங்க ளிராமானுச முனிவேழம் * என்றுமுள்ள பாசுரங்களைச் சிந்தை செய்து, ஆழ்வார் திருவடிகளிலும் அருளிச்செயல் திறத்திலும் எம்பெருமானார்க்கு ப்ரஸித்தமாயிருந்த அதிமாத்ர ப்ராவண்யத்திற்குத் தகுதியாக இத்திருநகரியிலே அவர்க்கு ஒரு தனிக்கோயில் அமைக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி சிஷ்யர்களுக்கு நியமித்து உடையவர் ஸன்னிதியையும் அதைச்சுற்றி 'ஸ்ரீராமாநுஜ சதுர்வேதிமங்கலம்' என்கிற திருவீதியையும் ப்ரதிஷ்டிப்பித்து * இராமானுசனைத் தொழும் பெரியோரையும் அங்கே நித்யவாஸம் செய்ய நியமித்தருளி அந்த நற்செல்வமனைத்தையும் நாயனார்க்கு [மணவாளமாமுனிகளுக்கு] அதீனமாக்கியருளினர்.

நாயனாரும அந்த எம்பெருமானார் திருவடிகளிலே மிகவும் பரிவராயிருந்து அங்குத்தைக்கு உரிய கைங்கரியங்களையெல்லாம் குறையற நடத்திக்கொண்டு போருமதுகண்டு திருவுள்ளமுவந்த திருவாய்மொழிப்பிள்ளை 'யதீந்த்ரப்ரவணர்' என்று நாயனாரை அழைக்கத் தொடங்கினர். இந்தத் திருநாமமே அப்போது எங்கும ப்ரசித்தமாயிற்று.

அப்போது அவ்வெம்பெருமானார் திருவடிகளிலே ஒரு ஸ்தோத்ரம் விஜ்ஞாபிக்க வேணுமென்று ஆசார்ய நியமனமாக யதிராஜவிம்சதி யென்னும் ஸ்தோத்ரத்தை யதீந்த்ரப்ரவணர் விஜ்ஞாபித்து அதில் "ஸ்ரீமந் யதீந்த்ர! தவ திவ்யபதாப்ஜஸேவாம் ஸ்ரீசைலநாத கருணா பரிணாம தத்தாம்" என்கிற ச்லோகத்தினால் ஸ்வாசார்ய விஷயத்தில் உபகாரஸ்ம்ருதியையும ப்ரகாசிப்பித்தருளினர். அப்போது அங்கேயிருந்த முதலிகள்

"வல்லார்கள் வாழ்த்துங் குருகேசர்தம்மை மனத்துவைத்துச்
சொல்லாரவாழ்த்தும் மணவாளநாயனார் தொண்டர்குழாம்
எல்லாந்தழைக்க எதிராசவிம்சதி யீன்றளித்தோன்
புல்லாரவிந்தத் திருத்தாளிரண்டையும் போற்று நெஞ்சே"

என்கிற பாசுரத்தை விஜ்ஞாபித்தனர்.

இந்த யதிராஜ விம்சதியின் மாதுர்யம் முதலிய குணவிசேஷங்களைப்பற்றி வரவரமுநி சதகத்திலே "யதுதிதா யதிபூபதிவிம்சதிஸ் ஸமவதீர்ததீதுஸுதாரஸா" என்றும் "த்ராக்ஷா மதிக்ஷிபதி நிந்ததி மாகரந்ததாராம் ஸுதாரஸஜரீமதரீகரோதி" என்றுமருளிச் செய்துள்ள ச்லோகங்கள் இங்கே அநுஸந்தேயம்.

எம்பெருமானாருடைய அபராவதார பூதரான மாமுனிகள் தம்மைத்தாமே துதிப்பது போல இந்த ஸ்தோத்ரம் அருளிச் செய்யலாமோ? அதிலும் அளவு கடந்தவாறாகத் தம்முடைய நைச்சியத்தைப் பேசியிருப்பது தகுமோ? என்று ஒரு சங்கை தோன்றும். இங்குப் பெரியோர்கள் பரிஹாரமுணர்த்தும் வழி கேண்மின்;—* வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே * என்கிறபடியே ஸ்ரீராமபிரான் ஸாக்ஷாத் நாராயணாவதாரமாயிருக்கச் செய்தேயும் * ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணமுபாகமத் * இத்யாதிப்படியே நாராயணனைத் தொழுதது ஸ்ரீரங்கநாதனை அநுதினமும் திருவாராதனம் செய்துகொண்டிருந்தது முதலியனபோல் இவையும் அவதாரங்களுக்குப் பொருந்தியவைகளே யென்று.

அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீ

# யதிராஜவிம்சதியின் தனியன்.

ய: ஸ்துதிம் யதிபதிப்ரஸாதநீம் வ்யாஜஹார யதிராஜவிம்சதிம்,
தம் ப்ரபந்நஜநசாதகாம்புதம் நௌமி ஸௌம்யவரயோகிபுங்கவம்.

பதவுரை.

| | | | |
|---|---|---|---|
| ய: | யாவரொரு மணவாள மாமுனிகள் | வ்யாஜஹார | அருளிச் செய்தாரோ, |
| யதிபதிப்ரஸாதநீம் | எம்பெருமானாருடைய திருவுள்ளத்தை உகப்பிக்குமதான | ப்ரபந்நஜநசாதக அம்புதம் | ப்ரபந்நர்களாகிற சாதக பக்ஷிகளுக்குக் கார்முகில் போன்றவரான |
| யதிராஜவிம்சதிம் | யதிராஜவிம்சதியென்கிற | தம் ஸௌம்யவர யோகிபுங்கவம் | அந்த மணவாளமாமுனிகளை |
| ஸ்துதிம் | தோத்திரத்தை | நௌமி | துதிக்கின்றேன். |

எம்பெருமானார் திருவுள்ளத்தையுகப்பிக்கப் பாங்கான யதிராஜவிம்சதி யென்னும் ஸ்துதியை யருளிச் செய்தவரும் ப்ரபந்நர்களுக்கு வேறோரிடம் தேடிப்போக வேண்டாதபடி ஸகலார்த்தங்களையும் வர்ஷித்தருள்பவருமான மணவாளமாமுனிகளை வாழ்த்துவேனென்கை.

ஸ்வாமி இந்த ஸ்துதியை யருளிச் செய்தது க்ருஹஸ்தாச்ரமத்திலேயாதலால் இங்கு 'ஸௌம்யவரயோகிபுங்கவம்' என்று கூறத் தகுதியுண்டோ? அப்போது யோகிபுங்கவத்வாவஸ்தையில்லையே என்று சங்கிக்கவேண்டா. பிந்திய கோலத்தை முன்னே உபலக்ஷித்துக் கூறுவது முண்டு. இத்தனியன் அவதரித்தது உத்தமாச்ரமத்திலே யாதலால் குறையொன்றுமில்லை யென்க.

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ

ஜீயர் திருவடிகளே சரணம்.

## மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

# யதிராஜவிம்சதி.

(ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையோடு கூடியது.)

ஸ்ரீமாதவாங்க்ரிஜலஜத்வயநித்யஸேவா ப்ரேமாவிலாசயபராங்குசபாதபக்தம்,
காமாதிதோஷஹரமாத்மபதாச்ரிதாநாம் ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்நா.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமாதவ அங்க்ரி ஜலஜத்வய நித்ய ஸேவா ப்ரேம ஆவில ஆசய பராங்குச பாத பக்தம். | அழகுபொலிந்த எம்பெருமானது திருவடித்தாமரையிணைகளை நிச்சலும் தொழுகையிலுண்டான ப்ரேமத்தினால் கலங்கின திருவுள்ளமுடையரான நம்மாழ்வாருடைய திருவடிகளிலே அன்பு பூண்டவரும், | ஆத்ம பத ஆச்ரிதாநாம் | தமது திருவடிகளைப் பணிந்தவர்களுக்கு |
| | | காமாதி தோஷ ஹரம் | காமம் முதலிய குற்றங்களைக் களைந்தொழிப்பவரும் |
| | | யதிபதிம் | யதிகளுக்குத் தலைவருமான |
| | | ராமாநுஜம் | எம்பெருமானாரை |
| | | மூர்த்நா ப்ரணமாமி | தலையால் வணங்குகின்றேன். |

*** நம்மாழ்வார் திருவடிகளில் அன்பு பூண்டவரும், தமது திருவடிகளைப் பணிந்தவர்களது குற்றங்களை நீக்கி நற்றங்களை வளர்ப்பவருமான எம்பெருமானாரைத் தொழுகின்றேனென்றவாறு.

எம்பெருமானார்க்கு அதிசயாவஹமான வைபவங்கள் பல்லாயிரமிருந்தாலும் ஆழ்வார் திருவடிகளில் ப்ராவண்யத்தையே அவர் தமக்குப்பெரியவைபவமாக அத்யவஸித்திருந்தாராதலால் அவருடைய அத்யவஸாயத்திற்குப் பொருந்த "பராங்குச பாதபக்தம்" என்றார். அமுதனாரும் "மாறனடி பணிந்துய்ந்தவன்" என்றே தொடங்கினர். "தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்தவிதத்தாய் இராமாநுசன்" என்ற திருவாய்மொழித் தனியனாலும் "பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ர வாக்யங்களொருங்க விடுவர்" என்ற ஆசார்ய ஹ்ருதய சூர்ணையாலும் ஸ்வாமிக்கு ஆழ்வார்பக்கலிலிருந்த ப்ராவண்யாதிசயம் அறியற்பாலது.

ஸ்வாமியின் ப்ராவண்யத்திற்குப் பாத்ரபூதரான நம்மாழ்வார் எப்படிப்பட்டவரென்னில் ஸ்ரீமாதவாங்க்ரிஜலஜத்வய நித்யஸேவாப்ரேமாவிலாசயர். எம்பெருமானுடைய திருவடிகளிலே காதலடியாகக் கலங்கின திருவுள்ளமுடையவர் என்கை. 'தெளிந்த சிந்தையர்' என்று சொல்லிப் புகழ்வது ப்ராப்தமாயிருக்க, [ஆவிலாசய என்று] கலங்கின திருவுள்ளமுடையவர் என்று விசேஷணமிடுவது பெருமைக்கு ஒக்குமோவென்னில்; கர்மநிபந்தனமான கலக்கம் ஹேயமேயல்லது ப்ரேம நிபந்தனமான கலக்கம் ஹேயமன்று, மிகவும் உபாதேயம், உத்தேச்யம என்கிற சாஸ்த்ரார்த்தம் இங்கு அறியத்தக்கது. ப்ரேம நிபந்தனமான கலக்கத்தினால் செய்யும் காரியம் ஏதென்னில்; மடலெடுக்கவொருப்படுகை, மங்களாசாஸனத்திலேயூன்றுகை, நோன்பு நோற்கை முதலியனவாம். இவை ப்ரேம பரவசர்க்கு அவத்யமன்று. "ஜ்ஞாந விபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்" என்கிற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்தியும் அதன் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளும் இங்கே அநுஸந்தேயம். ஸித்தோபாயமான அவன் பண்ணின க்ருஷிபலமாய் விளைவது இக்கலக்கமென்றுகொள்ளவேணும்.

பராங்குசரென்கிற திருநாமத்திற்கு இரண்டு வகையான வ்யுத்பத்தியுண்டு. பரர்களுக்கு அங்குசமாயிருப்பவரென்றும், பரனுக்கு அங்குசமாயிருப்பவரென்றும், (அதாவது—) பரர்களாகிறார்—எம்பெருமானுக்கு குணமில்லை விக்ரஹமில்லை விபூதியில்லையென்னும புறச்சமயிகள்; அவர்களுக்குத் தம்முடைய திவ்யஸூக்திகளாலே அங்குசமாயிருப்பவர்—அவர்களது செருக்கு மொழிகளை யடக்குபவர் என்கை முதல் வ்யுத்பத்தியின் கருத்து. இனி, பராத்பரனை எம்பெருமானுக்கு அங்குசம் போன்றவரென்கிற இரண்டாவது வ்யுத்பத்தியின்கருத்தாவது— "வலக்கை யாழி யிடக்கைச் சங்கமிவையுடை மால் வண்ணனை, மலக்கு நாவுடையேற்கு" [திருவாய்மொழி 6-4-9] என்று ஆழ்வார் தாமே யருளிச்செய்தபடி எம்பெருமானைத் தம் வசப்படுத்தி நடத்திக்கொள்ளவல்லவரென்கை.

[காமாதிதோஷஹரம்] இங்கு ஆதி சப்தத்தாலே க்ரோதம் லோபம் மோஹம் மதம் மாத்ஸர்யம் அஜ்ஞாநம் அஸூயை இவை கொள்ளத்தக்கன. "காமாதிஹரம்" என்னாமல் 'காமாதி தோஷஹரம்' என்கையாலே காமம் முதலானவை நியமேந தோஷமல்லவென்றும் குணகோடியிலே கொள்ளத்தக்க காமாதிகளுமுண்டென்றும் தெரிவிக்கப்பட்டதாம். பகவத் விஷயத்திலேயுண்டாகிற காமமோஹாதிகளும் பகவத்பாகவத விரோதிகள் திறத்திலே யுண்டாகிற க்ரோத மாத்ஸர்யாதிகளும் குணமேயல்லது தோஷமன்றே. அவை விலக்கத்தக்கவையல்லவே. தோஷமான காமாதிகளே விலக்கத்தக்கவையாதலால் தோஷஹரம் என்றது.

வணங்குவது தலையாலே யென்பது தெரிந்திருக்கச் செய்தேயும் 'மூர்த்நா ப்ரணமாமி' என்னவேணுமோவென்னில்; தலை படைத்த ப்ரயோஜனம் பெறுவோமென்று காட்டினபடி. * வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க * என்றாப் போலே. ... ... (1)

**ஸ்ரீரங்கராஜசரணாம்புஜராஜஹம்ஸம் ஸ்ரீமத்பராங்குசபதாம்புஜப்ருங்கராஜம்,**
**ஸ்ரீபட்டநாதபரகாலமுகாப்ஜமித்ரம் ஸ்ரீவத்ஸசிஹ்நசரணம் யதிராஜமீடே. (2)**

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீரங்கராஜ சரண அம்புஜ ராஜ ஹம்ஸம் | ஸ்ரீரங்கநாதனுடைய திருவடியாகிற தாமரையிலே ராஜஹம்ஸம் போன்று ஊன்றியிருப்பவரும் | ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜ ப்ருங்க ராஜம் | நம்மாழ்வாருடைய அழகிய திருவடித் தாமரைகளிலே வண்டுபோல் அமர்ந்திருப்பவரும் |

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ பட்டநாத பரகால முக அப்ஜ மித்ரம் | பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் முதலான ஆழ்வார்களாகிற தாமரைப் பூக்களை விகாஸப்படுத்துவதில் ஸூர்யன் போன்றவரும் | ஸ்ரீவத்ஸ சிஹ்ந சரணம் | கூரத்தாழ்வானுக்குச் சிஞ்சமாயிருப்பவரும் (அல்லது) கூரத்தாழ்வானைத் திருவடிகளாக வுடையவருமான |
| | | யதிராஜம் ஈடே | எம்பெருமானாரை துதிக்கின்றேன். |

கீழ் ச்லோகத்தில், தலைபடைத்த ப்ரயோஜநம் பெறுமாறு எம்பெருமானாரைத் தலையால் வணங்குவதாக அருளிச் செய்தார். இந்த ச்லோகத்தில் வாக்கு ஸபலமாம்படி அவரைத் துதிப்பதாக வருளிச் செய்கிறார். அன்னமாகவும் வண்டாகவும் ஸூர்யனாகவும் ஸ்வாமியை நிரூபித்துப் பேசுகிறாரிதில்.

ஆழ்வார்கள் தமது திவ்யப்ரபந்தங்களில் அன்னங்களையும் வண்டுகளையும் தூதுவிடுவதாக அருளிச் செய்திருப்பதுண்டே; அங்கு எம்பெருமானார் போல்வாரான மஹாசார்யர்களையே தூதுவிடுவதாக உள்ளுறை பொருளாகையாலே அதைத் திருவுள்ளம்பற்றி இங்கு ஸ்வாமியை அன்னமாகவும் வண்டாகவுமருளிச் செய்வது மிக்க பொருத்தமுடைத்து.

[ஸ்ரீரங்கராஜசரணாம்புஜராஜஹம்ஸம்] எம்பெருமானார் தாம் * தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப் பூண்டவன்பாளன் * என்கிறபடியே தேவப்பெருமாள் திருவடிவாரத்திலே பேரன்பு பூண்டவராயினும், நம்பெருமாள் விசேஷ கடாக்ஷம் செய்தருளி * "யாவச் சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ" என்று நியமித்துத் தம் திருவடிவாரத்தின் கீழேயே பொருந்தவைத்துக் கொண்டருளினபடியாலே இங்ஙனே யருளிச் செய்கிறார். ராஜஹம்ஸமானது தாமரைப்பூவைத் தனக்கு வாஸஸ்தானமாகக் கொள்வதுபோல ஸ்வாமி தாம் நம்பெருமாள் திருவடித்தாமரையையே நித்யவாஸஸ்தானமாகக் கொண்டிருந்தாரென்று காட்டினபடி.

ஹம்ஸத்திற்குள்ள தன்மைகளெல்லாம் ஸ்வாமி பக்கலிலேயும் காணத்தகும். எங்ஙனேயென்னில்; நீரையும் பாலையும் கலந்து வைத்தால் அவற்றைப் பிரிக்க வல்லமையுடையது ஹம்ஸம்; அதுபோல, ஸாரங்களும் அஸாரங்களும் கலந்தகட்டியாயிருக்கிற சாஸ்த்ரங்களிலே ஸாராஸாரங்களைப் பகுத்தறிய வல்லரென்று கொள்க.

* அன்னமதாயிருந்து அங்கு அறநூலுரைத்த * என்றும் * அன்னமாய் நூல்பயந்தான் * என்றுஞ் சொல்லுகிறபடியே வேதசாஸ்திரங்களை வெளியிட்டது பகவதவதாரமான ஹம்ஸம். அதுபோலே சிஷ்யர்களைக் குறித்து சாஸ்த்ரங்களையுபதேசித்தருளவல்லவரென்று கொள்க.

"ந பத்நாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்தமாம்பஸி" [ஹம்ஸமானது சேற்று நிலத்தில் ஒரு போதும் மனம் பொருந்தியிருக்கமாட்டாது] என்கிறபடியே ஹம்ஸம் சேற்றில் பொருந்தாது. அதுபோல, * மாறன் விண்ணப்பஞ் செய்த சொல்லார் தொடையலிந்நூறும் வல்லார்—பிறப்பாம் பொல்லாவருவினை மாய வன் சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே அழுந்தார் * (திருவிருத்தம் 100, என்கிறபடியே ஸம்ஸாரமாகிற சேற்றுநிலத்திலே பொருந்தமாட்டாமல் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரானமை விவக்ஷிதம்.

* பெடையோடன்னம் பெய்வளையார் தம் பின்சென்று நடையோடியலி * (பெரியதிருமொழி 6-5-5) என்று ஹம்ஸமானது ஸ்த்ரீகளின் நடையழகைக்கண்டு தானும் அப்படி நடக்கைக்காகப் பின் செல்லுமென்று சொல்லப்படுகிறது; அதுபோல ஸ்வாமியும் * அன்னநடையவணங்கான பிராட்டியினுடைய நடையைப் பின்செல்லுவர். அதாவதென்னென்னில், பிராட்டியின் நடையாவது அவளுடைய நடத்தை; சேதநர்களைக் குறித்து எம்பெருமான் திறத்தில் புருஷகாரம் செய்வதே பிராட்டியின் ப்ரதாநக்ருத்யமாகும். அதை ஸ்வாமி அநுஸரிக்கையாவது தாமும் அப்படி புருஷகாரக்ருத்யத்திலே ஊன்றியிருக்கையாம். பிராட்டி புருஷகாரம் செய்யாவிடில் எம்பெருமான் முக்திஸாம்ராஜ்யமளிக்க மாட்டாதது போலவே ஸ்வாமி புருஷகாரம் செய்யாவிடினும் அதனையளிக்கமாட்டானென்பதை * "தத்தே ரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேசகாங்க்ஷீ" என்கிற ஸ்ரீஸூக்தியினால் வேதாந்தவாசிரியர் வெளியிட்டருளினர். இங்ஙனே மற்றும் பல பொருத்தங்களுங் காண்க.

[ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜப்ருங்கராஜம்] கீழ்ச்லோகத்தில், 'பராங்குச பாதபக்தம்' என்றது ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யத்தைச் சொன்னபடி; இங்கு குணப்ரயுக்தமாகவுமுண்

டான தாஸ்யத்தைச் சொல்லுகிறது. தாமரைப்பூவிலே மதுவிருப்பதுகண்டு வண்டு மொய்க்குமாபோலே, ஸ்வாமி தாமும் ஆழ்வார் திருவடிகளிலே அம்ருதப்ராபகத்வமாகிற குணவிசேஷங்கண்டு ஈடுபட்டிருப்பரென்கிறது.

*வரிவண்டு தேதெனவென்றிசை பாடும்* என்றும், *யாழினிசை வண்டினங்கள் ஆளம்வைக்கும்* என்றும், *வண்டினங்கள் காமரங்களிசை பாடும்* என்றும் சொல்லுகிறபடியே எப்போதும் முரல்வதே வண்டுகளுக்குப் பணி. அதுபோல அநவரதமும் எம்மானைச் சொல்லிப் பாடுவதையே போதுபோக்காகக்கொண்டு *யாழினிசை வேதத்தியலான திருவாய்மொழியைப் பாடிக் களிப்பவரென்கிற தன்மையும் இங்கு விவக்ஷிதம். வண்டு சஞ்சரீகமென்று பேர் பெற்றிருக்கும். ஓரிடத்தில் தங்கியிராது; மதுவுள்ளவிடமெங்கும் பறந்து திரியும். அதுபோல *கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லையென்ற திருப்பதிகள் தோறும் மண்டி, பதியே பரவித் தொழுந்தொண்டராய்த் திரியுந் தன்மையும் விவக்ஷிதம்.

“பராங்குச பதாம்புஜ” என்றவிதில் மற்றொரு பொருளும் தொனிக்கும். பதமென்று சொற்களுக்கும் வாசகமாகையாலே நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளாகிற தாமரைப் பூவிலே படிந்து அங்குப் பெருகுகின்ற பகவத்குண மதுவைப் பருகுவதிலே வண்டு போன்றவரென்கை. *தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்* என்றதையும் இங்குச் சேர்த்து அநுஸந்திப்பது.

[ஸ்ரீபட்டநாத பரகாலமுகாப்ஜமித்ரம்] பெரியாழ்வாரையும் திருமங்கையாழ்வாரையுமெடுத்து, இவர்களாகிற தாமரைப்பூவுக்கு ஸூர்யன்போல விகாஸகர் என்றதற்குக் கருத்தென்னென்னில்; துளவத்தொண்டுசெய்தும் பரதத்வஸ்தாபனம் பண்ணியும் போந்த பெரியாழ்வாரைப்போலேஸ்வாமி தாமும் செய்தருள்பவராதலால் இதனால் பெரியாழ்வார்க்கு முகவிகாஸமுண்டாகும். ப்ராகார கோபுர மண்டபாதி நிர்மாணங்கள் செய்தும் திவ்யதேசங்களையுகந்தும் போந்த திருமங்கையாழ்வாரைப்போலே தாமும் செய்தருள்பவராதலால் இதனால் அவர்க்கு முகவிகாஸமுண்டாகும். அவ்வாழ்வார்கள் சிறிது காட்டின வழியைப் பின்பற்றி அவர்களுடைய அனுஷ்டானங்களைப் பெருக்க நடத்தியருள்பவரென்றதாயிற்று.

முகாப்ஜமித்ரம் என்றவிடத்தில் (முக) என்பதற்கு இரண்டுவகையாக நிர்வாஹமுண்டு; பெரியாழ்வாரென்ன, கலியனென்ன இவர்களுடைய திருமுகமண்டலமாகிற கமலத்திற்குக் கதிரவன் போன்றவர் என்றும், அவ்விருவரை ப்ரமுகர்களாகவுடைய ஆழ்வார்களாகிற தாமரைக்கு ஸூர்யன் போன்றவர் என்றும். பிந்தின நிர்வாஹத்தால் ஆழ்வார்களெல்லாருடையவும் அனுஷ்டானங்களைப் பின்பற்றி நடந்து அவர்களனைவரையும் உகப்பிக்குமவர் என்பது தேறும்.

[ஸ்ரீவத்ஸசிஹ்நசரணம்] ஆழ்வானொருவர்க்கு மாத்திரமேயோ ஸ்வாமி தஞ்சம்; எம்பார் ஆண்டான் முதலான சிஷ்யவர்க்கங்களுக்கெல்லாம் தஞ்சமன்றோ? என்று ஆக்ஷேபித்தல் வேண்டா; *மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாங்குழியைக் கடக்கும் நங்கூரத்தாழ்வான்* என்னப் பெற்ற சிறப்பு ஆழ்வானுக்கு அஸாதாரணமாதலால் அவனைச் சிறப்பித்துக் கூறியது ஏற்கும். “ஸ்ரீவத்ஸசிஹ்நசரணம்” என்பதை பஹுவ்ரீஹியாகக்கொண்டு நிர்வஹிப்பதுமுண்டு; ஆழ்வானைத் திருவடிநிலையாகவுடையவரென்றபடி. இந்த வ்யபதேசம் முதலியாண்டானுக்குப் போலவே ஆழ்வானுக்கும் ஸம்ப்ரதிபந்நம். ஆக இப்படிப்பட்ட எம்பெருமானாரை வாயார வாழ்த்துகிறேனென்றாராயிற்று. (2)

**வாசா யதீந்த்ர ! மநஸா வபுஷா ச யுஷ்மத்பாதாரவிந்தயுகளம் பஜதாம் குரூணாம்,**
**கூராதிநாத குருகேசமுகாத்யபும்ஸாம் பாதாநுசிந்தநபரஸ் ஸததம் பவேயம். (3)**

| | | | |
|---|---|---|---|
| ஹே யதீந்த்ர ! | எம்பெருமானாரே ! | கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் | கூரத்தாழ்வான் திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலான தலைவர்களினுடைய |
| வாசா மநஸா வபுஷா ச | மநோவாக்காயங்களாகிற த்ரிகரணங்களாலும் | | |
| யுஷ்மத்பாதாரவிந்த யுகளம் | தேவரீருடைய திருவடித் தாமரையிணையை | பாத அநுசிந்தந பர: | திருவடிகளையே சிந்திப்பவனாக, |
| பஜதாம் | ஸேவிப்பவர்களும் | | |
| குரூணாம் | ஆசார்யபீடத்தை யலங்கரிப்பவர்களுமான | ஸததம் பவேயம் | எப்போதும் இருக்கக்கடவேன். |

* * *—இராமாநுச நூற்றந்தாதியில் * தன்னையுற்றாட் செய்யுந்தன்மையினோர் *என்கிற பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி இந்த ச்லோகமருளிச் செய்கிறபடி. எம்பெருமானாருடைய திருவடிகளையே ஸாக்ஷாத்தாகப் பணிவதற்காட்டிலும் அத்திருவடிகளைப்பணிந்தாருடையதிருவடிகளைப் பணிவதானது மிகச்சிறந்ததென்கிற பரமார்த்தம் அப்பாசுரத்தில் தேர்ந்த பொருள். அதுவே இங்கு ப்ரார்த்திக்கப்படுகிறது. எம்பெருமானை நேராகப்பணிவதிற் காட்டிலும்*எந்தை பிரான் தனக்கு அடியாரடியார் தம்மடியாரடியார்தமக்கு அடியாரடியார்தம் அடியாரடியோங்களே * என்கிறபடி தத்தாஸதாஸர்களைப் பணிவதே சிறக்குமாபோலே ஆசார்யவிஷயத்திலும் அதுவே சாஸ்த்ரார்த்தமாகக் குறையில்லை.

[மநஸா வாசா வபுஷா ச பஜதாம்] *சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்தேவபிரானையே தந்தைதாயென்றடைந்த * என்னுமாபோலே மனமொழி மெய்களாகிற முக்கரணங்களாலும் ஆசார்யரான எம்பெருமானாரையே பணிபவர்களாயிற்று கூரத்தாழ்வான் திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலானோர். மனத்தினால் பஜிப்பதாவது திருக்கல்யாண குணங்களைச் சிந்தை செய்வது, திவ்யமங்கள விக்ரஹத்தை த்யானிப்பது முதலியன. வாக்கினால் பஜிப்பதாவது ஸ்துதிகளைச் சொல்லி யேத்துவது. காயத்தினால் பஜிப்பதாவது தேஹபரிச்ரமத்தினால் செய்யக்கூடிய பணிவிடைகளைச் செய்வது. ஆக இவ்வகைகளாலே யீடுபட்டிருக்கின்ற ஆழ்வான் போல்வாருடைய திருவடிகளையே அடியேன் இடைவிடாது சிந்திப்பேனும்படி அருள் செய்யவேணுமென்றாராயிற்று. அவர்களைச் சிந்திப்பதனால் அவர்கள் அக்காலத்தில் செய்த கரணத்ரய கைங்கரியங்களும் தாம் செய்தபடியாகுமென்று திருவுள்ளம்.

இந்த ச்லோகத்தில் "யுஷ்மத் பாதாரவிந்த" என்றவிடத்தில் வியாகரணப் பொருத்தம் பற்றிச் சிலர் சங்கிப்பதுண்டு; யதீந்த்ர! என்று ஏகவசநாந்தமான ஸம்போதநமிருப்பதற்குச் சேர "த்வத் பாதாரவிந்த" என்றன்றோ அருளிச் செய்திருக்கவேண்டும்; யுஷ்மத்பாதாரவிந்த" என்றதற்குச் சேர பஹுவசநாந்தமான ஸம்போதநமில்லையே யென்று சங்கிப்பர்கள். இதற்குப் பெரியார் பணிக்கும் ஸமாதானமாவது—பட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்தின் முடிவான ச்லோகத்தில் "யுஷ்மத்பாதஸரோருஹாந்தரரஜஸ் ஸ்யாம த்வமம்பா பிதா" என்றருளிச் செய்திருக்கையாலே அந்த ப்ரயோகத்தை யடியொற்றின ப்ரயோகமிது—என்று. அவர் தாமே "பவதீஸம்பந்தத்ருஷ்ட்யா" என்றருளிச் செய்ததை யடியொற்றி தேசிகன் "பவதீபாதலாக்ஷாரஸாங்கம்" என்று ப்ரயோகித்ததுபோல. மஹாசார்யர்களின் திருவாக்காகிற இலக்கியமே இலக்கணமா மென்க. (3)

நித்யம் யதீந்த்ர!தவ திவ்யவபுஸ்ஸ்ம்ருதௌ மே ஸக்தம் மநோ பவது வாக்குணகீர்த்தநேஸௌ,
க்ருத்யம் ச தாஸ்யகரணம் து கரத்வயஸ்ய வ்ருத்த்யந்தரேஸ்து விமுகம் கரணத்ரயம் ச. (4)

| | | | |
|---|---|---|---|
| யதீந்த்ர! | எம்பெருமானாரே! | கரத்வயஸ்ய | இரண்டு கைகளினுடைய |
| மே மந: | அடியேனுடைய நெஞ்சானது | க்ருத்யம் | செயலானது |
| நித்யம் | எப்போதும் | தவ தாஸ்ய கரணம் பவது | தேவரீருக்கு அடிமை செய்வதுதானேயாகக் கடவது; |
| தவ திவ்யவபுஸ்ஸ்ம்ருதௌ | தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹ த்யானத்திலேயே | | (இவ்வாறாக) |
| ஸக்தம் பவது | ஆஸக்தமாகக் கடவது; | கரணத்ரயம் ச | மநோவாக்காயங்களாகிற மூன்று கரணங்களும் |
| அஸௌ மே வாக் | எனது இந்த வாக்கானது | | |
| தவ குண கீர்த்தநே ஸக்தா பவது | தேவரீருடைய திருக்குணங்களைப் பேசுவதிலேயே ஊன்றியிருக்கக் கடவது; | வ்ருத்த்யந்தரே விமுகம் அஸ்து | இதர வியாபாரங்களை அடியோடு நோக்காதிருக்கக் கடவன. |

* * *—தம்முடைய மனமொழிமெய்களாகிற மூன்று கரணங்களும் எம்பெருமானார் திறத்திலேயே ஊன்றியிருக்கவேணுமென்று ஆசம்ஸிக்கிறார். எம்பெருமானாருடைய திவ்யமங்கள விக்ரஹ ஸௌந்தர்ய சிந்தனத்திலேயே நெஞ்சு ஈடுபட்டிருக்கவேணும். அவருடைய திருக்குணங்களை வாழ்த்துவதிலேயே வாக்கு ஈடுபட்டிருக்கவேணும்; அவர்க்கு அடிமை செய்வதிலேயே கைகள் ஊற்றமுற்றிருக்கவேணுமென்று தனித்தனியே யருளிச்செய்து, இவை தவிர வேறொன்றிலும் ஒருகரணமும் ஒருப்பட்டிருக்கலாகாதென்கிற ஆசம்ஸையை நான்காவது பாதத்தாலேயருளிச் செய்கிறார்.

"பற்பமெனத்திகழ் பைங்கழலுன்றன் பல்லவமே விரலும்
பாவனமாகிய பைந்துவராடை பதிந்த மருங்கழகும்
முப்புரிநூலொடு முன்கையிலேந்திய முக்கோல் தன்னழகும்
முன்னவர்தந்திடு மொழிகள்நிறைந்திடு முறுவல் நிலாவழகும்
கற்பகமேவிழி கருணைபொழிந்திடு கமலக் கண்ணழகும்
காரிசுதன்கழல் சூடியமுடியும் கனநற்சிகை முடியும்
எப்பொழுதும் யெதிராசன்வடிவழகென்னிதயத்துளதால்
இல்லை யெனக் கெதிரில்லை யெனக்கெதிரில்லை யெனக் கெதிரே."

என்று எம்பார் அருளிச்செய்த பாசுரம் இங்கு முதல் பாதத்திற்குச் சேர அநுஸந்திக்கத் தகும். ஸ்வாமி தாமும் ஆர்த்திப் பிரபந்தத்திலே "சீராருமெதிராசர் திருவடிகள்வாழி திருவரையில் சாத்திய செந்துவராடை வாழி" என்று தொடங்கியருளிச் செய்துள்ள பாசுரமும் நோக்குக. இப்படிப்பட்ட பலபல பாசுரங்களின்சிந்தனையே சிந்தைக்கு ஆகவேணுமென்றாராயிற்று. பீதகவாடைப்பிரானார் தோளிணைமேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடையராய் ஸேவை தந்தருளினாலும் அந்தத் திருவுருவத்தி லீடுபடுகையின்றிக்கே "காஷாயசோபி கம நீயசிகா நிவேசம் தண்டத்ரயோஜ்ஜ்வலகரம்விமலோபவீதம்" என்னும்படியான இந்தத் திருமேனியே என்னுடைய மாநஸ ஸாக்ஷாத்காரத்திற்கு இலக்காக வேணுமென்று அருளிச்செய்கிறபடி.

[அஸௌ மே வாக் தவ குணகீர்த்தநே ஸக்தா பவது] கண்ட விஷயங்களிலும் பரந்து செல்லாநின்ற இந்த என்னுடைய வாக்கானது தேவரீருடைய திருக்குணங்களைப் பேசுவதிலேயே ஊன்றியிருக்கக்கடவது. குணசப்தமானது ஸாமாந்யமாக தேஹகுணம் ஆத்மகுணம் என்ற இரண்டு வகுப்பிலுள்ள குணங்களைச் சொல்லக் கடவதாகிலும் தேஹகுணம் முதல் பாதத்திலே உக்தப்ராயமாகையாலே இங்கு ஆத்மகுணமே விவக்ஷிதமாக வடுக்கும். "தயாக்ஷாந்த்யௌதரர்யம்ரதிமஸமதா......" (வரதராஜஸ்தவம்) இத்யாதிகளிலே சொல்லப்பட்ட ஆத்மகுணங்களில் தயையே முற்பட்டிராநின்றது. மற்ற குணங்களெல்லாம் ஒரு தட்டாயும் தயாகுண மொன்றுமே ஒரு தட்டாயுமன்றோ எம்பெருமானார் பக்கலிலே விளங்குவது. "மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி" என்றுகாருணிகனைகப் புகழப்பட்ட எம்பெருமானுடைய தயையிற்காட்டிலும் ஆழ்வாருடைய திருவருள் சிறந்து தோற்றினபடியாலே "அருள் கண்டீரிவ்வுலகினில் மிக்கதே" என்று அவருடைய தயையைக் கனக்கப் பேசினார் மதுரகவிகள். அவர்க்குப் பிறகு எம்பெருமானார் திருவவதரித்து "ஓராண்வழியாயுபதேசித்தார் முன்னோர், ஏராரெதிராசரின்னருளால்—பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாமாரியர்காள் கூறுமென்று பேசி வரம்பறுத்தார் பின்" (உபதேசரத்தினமாலை.) என்று கொண்டாடவேண்டும்படியான ஒப்புயர்வற்ற கருணையை உலகமெங்கும் போற்றக் காட்டியருளினபடியாலே இவருடைய அருளே அருள் என்று யாவரும் ஒருமிடறாகப் பேச வேண்டிற்று. அப்படிப்பட்ட திருவருளையே என் வாக்கு இடைவிடாது பேசிக்கொண்டிருக்க வேணுமென்றாராயிற்று. இங்கு குணசப்தத்தாலே மற்ற குணங்களையும் விவக்ஷிக்கக் குறையில்லையாகிலும் இந்த தயாகுணமானது மற்றொரு குணத்திலும் செல்ல வொட்டாதாகையாலே தயாகுணமொன்றிலேயே சப்தத்தை ஸங்கோசிப்பிக்க ப்ராப்தம். வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகுண கீர்த்தநமும் விவக்ஷிதமாகக் குறையில்லை.

மூன்றாவது பாதத்தில் "தாஸ்யகரணே து" என்று சிலருடைய பாடம் வழங்கிவந்தாலும் பெரியார் பரிக்ரஹித்த பாடம் அதுவன்று; 'தாஸ்யகரணம்' என்பதே சுத்த பாடம். பூருவர்களின் வியாக்கியானங்களிலும் இப்பாடமேயுள்ளது. இங்கு ஸப்தமி பொருந்துவதற்கு ஔசித்யமுமில்லை. கரத்வயத்தினுடைய க்ருத்யமானது தாஸ்யகரணத்திற் காட்டில் வேறுபட்டதல்லாமையாலே ஸமாநாதிகரண்யமாகவே நிர்தேசிக்கவேணும். வ்யதிகரண நிர்தேசம் உசிதமன்று என்று தெரிந்துகொள்வது. முன்னடியிலுள்ள பவது என்கிற க்ரியையையோ, பின்னடியிலுள்ள அஸ்து என்கிற க்ரியையையோ மூன்றாமடியில் அநுஷங்கித்துக் கொள்வது. [கரத்வயஸ்ய க்ருத்யம் தவ தாஸ்யகரணம் பவது] அடியேனுடைய இரண்டு கைகளுக்கும் பணி தேவரீருக்குக் குற்றேவல் செய்யுமதுவேயாகக் கடவது என்கை.

இங்கே ஒரு சிறிய சங்கை. முன்னிரண்டு பாதங்களில் பிரார்த்திக்கப்பட்ட திவ்ய மங்கள விக்ரஹ சிந்தனமும் குணகீர்த்தநமும் ஸ்வாமிக்கு இப்போது ப்ராப்தமாகலாம்; மூன்றாவ

தாக ப்ரார்த்திக்கப்படுகிற காயிககைங்கர்யம் எங்ஙனே ப்ராப்தமாகும்? மிகவும் கால வ்யவதான முண்டேயென்று. விபவாவதாரம் இப்போதில்லையாயினும் அர்ச்சையுள்ளதாகையாலே அங்கே காயிககைங்கர்யம் செய்யக்குறையில்லாமையாலே இந்த ஆசம்ஸையும் குறையற்றதென்று கொள்க.

அந்வயமுகேந சொல்லுமதுதன்னையே வ்யதிரேகமுகேநவும் சொல்லுகை த்ருடீகரணார்த்தமாகையாலே [கரணத்ரயஞ்ச வ்ருத்த்யந்தரே விமுகமஸ்து] என்று பின்னையும் அருளிச்செய்தாராயிற்று. (ச)

அஷ்டாக்ஷராக்யமநுராஜபதத்ரயார்த்தநிஷ்டாம் மமாத்ர விதராத்ய யதீந்த்ர நாத!
சிஷ்டாக்ரகண்யஜநஸேவ்யபவத்பதாப்ஜே ஹ்ருஷ்டாஸ்து நித்யமநுபூய மமாஸ்யபுத்தி:.(5)

| | | | |
|---|---|---|---|
| நாத யதீந்த்ர! | எமது குலத் தலைவரான எம்பெருமானரே! | அத்ய விதர | ருசி பிறந்தவிப்போதே ப்ரஸாதித்தருளவேணும். |
| அஷ்டாக்ஷராக்ய மநுராஜ- | திருவஷ்டாக்ஷரமென்கிற பெரிய திருமந்திரத்திலுள்ள | அஸ்ய மம புத்தி: | நீசனேன் நிறையொன்றுமிலேனை யென்னுடைய புத்தியானது |
| பதத்ரய- | ப்ரணவ, நம: பத, நாராயணுய பதங்களில் தேறின | சிஷ்டாக்ரகண்ய ஜநஸேவ்ய பவத்பதாப்ஜே | சிஷ்டர்களில் தலைவரான ஆழ்வான் ஆண்டான் போல்வார் தொழத்தகுந்த தேவரீருடைய திருவடித் தாமரைகளை |
| அர்த்த- | அநந்யார்ஹ சேஷத்வம் அநந்ய சரணத்வம் அநந்ய போக்யத்வ மென்கிற அர்த்தங்களில் | | |
| நிஷ்டாம் | திடமானவுறுதியை | நித்யம் அநுபூய | இடைவீடின்றி யநுபவித்து |
| மம | அடியேனுக்கு | ஹ்ருஷ்டா அஸ்து | (அவ்வநுபவத்தின் பலனை கைங்கர்யத்தையும்பெற்று) மகிழ்ந்திருக்கக் கடவது. |
| அத்ர | இவ்விருள்தரு மா ஞாலத்திலேயே | | |

கீழ் ச்லோகத்தில் முடிவாகச் செய்தருளினது கைங்கர்ய ப்ரார்த்தனையாகையாலே அதுதான் திருமந்த்ரத்திலே தேறுமதாகையாலே அத்திருமந்த்ரம் ஸ்ம்ருதிவிஷயமாகி அதுதனனிற்சொன்ன அர்த்தங்களில் நிஷ்டையுண்டாவதும் ஆசார்யன் திருவருளாலன்றி வாய்க்கமாட்டாதாகையாலே அதனையும் தேவரீரே அருள்புரிய வேணுமென்று ப்ரார்த்திக்கிறார் இந்த ச்லோகத்தாலே.

மநு என்றும் மந்த்ரமென்றும் பர்யாயம். மநுராஜமென்றது மந்த்ரராஜமென்றபடி. சாஸ்த்ரங்களில் பெரிய திருமந்த்ரத்தை மந்த்ரராஜமென்றும் த்வயத்தை மந்த்ரரத்நமென்றும் வழங்குவது காண்க.

திருமந்த்ரமானது ப்ரணவம், நமஸ்ஸு, நாராயணுய என்று மூன்றுபதங்களின்கூட்டரவாக இராநின்றது. ப்ரணவமானது மூன்று அக்ஷரமாக இருப்பது மாத்திரமன்றிக்கே மூன்று பதமாயுமிருக்கையாலே திருமந்த்ரத்தில் மூன்று பதங்களே யுள்ளதாகச் சொல்லலாமோ? நமஸ்ஸும் இரண்டு பதமாகப் பிரிக்கப்படுகையாலேஆறுபதங்களன்றோ திருமந்த்ரத்திலுள்ளது —என்னில்; ப்ரணவத்தை ஸம்ஹிதாகாரத்தாலே ஏகபதமாகக் கொள்வது. அப்படியே நமஸ்ஸை அகண்டமாகக் கொண்டு ஏகபதமாகக் கொள்வது. ஆகவே அஷ்டாக்ஷரத்தைப் பதத்ரயாத்மகமென்னக் குறையில்லை. இம்மூன்று பதங்களாலும்—அநந்யார்ஹ சேஷத்வம், அநந்ய சரணத்வம், அநந்ய போக்யத்வம் என்கிற மூன்று அர்த்தங்கள் சொல்லப்படுவனவாக முமுக்ஷுப்படி முதலான திவ்யக்ரந்தங்களில் நிஷ்கர்ஷிக்கப்பட்டிரா நின்றது. அவ்வர்த்தங்களில் நிஷ்டையைப் பிறப்பிக்கவேணுமென்று எம்பெருமானர் திருவடிகளிலே பிரார்த்திக்கிறாராயிற்று. அந்ய சேஷத்வ ப்ரஸக்தியும் உபாயாந்தர ப்ரவ்ருத்திகந்தமும் போக்யாந்தரப்ராவண்யலேசமும் உண்டாகாதபடி நோக்கியருளவேணுமென்கை.

இந்த நிஷ்டையை தேசாந்தரத்தில் தருகிறோம், காலாந்தரத்தில் தருகிறோமென்று சொல்லித் தாழ்க்க வொண்ணுமைக்காக அத்ர, அத்ய என்று விசேஷிக்கிறது. இந்நிலத்திலே, ருசியுண்டான விந்த க்ஷணத்திலேயே தந்தருளவேணுமென்கை.

திருமங்கையாழ்வார் "மற்றெல்லாம் பேசிலும்நின் திருவெட்டெழுத்துங்கற்று நான் உற்றதும் உன்னடியார்க் கடிமை" என்று பாகவதசேஷத்வமே திருமந்த்ரத்திற்கு ப்ரதானமான ப்ரமேயமென்று நிஷ்கர்ஷித்தருளினபடியாலே அதையடியொற்றி ஸ்வாமி தாமும் இங்குச் சொன்ன பதத்ரயார்த்த நிஷ்டையை பாகவத பர்யந்தமாக்கிக் கொண்டபடியை உத்தரார்த்தத்திலே அருளிச் செய்கிறார். பூர்வார்த்தத்தில் தாம் ப்ரார்த்தித்த அநந்யார்ஹ சேஷத்வாதி நிஷ்டை பகவத் விஷயத்திலன்று, பாகவதோத்தமராய் ஆசார்யஸார்வபௌமரான தேவரீர் விஷயத்திலே—என்னுமிடத்தை முக்தகண்டமாக அருளிச் செய்கிறார்.—[சிஷ்டாக்ரகண்ய—இத்யாதி.]

"பவத்பதாப்ஜே" என்றது ஸப்தமியன்று; த்விதியா த்விவசநம்.

சிட்டர்களில் தலைவரான ஆழ்வான் ஆண்டான் அருளாளப்பெருமாளெம்பெருமானர் போல்வாரான மஹநீயர்கள் பணியத்தக்க பெருமைவாய்ந்த தேவரீருடைய திருவடித்தாமரைகளையே என்னுடைய புத்தி நித்யாநுபவம் பண்ணி மகிழ்ந்திருக்கக் கடவது என்கிறார். இந்த உத்தரார்த்தத்துக்குச் சேர பூர்வார்த்தத்தில் அத்ர என்றதற்கு "தேவரீராகிற இத்தலையிலே" என்று பொருள் கொள்வதும் பாங்காகும். திருமந்த்ரத்திலுள்ள பதத்ரயத்தின் அர்த்தநிஷ்டை ஸ்ரீமந்நாராயணன் திறத்திலன்றிக்கே தேவரீர் திறத்திலேயாம்படி அநுக்ரஹித்தருளவேணுமென்றபடி. (ரு)

அல்பாபி மே ந பவதீயபதாப்ஜபக்தி: சப்தாதிபோகருசிரந்வஹமேததே ஹா,
மத்பாபமேவ ஹி நிதாநமமுஷ்ய நாந்யத் தத் வாரயார்ய யதிராஜ தயைகஸிந்தோ. 6.

| | | | |
|---|---|---|---|
| தயா ஏக ஸிந்தோ | அருட்கடலான | அந்வஹம் ஏததே | நாடோறும் வளர்ந்து செல்லாநின்றது; |
| யதிராஜ ஆர்ய! | ஆசார்யசிகாமணியே! | ஹா | அந்தோ! (இதற்கென் செய்வேன்!) |
| மே | அடியேனுக்கு | அமுஷ்ய நிதாநம் | இதற்கு அடி |
| பவதீய பதாப்ஜ பக்தி: | தேவரீருடைய திருவடித் தாமரைகளிற் பதிந்த பக்தியானது | மத்பாபம் ஏவ ஹி | என்னுடைய பாபமேயன்றோ; |
| அல்பா அபி ந | சிறிதளவுமில்லை; (அல்பது இல்லாததும் தவிர) | அந்யத் ந | வேறொரு காரணமுமில்லை; |
| சப்தாதி போக ருசி: | சப்தாதி விஷயாந்தரபோகங்களில் ஊற்றமானது | தத் வாரய | அந்த என்னது பாபத்தைப் போக்கியருளவேணும். |

கீழ் ச்லோகத்தில் ப்ரார்த்தித்த அம்சம் உமக்கு ஸ்வதஸ்ஸித்தமன்றோ; அதை நீர் ப்ரார்த்தித்துப் பெறவேணுமோ? என்ன; ஐயோ, என்னுடைய படியைக் கேட்டருளலாகாதோ வென்று ஸ்வநிகர்ஷங்களைப் பரக்க விண்ணப்பஞ் செய்கிறார் இந்த ச்லோகம் முதலாக. [மே பவதீய பதாப்ஜபக்தி: அல்பாபி ந] 'பவதீயபதாப்ஜ' என்றவிடத்திலே ஸமாநாதிகரண ஸமாஸமும் கொள்ளலாம்; வ்யதிகரணஸமாஸமும் கொள்ளலாம். பவதீயமான பதாப்ஜங்களிலே என்பது ஸமாநாதிகரண ஸமாஸத்தால் கிடைக்கும் பொருள். பவதீயர்களான ஆழ்வாணுண்டான் முதலானோருடைய பதாப்ஜங்களிலே என்பது வ்யதிகரண ஸமாஸத்தால் கிடைக்கும் பொருள். இரண்டு படியும் விவக்ஷிதமென்னலாம். தேவரீருடைய அடியார்களின் திருவடிகளிலும் எனக்குப் பற்றில்லை, தேவரீர் திருவடிகளிலும் எனக்குப் பற்றில்லை என்றபடி. பின்னை எவ்விஷயத்திலே பற்றுள்ளதென்ன; [சப்தாதிபோகருசிரந்வஹமேததே ஹா] என்கிறார். * கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலு மைங்கருவிகண்ட வின்பம்—ஒழிந்தேன் * என்னவேண்டியிருக்க அந்த நிலை நேராதே அதற்கு மாறானநிலையே நேர்ந்திருக்கின்றதென்கிறார்.

ஆசார்யவிஷயீகாரம் பெற்றிருக்கிற வுமக்கு இப்படி விஷயருசி விளைய ப்ரஸக்தியுண்டோவென்ன; பாவியேன் என்செய்வேன்? ஆசார்ய க்ருபையையும் அஸத்கல்பமாக்கி ஓங்கி நிற்குமதன்றோ என்னுடைய ப்ரபல பாபம். நான் சூழ்த்துக்கொள்ளும் அநர்த்தங்களுக்கெல்லாம் மூலகாரணம் அந்த பாபமேயன்றோ? அதைத்தொலைத்தருளவேணும் என்கிறார். (சு)

வ்ருத்த்யா பசுர் நரவபுஸ் த்வஹமீத்ருசோபி ச்ருத்யாதிஸித்தநிகிலாத்ம குணாச்ரயோயம்,
இத்யாதரேண க்ருதிநோபி மித: ப்ரவக்தும் அத்யாபி வஞ்சநபரோத்ர யதீந்த்ர வர்த்தே. 7.

| | | | |
|---|---|---|---|
| யதீந்த்ர | எம்பெருமானாரே ! | அயம் ச்ருதி ஆதி ஸித்த நிகில ஆத்ம குண ஆச்ரயः இதி | "இவன் வேதம் முதலியவற்றில் தேறின ஸகல ஆத்ம குணங்களுக்கும் கொள்கலமானவன்" என்று |
| அஹம் து | அடியேனேவென்றால் | க்ருதிநः அபி ஆதரேண மிதः ப்ரவக்தும் | அபிஜ்ஞர்களையும் ஆதரவோடு பரஸ்பரம் பேசுவிக்கும்படி |
| நரவபுः | மநுஷ்யசரீரனையிருந்தேனாகிலும் | அத்ர அத்யாபி | இவ்வுலகில் இன்னமும் |
| வ்ருத்த்யா பசுः | செய்கையினால் பசுவோடொத்திரா நின்றேன்; | வஞ்சநபரःவர்த்தே | வஞ்சிக்குமவனையிராநின்றேன். |
| ஈத்ருசः அபி | இப்படிப்பட்டவனையிருக்கச் செய்தேயும் | | |

கீழ் ச்லோகத்திலே தொடங்கின ஸ்வநிகர்ஷாநுஸந்தானம் நெடுகிச் செல்லாநின்றது. அடியேன் மநுஷ்ய யோநியிலே பிறந்து மநுஷ்யசரீரயுக்தனாய்க் காணப்பட்டேனாயினும் வ்ருத்தியினாலே பசுக்களிற் காட்டில் ஒரு வாசி பெற்றவனல்லேன். *:—ஜ்ஞாநேந ஹீந: பசுபிஸ் ஸமாந:* என்கிறபடியே ஜ்ஞாந ஹீநதையாலும் அநுஷ்டாந வைகல்யத்தாலும் பசுக்களையொத்திருப்பேன். உண்மையில் இப்படியிருந்தேனாகிலும் வேதவேதாந்த வேதாங்கங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட ஆத்மகுணங்களெல்லாவற்றாலும் இவன் நிரம்பியவன் என்று பிறர் பேசும்படியாக அவர்களை வஞ்சித்துக் கள்ளத்தொண்டனாகத் திரியாநின்றேன். இது வாயிற்று என்னுடைய நிலையென்று நைச்யாநுஸந்தானம் பண்ணினாராயிற்று.

[வ்ருத்த்யா பசு:]—ஆஹாரநித்ராதிகளில் நியமமற்றிராநின்றேனென்றபடி. இரண்டாமடியில் அயம் என்றது—தம்மைச் சுட்டிக்காட்டிப் பிறர் சொல்லுவதை அநுவதிக்கிறபடி. *க்ருதிநோபி மித: ப்ரவக்தும்* என்றவிடத்தில் க்ருதிந: என்பதை ப்ரதமா பஹு வசநமாகச் சிலர் மயங்குவர். அது பொருத்தமன்று. அப்படியாகில், மேலுள்ள ப்ரவக்தும் என்கிற அவ்யயமும் வர்த்தே என்கிற க்ரியையும் அந்வயிக்க ஔசித்யமில்லை. "கர்த்தும் வா கச்சிதந்தர் வஸதி வஸுமதீதக்ஷிணாஸ் ஸப்ததந்து:" என்கிற முராரி ப்ரயோகத்தையெடுத்துக்காட்டி, அதுபோலே இதுவும் பொருந்தலாமென்று சிலர் ஸமந்வயப்படுத்தப் பார்ப்பதும் பாங்கன்று. அங்கே ஸப்ததந்து:. என்கிற கர்த்ரு பதமானது வஸதி யென்கிற க்ரியையிலே அந்வயமுடைத்தாயிருப்பதுபோலே இங்கு க்ருதிந: என்கிற கர்த்ரு பதமும் வர்த்தே என்னும் க்ரியையிலே அந்வயமுடைத்தாயிருக்குமாகில், அது இங்கு த்ருஷ்டாந்தமாகப் பொருந்தும். அந்தப் ப்ரயோகமும் இந்த ப்ரயோகமும் துல்யசீலமாகாது. எங்கும் ப்ரதமாந்தமாக ஒரு கர்த்ரு பதமிருந்தால் அது க்ரியா பதத்தில் அந்வயம் பெற்றே தீரவேணும், இது அபவாதமற்ற நியமம். இவ்விடத்தில் க்ருதிந: என்பதை ப்ரதமாந்தமாகக்கொண்டால் இது அந்வயிக்கும்படியான க்ரியாபதம் இங்கில்லாமையாலே இதை வேறொரு விபக்தியாகவே கொள்ளவேணும். த்விதீயாபஹுவசநாந்தமாகக் கொள்ளலாம். அப்போது ப்ரவக்தும் என்பதை அந்தர்ப்பாவிதணிச்கமென்று கொண்டு [அதாவது, ப்ரவாசயிதும் என்றபடியாகக்கொண்டு] நிர்வஹிப்பது. ப்ரவக்தும் என்கிற ஸ்தானத்திலே ப்ரவக்து: என்று பாடமாகச் சில பெரியார் பணிக்கக்கேட்டதுண்டு. அப்போது க்ருதிந: என்பது ஷஷ்டியாகும். மித: ப்ரவக்து: க்ருதிநோபி வஞ்சநபர: வர்த்தே என்று அந்வயிப்பது. அத்யாபி என்கிற ஸ்தானத்தில் மத்யாபி, என்றும் சிலர் ஓதுகிறார்கள்.(எ)

**துக்காவஹோஹ மநிசம் தவ துஷ்டசேஷ்ட: சப்தாதிபோகநிரத: சரணாகதாக்ய:,**
**த்வத்பாதபக்த இவ சிஷ்டஜநௌகமத்யே மித்யா சராமி யதிராஜ ததோஸ்மி மூர்க்க:. 8.**

| | | | |
|---|---|---|---|
| யதிராஜ | எம்பெருமானாரே ! | சிஷ்டஜந ஓக மத்யே | சிஷ்டர்களின் திரளினிடையே |
| துஷ்ட சேஷ்டः அஹம் | கெட்ட நடத்தைகளையுடையேனான நான் | த்வத்பாதபக்தः இவ | தேவரீருடைய திருவடிகளுக்கு அன்பன் போல |
| சப்தாதி போகநிரதः | சப்தாதி விஷய ப்ரவணனாய் | மித்யா சராமி | க்ருத்ரிமமாகத் திரியா நின்றேன்; |
| சரணாகத ஆக்யः | ப்ரபந்நனென்று பேர் சுமப்பவனாயிருந்துகொண்டு | ததः மூர்க்கः அஸ்மி | ஆகையினால் மூர்க்கனாயிராநின்றேன். |
| தவ அநிசம் துःக்காவஹः | எப்போதும் தேவரீருடைய திருவுள்ளத்தைப் புண்படுத்துமவனாய் | | |

ஸ்வாமிந்! தேவரீருக்கு சேஷபூதனான அடியேன் துர்வ்ருத்திகளைச் செய்து போருமவனாய் சப்தாதிவிஷயாநுபவத்தில் ஊற்றமுற்றவனாய், சரணாகதனென்று பேர்மாத்திரமேயுள்ளவனாய் இங்ஙனேயிருக்கையாலே எப்போதும் தேவரீருடைய திருவுள்ளத்தைப் புண்படுத்துமவனாயிராநின்றேன். இப்படிப்பட்ட நான் தேவரீரைப் போற்றும் அடியார்களின் திரளிலே எட்டிப்பார்க்கவும் அநர்ஹனாயிருக்கச் செய்தேயும் தேவரீர் திருவடிகளில் பாரமார்த்திக ப்ரேமயுக்தன்போல நடித்து விலக்ஷணர்களான மஹாபுருஷர்களின் கோஷ்டியிலே போட்கனாகத் திரியாநின்றேன். இது காணீர் அடியேனுடைய மூர்க்கத்தனம் என்கிறார்.

[து:க்காவஹோஹம்] தேவரீருக்கு அடியேன் தயநீயன் என்றபடி. பரது:க்கது:கித்வ ரூபமான தயையை தேவரீர் கொள்ளவேணுமென்று ஸூசிப்பித்தபடி. (அ)

**நித்யம் த்வஹம் பரிபவாமி குருஞ்ச மந்த்ரம் தத்தேவதாமபி ந கிஞ்சிதஹோ பிபேமி,**
**இத்தம் சடோப்யசடவத் பவதீயஸங்கே த்ருஷ்டச் சராமி யதிராஜ ததோஸ்மி மூர்க்க: 9.**

| | | | |
|---|---|---|---|
| யதிராஜ | எம்பெருமானாரே! | இத்தம் சட: அபி | இங்ஙனம் போட்கனாயிருந்தேனாகிலும், |
| அஹம் து | அடியேனேவென்றால் | | |
| குரும் மந்த்ரம் தத் தேவதாம் ச | ஆசார்யனையும் மந்த்ரத்தையும் அதற்குள்ளீடான தேவதையையும் | அசடவத் | குருமந்த்ர தேவதா விச்வாஸயுக்தன் போல |
| | | பவதீயஸங்கே | தேவரீரடியார் திரளிலே |
| நித்யம் பரிபவாமி | நித்யமும் பரிபவிக்கின்றேன்; | த்ருஷ்ட: சராமி | துணிவுடையேனாய்த் திரிகின்றேன்; |
| கிஞ்சித் அபி ந பிபேமி | ஈஷத்தும் அஞ்சுகிறேனில்லை; | தத: மூர்க்க: அஸ்மி | ஆதலால் மூர்க்கனாயிராநின்றேன். |
| அஹோ | அந்தோ!; | | |

ஆசார்யனையும் ஆசார்யனுபதேசித்த மந்த்ரத்தையும் மந்த்ரத்துக்கு உள்ளீடான தேவதையையும் கூசாதே நித்யமும் பரிபவியாநின்றேனேயென்கிறார் பூர்வார்த்தத்தில். ஆசார்யனைப் பரிபவிக்கையாவது—அவன் பக்கலில் கேட்ட அர்த்தத்தின்படி அநுஷ்டியாதிருப்பதும் அநதிகாரிகளுக்கு உபதேசிப்பதும். மந்த்ரத்தைப் பரிபவிக்கையாவது—உபதேசித்த பொருளை மறந்துபோவதும் விபரீதமான பொருளைக் கொள்ளுதலும். தத்தேவதா பரிபவமாவது மநோவாக் காயங்களை இதர விஷயங்களிலே ப்ரவணமாக்குகையும் பகவத்விஷயத்தில் ப்ரவணமாக்காதொழிகையும் ஆக இப்படிப்பட்ட மூன்று (பரிபவ) பாதகங்களையும் செய்து போந்தேன்; இவற்றால் என்ன அநர்த்தம் விளையுமோவென்கிற அச்சந்தானுமில்லையாயிற்றெனக்கு.

ஆக இப்படிகளாலே சாஸ்த்ர ப்ராமாண்ய புத்தியற்ற நாஸ்திகனாயிருந்தேனாகிலும் பரமாஸ்திகன் போல தேவரீரடியார்களின் கோஷ்டியிலே துணிவுடன் திரியாநின்றேன்; இதுவாயிற்று அடியேனுடைய மூர்க்கத்தனமிருக்கிறபடி என்கிறார்.

நான்காவது பாதத்தில் ஹ்ருஷ்ட: என்கிற பாடமே பெரும்பாலும் காண்கிறது. த்ருஷ்ட: என்கிற பாடமே ப்ராசீநமென்று பெரியார் பணிக்கக் கேட்டிருக்கை. பொருத்தமும் இந்தப்பாடத்திலேதானுள்ளது. வியாக்கியான கர்த்தாக்களும் ஆதரித்துள்ள ஹ்ருஷ்ட: என்கிற பாடத்தில் எமக்கு வைமத்யமில்லை. இப்படி இவர்களை வஞ்சித்துவிட்டோமிறேயென்று இதுவே ஸந்தோஷமாகத் திரிகிறேனென்றபடி. (கூ)

**ஹா ஹந்த ஹந்த மநஸா க்ரியயா ச வாசா யோஹம் சராமி ஸததம் த்ரிவிதாபசாராந்,**
**ஸோஹம் தவாப்ரியகர: ப்ரியக்ருத்வதேவம் காலம் நயாமி யதிராஜ ததோஸ்மி மூர்க்க: 10.**

| | | | |
|---|---|---|---|
| யதிராஜ | எம்பெருமானாரே! | தவ அப்ரியகர: | தேவரீருக்கு அப்ரியங்களையே செய்து போருமவனாய்க்கொண்டு |
| ய: அஹம் | யாவனொரு அடியேன் | | |
| ஸததம் | எப்போதும் | | |
| மநஸா வாசா க்ரியயா ச | மனமொழி மெய்களாகிற முக்கரணங்களாலும் | ப்ரியக்ருத்வத் | ப்ரியத்தையே செய்பவன் போல நின்று |
| த்ரிவித அபசாராந் | மூவகைப்பட்ட அபசாரங்களையும் | ஏவம் காலம் நயாமி | இப்படியே காலத்தைக் கழிக்கின்றேன்; |
| | | தத: மூர்க்க: அஸ்மி | ஆதலால் மூர்க்கனாயிராநின்றேன். |
| சராமி | செய்கின்றேனே | | |
| ஸ: அஹம் | அப்படிப்பட்ட நான் | ஹா ஹந்த ஹந்த— | என்ன கொடுமை! |

ஸ்வாமிந்! எம்பெருமானரே! மநோ வாக் காயங்களாகிற மூன்று உறுப்புக்களும் தேவரீர் திறத்திலே ஈடுபடுதற்காக அமைந்திருக்கச் செய்தேயும் பாவியேன் அவற்றைக் கொண்டு பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசாரங்களென்கிற மூவகையான அபசாரங்களையும் செய்து போராநின்றேன்; இப்படிப்பட்ட நான் தேவரீருடைய திருவுள்ளம் புண்படும்படியாக நடந்துகொள்பவனாயிருக்கச் செய்தேயும் திருவுள்ளமுகப்பப் பணிசெய்பவன் போல நடித்து இப்படியே காலம் கழியா நின்றேன். இதுவாயிற்று என்னுடைய மூர்க்கத்தனமிருக்கிறபடி என்றாராயிற்று.

[த்ரிவிதாபசாராந்] மூவகையபசாரங்களுள் பகவதபசாரமாவது—தேவதாந்தரங்களோடொக்க எம்பெருமானை நினைக்கையும், ராமக்ருஷ்ணாத்யவதாரங்களில் மநுஷ்ய ஸஜாதீயதா புத்தி பண்ணுகையும், அர்ச்சாவதாரத்தில் உபாதாந நிருபணம் பண்ணுகையும் முதலானவை. பாகவதாபசாரமாவது—அஹங்காரத்தாலும் அர்த்தகாமங்களடியாகவும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பண்ணும் விரோதம். அஸஹ்யாபசாரமாவது—கீழ்ச் சொன்னபடியே அர்த்தகாமாதி நிபந்தநமாகவல்லாமல் ஹிரண்யகசிபுவைப் போலே பகவத் விஷயமும் பாகவத விஷயமுமென்றால் காணவும் கேட்கவும் பொறாதபடியிருக்கை. ஆசார்யாபசாரமும் அஸஹ்யாபசாரமெனப்படும். (கூ0)

**பாபே க்ருதே யதி பவந்தி பயாநுதாபலஜ்ஜா: புந: கரணமஸ்ய கதம் கடேத,**
**மோஹேந மே ந பவதீஹ பயாதிலேசஸ் தஸ்மாத் புந: புநரகம் யதிராஜ! குர்வே. 11.**

| | | | |
|---|---|---|---|
| யதிராஜ | எம்பெருமானரே! | இஹ | இந்த பாப கரணத்தில் |
| பாபே க்ருதே ஸதி | பாவம் செய்தால் | மோஹேந | அஜ்ஞானத்தினல் |
| பய அநுதாப லஜ்ஜா: | அச்சமும் அநுதாபமும் வெட்கமும் | பயாதிலேச: ந பவதி | அச்சமும் அநுதாபமும் வெட்கமுமாகிற இவை சிறிது முண்டாவதில்லை; |
| பவந்தி யதி | உண்டாகுமேயானல் | தஸ்மாத் | ஆதலால் |
| அஸ்ய புந: கரணம் கதம் கடேத | மறுபடியும் பாவம் செய்கை எப்படி நேரிடும்? | அகம் புந: புந: குர்வே | பாபத்தை அடுத்தடுத்துச் செய்து போராநின்றேன் |
| மே | எனக்கோவென்றால் | | |

பாபம் செய்வதென்பது இவ்விருள்தருமா ஞாலத்திற்கு அவர்ஜநீயமாதலால் பாபம் நேர்ந்துவிடுவதுபற்றி விசாரமில்லை. ஐயோ! இப்படி பாபம் நேர்ந்துவிட்டதே! இதனால் இஹலோக பரலோகங்களில் என்னாகுமோ என்கிற பயமும், அநுதாபமும், வெட்கமும் விளையுமாகில் செய்த பாபத்திற்கும் சிறிது ப்ராயச்சித்தமாகும்; பின்பு புத்திபூர்வகமாகப் பாபம் விளையாமலுமிருக்கும். ஆனல் அடியேனுக்கு, செய்த பாபத்தைப்பற்றி அச்சமோ அநுதாபமோ லஜ்ஜையோ இவற்றுள் ஏகதேசமும் தோன்றுவதில்லை; இதற்கடி விவேகமில்லாமை. ஆகவே மேன்மேலும் பாபங்களைச்செய்வதற்கு ப்ரதிபந்தகங்களான பயாநுதாபாதிகளில்லாமையாலே அடுத்தடுத்துப் பாபங்களையே செய்து போராநின்றேன்—என்று தம்முடைய பாப ப்ராசுர்யத்தை எம்பெருமானர் திருமுன்பே விண்ணப்பஞ் செய்தாராயிற்று. இப்படிப்பட்ட வடியேனுக்கு தேவரீருடைய திருவருளல்லது தஞ்சமில்லையென்று சேஷபூரணமாகக் கடவது.

இதில் முன்னடிகளுக்குச் சேர பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வானருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது. அது ஸ்ரீவசநபூஷண வியாக்கியானத்திலே விசதம். அதாவது கூரத்தாழ்வானுடைய சிஷ்யர்களில் பிள்ளைப்பிள்ளையாழ்வானென்பவர் ஒருவர். அவர் ஆபிஜாத்யம் முதலியவற்றால் மேம்பட்டவராகையாலே பாகவதவிஷயங்களில் விநயமில்லாமல் அபசாரப்பட்டுக்கொண்டேயிருப்பர். ஆழ்வான் இதைக்கண்டு "ஐயோ! இவர்க்கு இந்த பாகவதாபசாரம் இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்களெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தித் தானே மேலாகி விநாசத்தை விளைத்திடுமே, அதுக்கு வேலியிட்டு வைக்கவேணும்" என்று திருவுள்ளம்பற்றி ஒரு புண்யகாலத்திலே நீராட்டமான பின் இவரை நோக்கி 'எல்லாரும் தானம் பண்ணுகிற இக்காலத்திலே நீரும் நமக்கொரு தானம் பண்ணமாட்டீரோ?' என்ன, 'அடியேன் எத்தை தானம் பண்ணுவது? எல்லாம் ஸ்வாமியினுடையதேயன்றோ?' என்று அவர் சொல்ல, 'அஃது இருக்கட்டும்; 'மநோவாக்காயங்கள் மூன்றாலும் பாகவதாபசாரப்படாமல் வர்த்திக்கக்கடவேனென்று நம் கையிலே உதகதானம் பண்ணவேணும்' என்று ஆழ்வான் அருளிச்செய்ய, அப்படியே இவர் உதகதானம் பண்ணித்தந்த பின்பு ஒருநாள்பூர்வவாஸநையாலே பாகவதாபசாரப்

பட நேர்ந்துவிட, 'நாம் இனி முடிந்தோம்' என்று பயப்பட்டு அன்று ஆழ்வான் 'ஸன்னிதிக்கு விடைகொள்ள வெள்கித் தம் திருமாளிகையிலேயே யிருந்துவிட, இவர் முறைப்படி வருகிற காலத்தில் வரக்காணாமையாலே ஆழ்வான் இவருடைய க்ருஹத்துக் கெழுந்தருளி வினவியருள, அவர் தமக்கு மாநஸிகமாக பாகவதாபசாரம் நேர்ந்தமையை விண்ணப்பஞ் செய்து 'கரணத்ரயத்தாலும் அபசாரம் விளையாதபடி இந்த தேஹத்தோடு வர்த்திக்கை அரிதாயிருக்கின்றது, என் செய்வேன்'! என்று திருவடிகளைக் கட்டிக்கொண்டு கிடந்து வருந்த, இத்தனையநுதாபம் இவர்க்கு உண்டாயிற்றேயென்று உகந்தருளி 'மாநஸிகமான அபசாரத்திற்கு அநுதாபமுண்டாகவே ஈச்வரன் பொறுத்தருள்வன்; ப்ரத்யக்ஷத்தில் ராஜதண்டனை கிடைக்குமென்கிற பயத்தாலே காயிகமாக ஒருவரையும் நலியமாட்டீர்; இனி வாக்கொன்றையும் நன்றாகக் குறிக்கொண்டு இரும்' என்றருளிச் செய்தார்—என்பதாம். (கக)

**அந்தர் பஹிஸ் ஸகலவஸ்துஷு ஸந்தமீசமந்த: புரஸ் ஸ்த்திதமிவாஹமவீக்ஷமாண:**
**கந்தர்ப்பவச்யஹ்ருதயஸ் ஸததம் பவாமி ஹந்த த்வதக்ரகமநஸ்ய யதீந்த்ர! நார்ஹ:. 12.**

| | | | |
|---|---|---|---|
| யதீந்த்ர | எம்பெருமானாரே! | அவீக்ஷமாண: அஹம் | காணகில்லாதவனான அடியேன் |
| ஸகல வஸ்துஷு | எல்லாப் பொருள்களிலும் | ஸததம் கந்தர்ப்ப வச்ய ஹ்ருதய: பவாமி | எப்போதும் காமபரவசமநஸ்கனாயிரா நின்றேன்; |
| அந்த: பஹி: | உள்ளோடு புறம்போடு வாசியற எங்கும் | ஹந்த | அந்தோ! (ஆதலால்) |
| ஸந்தம் ஈசம் | வியாபித்து நிற்கிற எம்பெருமானை | த்வத் அக்ர கமநஸ்ய ந அர்ஹ: | தேவரீர் திருமுன்பே வருகைக்கும் அர்ஹதையுடையேனல்லேன். |
| அந்த: புர: ஸ்திதம் இவ | பிறவிக்குருடன் முன்னே யிரா நின்ற பொருளைக் காணமாட்டாதவாறுபோல | | |

கீழ்ச்லோகத்தில் "புந: புநரகம் யதிராஜ குர்வே" என்றார். எம்பெருமான் எங்கும் கரந்து உறையுமவனாயிருக்க ஸர்வகர்மஸாக்ஷியான அவனை வஞ்சித்து நீர் பாபங்களைச் செய்யும்படி எங்ஙனேயென்று சிலர் கேட்பதாகக்கொண்டு அதற்குஉத்தரமாக இது அருளிச்செய்கிறார். "கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையுமொரு தனி நாயகம்" இத்யாதிப்படியே ஸ்தூல ஸூக்ஷ்மவிபாகமற ஸகல வஸ்துக்களிலும் உள்ளும் புறமுமொக்க வியாபித்து நியமித்துக்கொண்டு போருகின்ற ஸர்வேச்வரனை நான் கண்டிலேன். பிறவிக்குருடன் எதிரேயுள்ளவொரு பொருளைக் காண்கிலானென்னில் இதில் வியப்பில்லையே. அவனைப் போலவே நானுமொருவனாயிற்று.

[ஈசம் அவீக்ஷமாண: கந்தர்ப்பவச்ய ஹ்ருதய: ஸததம் பவாமி] எம்பெருமானைக் கண்ணாலே கண்டேனாகில் "என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்றிருக்கமாட்டேனோ? வகுத்த விஷயத்தைக் காணப் பெறாமையாலே கண்ட விஷயங்களிலும் அலைந்துழலாநின்றேன். இதுதான் காதாசித்கமன்று காணீர்; [ஸததம்] * இரவு பகலென்னாமலெப்போதும்.

இப்படிப்பட்ட பாவியேன் [த்வதக்ரகமநஸ்ய நார்ஹ:] தேவரீருடைய கண்வட்டத்திலே நிற்கவும் தகுதியுடையேனல்லேன். திருமுன்பே நிற்கவும் யோக்யதையற்ற நான் தேவரீரை எப்படி கிட்டப் போகிறேனென்றவாறு. (கஉ)

**தாபத்ரயீஜநிததுக்கநிபாதிநோபி தேஹஸ்திதௌ மம ருசிஸ்து ந தந்நிவ்ருத்தௌ,**
**ஏதஸ்ய காரணமஹோ மம பாபமேவ நாத! த்வமேவ ஹர தத் யதிராஜ! சீக்ரம். 13.**

| | | | |
|---|---|---|---|
| யதிராஜ | எம்பெருமானாரே! | தத் நிவ்ருத்தௌ ந | அந்த தேஹத்தைத் தவிர்த்துக் கொள்வதில் ருசியுண்டாவதில்லை; |
| தாபத்ரயீ ஜநித துக்க நிபாதிந: அபி | தாபத்ரயத்தாலுண்டு பண்ணப்பட்ட துக்கங்களிலே விழுந்து கிடக்கச் செய்தேயும் | ஏதஸ்ய காரணம் மம பாபம் ஏவ | இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணம் எனது பாவமேயாம்; |
| மம | எனக்கு | | |
| ருசிஸ் து | அபிலாஷமோவென்றால் | அஹோ நாத | அந்தோ!; ஸ்வாமிந்!, |
| தேஹஸ்திதௌ | துக்காஸ்பதமான சரீரத்தைப் பேணுகையிலேயாம்; | தத் த்வமேவ சீக்ரம் ஹர | அந்தபாபத்தை தேவரீரே கடுகப்போகவேணும். |

உள்ளும் புறமும் ஸகல பதார்த்தங்களிலுமுறைகின்ற எம்பெருமானைக் காண்கிலீராகிலும் ஹேய விஷயங்களின் தோஷங்களை ப்ரத்யக்ஷமாகக் காண்கிறீரன்றோ; காணவே அவற்றில் ஜிஹாஸை பிறந்ததில்லையோ? என்ன; துன்பங்களையும் இன்பமாக நினைக்கும்படியன்றோ என்னுடைய நிலைமையுள்ளது? இதுக்கடி என்னுடைய ப்ரபல பாபமேயாயிற்று. அதை தேவரீர் தாமே களைந்தருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

[தாபத்ரயீ] ஆத்யாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதிதைவிகமெனப்படும் மூன்று தாபங்கள் தாபத்ரயமெனப்படும். கைகால் முதலிய உறுப்புகளாலே விளைவிக்கப்படும் தாபம் ஆத்யாத்மிக தாபமெனப்படும், அதுதான் சாரீரமென்றும் மாநஸமென்றும் இரண்டுபடிப்பட்டிருக்கும். சாரீரமானது வ்யாதியென்றும், மாநஸமானது ஆதியென்றும் சொல்லப்படும். ஆக இந்த ஆதிவ்யாதிகள் ஆத்யாத்மிக தாபம். "பசுபக்ஷிமநுஷ்யாத்யை: பிசாசோரக ராக்ஷஸை:, ஸரீஸ்ருபாத்யைச்ச ந்ருணாம் ஜாயதே சாதிபௌதிக:," என்னப் பட்டது ஆதிபௌதிகம். "சீதவாதோஷ்ணவர்ஷாம்புவைத்யுதாதிஸமுத்பவ: தாபோத்விஜவரஸ்ரேஷ்டை: கத்யதேசாதிதைவிக:" என்னப்பட்டது ஆதிதைவிகம். ஆக இம்மூன்றுமே ஸ்வயம் துக்கரூபம். "தாபத்ரயீஜநிததுக்க" என்கையாலே இவற்றில் நின்றுமுண்டான துக்கம் பொறுக்கவொண்ணாதென்று காட்டினபடி.

இப்படி துக்கைகதாநமான இவ்வுடல் என்றைக்குத் தொலையப்போகிறது! என்று உடல் தொலையும் நாளை எதிர்பார்த்திருக்கவேண்டியிருந்தும் பாவியேனுக்கு இந்த தேஹம் நிலைத்திருக்கவேணுமென்கிற ருசியே விஞ்சியிராநின்றதே! என்கிறார். இதில் அருசியை விளைவிப்பதும் இதைத் தவிர்த்தருள்வதும் தேவரீருக்கே பரம் என்றாராயிற்று. (கங)

வாசாமகோசரமஹா குணதேசிகாக்ர்யகூராதிநாதகதிதாகிலநைச்யபாத்ரம்,
ஏஷோஹமேவ ந புநர் ஜகதீத்ருசஸ் தத் ராமாநுஜார்ய! கருணைவ து மத்கதிஸ் தே. 14.

| | | | |
|---|---|---|---|
| ஆர்ய ராமாநுஜ | எம்பெருமானாரே! | ஈத்ருச: புந: ந | இப்படிப்பட்ட தோஷத்தையுடையான் வேறொருவனில்லை, |
| வாசாம் அகோசர மஹாகுண தேசிக அக்ர்ய கூராதிநாத கதித அகில நைச்ய பாத்ரம் | வாய்க்கு நிலமல்லாத நற்குணங்களையுடைய ஆசார்யச்ரேஷ்டரான கூரத்தாழ்வான் அநுஸந்தித்த ஸமஸ்த நைச்யங்களுக்கும் பாத்ரமாயிருப்பவன் | | (ஆதலால்) |
| | | தே கருணா து | தேவரீருடைய திருவருளோவென்றால் |
| ஜகதி | இவ்வுலகில் | | |
| ஏஷ: அஹம் ஏவ | இந்த அடியேன் ஒருவனே யாவன்; | மத்கதி: ஏவ | என்னையே கதியாகவுடையது. |

* மொழியைக் கடக்கும் பெரும்புகழ்பெற்ற கூரத்தாழ்வான் தம்முடைய ஸ்தவங்களிலே தமக்குள்ளதாக அநுஸந்தித்துக்கொண்ட நைச்யமானது உண்மையில் அடியேனிடத்தில் தானுள்ளது; என்னைப்போன்ற நீசன் இவ்வுலகில் வேறொருவனுமிலன்; ஆன பின்பு எனக்கு தேவரீருடைய திருவருளல்லது புகலில்லை யென்கிறார்.

கூரத்தாழ்வானுக்கு "வாசாமகோசரமஹாகுணதேசிகாக்ர்ய" என்று விசேஷணமிட்டது மிகவும் பொருந்தும். எம்பெருமானுடைய குணங்களைப் பேசித் தலைக்கட்டிவிடலாம்; எம்பெருமானாருடைய குணங்களையும் பேசித் தலைக்கட்டிவிடலாம்; ஆழ்வானுடைய குணங்களைப்பேசித் தலைக்கட்டுவது ஆதிசேஷனுக்குமரிது என்றிறே அக்காலத்திலேயே ப்ரஸித்தி விளைந்தது. ஆகவேதான் அமுதனார் நூற்றந்தாதியில் "மொழியைக்கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாங்குழியைக் கடக்கும் நங்கூரத்தாழ்வான்" என்று பணித்தது. அப்படிப்பட்ட ஆழ்வான் எம்பெருமானை ஸ்துதிக்கவென்றிழிந்து அந்த ஸ்துதி சிறிதுபாகமும் தம்முடைய நைச்யாநுஸந்தானம் மிகப்பெரிய பாகமுமாகவன்றோ பணித்துப் போந்தது. ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தின் பிற்கூற்றிலும் வரதராஜஸ்தவத்தின் பிற்கூற்றிலும் இது பரக்கக் காணலாம். அப்படி அவர் அநுஸந்தித்த நைச்யத்திற்கு உண்மையில் அவர் பாத்ர பூதரல்லர்; அஸ்மதாதிகளின் அநுஸந்தானத்திற்காகத் தாம் ஏறிட்டுக் கொண்டு பேசினதத்தனை. அவற்றுக்கெல்லாம் கொள்கலமாகத் தகுவது அடியேனொருவனே யாயிற்று. ஆன பின்பு தேவரீருடைய திருவருளாலன்றி அடியேன் உய்ய விரகில்லை யென்கிறார்.

ஈற்றடியை "ராமாநுஜார்ய! கருணைவ து தே கதிர் மே" என்றிடாதே "கருணைவ து மத்கதிஸ் தே" என்றிட்டருளினதை நோக்குங்கால் "மத்கதி:" என்றவிதில் பஹுவ்ரீஹி

ஸமரஸம் விவக்ஷிதமென்று தோன்றும். அதாவது, அஹம் கதி: யஸ்யாஸ் ஸா மத்கதி: என்று ஸமாஸமாகக்கடவது. தே கருணா—தேவரீருடைய திருவருளானது, மத்கதி:—என்னையே புகலாகவுடையது. என்னைத் தவிர மற்றையோர் பக்கலிலே தேவரீர் திருவருள் நிறம் பெறு தென்றபடி. நூற்றந்தாதியில் "நிகரின்றி நின்ற வென்னீசதைக்கு நின்னருளின்கணன்றிப் புகலொன்று மில்லை அருட்குமஃதே புகல்" என்றது இங்கே அநுஸந்தேயம். (கச)

**சுத்தாத்மயாமுந குருத்தம கூரநாதபட்டாக்ய தேசிகவரோக்த ஸமஸ்தநைச்யம்,**
**அத்யாஸ்த்யஸங்குசிதமேவ மயீஹ லோகே தஸ்மாத் யதீந்த்ர! கருணைவ து மத்கதிஸ் தே 15.**

| | | | |
|---|---|---|---|
| யதீந்த்ர! | எம்பெருமானாரே! | மயி ஏவ | என்னிடத்திலேயே |
| சுத்த ஆத்ம யாமுந குருத்தம கூர நாத பட்டாக்ய தேசிக வர உக்த ஸமஸ்த நைச்யம் | பரம பவித்திரரான ஆளவந்தார் ஆழ்வான் பட்டர் என்னுமிந்த ஆசார்ய சிகாமணிகள் அநுஸந்தித்துக் கொண்ட ஸகலவிதமான தாழ்வும் | அஸங்குசிதம் அஸ்தி | குறையுறுது நிரம்பியிருக்கின்றது. |
| இஹ லோகே | இவ்வுலகின்கண் | தஸ்மாத் | ஆகலால், |
| அத்ய | இக்காலத்தில் | தே கருணா ஏவ து மத்கதி: | தேவரீருடைய திருவருளே எனக்குப் புகல் (அல்லது) தேவரீருடைய திருவருள் என்னையே புகலாகவுடையது. |

கீழ்ச்லோகத்தில், ஆழ்வான் அநுஸந்தித்த நைச்யத்திற்கு நானே கொள்கலமாயிருப்பனென்றார்; ஆழ்வானொருவரேயோ? ஆளவந்தார் ஆழ்வான் பட்டர் என்னுமிவ்வாசிரியர்களனைவரும் தாம்தாம் அநுஸந்தித்துக் கொண்ட நைச்சியம் அவர்கள் பக்கலில் சிறிதுமில்லை. என்னிடத்திலேயே நிரம்பவுமுள்ளது. இக்காலத்தில் இவ்வுலகில் எங்குத் தேடிப்பார்த்தாலும் என்னைப்போன்ற நீசன் வேறுவ்யக்தி கிடைப்பதரிதாதலால், "ஸ்வாமிந்! தேவரீருடைய திருவருளை அடியேன்பக்கலிலே பாயவிட்டுக் கைக்கொண்டருளவேணும் என்றாராயிற்று.

ஆளவந்தாருடைய நைச்யாநுஸந்தாநம்—*ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே *அமர்யாத: க்ஷுத்ர: இத்யாதிச்லோகங்களில் காணத்தக்கது. ஆழ்வானுடைய நைச்யாநுஸந்தானம்—"தாபத்ரயீமயதவாநல தஹ்யமாநம்" என்பது முதலான இருபது முப்பது ச்லோகங்களில் காணத்தக்கது. பட்டருடைய நைச்யாநுஸந்தானம்—*கர்ப்பஜந்மஜராம்ருதி* அஸந்நிக்ருஷ்டஸ்ய நிக்ருஷ்டஜந்தோ இத்யாதி ச்லோகங்களிலே காணத்தக்கது.

சுத்தாத்ம என்கிற விசேஷணம் மூவர்பக்கலிலும் அந்வயிக்கக்கடவது. அவர்கள் அநுஸந்தித்துக்கொண்ட நைச்யத்திற்கு அவர்கள் பக்கலிலே அவகாசமில்லையென்று காட்டினபடி. (கரு)

**சப்தாதிபோகவிஷயா ருசிரஸ்மதீயா நஷ்டா பவத்விஹ பவத்தயயா யதீந்த்ர!**
**த்வத்தாஸதாஸகணநாசரமாவதௌ யஸ் தத்தாஸதைகரஸதா அவிரதா மமாஸ்து. 16.**

| | | | |
|---|---|---|---|
| யதீந்த்ர! | எம்பெருமானாரே! | த்வத் தாஸ தாஸ கணநா சரம அவதௌ | தேவரீருடைய பக்த பக்தர்களை எண்ணிக்கொண்டு போமளவில் சரம பர்வத்தில் நிற்கிறரோ, |
| அஸ்மதீயா | எம்முடையதான | | |
| சப்தாதிபோக விஷயா ருசி: | சப்தாதி விஷயங்களை யநுபவிக்க வேணுமென்பது பற்றியுண்டான அபிநிவேசமானது | தத்தாஸதைக ரஸதா | அவர்க்கு அடிமைப்பட்டிருப்ப தொன்றிலேயே ப்ராவண்யமானது |
| பவத் தயயா | தேவரீருடையதிருவருளாலே | மம அவிரதா அஸ்து | எனக்கு அவிச்சிந்நமாக நடைபெற வேணும். |
| நஷ்டா பவது | தொலைந்ததாகக் கடவது; | | |
| ய: | யாவரொருவர் | | |

எம்பெருமானாரே! * கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலுமைங்கருவி கண்ட வின்பங்களிலே ஊற்றம் மிகுந்து செல்லாநின்றது; தேவரீரிடத்தில் ப்ரவணனை வெனக்கு இது தகுமோ? இந்த ஆற்றம் குலையும்படி செய்தருளவேணும். இங்ஙனே செய்வதற்கு அடியேன் பக்கலில் ஒரு கைம் முதலுமில்லை; தேவரீருடைய நிர்ஹேதுக கருணையினாலேயே இது ஆகக்கடவது—என்கிறார் பூர்வார்த்தத்தில்.

தமக்கு யதீந்த்ர ப்ரவணர் என்கிற திருநாமம் வேண்டாவென்றும், யதீந்த்ர ப்ரவண ப்ரவண ப்ரவண ப்ரவணர் என்கிற திருநாமம் வேணு மென்றும் வெளியிடுகிறார் உத்தரார்த்தத்தில். தேவரீருக்கு தாஸாநுதாஸ சரமாவதி தாஸனாகக் கடவேனென்கை. (கசு)

**ச்ருத்யக்ரவேத்யநிஜதிவ்யகுணஸ்வரூப: ப்ரத்யக்ஷதாமுபகதஸ் த்விஹ ரங்கராஜ:**
**வச்யஸ் ஸதா பவதி தே யதிராஜ தஸ்மாத் சக்தஸ் ஸ்வகீயஜநபாபவிமோசநே த்வம். 17.**

| | | | |
|---|---|---|---|
| யதிராஜ | எம்பெருமானாரே! | ரங்கராஜ: | ஸ்ரீரங்கநாதன் |
| ச்ருத்யக்ர வேத்ய நிஜ திவ்யகுண ஸ்வரூப: | வேதாந்தங்களில் கேட்டறிய வேண்டும்படியான தன்னுடைய குணஸ்வரூபாதிகளையுடையனாய் | தே | தேவரீருக்கு |
| | | ஸதா | எப்போதும் |
| | | வச்ய: பவதி | விதேயனாயிரா நின்றான்; |
| இஹ | தன்வாசியறிந்து ஈடுபடுவாரில்லாத இந்த ஸம்ஸார மண்டலத்திலே | தஸ்மாத் | ஆதலால் |
| | | ஸ்வகிய ஜந பாப விமோசநே | தம்மடியார்களின் பாவங்களைத் தொலைத்தருள்வதில் |
| ப்ரத்யக்ஷதாம் உபகத: | எல்லார்க்கும் கண்ணெதிரே காட்சி தந்தருள்கின்ற | த்வம் சக்த: | தேவரீர் சக்தியுடையராயிரா நின்றீர். |

கீழ்ச்லோகங்களில் ப்ரார்த்தித்தபடிகளையெல்லாம் குறிக்கொண்டருளின எம்பெருமானார், 'நீர் நம்மை இங்ஙனே நிர்ப்பந்திக்கிறதென்? அநிஷ்டநிவாரணத்திற்கும் இஷ்டப்ராமாபணத்திற்கும் ஸர்வேச்வரனன்றோ கடவன்; அவை நம்மாலாகக் கூடியவையல்லவே; அவன் திறத்திலே செய்யவேண்டிய ப்ரார்த்தனைகளை என் பக்கலிலே செய்து பயனென்?' என்று திருவுள்ளம் பற்றினதாகக் கொண்டு, அந்த எம்பெருமான் தானும் ஸ்ரீரங்கநாதனாகத் திருக்கோலங்கொண்ட நிலைமையிலே ஸர்வாத்மநா தேவரீருக்கு விதேயனென்று ப்ரஸித்தமாகையாலே தேவரீர் சொல்லிற்றுச் செய்வானான பின்பு இந்த ப்ரார்த்தனைகளெல்லாம் தேவரீர் பக்கலிலேயே செய்ய ப்ராப்தமென்று காட்டுகிறார்போலும்.

புருஷஸூக்த நாராயணாநுவாகாதிகளிலே என்றும் குருமுகமாகக் கேட்டேயறிய வேண்டிய ஸ்வரூபரூப குணவிபூதிகளையுடையனாயிருந்த எம்பெருமான் "அகிலநேத்ர பாத்ரமிஹ ஸங் ஸஹ்யோத்பவாயாஸ்தடே ஸ்ரீரங்கே நிஜதாம்நி சேஷசயநே சேஷே வநாத்ரீச்வர" என்று ஆழ்வானருளிச் செய்தபடியே திருவரங்கம் பெரிய கோயிலிலே ஸ்ரீரங்கநாதனாய் "இன்று கண்டமையால் என் கண்ணிணைகள் களிப்பக் களித்தேனே" என்று அனைவரும் கண்டுகளிக்கலாம்படி * மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்யத் துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம்வளர அகமகிழுந் தொண்டர்வாழ அன்பொடு தென் திசை நோக்கிப் பள்ளிகொண்டருளா நின்றான்; அப்பெருமான் தேவரீருக்கு விபவதசையோடு அர்ச்சாதசையோடு வாசியற எப்போதும் விதேயனாகையாலே அவனை யதேஷ்டமாக நியமித்துக் காரியங் கொள்ளக் குறையுண்டோ வென்றாராயிற்று.

"வச்யஸ் ஸதா பவதி தே யதிராஜ!" என்று இவர் எது கொண்டு அருளிச் செய்கிறாரென்னில்; சரணாகதி கத்யத்தில் ஸ்வாமி தாம் ப்ரார்த்தித்தபடியெல்லாம் ஆகுகவாகுகவென்று ப்ரதிவசநமிட்டருளினபடி கொண்டும் மற்றும் பலபல இதிஹாஸங்கள் கொண்டும் அருளிச் செய்கிறாரென்க. அவ்விதிஹாஸங்களுள் ஒன்று காண்மின்;—*திருவாய்மொழி (4—3—5.) *ஏலுமாடையும்:. தே* என்ற விடத்து ஈடுமுப்பத்தாறாயிரத்திலுள்ளது;-"ஒரு நாள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் திருப்பரிவட்டங்களை அழகியதாக வாட்டிக் கொண்டு வந்து (ஸலவை செய்து கொண்டுவந்து என்றபடி.) எம்பெருமானார்க்குக் காட்ட, அவரும் பரமத்ருப்தராய் அவனைப் பெருமாள் திருவடிகளிலே கொண்டு புக்கு 'இவன் வெகு மநோஹரமாகத் திருப்பரி வட்டம் திருத்திக் கொண்டு வந்திருக்கிறபடியைத் திருக்கண் சாத்தியருள வேணும்' என்று சொல்லித் திருப்பரிவட்டங்களைக் காட்டியருள, பெருமாளும் கண்டு உகந்தருளி உடையவரை நோக்கி 'வாரீர்! இவனுக்காக முன்பு ரஜகன் நம் திறத்தில் செய்த குற்றம் பொறுத்தோம்' என்று திருவாய்மலர்ந்தருளினார்" என்று. (வண்ணான் முன்பு செய்த குற்றமாவது—கண்ணபிரானும் பலராமனும் அக்ரூரரால் அழைக்கப்பட்டு மதுரைக்கு எழுந்தருளினபோது அவ்வூரிலுள்ள ராஜவீதியில் கம்ஸனுடைய வண்ணான் துணி மூட்டைகளைச் சுமந்து கொண்டு வர, இவ்விருவரும் அவனிடத்தில் வஸ்த்ரம் விரும்ப, அவன் கொடாதொழிந்தது.)

ஸ்ரீரங்கநாதன் "மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய வடுதிறலயோத்தியெம்மரசே அரங்கத்தம்மா!" என்னும்படி சக்ரவர்த்தி திருமகனாயவதரித்து விச்வாமித்ர முநியின் பின்னே போனபோது "இமௌ ஸ்ம முநிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ

ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவ கிம்?" என்று ஸர்வாத்மநா விதேயனாயிருந்தானென்றால், எம்பெருமானார் பக்கலிலே யிருந்தமை கேட்கவேணுமோ? (கஎ)

**காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத்க்ஷமைவ,**
**ஸா ச த்வயைவ கமலாரமணேர்த்திதா யத் க்ஷேமஸ் ஸ ஏவ ஹி யதீந்த்ர! பவச்ச்ரிதாநாம். 18.**

| | | | |
|---|---|---|---|
| யதீந்த்ர ! | எம்பெருமானாரே! | சரணம் | புகல்; |
| காலத்ரயே அபி | வருங்காலம் நிகழ்காலம் கழிகாலமென்கிற மூன்று காலங்களிலும் | ஸா ச | அந்த க்ஷமைதானும் |
| | | த்வயா ஏவ | தேவரீராலேயே |
| | | கமலாரமணே | நம்பெருமாள் பக்கலிலே |
| கரணத்ரய நிர்மித அதி பாபக்ரியஸ்ய | மன மொழி மெய்களாகிற மூன்று கரணங்களினாலும் கோர பாபங்களைச் செய்தவனுக்கு | அர்த்திதா இதியத் | ப்ரார்த்திக்கப்பட்டதென்பது யாதொன்று, |
| | | ஸ: ஏவ ஹி | அந்த ப்ரார்த்தனை தானே |
| பகவத் க்ஷமா ஏவ | எம்பெருமானது பொறுமையொன்றே | பவச்ச்ரிதாநாம் | தேவரீரை யடிபணிந்தவர்களுக்கு |
| | | க்ஷேம: | சேமமாவது. |

கீழ் ச்லோகத்தில் "இஹ ரங்கராஜ: வச்யஸ் ஸதா பவதி தே யதிராஜ!" என்றருளிச் செய்தாரே; அதை நன்கு நிலைநாட்டி யருளிச் செய்வது இந்த ச்லோகம். அபராதிகளான சேதநர்களுக்கு எம்பெருமானுடைய க்ஷமையே புகலென்று சாஸ்த்ரங்களெல்லாம் ஒருமிடறாகச் சொல்லியிருந்தாலும் அடியேன் போல்வார் அந்த எம்பெருமான் பக்கலிலே சென்று அவனுடைய க்ஷமையைவேண்டி வருந்த வேண்டியதில்லையே; தேவரீர் ஒரு பங்குனியுத்தரத் திருநாளிலே திவ்ய தம்பதிகளின் திரு முன்பே கத்யமநுஸந்தித்து ப்ரார்த்திக்கையில் அப்போது தேவரீருக்குக் கிடைத்த வரமொன்று ப்ரஸித்தமாயிரா நின்றது. அதாவது, உமக்கும் உம்முடைய ஸம்பந்த ஸம்பந்தம் பெற்றவர்களுக்கும் ஒரு குறையில்லை காணும் என்ற திருமுகப்பாசுரம். அது உண்டான பின்பு எம்போல்வார் எம்பெருமான் பக்கலிலே சென்று துவள வேண்டிற்றுண்டோ? என்கிறாராயிற்று.

ஸ்ரீமந் நிகமாந்ததேசிகனருளிய ந்யாஸ திலகத்தில் * உக்த்யா தநஞ்ஜயே த்யாதி ச்லோகத்தில் * ச்ருத்வா வரம் ததநுபந்த மதாவலிப்தே நித்யம் ப்ரஸீத பகவந் மயி ரங்கநாத! * என்றருளிச் செய்ததும் அதற்கு விவரணமாக நாம் இட்ட அத்ருஷ்டார்த்த ஸர்வஸ்வமும் இங்கே நோக்கத்தக்கவை.

[காலத்ரயேபி இத்யாதி.] ஒரு காலமல்லா வொருகாலத்திலேயாகிலும் நன்னடத்தைக்கு அவகாசமில்லாமே எக்காலத்திலும் மனமொழி மெய்களாலே பாபங்களையே கூடுபூரித்துக் கிடக்குமவனுக்கு அவை எம்பெருமானுடைய பொறுமைக்கே இலக்காகித் தொலையவேண்டுமத்தனை. ப்ராயச்சித்தங்களாலாதல் அநுபவத்தாலாதல் தொலைய மாட்டாத பாபங்களுக்கு பகவானுடைய க்ஷமையல்லது வேறொரு புகலில்லையிறே. அந்த க்ஷமைதான் இன்று நாம் புதிதாக ப்ரார்த்தித்துப் பெற வேண்டாமே பண்டே தேவரீர் ப்ரார்த்தித்துப் பெற்று வைத்த சேமநிதி யாகையாலே எம் போல்வார் தேவரீருடைய அபிமாநத்திலே அந்தர்ப்பவித்து நிற்கைக்கு மேற்பட வேறொன்று செய்ய வடுப்பதற்யோம்—என்றருளிச் செய்தாராயிற்று. (கஅ)

**ஸ்ரீமந் யதீந்த்ர! தவ திவ்யபதாப்ஜஸேவாம் ஸ்ரீசைலநாதகருணாபரிணாமதத்தாம்,**
**தாமந்வஹம் மம விவர்த்தய நாத! தஸ்யா: காமம் விருத்தமகிலஞ்ச நிவர்த்தய த்வம். 19.**

| | | | |
|---|---|---|---|
| நாத ! | எமக்குத் தலைவரான | அந்வஹம் | நாடோறும் |
| ஸ்ரீமந் யதீந்த்ர | ஸ்ரீராமாநுஜரே! | மம விவர்த்தய | அடியேனுக்கு வளரச் செய்தருளவேணும்; |
| ஸ்ரீசைலநாத கருணா பரிணாம தத்தாம் | (அஸ்மதாசார்யரான) திருமலையாழ்வாருடைய திருவருள் மிகுதியினால் அளிக்கப்பட்ட | தஸ்யா: விருத்தம் | அந்த பவதீய பாதாரவிந்த ஸேவைக்கு எதிரிடையான |
| தாம் | அப்படிப்பட்ட | அகிலம் ச காமம் | எல்லா விருப்பங்களையும் |
| தவ திவ்ய பதாப்ஜ ஸேவாம் | தேவரீருடைய பாதாரவிந்த ஸேவையை | த்வம் நிவர்த்தய | தேவரீர் தவிர்த்தருள வேணும். |

திருவாய்மொழிப் பிள்ளையாகிற ஸ்வாசார்யர் எம்பெருமானாருடைய திருக்கோலத்தைக் காட்டிக் கொடுத்து இவ்விஷயமாக ஒரு ஸ்துதியை விண்ணப்பம் செய்யுமென்று நியமித்தருள, அந்த நியமனமடியாக அவதரித்த ஸ்துதியிறே இது. இவ்விஷயத்தை வெளியிட்டுக் கொண்டே ஒரு ப்ரார்த்தனை பண்ணுகிறார் இந்த ச்லோகத்தில். வாரீர் எம்பெருமானாரே! தேவரீருடைய திருவடித் தாமரைகளின் சுவடுதன்னை அடியேன் ஸ்வதந்த்ரனாகக் கண்டவனல்லேன்; அஸ்மதாசார்யர் பரம க்ருபையாலே காட்டியருளக் கண்டேனித்தனை. ஆகவே பரமப்ராப்யமான விஷயம் அடியேனுக்கு இன்று புதிதாகப் பெறவேண்டாதபடி, பண்டே பெற்றதொன்றாயிற்று. பெற்றீராகில் இனி நாம் செய்யவேண்டியதென்னென்னில்; பெற்றவதனை வளர்த்தருளுகையே வேண்டுவது. "மொய்ம்பால் வளர்த்த இதத் தாய் இராமானுசன்" என்றும் "இந்தத் தரிசனத்தை யெம்பெருமானார் வளர்த்த" என்றும் சொல்லும்படி வளர்ப்பதில் தேவரீர் வல்லீராதலால் இதனையும் வளர்த்துக்கொண்டு போரவேணுமென்று வேண்டுகிறேனென்கிறார் போலும். இதனை வளர்த்தருளும்போதைக்கு மற்றை நங் காமங்கள் மாற்ற வேண்டுவதும் ஆவச்யகமாதலால் அதையும் செய்தருள வேணுமென்கிறார் ஈற்றடியால்.

"தஸ்யா: விருத்தம் அகிலம் ச காமம் நிவர்த்தய" என்றது விஷயாந்தர காமத்தோடு பகவத் காமத்தோடு வாசியற எல்லாக் காமங்களையும் மாற்றியருளவேணு மென்றபடி. பகவத் விஷயத்திலே ஊன்றினவர்களுக்கு விஷயாந்தரம் ஹேயமாமாப்போலே ஆசார்ய விஷயத்தில்* தேவுமற்றறியே னென்னும்படி ஊன்றினவர்களுக்கு அந்த பகவத் விஷயந்தானும் ஹேயமாகையாலே இங்கு பகவத் காமமுட்பட நிவர்த்தநீய கோடியிலே சேரத்தகு மென்றுணர்க.

சாஸ்த்ரார்த்தம் இங்ஙனேயாகில் விஷயாந்தரங்களோபாதி பகவத் விஷயத்தை விலக்கியே நிற்கவேண்டாவோ? அது காண்பதில்லையே யென்னில்; * திரிதந்தாகிலு மென்கிற பாசுரத்தின் படியே ஆசார்ய முகோல்லாஸத்திற்காகவே பகவத் விஷயப்பற்று விளைவதனால் அது இந்த அதிகாரிக்கு அவத்யமாகா தென்றுணர்க. "சத்ருக்னோ நித்ய சத்ருக்ந:" என்னும்படி பெருமாள் விஷயத்திலே கண் செலுத்தாதிருந்த சத்ருக்நாழ்வான் சில ஸமயங்களிலே அவரையுமுகப்பது பரதாழ்வானுடைய வுகப்புக்காகவிறே. (கசூ)

**விஜ்ஞாபநம் யதிதமத்ய து மாமகீநம் அங்கீகுருஷ்வ யதிராஜ தயாம்புராசே,**
**அஜ்ஞோயமாத்மகுணலேசவிவர்ஜிதச் ச தஸ்மாதநந்யசரணோ பவதீதி மத்வா. 20.**

| | |
|---|---|
| தயா அம்புராசே! | கருணைக்கடலான |
| யதிராஜ! | எம்பெருமானாரே! |
| அயம் | (அடியேனாகிற) 'இவன் |
| அஜ்ஞ: | (தத்வ ஹித புருஷார்த்தங்களில்) அறிவில்லாதவன். |
| ஆத்ம குணலேச விவர்ஜிதச் ச | ஆத்ம குணங்கள் சிறிதுமில்லாதவன்; |
| தஸ்மாத் | ஆகையினாலே |
| அநந்யசரண: பவதி | நம்மைத்தவிர்த்து வேறு புகலற்றவன்' |
| இதி மத்வா | என்று திருவுள்ளம்பற்றி, |
| அத்ய மாமகீநம் யத் து விஜ்ஞாபநம் தத் அங்கீகுருஷ்வ | இப்போது அடியேனுடையதான விண்ணப்பம் யாதொன்றுண்டோ அதனைத் தலைக்கட்டியருள்வதாக ஏற்றுக்கொள்ள வேணும். |

இந்த ச்லோகத்தோடு தம்முடையதான இந்த ஸ்துதியைத் தலைக்கட்டியருளுகிறார். இதுதன்னில் மூன்றாவது ச்லோகமான 'வாசா யதீந்த்ர! மநஸா' என்பது தொடங்கிக் கீழ்ச்லோகத்தளவும் பத்தெட்டு ச்லோகங்களில் சில ப்ரார்த்தனைகளைச் செய்தருளியுள்ளார். அந்தப் ப்ரார்த்தனைகளைத் திருவுள்ளத்திற் கொண்டு உபேக்ஷியாமல் நிறைவேற்றியருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறாராயிற்று இந்த ச்லோகத்தில். "இதம் விஜ்ஞாபநம்" என்று கீழ்ச்லோகத்திற் பண்ணின விஜ்ஞாபனத்தை மாத்திரம் பராமர்சிக்கிறதன்று; ஆக இவ்வளவாலுஞ் செய்த விஜ்ஞாபனமெல்லாவற்றையும் நினைக்கிறது. இதை அங்கீகரித்தருளவேணுமென்றது 'நீ வேண்டினபடியே செய்து தலைக்கட்டுகிறேன் என்று சோதிவாய் திறந்து அருளிச் செய்யாதொழியினும் அப்படியே செய்வதாகத் திருவுள்ளம் பற்றியருளவேணும்' என்றபடி. இங்ஙனே நிர்ப்பந்திப்பதற்கு அடியென்னென்ன; [தயாம்புராசே!] அடியேன் நிர்ப்பந்திக்கிறேனல்லேன்; தேவரீருடைய இயற்கையான இன்னருளையே பற்றாசாகக்கொண்டு ப்ரார்த்திக்

கிறேனென்கை. ஆசார்ய ஹ்ருதயத்தில் "தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவரடி பணிந்தவர்க்குமே இவையுள்ளது" என்ற சூர்ணிகை இங்கே அநுஸந்தேயம்.

தேவரீருடைய தயைக்கு இங்கே விஷயமுண்டென்று மூதலிக்கிறார் உத்தரார்த்தத்தில். 'நம்மை யொழிய வேறு புகலுண்டென்று அறியாதவனிவன்; ஆத்மகுணங்களில் லவலேசமு மில்லாதவன்; ஆகவே நம்முடைய கருணைக்கே கொள்கலமாகத் தகுந்தவ' னென்று திருவுள்ளம் பற்றவேணு மென்றாராயிற்று. (உ0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ பிரவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய
யதிராஜவிம்சதி யுரை முற்றிற்று.

ஸ்ரீ

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

திருக்கச்சி நம்பிகள் அருளிச்செய்த

# தேவராஜாஷ்டகம்

43204
O2Q:41'ooD93,T
31H4

தனியன்கள்

**ஸ்ரீமத்காஞ்சீமுநிம் வந்தே கமலாபதிநந்தநம்
வரதாங்க்ரிஸதாஸங்கரஸாயநபராயணம்.**

ஸ்ரீ தேவப்பெருமாளுடைய திருவடிகளிலே இடைவிடாது அன்பு பூண்டிருத்தலாகிற ரஸாயந ஸேவையிலே ஊற்றமுடையவரும், கமலாபதியென்பவருடைய திருக்குமாரருமான திருக்கச்சிநம்பிகளைத் தொழுகின்றேனென்கை.

காஞ்சீமுநிம் என்றது காஞ்சீபூர்ண முநிம் என்றபடி. நம்பிகளின் திருத்தகப்பனருக்குக் கமலாபதி என்று திருநாமம் இருந்திருக்குமென்று இந்த ச்லோகத்தினால் ஊஹிக்கலாகிறது. "கமலாபதிம் நந்தயதீதி கமலாபதி நந்தந:" என்று வ்யுத்பத்திகொண்டு எம்பெருமானை உகப்பிக்குமவர் என்று பொருள் கொள்ளலாமாயினும் இதில் ஔசித்யமிருப்பதாகப் புலப்படவில்லை.

நம்பிகள் திருவாலவட்டத் திருப்பணி செய்துகொண்டு தேவப் பெருமாளோடு இடைவிடாது வாழ்ந்தவராதலால் உத்தரார்த்தம் மிகப்பொருந்தும். ஆயுர்வேத ப்ரஸித்தமான ஒரு ஔஷத விசேஷத்திற்கு ரஸாயந மென்று பெயர். அதனைப்பருகினார்க்கு அப்ரதிமமான புஷ்டியுண்டாகுமென்பது ப்ரஸித்தம். நம்பிகளுக்குத் தேவப்பெருமாளுடைய திருவடி ஸேவையே ரஸாயந ஸேவா ஸ்தாநீயமாய் விலக்ஷணமான புஷ்டியைத் தந்ததாயிற்று ... ... (*)

**தேவராஜதயாபாத்ரம் ஸ்ரீகாஞ்சீபூர்ணமுத்தமம்,
ராமாநுஜமுநேர் மாந்யம் வந்தேஹம் ஸஜ்ஜநாச்ரயம்.**

தேவப்பெருமாளுடைய திருவருளுக்குக் கொள்கலமானவரும் மிகச்சிறந்தவரும் எம்பெருமானார்க்கும் பூஜ்யரும், ஸத்துக்களுக்கு ஆச்ரயபூதருமான திருக்கச்சிநம்பிகளைத் தொழுகின்றேனென்கை.

திருக்கச்சி நம்பிகள் எம்பெருமானாருடைய வேண்டுகோளுக்கிணங்கி, தேவப்பெருமாளிடமிருந்து *அஹமேவ பரம் தத்வ மித்யாதியாக ஆறுவார்த்தைகளைப் பெற்று உபகரித்ததனைப் பற்றியும், மற்றுஞ்சில இதிஹாஸங்களை யுட்கொண்டும் ராமாநுஜமுநேர்மாந்யம் என்றது.

இவ்விரண்டு சுலோகங்களும் பிள்ளைலோகஞ்சீயருடைய சிஷ்யர்களில் ஒருவரான 'இராமானுசப்பிள்ளை' என்பவர் பணித்த 'ஸ்ரீ காஞ்சீ பூர்ணதசகம்' என்கிற ஸ்துதியிலிருந்து எடுத்து அநுஸந்திக்கப்பட்டு வருவதாக விளங்குகின்றது.

தனியன் உரை முற்றிற்று

---

ஸ்ரீ

திருக்கச்சி நம்பிகள் திருவாய்மலர்ந்தருளிய

# ஸ்ரீ தேவராஜாஷ்டகம்

---

**நமஸ் தே ஹஸ்திசைலேச ஸ்ரீமந்! அம்புஜலோசந,**
**சரணம் த்வாம் ப்ரபந்நோஸ்மி ப்ரணதார்த்திஹராச்யுத.**

---

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய உரை

**ஸ்ரீகாஞ்சீ பூர்ண முநிபி: ப்ரணீதாம் வரத ஸ்துதிம்**
**அண்ணங்கரார்ய தாஸோயம் விவ்ருணோதி ஸதாம் முதே.**

ஸ்ரீ ஹஸ்திகிரிநாதனே! பெருந்தேவி மணவாளனே! செந்தாமரைக் கண்ணனே அடியார்களுடைய துயர்களைத் தீர்த்தருள்பவனே! ஆச்ரிதரை ஒருகாலும் நழுவவிடாதவனே! உனக்கு நமஸ்காரம்; உன்னைச் சரணம் புகுந்தவனாகின்றேனென்கை.

எம்பெருமானுக்குப் பரவ்யூஹவிபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரங்களென்று ஐந்து நிலைமைகள் உள்ளனவென்பது ப்ரஸித்தம்; அந்த ஐந்து நிலைமைகளையும் இந்த ச்லோகத்தில் அநுபவிக்கிற அழகு அறியத்தக்கது. இதிலுள்ள ஐந்து ஸம்போதனங்களும் அந்த பஞ்சப்ரகாரங்களை நோக்கியிருப்பனவாகும். எங்ஙனேயென்னில்; ஹஸ்திசைலேச! என்றது அர்ச்சாவதாரத்தை நோக்கியதென்பது ஸ்பஷ்டம். ஸ்ரீமந்! என்பது "வைகுண்டே து பரேலோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:, ஆஸ்தே" என்கிற பிரமாணப்ரஸித்தியின் படியே பரவாஸுதேவனை நோக்கியதாகும். அம்புஜலோசந! என்பது இந்நிலத்திலே அழகிய வடிவம் பூண்டு அவதரித்த ராமக்ருஷ்ணாதி ரூபவிபவாவதாரத்தை நோக்கியதாகும். திருக்கண்ணழகைச் சொன்னது ஸர்வாங்க ஸௌந்தர்யத்தையும் சொன்னபடி. ப்ரணதார்த்திஹர! என்றது க்ஷீரஸாகரநிலய வ்யூஹ நிலைமையை நோக்கியதாகும். இடர்ப்பட்டாருடைய கூக்குரல் கேட்டு அவர்களுடைய ஆர்த்தியைத் தீர்ப்பதற்காகவேயிறே பாற்கடல் யோகநித்திரை சிந்தை செய்திருக்கிறபடி. அச்யுத! என்பது அந்தர்யாமித்வத்தை நோக்கியதாகும்; ஓரிடத்தையும் நழுவவிடாமல் எங்கும் பரந்துளன் என்கிற பொருள் இங்கு விவக்ஷிதம்.

இவ்வைந்து விளிகளும் தேவப்பெருமாளையே நோக்கியவை என்கிற நிர்வாஹத்திற்கு இந்த நிர்வாஹம் ப்ரதிகூலமன்று. (க)

**ஸமஸ்தப்ராணி ஸந்த்ராணப்ரவீண !கருணோல்பண!**
**விலஸந்து கடாக்ஷாஸ் தே மய்யஸ்மிந் ஜகதாம் பதே !.**

ஸகல சேதநர்களையும் காத்[தரு]ளவல்லவனே! அருள்மிகுந்தவனே! உலகங்கட்கெல்லாம் இறைவனே! இந்த அடியே[னி]டத்தில் உன்னுடைய கடாக்ஷங்கள் ப்ரகாசிக்கவேணும்.

முதல் ச்லோகத்தில் ஸ்ரீமந்! அம்புஜலோசந! என்ற இரண்டு விளிகளையும் விவரிப்பது போன்றுளது இந்த ச்லோகம். ஸ்ரீமானாகையாலே ஸமஸ்தப்ராணிகளையும் ரக்ஷித்தருளக் கட

ளமப்பட்டவன் என்று விவக்ஷித்துப் பூர்வார்த்தம் அருளிச்செய்தார். அம்புஜலோசநனுகை ாலே * தாமரைப்பூப்போலே செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழித்தருளவேணுமென்று விவக்ஷித்து உத்தரார்த்தமருளிச்செய்தார்.

ப்ரவீண! என்று தனிப்பதமாகப் பிரிக்காதே பூர்வார்த்தம் முழுவதையும் ஒரே பதமாக்கி, 'ப்ரவீணமான கருணையால் மிக்கவனே' என்று உரைத்தலுமாம். ... ... (உ)

நிந்திதாசாரகரணம் நிவ்ருத்தம் க்ருத்யகர்மண:.
பாபீயாம்ஸம் அமர்யாதம் பாஹி மாம் வரதப்ரபோ ! (3)

வரந்தரும் பெருமானே! சாஸ்த்ரநிஷித்தங்களான செயல்களைச் செய்பவனும் சாஸ்த்ர விஹிதங்களான கருமங்களில் விலகியிருப்பவனும் பாபிஷ்டனும் எல்லை கடந்து வர்த்திப்பவனுமான அடியேனைக் காத்தருளவேணும்.

முதல் ச்லோகத்தில் ப்ரணதார்த்திஹர! என்ற விளியை விவரிப்பது போன்றுளது இந்த ச்லோகம்.

இதம் குரு இதம் மாகார்ஷீ: [இதைச் செய்; இதைச் செய்யாதே] என்று சாஸ்த்ரங்கள் விதி நிஷேதரூபங்களாயிறே யிருப்பது. விஹிதங்களைச் செய்தும் நிஷித்தங்களை விலக்கியும் போரவேண்டியிருக்க, விபரீதமாக நடந்து பாவங்கள் கூடுபூரித்துக் கிடக்கின்றவடியேனைக் காத்தருளி உன்னுடைய ப்ரணதார்த்தி ஹரத்வத்தை நிலை நிறுத்திக் கொள்ளவேணுமென்றதாயிற்று.

இனி, மேல் ச்லோகங்களெல்லாம் அச்யுத! என்னும் விளியை விவரிப்பனவாகும்.

ஸம்ஸாரமருகாந்தாரே துர்வ்யாதிவ்யாக்ரபீஷணே,
விஷயக்ஷுத்ரகுல்மாட்யே த்ருஷாபாதபசாலிநி. (4)
புத்ரதாரக்ருஹ க்ஷேத்ர ம்ருகத்ருஷ்ணும்பு புஷ்கலே.
க்ருத்யாக்ருத்ய விவேகாந்தம் பரிப்ராந்தமிதஸ் தத:. (5)
அஜஸ்ரம் ஜாதத்ருஷ்ணர்த்தம் அவஸந்நாங்கமக்ஷமம்.
க்ஷீணசக்திபலாரோக்யம் கேவலம் க்லேசஸம்ச்ரயம். (6)
ஸம்தப்தம் விவிதைர் து:க்கை: துர்வசைரேவமாதிபி:.
தேவராஜ தயாஸிந்தோ! தேவதேவ! ஜகத்பதே ! (7)
த்வதீக்ஷண ஸுதாஸிந்து வீசி விக்ஷேபசீகரை:.
காருண்யமாருதாநீதை: சீதலைரபிஷிஞ்ச மாம். (8)

கருணைக்கடலான தேவராஜனே! தேவாதி தேவனே! உலகுக்கோர் முந்தைத் தாய் தந்தையே!, கொடிய நோய்களாகிற புலிகளினால் பயங்கரமாயும், சப்தாதி விஷயங்களாகிற சிறு புதர்கள் நிறைந்ததாயும், ஆசையாகிற மரங்கள் அடர்ந்ததாயும், மக்கள் மனைவியர் வீடு நிலம் ஆகிற கானல் நிரம்பினதாயுமிருக்கின்ற ஸம்ஸாரமாகிற கொடிய காட்டில், 'இன்னது செய்யத்தக்கது, இன்னது செய்யத் தகாதது' என்கிற விவேகமின்றிக்கே இங்குமங்கும் சுழன்றுழல்பவனாய், எப்போதும் விடாய்த்தவனாய், உடல் இளைத்தவனாய், அஸமர்த்தனாய், சக்தி பலம் ஆரோக்யம் ஆகிய இவை ஒன்றுமில்லாதவனாய், க்லேசங்களே மிகுந்திருக்கப் பெற்றவனாய், சொல்லமுடியாத இப்படிப்பட்ட பலவகைத் துன்பங்களினால் தாபமுற்றவனாயிருக்கின்ற அடியேனை, காருண்யமாகிற காற்றினால் கொண்டு தள்ளப்பட்டவையும் குளிர்ந்தவையுமான உன்னுடைய கடாக்ஷாம்ருத நதிப்ரவாஹத்திவலைகளினால் நனைத்தருளவேணுமென்கிறார்.

ஐந்து ச்லோகங்களும் சேர்ந்து ஏகாந்வயமாகிறபடியாலே குலகம் எனப்படும், ஸாம்ஸாரிக தாபங்கள் மிகுந்திருக்குமடியேனைக் கடாக்ஷாம்ருத வர்ஷத்தினால் குளிரச் செய்தருளவேணுமென்று பிரார்த்திக்கிறார்.

இவ்விருள்தருமாஞாலமே ஸம்ஸாரமெனப்படுகிறது. இதனை ஒரு கொடிய காடாக ரூபிக்கிறார். காட்டில் புலி முதலிய பயங்கர ஜந்துக்கள் இருக்கும்; ஸம்ஸார நிலத்தில் கொடிய வியாதிகளே அவையாகும். காட்டில், உள்ளேயிழுத்துக்கொள்ளச் சிறு புதர்கள் இருக்கும்; இங்கு சப்தாதி விஷயங்களே அவையாகும். காட்டில் பல்வகைப்பட்ட மரங்க

ளிருக்கும்; இங்குப் பலவகைப்பட்ட ஆசைகளே மரங்களாகும். காட்டில் வீணான ப்ரமத்தையுண்டாக்கவல்ல கானல் மிகுந்திருக்கும்; "தாயே தந்தையென்றும் தாரமே கிளை மக்களென்றும்" "தந்தை தாய் மக்களே சுற்றமென்றுற்றவர் பற்றிநின்ற பந்தமார் வாழ்க்கை" "கொண்ட பெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும்" இத்யாதிப்படியேயுள்ள ஆபாஸ பந்துக்களே இங்குக் கானலாகக் கொள்க.

"ஸம்ஸார மருகாந்தாரே" என்று ஸம்ஸாரத்தை மருகாந்தாரமாகச் சொல்லியிருக்கும்போது "த்ருஷாபாதபசாலிநி" என்னக் கூடுமோ? மரம் செடி கொடி முதலானவை ஒன்றுமில்லாத பாலை நிலத்திற்கன்றோ மருகாந்தாரமென்று பெயர்—என்று சிலர் சங்கிப்பதுண்டு. இங்குப் பெரியோர் பணிக்கும் ஸமாதானமாவது—பாலை நிலத்தில் நிழல்தரும்படியான மரங்கள் இருக்க ப்ரஸக்தியில்லையாயினும் மொட்டை மரங்கள், மலட்டு மரங்கள் என்று சொல்லக்கூடிய சில வ்ருக்ஷங்கள் விரளமாகவாவது இருக்கக்கூடுமாதலால் அவற்றைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்ததாகக் கொள்ளலாமென்று.

தாபாதுரர்களின்மீது ஒரு பாட்டம் மழைபொழிந்தால் ஸகலதாபங்களும் தீர்ந்து குளிர்ச்சி உண்டாகுமாப்போல திருக்கச்சி நம்பிகள் தாமும் ஸாம்ஸாரிக தாபங்களெல்லாம் தணிந்து குளிர்ச்சி உண்டாகுமாறு தேவப்பெருமாளுடைய திருவருள் நோக்க மழை பொழிவை ப்ரார்த்தித்துத் தம்முடைய ஸ்துதியையும் தலைக் கட்டினாராயிற்று. ... (8)

திருக்கச்சிநம்பிகள் திருவடிகளே சரணம்.

பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
தேவராஜாஷ்டக வியாக்கியானம்
முற்றிற்று.

7 MAR 1943 MADRAS

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

## தேவப்பெருமாள் விஷயமாக ஆளவந்தாரருளிச்செய்த முக்தகம்.

யஸ்ய ப்ரஸாதகலயா பதிர: ச்ருணோதி பங்கு: ப்ரதாவதி ஜவேந ச வக்தி மூக:,
அந்த: ப்ரபச்யதி ஸுதம் லபதே ச வந்த்யா தம் தேவமேவ வரதம் சரணம் கதோஸ்மி.

(கருத்து) பேரருளாளப் பெருமாளுடைய அநுக்ரஹலேசத்தினால், செவிடனும் செவிபெறுவான், முடவனும் விரைந்தோடுவான்; ஊமையும் பேசவல்லவனாவான்; மலடியும் மக்கள் பெறுவாள். இப்படிப்பட்ட அநுக்ரஹம் செய்தருளவல்ல பேரருளாளப் பெருமாளைத் தஞ்சமாகப் பற்றுகின்றேனென்றவாறு.

ஆளவந்தார் பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளின காலத்தில் யாதவப்ரகாசர் பக்கலிலே வேதாந்தம் அதிகரித்துக்கொண்டிருந்த உடையவர் விரைவில் ஸித்தாந்த ப்ரவர்த்தகராக ஆகவேணுமென்று தேவப்பெருமாளுடைய திருவடிகளிலே இந்த ச்லோகாநுஸந்தாந பூர்வகமாக ப்ரபத்தி பண்ணினாரென்றும், அப்போதாக அவதரித்த ச்லோகம் இது—என்றும் பெரியோர் பணிப்பார்கள்.

ஆளவந்தார் திருவடிகளே சரணம்.